# ஹிந்தி ஓரங்க நாடகங்கள்

தொகுப்பாசிரியர் :
**சந்திரகுப்த வித்யாலங்கார்**

தமிழாக்கம் :
**எம். வி. வெங்கட்ராம்**

**நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா**

புது டில்லி

1982 (1904)

© அந்தந்த ஆசிரியருக்கு
தமிழாக்கம் © நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1978

விலை ரூ. 11-50

*Original Title :* HINDI EKANKI (Hindi)
*Tamil Title :* HINDI ORANGA NATAKANKAL

PUBLISHED BY THE DIRECTOR, NATIONAL BOOK TRUST, INDIA
A-5, GREEN PARK, NEW DELHI-110016 AND PRINTED AT
BHAGAT PRINTERS, 55, RLY. STATION ROAD, ALANDUR, MADRAS-600016

# முன்னுரை

இது ஓரங்க நாடகத் தொகுதி. ஆனால் ஓரங்க நாடகமும் நாடகத்தில் ஒருவகைதானே. இதனால் நான் முதலில் நாடகத்தைப்பற்றிச் சொல்லவேண்டும்.

மேதையின் எளிய, தடையற்ற பிரயோகத்தால் சிறந்த இலக்கியம் உருவாகிறது. கவிதை, புதினம், நாடகம், கதை முதலிய எல்லா இலக்கியப் படைப்புகளும் உயர்ந்த, வலிய மன வேகங்களின் விளைவுகளே. ஆனால், இந்த எல்லா வகைகளுக்கும் தனித்தனி 'டெக்னிக்' உண்டு. அதைத் தன் சுவைக்கும் சக்திக்கும் ஏற்ப ஆசிரியன் தன்வயப் படுத்திக்கொள்கிறான். ஒரு பழைய சமஸ்கிருதப் பழமொழி உண்டு: 'காவ்யேஷு நாடக ரம்யம்' (காவ்யம், அதாவது படைப்பு இலக்கியத்தில் நாடகம் எல்லாவற்றிலும் மிகுந்த இன்பம் ஊட்டுவது).

இந்திய இலக்கியத்தில் நாடகத்திற்கு வளமான பரம்பரை இருக்கிறது. காளிதாசன், பவபூதி, திங்கநாகன், பாசன், விசாகதத்தன் முதலியவர்களின் நாடகங்கள் பல நூற்றாண்டுகளாய் உலகத்தின் மிகச் சிறந்த பண்டைய நாடகங்களோடு வைத்துப் போற்றப்படுகின்றன; இனியும் போற்றப்படும். அந்தக் காலத்திலும் சிறு நாடகங்கள் எழுதப்பட்டன. ஆனால், அவற்றுக்குத் தனியான பெயர் இடப்படவில்லை. சிறியவையே ஆயினும் அவை ஓரங்க நாடகங்கள் அல்ல.

'நட்' என்னும் தாதுச் சொல்லிலிருந்து நாடகம் என்ற சொல் தோன்றியது; இதே 'நட்' என்ற தாதுவிலிருந்து நிருத்யம் என்னும் சொல்லும் உண்டாயிற்று. கலையின் முற்றிலும் வேறுபட்ட இவ்விரண்டு சாதனங்களின் பெயர்கள் ஒரே அடிப்படைச் சொல்லிலிருந்து விளைந்தவை என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது என நான் கருதுகிறேன். நிருத்யம் எழுதப்படுவதில்லை; செய்யப்படுகிறது. நாடகம் எழுதப் படுகிறது; ஆடப்படுகிறது. இரண்டும் மேடையோடு நேர்த்தொடர்பு உள்ளவை. அதை நீங்கள் நாடக மேடை என்றும் கூறலாம். எனவே, இலக்கியத்திற்கு மட்டும் அல்ல; காட்சிக் கலைக்கும் நாடகம் ஓர் உறுப்பு. பாரதத்தின் கதகளி, உடசீ, மணிபுரி முதலிய நிருத்யங்களுக்கும், வெளிநாடுகளின் கோஷ்டி நடனங்களான பாலே, பாண்டோமைம் முதலியவற்றுக்கும் அடிப்படை நாடகமே. அவற்றுக்கு

எழுத்துருவமும் தரப்படுகிறது. இவ்வாறு நிருத்யமும் நாடகமும் கலையின் வேறுபட்ட இரு சாதனங்களாக இருந்தாலும் ஒன்றோடொன்று மிக நெருங்கியவை.

இந்த இடத்தில்தான் நாடகம் மற்ற படைப்பு இலக்கியத்தினின்றும் பிரிந்து செல்லத் தொடங்குகிறது என்பதைச் சிறப்பாய்க் குறிப்பிட வேண்டும். 'நட்' என்ற அடிப்படைச் சொல்லிலிருந்து விளைந்த நாடகம் என்ற சொல்லே, இந்தப் 'பிரிவை'—தனித்தன்மையைச் சுட்டிக்காட்டுகிறது. பார்க்கத்தக்க தன்மை, கேட்கத்தக்க தன்மை (இக்காலத்தில், படிக்கத்தக்க தன்மை என்கிறோம்)—நாடகத்தின் இவ்விரண்டு வடிவங்களும் நெடுங்காலமாகவே ஏற்கப்பட்டுள்ளன.

பாரதத்தில் நாடகங்களின் ஆரோக்கியமான, வளமான மரபு இருந்தும், பதினெட்டாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை, கலையிலும் இலக்கியத்திலும் உயர்ந்ததான இச் சாதனம் பாரதத்தின் பெரும்பாலான மொழிகளிலும் பிரதேசங் களிலும் ஏன் அசட்டை செய்யப்பட்டது என்பதன் காரணம் தெளிவு. அரசியல் ஒடுக்குமுறைகளாலும், சமூக உயர்வு-தாழ்வுக் கருத்துகளாலும் பாரதத்து மக்களின் வாழ்க்கையும் சிந்தனையும் சுருங்கிப்போயிருந்தன. குறிப்பாக, வட இந்தியாவில் நாடகம் பாணர்கள், விகடர்கள் முதலியவர்களோடு நின்றுவிட, சங்கீதமும் நடனமும் வேசைகளிடம் சிறைப்பட்டன. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு புது விழிப்பு அலை பாரதத்தை விசிறியபோது, இலக்கியத்திலும் புத்துயிர் பாய்ந்தது. இந்திய மொழிகளில் உயர்ந்தவகைப் புது இலக்கியம் எழுதப்படலாயிற்று.

ஆனால், நாடகம் எழுதுவதற்கு மட்டும் உரிய பொருள் அன்று. அதற்குக் கோஷ்டிப் பணி (டீம் ஒர்க்) தேவை. இதனால் இந்திய மொழிகளில் கவிதை, கதை, புதினம் ஆகியவை வளர்ந்துள்ள வேகத்தில், நாடகம் வளர்ச்சி பெற முடியவில்லை. நாடகம் நாடக மேடைக்கு உரியது. விடுதலைக்கு முன்னர் பாரதத்தில் நாடகமேடை போதுமான வளர்ச்சி பெறவில்லை. ஒரு வகை விஷச்சுழலே உருவாகி யிருந்தது : நாடகமேடை இல்லையே, நாடகம் எழுதுவதால் என்ன பயன்? புதிய நாடகங்கள் இல்லையே, நாடகமேடை எப்படி வளரும்? சுதந்திர பாரதத்தில் நிலைமை மாறியுள்ளது; தேசிய அளவில் நாடக மேடை வளர்ச்சிக்கான முயற்சி நடைபெறுகிறது. அதன் நல்விளைவும் இப்போதே தென்படத் தொடங்கியுள்ளது. இந்தியாவின் மற்ற மொழிகளைப் போலவே, சிறந்த ஹிந்தி எழுத்தாளர்களின் கவனமும் நாடகத்தின்பால் திரும்பியுள்ளது.

நாடக வித்தையின் ஓர் அங்கம்தான் ஓரங்க நாடகம். நாடகத்திற்கு முப்பொருள் (இடம், காலம், வினை) ஒருமைப்பாடு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு ஓரங்க நாடகத்திற்கும் முப்பொருள் ஒருமைப் பாடு அவசியம். இப்போது நாடக மேடைமீது நிழற்படங்களின் உதவியைக் கொண்டு, தொலைவிலுள்ள அல்லது பழைய நிகழ்ச்சி களையும் பகைப்புலமாய்க் காண்பிக்கப்படுகிறது. இந்த உத்தியை ஓரங்க நாடகத்திலும் பயன்படுத்தலாம். நாடக மேடைமீது எத்தனையோ புதிய உத்திகள் கையாளப்பட்டுள்ளன. அவற்றின் வாயிலாகப் பழைய டெக்னிக் மாறியுள்ளது அல்லது புத்துருவம் பெற்றுள்ளது. இவை எல்லாவற்றையும் ஓரங்க நாடகத்திலும் கையாள முடியும்; கையாளப்படுகின்றன.

விஷயம் இதுதான்: வெளி நாடுகளில் பெரிய நாடகங்கள் நடிக்கப் படுகையில் இடைப் பொழுதுபோக்குக்காகத்தான் ஓரங்க நாடகம் உருவாக்கப்பட்டது. நீண்ட நாடகங்களில் ஓர் அங்கம் முடிவுற்றுத் திரை விழுந்ததும், அடுத்த அங்கத்தைத் தொடங்குமுன் மேடை ஜோடனை செய்யச் சில சமயம் அரைமணி நேரம் பிடிக்கும். டிக்கட் வாங்கிக்கொண்டு காட்சி காண வந்தவர்களுக்குப் பத்து நிமிடங்களுக் குள்ளேயே அலுப்புத் தட்டத் தொடங்கிவிடும். உண்பதிலும், குடிப்பதிலும், உடலின் கனத்தைக் குறைந்துக்கொள்வதிலும், நண்பர்களைச் சந்திப்பதிலும் சிறிது பொழுது கழியலாம். ஆனால், ஆறங்கங்கள் உள்ள நீண்ட நாடகங்களில் அடிக்கடி குறுக்கிடும் இடை வேளைகளால் நாடகம் பார்க்க வந்தவர்களுக்கு அலுப்புத் தட்டிவிடுவது வழக்கம். இவற்றில் நீண்ட இடைவேளைகளின்போது, நாடகம் பார்க்க வந்தவர்களை மகிழ்விப்பதற்கென ஓரங்க நாடகங்கள் எழுதப் பட்டு நடிக்கப்படலாயின. இவை நாடகத்திரைக்கு வெளியில் சில நிமிடங்களுக்கு நடத்தப்பட்டன. மிகுதியான ஜோடனைகளுக்கு இவற்றில் தேவை இல்லை. எல்லாருக்கும் தெரிந்த சுவாரசியமான விஷயங்களையும், நகைச்சுவையும் கேலியும் நிறைந்த பொருள்களையும் அடிப்படையாய் வைத்து அவை அமைக்கப்பட்டன. 1903, அக்டோபரில் லண்டனின் புகழ்பெற்ற வெஸ்ட் எண்ட் தியேட்டரில் லூயி என். பார்க்கரின் 'தி மங்கீஸ் பா' (குரங்கின் பாதம்) என்ற பெயருள்ள ஓரங்க நாடகம் நடைபெற்றுவந்தது. மக்களுக்கு அது மிகவும் பிடித்துப்போய் பிரதான, முழு நீள நாடகத்தையே ஒதுக்கத் தொடங்கியது தற்செயல். லூயி என். பார்க்கர், டபிள்யூ. டபிள்யூ. ஜேகப்பின் கதை ஒன்றினை ஆதாரமாய்க் கொண்டு அந்த ஓரங்க நாடகத்தைப் புனைந்திருந்தார். இவ்வாறு, சிறந்த எழுத்தாளர்கள், மதிநுட்பமுள்ள பார்வையாளர்கள், விமரிசகர்களின் கவனம் இந்தப்

புதுவகை ஓரங்க நாடகங்களின் பக்கம் திரும்பியது. அதற்கு அப்பால், நல்ல நல்ல, செறிவுள்ள ஓரங்க நாடகங்கள் எழுதப்படத் தொடங்கின. போகப்போக, பல நல்ல நாடக அரங்குகளில், ஒரு முழு நாடகத்திற்குப் பதிலாக இரண்டு மூன்று ஓரங்க நாடகங்கள் நடிக்கப்படுவதும், அவற்றை அவையோர் மிக விரும்பிப் பார்ப்பதுமான நிலைமை தோன்றியது.

'தி மங்கீஸ் பா'வை நான் குறிப்பிட்டது ஒரு நோக்கத்தோடுதான். இந்த ஓரங்க நாடகம் ஒரு கதையை ஆதாரமாய்க் கொண்டது. இத்தகைய நல்ல சிறுகதைகள் எத்தனையோ உள்ளன. அவற்றை நல்ல ஓரங்க நாடகங்களின் உருவத்தில் அமைக்க முடியும் என்பது என் எண்ணம். மறுபக்கத்தில், நவீனமும் சிறுகதையும் ஃபிக்ஷன் (கதை இலக்கியம்) என்ற பொதுவான தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டாலும், அவை இரண்டும் முற்றிலும் வேறுபட்டவை என்பதையும் நான் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். ஆனால், நாடகமும் ஓரங்க நாடகமும் ஒரே வித்தையின் இரு உருவங்கள். இரண்டின் டெக்னிக்கும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவை.

நாடகத்திற்கும் ஓரங்க நாடகத்திற்கும் இடையில் சிறிது வேற்றுமை இருப்பது கண்கூடு. முன்னர் நாடகங்கள் ஆறு அல்லது ஏழு அங்கங்களுள்ள நாடகங்களாய் எழுதப்படுவதில்லை. சமஸ்கிருத இலக்கியத்திலும் இதே மரபுதான் இருந்தது. இக்காலத்தில் மூன்று அங்கங்களுக்குமேலுள்ள நாடகங்கள் எழுதப்படுவதில்லை. ஓரங்க நாடகத்தில் ஒரே அங்கம். ஓரங்க நாடகம் காட்சி மாற்றத்தினின்றும் தப்ப வேண்டும் என்பது என் உறுதியான கருத்து. ஜோடனையில் மாற்றம் செய்யாது, கலை மாற்றத்தை அறிவிப்பதன்பொருட்டு, தேவையானல் இரண்டு மூன்று தடவைகள் முழு இருட்டடிப்பு அல்லது அரைகுறை இருட்டடிப்புச் செய்து மேடையைச் சில கணங்களுக்கு மறைக்கலாம். தேவைப்பட்டால் சில கணங்களுக்குத் திரையை இறக்கவும் செய்யலாம். ஓரங்கங்களில் பாத்திரங்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாக இருக்கவேண்டும். இதை அவசியம் என்று கூறமுடியாது. ஏனெனில், கூட்டக் காட்சியும் ஓரங்கத்தின் பொருளாகக்கூடும். ஆனல், பாத்திரங்களின் பேச்சைக் கேட்டும் பார்த்தும் புரிந்துகொள்ளவும் வாய்ப்பு இருந்தால்தான் அவையோரின் முழுப்பரிவும் பாத்திரங்களுக்குக் கிட்டும். முழு நாடகத்தின் கதைப்பொருள் பல அடுக்குகள் கொண்டதாக வைத்துக்கொண்டால், ஓரங்க நாடகத்தின் கதைப் பொருள் ஓரடுக்கு உள்ளதாக இருக்கும்.

நம் நாட்டில் உல்லாச நாடக அரங்குகளின் வளர்ச்சி இப்போதுதான் தொடங்கியுள்ளது. பழைய, நீண்ட நாடகங்களின் காலம் மறைந்து

விட்டது. இருபது ஆண்டுகளுக்கு முன்னுல் இரவு முழுவதும் ஆடும் அளவு மராட்டி நாடகங்கள் மிக நீளமாக இருக்கும். ஒரே நாடகத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட பாடல்கள் இருந்தது எனக்கு நினைவிருக்கிறது. இங்கிலாந்தில் அல்லது பம்பாயில் இரண்டொரு தலைமுறைக்கு முன் எந்தக் காரணத்திற்காக ஓரங்கம் தேவைப்பட்டதோ அதற்காக இப்போது அது தேவை இல்லை. ஓரங்க நாடகங்களின் வாயிலாக, அவற்றின் டெக்னிக்கில் ஆசிரியன் ஏதோ சொல்ல விரும்புகிருன்; அவையோர் அவற்றைப் பார்க்க விழைகின்றனர் என்பதனுலேயே இன்று ஓரங்க நாடகங்கள் எழுதி மேடையேற்றப்படுகின்றன.

ஹிந்தியில், முக்கியமாகக் கல்லூரி நாடக சபைகளில் நடிக்கப்படுவதற்காக, இந்த நூற்றுண்டின் முப்பதுகளில் ஓரங்க நாடகங்கள் எழுதப்படலாயின. அதற்கப்பால் வானெலியில் ஒலி பரப்பப்படுவதற்காக ஓரங்க நாடகங்கள் வேண்டப்பட்டன—ரேடியோவுக்காக ஓரங்கங்கள் எழுதப்பட்டன. எத்தனையோ சிறுகதைகள் ஒலி வடிவ ஓரங்க வடிவத்தில் ஒலிபரப்பப்பெற்றன. ரேடியோக்காரர்கள் இவற்றை 'ரேடியோ உருவகம்' எனலானுர்கள். ரேடியோவில் ஒலி பரப்புவதற்கு ஏற்பவும், நாடக மேடையில் நடிப்பதற்கு ஏற்பவும் யஷ்பால், தர்மபிரகாஷ் ஆனந்த் முதலியவர்கள் முற்றிலும் உரையாடல் வடிவிலேயே சில சிறுகதைகள் எழுதினுர்கள்; எனினும் அவை அடிப்படையில் சிறு கதைகளே.

ரேடியோவினுல் ஊக்கப்பெற்று ஹிந்தியில் வந்த ஓரங்க நாடகங்கள் 'கேள்வி வகை'ப்படும். அவற்ருல் நாடக அரங்கிற்குப் பயன் ஏதும் இல்லை. உயர்ந்த ஓரங்கங்களின் சோதனைக் களமும் நாடக அரங்கே என்பது என் கருத்து. இலக்கியத்தின் எல்லா வித்தைகளிலும் எவ்வளவு வகைகள் இருப்பினும் நல்லதே. எல்லா வகைகளிலும் புதுப்புது சோதனைகள் செய்வதும் நல்லதே. ஆனுல், சோதனைகள் தட்டையான வடிவப் பரிசோதனைகளாக இன்றி, வளமான, யதார்த்தம் தொனிக்கிற பரிமாணங்களைக் கொண்டனவாக இருக்கவேண்டும். சென்ற நூற்றுண்டுகளில் பாரதத்தின் கிராமிய நாடக மரபுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும் மாற்றங்களும் எதிர்காலத்தில் ஓரங்கங்களிலும் பாதிப்பு ஏற்படுத்தக்கூடும்.

ஹிந்தி பிரதேசங்களில் நாடகமேடை வளர்ச்சிபெற்று வருகிறது. இந்த நாடகமேடை, பத்தொன்பதாம் நூற்றுண்டு அல்லது 'பார்ஸி' வகை நாடக மேடையால் சற்றும் பாதிப்புண்டது அல்ல. இதற்கு முக்கியமான ஊக்கம் அளித்தது உலகத்தின் சிறந்த நாடக இலக்கியமே; அதை, எல்லா வகைகளிலும், உண்மையான 'அனைத்துலக இலக்கியம்'

எனலாம். நான் நாடகத்தின் ஆத்மாவைப்பற்றிச் சொல்கிறேன். அதன் ஊக்க உணர்வைப்பற்றிச் சொல்கிறேன். உலகப் பண்பாடு ஒன்றுபட்டு வருவதுபோலவே அதன் பாதிப்பும் உலகத்தின் எல்லா மொழிகளின்மீதும் ஏற்பட்டு வருகிறது. அடிப்படையில் மனிதனுடைய பாவனைகளில்தான் படைப்பு வெள்ளப் பெருக்கு தொடங்குகிறது. ஆனால், இன்றைய விஞ்ஞான யுகத்தில் இவ்வுலகத்தி லுள்ள 137 நாடுகள் பழக்க வழக்கங்கள், செயல், சிந்தனைகளின் நோக்கில் தங்களுக்குள் நெருங்கிவரும் போக்கின் பாதிப்புக் காரண மாக உலகத்திலுள்ள முன்னூற்றைம்பது மொழிகளின் இலக்கியத் திலும் ஒரே மாதிரியான சிந்தனையும், ஒரே மாதிரியான நடையும் தெளிவாய்த் தென்படத் தொடங்கியுள்ளன.

மேலை நாடுகளில் ஓரங்க நாடகங்களின் பிறப்புக் காலம் 1903ஆம் ஆண்டு என்று கொள்ளப்பட்டால், அதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே ஹிந்தியில் ஓரங்கங்கள் எழுதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு விட்டது. பாரதேந்துவின் 'இருளடைந்த நகரத்'தை ஒரு நகைச்சுவை ஓரங்கம் எனலாம். ராதாசரண் கோஸ்வாமி, பாலகிருஷ்ண பட், பிரதாப் நாராயண் மிச்ரா, ஜெயசங்கர் பிரசாத் ஆகியவர்களும் ஓரங்கங்கள் எழுதினார்கள். ஆயினும், பாரதேந்துவையும் பிரசாதையும் தவிர மற்ற எழுத்தாளர்களின் ஓரங்கங்கள் வெறும் உரையாடல்களே.

ஹிந்தியில் ஓரங்கங்கள் 'கர்டன் ரெய்ஸர்' (மூல நாடகம் தொடங்கப்படுமுன் நடத்தப்படும் சிறு நாடகம்) பாணியில் முற்றிலும் எழுதப்படவே இல்லை. நாடகத்தின் ஒரு புதிய, இயல்பான, நடை முறை நடை உருவத்திலேயே அவற்றை ஹிந்தியில் ஏற்றுக்கொண் டுள்ளனர். அவற்றின் உருவம் பாரதத்துக்கு உரித்தானது. ஆனால், அவற்றுள் பலவற்றின் ஆத்மா அனைத்துலகத் தன்மை வாய்ந்தது.

இந்தத் தொகுதியிலுள்ள பெரும்பாலான ஆசிரியர்கள் ஹிந்தி உலகத்தில் புகழ் பெற்றவர்கள். அவர்களுள் உதயசங்கர் பட் மட்டும் சென்ற நூற்றாண்டில் பிறந்தவர் (1897). மற்ற ஒன்பது ஆசிரியர்கள் இருபதாம் நூற்றாண்டில் பிறந்தவர்கள். பட் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட கலைஞர். ஆயுளின் இறுதி வரையிலும் அவரிடம் ஏற்புத் தன்மையும், புதிய பொருள்களையும் நடைகளையும் அறியும் ஆவலும் நிரம்பி இருந்தன. அவருடைய படைப்புகளை முறையாக ஆழ்ந்து படித்தால், சாதனங்களின் பாதிப்பில்கூட, வளமான வேற்று மொழி களை அறியாவிட்டால்கூட, தம்முடைய ஈடுபாட்டினாலும் உழைப் பினாலும் ஓர் எழுத்தாளர் எவ்வளவு உயர முடியும் என்பது புலப்படு

கிறது. கவிதை, நாடகம், கீத நாடகம், ஓரங்கம், நவீனம்—இந்த எல்லாத் துறைகளிலும் அவருடைய முறையான வளர்ச்சி வணக்கத்தோடு கவனிக்கப்படும்.

ஹிந்தி ஓரங்கங்களின் வளர்ச்சியில் ராம்குமார் வர்மாவின் இடம் சிறப்பான பெருமை வாய்ந்தது. அவர் தம்முடைய முதலாவது ஓரங்கத்தை 1930-ல் எழுதினார்; அதையும் அலகாபாத் பல்கலைக் கழகத்தில் நடிக்கும் நோக்கத்துடன். ''வாழ்க்கையின் ஏதாவதொரு உயிருள்ள சூழலை மையப்படுத்தி, பாத்திரம், நிகழ்ச்சி என்ற சாதனங்கள் வாயிலாக அதனை விசையோடு வெளியிடுவதே ஓரங்கத்தின் குறிக்கோள் எனலாம்'' என்கிறார் ராம்குமார் வர்மா. திரு. வர்மா கவிஞர்; அவருக்குள் உள்ள இயற்கையான கவி அவருடைய ஓரங்கங்களிலும் காட்சி அளிக்கிறான். பாடகனான கவிஞனின் ஆற்றலும் வரம்புகளும் அவருடைய ஓரங்கங்களிலும் உள்ளன.

ஹிந்தியில் திரு. சேட்தாஸ் முதன்முதலாக ஒற்றைப் பாத்திர நாடகங்களை அறிமுகப்படுத்தினார். ஹிந்தி இலக்கியத்துக்கு இது அவருடைய கொடை. அவர் எழுதியன போன்ற ஒற்றைப் பாத்திர நாடகங்களை ஹிந்தி நாடகாசிரியர்கள் யாரும் அதற்கு முன்பு எழுதியதில்லை. அவருக்குப் பிறகுதான் மற்ற நாடகாசிரியர்கள் இத்திசையில் சற்று முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். ஸ்டிரிண்ட்பர்க், ஒநீல் ஆகியோரின் முறையில் அவர் 'ஊழியும் படைப்பும்', 'சாபமும் வரமும்', 'உண்மையான வாழ்க்கை' முதலிய வெற்றிகரமான ஒற்றைப் பாத்திர நாடகங்களை (மானோ டிராமா) இயற்றியுள்ளார். இவற்றின் வாயிலாகப் பாத்திரங்களின் குணவிசேஷங்கள் அழகாய் அலசி ஆராயப்படுகின்றன. இதைத் தவிர, திரு. வர்மா 'தொடக்கம்', 'முடிவு' போன்ற புதிய உத்திகளையும் நாடகத்தில் புகுத்தியுள்ளார்.

மறுபக்கம், அஷ்க் 'மண்ணுலக' எழுத்தாளர். எழுத்தாளர் ஆவதற்காக அசாதாரணமான முறையில் பாடுபட்டவர். நவீனம், சிறுகதை, நாடகம், ஓரங்கம், நினைவுக் குறிப்புகள்—எல்லா வகைகளும் எழுதியுள்ளார். தம்முடைய ஒவ்வொரு படைப்பையும் பற்பல தடவைகளில், பல உருவங்களில் எழுதியுள்ளார். அவருடைய படைப்புகளில் ஆழமும் சிந்தனையும் குறைவாக இருப்பினும், தெளிவு நிச்சயமாக இருக்கிறது. அவருடைய 'துவாலே'களை வெற்றிகரமாய் அரங்கேற்ற முடியும். உருது மரபின் சிறப்பும், வலுவின்மையும் அவருடைய படைப்புகளில் உள்ளன.

புவனேச்வர் முக்கியமாக ஓரங்க நாடகாசிரியராக இருந்தவர். மேலை நாட்டு நாடகக் கலையையும் நடையையும் தக்கமுறையில் பயின்றவர்.

45ஆவது வயதிலேயே புவனேச்வர் காலம் ஆகிவிட்டார். வாழ்க்கையின் இறுதிக் காலத்தை அவர் புத்தி பேதலித்த நிலைமையிலேயே கழித்தார். அவர் மிகுதியாக எழுதவில்லை என்றாலும், ஓரங்கத் துறையில் வழிகாட்டி போன்ற பணியை அவர் செய்தார். இவ்வாறு ஹிந்தி ஓரங்கத் துறையில் தமக்கென ஓர் இடத்தை ஏற்படுத்திக் கொண்டார் அவர்.

விஷ்ணு பிரபாகர் ஒரு சிறுகதை ஆசிரியராக இலக்கிய உலகத்திற்கு வந்தார். அவர் பிறகு நவீனங்களும் எழுதினார். வானொலியில் பணியாற்றியவாறு 'ரேடியோ உருவங்களை' எழுதத் தொடங்கியதும் அவருக்கு இச்சாதனம் நன்கு கைவந்தது. நாடகங்களும் ஓரங்கங்களும் எழுதினார். இலக்கியம் நோக்கம் உடையது எனக் கருதுகிற அவர் தம்முடைய படைப்புகளால் நல்வழிப்படுத்த வேண்டும் என்று முயலுகிறார்.

ஜகதீஷ்சந்திர மாதுர் நாடகம், நாட்டியக்கலை கற்பதில் ஆர்வம் கொண்டுள்ளார். இது சம்பந்தமாக அவருடைய படிப்பும் சிந்தனையும் மிக மதிப்பு வாய்ந்தது. நாடகம் எழுதும் ஆற்றலும் அவருக்கு இருக்கிறது. ஆனால், நேரம் கிடைக்காததால் ஆற்றல் உள்ள அளவு அவரால் எழுத முடியவில்லை. ஜகதீஷ்சந்திரரின் நாடகங்களும் ஓரங்கங்களும் நாடகமேடைக்கு உரியவை. யதார்த்த ஜீவி ஆயினும் அவர் பாவனையை முதன்மையாகக் கொண்டவர். 'விடி விண்மீன்' நல்ல படைப்பு என்பதைப்பற்றி ஐயமில்லை. ஆனால் அதைப் படிக்கிறவனும், நாடகமேடையில் பார்க்கிறவனும், 'சேகர் தன் மகா காவியத்தை ஏன் நெருப்பிலிட்டு எரித்தான்? தன்னுடைய பல்லாண்டுப் படைப்பை எரிக்காமல் அவன் தாய்நாட்டுப் பாதுகாப்புக்காகப் போருக்குப் புறப்பட முடியாதா? இன்று ஆந்த்ரே மாரோ பங்களா தேஷின் உதவிக்காகப் போருக்கு ஆயத்தமானதைப்போல்?' என்ற கேள்விகளை எழுப்பலாம்.

ஹிந்தியில் லக்ஷ்மிநாராயண் லாலுக்கு இருக்கிற நடிப்புத் தொடர்பான ஞானமும், சிந்தனையும், ஆராய்ச்சியும் அசாதாரணமான வளமுடையது என்று நான் கருதுகிறேன். எல்லாவற்றையும்விட அவருக்கு மிகவும் பிரியமுமான பொருள் நாடகமே. நாடக அரங்கு தொடர்பாக அவர் செய்துள்ள ஏராளமான ஆய்வுகளும் சோதனைகளும் அவருடைய எதிர்காலப் படைப்புகளை இன்னும் அதிக ஒளியுடையன ஆக்கும். நாடகத்திலும் நாடக மேடையிலும் அவரைப் போன்று ஈடுபாடுகொண்ட வேறு ஹிந்தி எழுத்தாளர்கள் இருக்கிறார்களோ என்னவோ.

தர்மவீர் பாரதி அரிய படைப்பாற்றல் வாய்ந்தவர். நல்ல கவிஞர், நல்ல எழுத்தாளர், நல்ல நாடகாசிரியர். புதிதாக ஏதாவது தரும் திறமை உள்ளவர். 'சிருஷ்டியின் இறுதி மனிதன்' அவருடைய பாட்டு—ஓரங்கம்.

எல்லாவற்றுக்கும் இறுதியாக நான் என்னுடைய தோணி—ஓரங்கம் ஒன்றை இத் தொகுதியில் கொடுத்திருக்கிறேன்.

புது தில்லி —**சந்திரகுப்த வித்யாலங்கார்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | v |
| 1. | பத்தாயிரம் | 1 |
| 2. | வெண்ணிலாத் திருவிழா | 13 |
| 3. | சாபமும் வரமும் | 41 |
| 4. | துவாலைகள் | 71 |
| 5. | ஸ்டிரைக் | 95 |
| 6. | இடியும் கோட்டைச் சுவர் | 111 |
| 7. | கைதி | 141 |
| 8. | காபி ஹவுஸில் எதிர்பார்த்தல் | 177 |
| 9. | சிருஷ்டியின் இறுதி மனிதன் | 201 |
| 10. | ஹிந்துஸ்தானம் சென்று சொல்லுங்கள்! | 221 |
| | ஆசிரியர்கள் அறிமுகம் | 243 |

# பத்தாயிரம்

—உதயசங்கர் பட்

## பாத்திரங்கள் :

பிசாகாராம்

சுந்தர்லால்

ராஜோ

ராஜோவின் தாய்

கணக்குப்பிள்ளை

*[நேரம் : மாலை ஐந்து மணிக்கு]*

*(எல்லை மாகாணத்தில் ஒரு நகரத்தில் ஒரு வீடு. வீட்டில் ஒரு பெரிய அறை. அதற்கு இரு வாயில்கள் இருக்கின்றன; ஒன்று படிக்கு அருகில்; மற்றொன்று வீட்டின் உட்பக்கத்துக்குப் போகிறது. தெருப்பக்கம் இரண்டு ஜன்னல்கள். உள்ளே அறையில் ஒரு பெரிய கட்டில், அதன் மீது அழுக்கடைந்த படுக்கை விரிக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பக்க மூலையில் ஒரு தாழ்வான பெஞ்சு கிடக்கிறது. அதற்கு எதிரில் மாடத்தில் சுவாமியின் பீடம் ஒன்று. அதில் சில பித்தளை மூர்த்திகள். அவற்றுக்குச் செண்டுப் பூ மாலைகள் சூட்டப்பட்டுள்ளன. மாடத்தில் ஆணியில் ஒரு ருத்திராட்ச மாலை. சிறிய அளவில் கையால் எழுதப்பட்ட இரண்டு புத்தகங்கள். அறையில் சில படங்கள் உள்ளன; ஒன்று, ராமச்சந்திரர், லட்சுமணர், பரதர், சத்ருக்கனர் நால்வரும் உள்ள ராமர் பட்டாபிஷேகப் படம். ஹனுமான் மாலையைப் பிய்த்துக்கொண்டிருக்கிறார். இரண்டாவது காளியின் படம். அறையில் ஒரு மோடா வைக்கப்பட்டுள்ளது. உடைந்த நாற்காலி ஒன்று. அதன் பிரம்புகள் ஒடிந்துள்ளன. ஒரு மூலையில் ஒரு சின்ன மேஜை, அதன்மீது ஒரு லோட்டா, அதன்மீது ஒரு கிளாஸ். சுவரில் அடிக்கப் பட்டுள்ள இரண்டு முளைகளில் ஒன்றின்மீது ஒரு தலைப்பாகையும், இரண்டாவதில் அழுக்கடைந்த கோட் ஒன்றும் ஒரு துப்பட்டாவும். கட்டிலில் லாலா பிசாகாராம் அமைதியற்றவனாய்ப் படுத்திருக்கிறான். அவனுடைய கண்களில் கவலை. ஒட்டின முகம், வெள்ளை நிறம், தலை மயிர் பரட்டையாகக் கிடக்கிறது. பெரும் கவலையில் இருப்பவனாய்த் தெரிகிறது. கையில் ஒரு கடிதம் இருக்கிறது; அதை அடிக்கடி தூக்கிப் படிக்கிறான், தலைப்பக்கம் வைத்துவிடுகிறான். மறுபடியும் எடுக்கிறான், படிக்கிறான், மறுபடியும் வைத்துவிடுகிறான். எழுந்து உட்காருகிறான், கூரை உத்திரங்களை உற்றுப் பார்க்கிறான், தொப் பென்று கட்டில்மீது படுத்துவிடுகிறான்.)*

பிசாகாராம் : ஐயோ இப்படியும் ஒரு நாள் வரும் என்று கண்டேனா! ஹே ராமா! காப்பாற்றுங்கள் சுவாமி! பெரிய துன்பம் வந்துவிட்டது. ஒரு... ஒருவழியும் தெரியவில்லை. *(கண்களை மூடிக்கொண்டு சுவாமியை நோக்கிக் கைகுவிக்கத் தொடங்குகிறான். மறுபடியும் கண்களைத் திறந்து கடிதத்தைக் கையில் எடுத்துப் படிக்கத்தொடங்குகிறான்.)* என்ன செய்வேன்? ராஜோ, அடி ராஜோ!

(உள்வாசல் வழியாகப் பதினைந்து வயதுப்பெண் ஒருத்தி ஓடி வருகிறாள்.)

ராஜோ : சித்தப்பா! என்ன, சொல்லுங்கள்?

பிசாகாராம் : ஏண்டி, கணக்குப்பிள்ளை இன்னும் வரவில்லையா? நான் செத்துக்கொண்டே இருக்கிறேன். பெரிய கஷ்டம்......

ராஜோ : அண்ணா எப்போதுதான் வருவார்? (மிகவும் அருகில் வந்து) அண்ணாவை அழைத்து வந்துவிடுங்கள். கொஞ்ச ரூபாய்தானே? ஐயோ! (கண்களில் கண்ணீர் நிரம்ப) பகவானே இவர்களுடைய ஆசைக்கு அளவே இல்லை! சித்தப்பா, ரூபாய் அனுப்பிவிடுங்கள், என்ன பார்க்கிறீர்கள்?

பிசாகாராம் : என்ன பார்க்கப்போகிறேன்! (உட்கார்ந்து) மகளே! என் விதியை நொந்து அழுகிறேன். ரூபாய் எங்கே கொட்டிக் கிடக்கிறது? இனிமேல்தான் தானியம்கூட வாங்கவேண்டும். நேற்று முகம்மது பக்ஸ் ரூபாய்க்கு ஒரணா வட்டிக்கு இரண்டாயிரம் கேட்டான். அவனுக்கும் தரவேண்டும். பத்தாயிரத்துக்கு அரசு பாண்டு வாங்கவேண்டும். இம்மாதிரி சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும்? இவ்வளவு வட்டியை விட முடியுமா மகளே? ஓ! பத்தாயிரம் தர வேண்டியிருக்கும்!

(கட்டில்மீது தொப்பென்று விழுகிறான்.)

ராஜோ : (அருகே ஓடிச்சென்று) சித்தப்பா, என்ன ஆச்சு, சித்தப்பா? அண்ணி, ஓ அண்ணி! சித்தப்பாவுக்கு என்ன ஆச்சு என்று பாரேன்!

(ராஜோவின் தாய் 'வந்துவிட்டேண்டி' என்றவாறு வருகிறாள்.)

ராஜோவின் தாய் : சொல்லிவிட்டேனே, எதுக்கு இப்படிப் போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டும்? பத்தாயிரம் கொடுத்துவிடுங்கள். ரூபாய் மறுபடியும் கிடைத்துவிடும். பிள்ளை மறுபடியும்......ஐயோ பகவானே, என் வாயிலிருந்து ஏன் இப்படி வருகிறது? ஹே ராமா! (கைகளைக் குவித்துக்கொண்டு மாடத்திலுள்ள சிம்மாதனத்தின் பக்கம் பார்க்கத் தொடங்குகிறாள்) என்னென்னவோ நடக்கிறது. இரக்கம் காட்டுங்கள், பகவானே!

பிசாகாராம் : கணக்குப்பிள்ளை வரவில்லையா? (கண்களை மூடிக் கொள்கிறான்)

ராஜோ : வந்துகொண்டே இருப்பார். உங்கள் மனசு எப்படி இருக்கிறது சித்தப்பா?

ராஜோவின் தாய் : நான்தான் சொல்கிறேனே, ஏன் கவலைப்படுகிறீர்கள்? ஈசுவரா, என் பிள்ளையை என்னிடம் திருப்பிக் கொடு. என்னுடையதை எல்லாம் எடுத்துக்கொள். என் அருமைக் குழந்தையை என்னிடம் கொடுத்துவிடு பகவானே! (அழத்தொடங்குகிறாள்.)

ராஜோ: (தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு) ஏன் அழுகிறாய் அண்ணி? சித்தப்பாவிடம் சொல்லி அண்ணாவை அழைத்து வரச் சொல்லேன்!

ராஜோவின் தாய்: (கண்ணீரைத் துடைத்தபடி) எப்படி அழைத்து வருவது மகளே, உன் சித்தப்பாவுக்குத்தான் பணப் பைத்தியம் பிடித்திருக்கிறதே. ஈசுவரன் ஒரே பிள்ளை கொடுத்தான்... ஐயோ பகவானே!

பிசாகாராம்: (கண்களைத் திறந்து) கணக்குப்பிள்ளை வரவில்லையா, மகளே?

ராஜோ: இன்னும் வரவில்லை.

பிசாகாராம்: கணக்குப்பிள்ளை சர்க்கரை பேரத்தை முடித்தாரா இல்லையா என்று தெரியவில்லை. இந்த நேரத்தில்தான் சர்க்கரை வாங்க வேண்டும். அப்புறம் விலை ஏறிவிடும். என்ன கஷ்டம் பார். இப்ராஹீமிடம் பணம் வற்புறுத்திக் கேட்டாரோ இல்லையோ? நாலு வருஷம் முடியப்போகிறது. வட்டிகூட வரவில்லை. கோர்ட்டிலே போட்டு இழுத்தடிக்க வேண்டும், அப்போதுதான் அயோக்கியன் எப்படியாவது பணம் தருவான். (கையில் கடிதத்தை எடுத்துக் கொண்டு) ஆனால், இதற்கு என்ன செய்வேன்?

('ராஜோ, ராஜோ', என்று குரல் கொடுத்தபடி கணக்குப்பிள்ளை கடகடவென்று படியேறி வருகிறான்.)

பிசாகாராம்: இதோ, கணக்குப்பிள்ளை வந்துவிட்டார். (திடீரென்று எழுந்து உட்காருகிறான்) வாருங்கள், கணக்குப்பிள்ளை, இன்றைக்கு ரொம்ப நேரம் செய்துவிட்டீர்களே.

(ராஜோவும், அவள் தாயும் மறு வழியாக வீட்டிற்குள் போகிறார்கள்.)

கணக்குப்பிள்ளை: வணக்கம் சேட்ஜீ, நேரம் ஆகிவிட்டது. நாள் முழுவதற்கும் கணக்கு எழுதவேண்டியிருந்தது. பதின்மூன்றணா விலையில் ஒன்பதுமூட்டை சர்க்கரை வாங்கினேன். முகம்மது பக்சுடைய ஆள் வந்திருந்தான். சேட்ஜீ வந்த பிறகு முடிவாகும் என்று சொல்லி விட்டேன். இப்ராஹீம் ஆளைக் காணோம் என்று கேள்வி. ரொக்கம் சேர்க்க இத்தனை நேரம் ஆகிவிட்டது. ஆமாம், பட்டாணிகளிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா?

பிசாகாராம்: சர்க்கரை பன்னிரண்டணா நாலு தம்பிடிதானே? பதின்மூன்றணாவுக்கு ஏன் வாங்க வேண்டும்? இப்ராஹீம் ஓடிவிட்டானா? இது ரொம்ப கெட்ட செய்தி, கணக்குப்பிள்ளை. நாலாயிரம் ரொக்கம் எப்படி விட முடியும்! சௌத்ரிக்குச் சொல்லி அனுப்பவில்லையா? அவன் ஜாமீன் இல்லையா? அரசு பாண்டுபற்றிக் கடிதம் வந்ததா? ரூபாய் தயாராக இருக்கட்டும். பாண்டு வாங்கியாக வேண்டும்.

கணக்குப்பிள்ளை: பட்டாணிகளிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா, சேட்ஜீ?

பிசாகாராம்: ரொக்கத்தில் எவ்வளவு பாக்கி இருக்கிறது? சௌத்ரியிடம் உடனே ஆளை அனுப்புங்கள், விடாதீர்கள், (கட்டில்மீது படுத்து) நாலாப் பக்கங்களிலும் கஷ்டம். பணம் வாங்குகிறவன் திருப்பித் தருகிற பேச்சே பேசுவதில்லை. (கண்களை மூடிக்கொண்டு கிடக்கிறான்) ஹே பகவான்! ஹே ராமா! எவ்வளவு கெட்ட காலம்! (எழுந்து) நான் போகிறேன்; இப்போது உடம்பை கவனிக்கிறதா, ரூபாயைக் கவனிக்கிறதா? (உட்கார்ந்துகொள்கிறான்.)

கணக்குப்பிள்ளை: இல்லை, சேட்ஜீ வியாதியாய்ப் படுக்கிறது சரியல்ல. பட்டாணிகள் ஒன்றும் எழுதவில்லையா சேட்ஜீ? சுந்தர்லாலைப்பற்றி கவனிக்கத்தான் வேண்டும். பாவம், அவனை எப்படித் துன்புறுத்துகிறார்களோ? (சேட்டின் பக்கம் பார்க்கிறான்.)

பிசாகாராம்: இதைப் படித்துப் பாருங்கள். துஷ்டப்பயல்! கொஞ்சம் கூடச் சண்டை போடவில்லை. பல்லக்கிலே போகிற புது கலியாணப் பெண் போல அவர்களுக்குப் பின்னாலேயே போய்விட்டான், என் வயிற்றிலே புளியைக் கரைக்க! எங்கே இருந்து பத்தாயிரம் கொண்டு வருவேன்? பத்தாயிரம்! (கடிதத்தைக் கணக்குப்பிள்ளையிடம் தந்து) படித்துப் பாருங்கள், எல்லாம் நாசமாக்கிவிட்டான். அவன் எதற்குத்தான் வெளியே போனான்? (படுத்துவிடுகிறான்.)

கணக்குப்பிள்ளை: சேட்ஜீ, சுந்தர்லால் பேரிலே ஒரு தப்பும் இல்லை. நீங்கள்தானே அவனை வசூலுக்கு அனுப்பினீர்கள்? (கடிதத்தைக் கையில் வாங்கிப் படிக்கிறான்.)

பிசாகாராம்: நான் தொலைந்தேன் கணக்குப்பிள்ளை! கொஞ்சம் உரக்கப் படியுங்கள்.

கணக்குப்பிள்ளை: (திடுக்கிட்டு) இது சுந்தர்லால் கையெழுத்தேதான்! அவன் எழுதுகிறான்: 'அப்பா, நான் உயிரோடு வரவேண்டும் என்றால் யாரிடமாவது காபுலி வாசலுக்கு வெளியே இன்று மாலை சரியாக எட்டு மணிக்குப் பத்தாயிரம் ரூபாய் அனுப்பிவிடுங்கள்! போலீஸ் அல்லது வேறு யாரையாவது உதவிக்கு அழைத்து வந்தால், பையன் செத்தான் என்றே நினைத்துக்கொள்ளுங்கள்' என்று கான் சொல்கிறான். இவர்கள் என்னை மிக்வும் துன்புறுத்திவிட்டார்கள். நரகத்தின் எந்தத் துன்பமும் இதைவிட அதிகமாயிருக்க முடியாது. தாங்கள் என்னைக் காப்பாற்றுவீர்கள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

தங்கள் மகன்
சுந்தர்லால்.

கீழே கானே புஷ்துவில் எழுதி இருக்கிறான்:

'நாம் உனக்கு அறிவித்துவிடுகிறோம், இந்த புதன்கிழமை மாலை எட்டு மணிக்குப் பத்தாயிரம் ரூபாய் காபுலீ வாசலுக்கு வெளியே அனுப்பிவிடு. இல்லாவிட்டால் உன் பிள்ளையைக் கொன்றுவிடுவேன்.

அமீர் அலிகான்!

(கணக்குப்பிள்ளை கடிதத்தை வைத்துவிட்டு பிசாகாராமின் பக்கம் பார்க்கத் தொடங்குகிறான்.)

கணக்குப்பிள்ளை: சேட்ஜீ, பத்தாயிரம் என்ன பெரிய சங்கதி? இன்றுதானே புதன்கிழமை? நீங்கள் சொன்னால், முகம்மது பக்சுக்குத் தராமல் பத்தாயிரம் ஏற்பாடு செய்துவிடுகிறேன். ரூபாய்தான் இருக்கிறதே.

பிசாகாராம்: (எழுந்து) ரூபாய்க்கு ஒரணா வட்டி கணக்குப்பிள்ளை! (அதட்டி) உங்கள் வீட்டுப் பணமாயிருந்தால் தெரியும். வேர்வை சொட்டச் சம்பாதித்த பணம். பத்தாயிரத்தைச் சும்மா எறிந்துவிடுகிறதா? பகவானே, என்னைப் பிச்சைக்காரன் ஆக்கிவிட்டாயே.

(ராஜோவும் அவளுடைய தாயும் திடீரென்று அறைக்குள் வருகிறார்கள்.)

ராஜோவின் தாய்: சும்மா எறிந்துவிடுகிறதாம்; கேட்டீர்களா கணக்குப்பிள்ளை? இவருக்கு அறிவு கெட்டுக் கிடக்கிறது. ஒன்றுமே யோசிக்கிறதில்லை. ரூபாய், ரூபாய். ரூபாய் இருந்தால் போதும்! என் பிள்ளையை அழைத்து வாருங்கள் கணக்குப்பிள்ளை! ஐயோ சுந்தர்! அடே என் குழந்தை, ஐயோ!

(முக்காடு இட்டுக்கொண்டு தரையில் உட்கார்ந்துவிடுகிறாள். ராஜோ ஓடித் தந்தையைக் கட்டிக்கொண்டு, வரம் கேட்பவள் போல் பார்க்கிறாள்.)

பிசாகாராம்: கணக்குப்பிள்ளை! சுந்தர் வரவேண்டாம் என்று நான் சொல்வேனா என்ன? பிள்ளை எப்படியாவது வந்துவிடவேண்டும் என்று தானே எனக்கும் ஆசை! நான் சுந்தருக்குத் தகப்பனில்லையா என்ன? நீங்களே சொல்லுங்கள். பையன் இல்லாமல் வீடே வெறிச்சோடிக் கிடக்கிறது. ஆனால், பத்தாயிரம்!

கணக்குப்பிள்ளை: (தலையை ஆட்டி) ஆம், அதுதான் தெரியுமே. இதைச் செய்துதான் ஆகவேண்டும்.

ராஜோவின் தாய்: நாலு நாளாய் இவர் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ரூபாய்க்காகப் பிள்ளையைப் பறிகொடுத்துவிட வேண்டாம். 'காசு கைக்கு மாசு' என்று சொல்லிக்கொண்டே இருக்கிறேன். பத்தாயிரம் பெரிய விஷயமா என்ன? ஆனால், இவருக்கு என்ன நேர்ந்திருக்கிறதோ, தெரியவில்லை! சர்க்கரையும் வட்டியும் மனசைவிட்டுப் போனால்தானே! கணக்குப்பிள்ளை, உங்கள் காலில் விழுகிறேன்; என் சுந்தரை மீட்டு வந்துவிடுங்கள்.

கணக்குப்பிள்ளை: அம்மா பயப்படாதீர்கள், சுந்தர் வீட்டுக்கு வந்தாயிற்று என்று எண்ணிக்கொள்ளுங்கள்.

ராஜோவின் தாய்: வீட்டிலே இருக்கிறான் என்று எப்படி நினைக்கிறது கணக்குப்பிள்ளை, எப்படி பயப்படாமல் இருக்கிறது? (கணவரின் பக்கம்

ஜாடை காட்டி) நிலைமையைப் பார்த்தால், பிள்ளையைப் பறிகொடுத்து விடுவேனோ என்று மனதில் திகிலாக இருக்கிறது. எது நடக்க வேண்டுமோ அது நடந்துவிட்டது என்கிறார். பிள்ளை... ஐயோ! இவராலே எப்படித்தான் இப்படிச் சொல்ல முடிந்ததோ, தெரியவில்லை. பகவானே!

ராஜோ : கணக்குப்பிள்ளை, அண்ணாவைச் சீக்கிரம் அழைத்து வந்து விடுங்கள். அம்மா தூங்கி ரொம்ப நாளாகிறது. ராத்திரியெல்லாம் அழுதுகொண்டே இருக்கிறாள். கண்கள் வீங்கிவிட்டன. என் அண்ணனைச் சீக்கிரம் அழைத்து வாருங்கள், கணக்குப்பிள்ளை! (அழத் தொடங்குகிறாள்.)

ராஜோவின் தாய் : நான் சொல்வதைக் கேளுங்கள். என் நகைகளைத் தருகிறேன். விற்று என் பிள்ளையைக் காப்பாற்றுங்கள்.

கணக்குப்பிள்ளை : எதற்கு பயப்படுகிறீர்கள் அம்மா? சேட்ஜீக்கு உங்களைவிடக் குறைவாகக் கவலை இல்லை.

பிசாகாராம் : ஆமாம், சரியாகச் சொன்னீர்கள். நான் இரவிலே எப்போது தூங்கியிருக்கிறேன்! இராப்பகலாய்க் கவலையாக இருக்கிறது. சுந்தர் என் கண்களுக்கு முன்னாலே வட்டமிட்டுக்கொண்டே இருக்கிறான். அவன் குழந்தைப் பருவம் பற்றியெல்லாம் ஞாபகம் வருகிறது. இங்கேயோ, இப்ராஹீம் ரூபாயைக் காட்டவே இல்லை. கணக்குப்பிள்ளை, அவன் வட்டிக் கணக்குப் பார்த்தீர்களா? எவ்வளவு வட்டி கூடியிருக்கிறது? சர்க்கரை எங்கே வைக்கச் சொன்னீர்கள். கிடங்கில்தானே? சாவிகளை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் என்னிடம் கொடுத்துவிடுங்கள்.

கணக்குப்பிள்ளை : சேட்ஜீ, சுந்தர்லாலைப் பற்றி என்ன உத்தரவு? ரூபாய்க்கு ஏற்பாடு செய்யட்டுமா? ரொம்பக் கொஞ்ச நேரம்தான் பாக்கி இருக்கிறது. (சேட்டின் பக்கம் பார்க்கிறான்.) பதினையாயிரம் இப்போதுதான் இரும்புப் பெட்டியிலே வைத்துவிட்டு வந்தேன்.

பிசாகாராம் : பத்தாயிரம்! குறையக் கூடாது, கொஞ்சமும் குறையக் கூடாது! வேறே ஏதாவது ஏற்பாடு செய்ய முடியாதா, கணக்குப் பிள்ளை! போலீசுக்குத் தகவல் கொடுத்தால் என்ன?

கணக்குப்பிள்ளை : போலீஸ்தான் என்ன செய்துவிடும், சேட்ஜீ. போலீசும் பயப்படுகிறதே. அவர்களுக்குத் தெரியாதா, ஆனால் அவர்கள் ஏதாவது செய்தால்தானே. சேட்ஜீ, வேறே ஏற்பாடு செய்யும்படி நான் உங்களுக்கு யோசனை சொல்ல மாட்டேன். இல்லையோ, பிள்ளையை நீங்கள் கையைக் கழுவ வேண்டியிருக்கும். அப்படி நேராமல் கடவுள் காப்பாற்றட்டும்!

ராஜோவின் தாய்: நீங்கள் என்ன யோசனை செய்கிறீர்கள், கணக்குப் பிள்ளை? என் நகைகளை எடுத்துக்கொண்டு செல்லுங்கள். (கழற்றி எதிரில் வைக்கிறாள்.) எடுத்துக்கொள்ளுங்கள். என் பிள்ளையை அழைத்து வாருங்கள். வாருங்கள், நானும் உங்களோடு வருகிறேன்.

பிசாகாராம்: எல்லோரும் என் உயிரை ஏன் வாங்குகிறீர்கள்? நகை, வீட்டு நகை இல்லையா?

கணக்குப்பிள்ளை: நேரம் ஆகிறது, சேட்ஜீ. உத்தரவு கொடுங்கள்.

ராஜோவின் தாய்: நான்தான் சொல்கிறேனே, இதை எடுத்துக் கொண்டு போய்ப் பட்டாணிகளிடம் கொடுங்கள்.

பிசாகாராம்: அப்புறம் நான் என்ன செய்வேன்? கணக்குப்பிள்ளை! அலீ பக்ஸ் நகையை மீட்டுக்கொண்டு போனானா இல்லையா?

கணக்குப்பிள்ளை: நேரம் ஆகிறது, சேட்ஜீ! காபுலி வாசல் வரை போக வேண்டும். என்ன உத்தரவு இடுகிறீர்கள்?

(பிசாகாராம் பத்தாயிரம் நினைவு வந்ததும் மறுபடியும் மயங்கியவன் போல் படுத்துவிடுகிறான்.)

கணக்குப்பிள்ளை: என்ன உத்தரவு சேட்ஜீ? கடையிலிருந்து சில ஆட்களைக்கூட அழைத்துப் போகலாம் என்று அவசரப்படுகிறேன்.

ராஜோவின் தாய்: அட, வாய் திறந்து சொல்லுங்களேன்! சரி, சொல்லாதீர்கள். கணக்குப்பிள்ளை! (விறைப்பாக) ரூபாய் எடுத்துக் கொண்டு போங்கள். வீட்டிலேயும், கடையிலேயும், நான் ஒன்றும் இல்லையா? புறப்படுங்கள். நேரம் செய்யாதீர்கள். பகவானே!

கணக்குப்பிள்ளை: கட்டளைப்படி செய்கிறேன். (போய்விடுகிறான்.)

ராஜோ: (தாயிடம்) இப்போது அண்ணன் வந்துவிடுவானா அம்மா?

ராஜோவின் தாய்: ஆம், மகளே, கணக்குப்பிள்ளை அழைத்து வரப் போயிருக்கிறார். சுந்தர் மகிழ்ச்சியாக, நல்லபடி திரும்ப வேண்டும் என்று பகவான் பெயரைச் சொல்லிக்கொண்டே இரு.

பிசாகாராம்: (திடீரென்று விழித்தவன்போல்) கணக்குப்பிள்ளை போய்விட்டாரா?

ராஜோ: ஆம், போய்விட்டார் சித்தப்பா!

பிசாகாராம்: வீட்டைக் குட்டிச் சுவராக்கிவிட்டான். எப்படி இருந்து எப்படி ஆகிவிட்டது. பிள்ளை இப்படிக் கெட்ட பிள்ளை ஆகி விட்டான். ஐயோ, நான் எப்படிப் பணம் சேர்த்தேன்! பத்தாயிரம்! ஐயோ ராமா! (மீண்டும் படுத்துவிடுகிறான்) அடீ ராஜோவின் அம்மா! நான் செத்தேன்!

ராஜோவின் தாய்: இது என்ன பெரிய பணம்! குழந்தை வீட்டுக்கு வந்துவிட்டால் பணம் நிறையச் சேரும்! பரமாத்மா எல்லாம் தான்... பகவானே! இரக்கம் காட்டு! நீங்கள் ஏன் இவ்வளவு கவலைப் படுகிறீர்கள்?

பிசாகாராம்: கவலைப்பட வேண்டாம் என்கிருயா? (உட்கார்ந்து) ரத்தம் கொடுத்துச் சேர்த்த பணம்—ரத்தம் கொடுத்து! நாற்பது வருஷமாய், இரவு பகலை ஒன்றாக்கிச் சம்பாதித்த பணம். (படுத்து விடுகிருன்.)

ராஜோவின் தாய்: சம்பாதித்து என்ன பயன்? ஒரு தீர்த்தமா, ஜப தபமா, தருமமா, ஒன்றும் இல்லை. ஒருமுறை ஹரித்துவாருக்கு அழைத்துப் போயிருப்பீர்களா! உங்கள் பணத்தைப்பற்றி எனக்குத் தெரியவே தெரியாது. நாலு பங்களாக்கள் இருக்கின்றன. நாம் இந்தச் சந்திலேயே அழுகுகிருேம்! இன்றைக்கு நீங்கள் மூன்று நாலு லட்சத்துக்கு முதலாளி. எப்போதாவது ஒரு காசு தானம் செய்திருப் பீர்களா? இந்தமாதிரிப் பணம் எதற்காக?

பிசாகாராம்: வீட்டிலேயே நெருப்பு வை! கணக்குப்பிள்ளை இன்று விற்றுமுதல் கணக்கே தரவில்லை. அயோக்கியன் ஆகிவிட்டான். ஹே ராமா! (படுத்துவிடுகிருன்.) இந்த உதவாக்கரைக்குப் பத்தா யிரம்...... கணக்குப்பிள்ளை எங்கே போனுன் ராஜோ?

ராஜோவின் தாய்: பணம் எதற்காகத்தான் இருக்கிறது? இதிலே சுந்தர் பேரிலே என்ன தப்பு?

பிசாகாராம்: கணக்குப்பிள்ளை எங்கே போனுன்? வசூலுக்குப் போயிருப்பான். ஹே ராமா! இரக்கம் காட்டப்பா!

(சுந்தர்லாலும் கணக்குப்பிள்ளையும் வருகிருர்கள். ராஜோவின் தாய் சுந்தர்லாலைப் பார்த்துத் தேம்பித் தேம்பி அழத் தொடங்கு கிருள். ராஜோ அண்ணனை அணைத்துக்கொள்கிருள். பையன் ஓடி முதலில் தந்தையின் கால்களையும் பிறகு தாயின் கால்களையும் தொட்டு வணங்குகிருன்.)

பிசாகாராம்: (மகனைப் பார்த்து) வந்துவிட்டாயடா! ரொம்ப மகிழ்ச்சி.

ராஜோவின் தாய்: இன்றைக்குப் பிள்ளையைப் பார்த்து என் மனசு குளிர்ந்தது. (அவனைத் தழுவிக்கொள்கிருள்) என் கண்மணி!

ராஜோ: என் அண்ணு! (அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொள் கிருள்.)

ராஜோவின் தாய்: சில நாட்களுக்குள் எப்படி இளைத்துவிட்டான்!

சுந்தர்லால்: ஆம், அம்மா. அந்த ராட்சசர்கள் பிடியில் சிக்காமல் பகவான் காப்பாற்ற வேண்டும்! அடித்து அடித்து உடம்பு எல்லாம் வீங்கிவிட்டது. (உடம்பைக் காட்டுகிருன்.) எலும்பு எல்லாம் வலிக்கிறது.

பிசாகாராம்: ரொம்ப நல்லாதாயிற்று மகனே! எப்படி வந்தாய்? அவர்கள் அப்படியே விட்டுவிட்டார்களா? கணக்குப்பிள்ளை, இன்றைக்கு வசூலில் எவ்வளவு கிடைத்தது?

சுந்தர்லால்: (கணக்குப்பிள்ளையைப் பார்த்து) பத்தாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டீர்கள், இல்லையா?

கணக்குப்பிள்ளை: (அஞ்சியவனாய்) ஆம், எஜமானியம்மா உத்தரவுப் படி செய்தேன்.

பிசாகாராம்: என்ன முழுசாகப் பத்தாயிரமா?

(திடீரென்று தலையணைமீது தொப்பென விழுகிறான். சுந்தர்லால், கணக்குப்பிள்ளை, ராஜோ பிசாகாராமின் பக்கம் பார்க்கிறார்கள்.)

ராஜோவின் தாய்: (சுந்தர்லாலைத் தட்டிக் கொடுத்தபடி) இவருக்குத் தூக்கம் வந்துவிட்டது மகனே, வா போகலாம்.

(திரை விழுகிறது.)

# வெண்ணிலாத் திருவிழா

—ராம்குமார் வர்மா

## பாத்திரங்கள் :

சாம்ராட் சந்திரகுப்தன் : குசுமபுரத்தின் மௌரிய சாம்ராட்

சாணக்கியர் : சாம்ராட்டின் மஹாமந்திரி

வசுகுப்தன் : குசுமபுரத்தின் தண்டல் நாயகம்

யசோவர்மன் : குசுமபுரத்தின் காவல் அதிகாரி

புஷ்பதந்தன் : குசுமபுரத்தின் திட்டச் செயலர்

அலகா : ராஜ நர்த்தகி

படைவீரர்கள், வாயில் காவலர்கள்.

[காலம் : கி.மு. 322]

(வெளியே நான்கு பக்கங்களிலும் ஆரவாரம் எழுந்துகொண்டிருக்கிறது. இடையிடையில் தாரையின் முழக்கம்; சங்கங்கள், மணிகளின் ஓசையும் கேட்கிறது. மெள்ள மெள்ள இந்த ஒலிகள் குன்றுகின்றன.)

(அரசவையில் தண்டல் நாயகம் வசுகுப்தனும், காவல் அதிகாரி யசோவர்மனும் உரையாடுகிறார்கள்.)

வசுகுப்தன் : இன்று குசுமபுரத்து மக்களின் குதூகலம் எப்படிப் பொங்கி வழிகிறது! கேடயத்தின் நடுப்பகுதி போல எந்த வாளின் தாக்குதலையும் தடுப்பதற்காக முன்னேறி வந்துள்ளது! குசுமபுரத்தின் உற்சாகம், தாக்கும் வாளின் முனையை மழுங்கச் செய்யும் ஒரு கேடயம்போல் இருக்கிறது. இப்போது ஊர்க்காவலர் யசோவர்மனின் சந்தேகம் அகன்றிருக்கும்.

யசோவர்மன் : வசுகுப்த! சந்தேகம் நீர்க்குமிழி அல்ல, ஒரு கணத்தில் அழிந்து போவதற்கு. சந்தேகம் வால் நட்சத்திரத்தின் ரேகை. அது வானத்தின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை பரவியிருக்கிறது. வால் நட்சத்திரம் எதைக் குறிக்கிறது, தெரியும் அல்லவா? அச்சத்தை, ஐயத்தை, அமங்கலத்தை!

வசுகுப்தன் : ஆனால், அச்சமோ ஐயமோ அமங்கலமோ இப்போது இல்லையே! நந்தவமிசம் அழிவுபட்டதும் இவை மூன்றும் பலாச மரத்தின் மூன்று இலைகள் போல் விலகிப் போய்விட்டன.

யசோவர்மன் : விலகிப்போய்விட்டன; ஆனால், இருக்கின்றனவே!

வசுகுப்தன் : இப்போது இரவே இராது. சகர்கள், யவனர்கள், பாரஸ்கள், வாஹலீகர்களின் அரசர்களோடு மகாராஜா சந்திரகுப்தர் குசுமபுரத்தில் பிரவேசித்தபோது குடிகள் எல்லாரும் அவருக்கு வரவேற்பு அளித்தார்கள். இந்தக் கோலாகலத்தில் குடிமக்களின் உற்சாகம் வெள்ளமெனப் பெருகியதை நீங்கள் பார்க்கவில்லையா?

யசோவர்மன் : ஆனால், இந்த உற்சாகத்தில் கேலியும் ஏளனமும் தொனிக்கும் ஒரு குரலும் இருக்கலாமே. நந்தனிடமுள்ள ராஜபக்தி இன்னும் உயிரற்றுவிடவில்லை. பச்சைப் புல்லில் தருப்பையும் முள்ளும் இருக்கலாம்.

வசுகுப்தன் : இருந்தால் அவை நிர்மூலம் ஆக்கப்படும்.

யசோவர்மன் : ஆனால், மகாராஜா நந்தனின் அமைச்சர் ராட்சசரின் நீதி மாறுவேடம் புனைந்துகொண்டு நடமாடுதல் என்று உங்களுக்குத்

தெரியாதா என்ன? நந்தர் இல்லை; ஆனால் குசுமபுரத்துக்கு வெளியே தலைமறைவாகச் சென்றுவிட்ட மந்திரி இருக்கிறாரே!

**வசுகுப்தன் :** நம்மிடமும் அறிந்துகொள்ள வல்ல கண்கள் இருக்கின்றனவே! (மக்களின் சந்தடி மீண்டும் பெருகுகிறது.) பாருங்கள், மக்களின் இரைச்சல் அதிகம் ஆகிறது! ஜன்னலை மூடிவிடுங்கள்.

**யசோவர்மன் :** ஆம், பேசுவதே கேட்கவில்லை (ஜன்னலை மூடுகிறார்.)

**வசுகுப்தன் :** அப்படியானால், சாம்ராட் சந்திரகுப்தர் குசுமபுரத்தில் நுழைந்ததும், முதல் பணியாக இங்குள்ள ஆட்சி முறையை ஒழுங்கு படுத்த வேண்டும்.

**யசோவர்மன் :** ஆசாரியர் சாணக்கியரின் மூளையில் ராஜநீதியின் எத்தனை வியூகங்கள் நாள்தோறும் தோன்றி மறைகின்றனவோ! அவரைவிட மிகுதியாக ராஜநீதியை ஒழுங்குபடுத்த யாரால் முடியும்?

**வசுகுப்தன் :** அப்படியானால் சாம்ராட் சந்திரகுப்தரைப் பொறுத்த வரையில், தோள் வலிமையோடு சரி, என்று சொல்கிறீர்களா?

**யசோவர்மன் :** ஆம், ஆசாரிய சாணக்கியரின் நீதியும் சாம்ராட் சந்திரகுப்தரின் தோள் வலியும்தான் நந்த வமிசத்தை ஒழித்தன. நந்த வமிசத்து போகவாழ்வின் அந்திவேளை சந்திரகுப்தரின் புகழ் நிலாவுக்கு முன் நீண்ட நேரம் நிலைக்க முடியவில்லை.

(திரைக்குப் பின்னால் 'சாம்ராட் சந்திரகுப்தர் வாழ்க!' என்னும் முழக்கம்.)

**வசுகுப்தன் :** (ஆவலோடு) சாம்ராட் வந்துவிட்டாரா? அப்படியானால் மக்களின் இந்த ஆரவாரம் அவரை வரவேற்கத்தானா? ஜன்னலைத் திறந்து பாருங்கள், யசோவர்மன்.

**யசோவர்மன் :** பார்க்கிறேன். (ஜன்னலைத் திறக்கிறார். மக்களின் ஆரவாரம் மறுபடியும் மிகுதியாய்க் கேட்கிறது.) ஆம், மக்கள் குதூகலமாய் மலர் மாலைகளை எறிகிறார்கள்! மகாராஜா உள்ளேயுள்ள முற்றத் தலைவாசல் வழியாகப் பிரவேசித்துள்ளார். அவருடைய தோற்றம் இப்போது தரிசிக்கத்தக்கது. விசாலமான நெற்றி, உயர்ந்த நாசி, பெரிய பெரிய சிவந்த கண்கள். அவர் நகரவாசிகளிடம் ஏதோ கூறிக்கொண்டும் இருக்கிறார். சொல்லும்போது அவருடைய வாக்கில் வீரத்தன்மை ரீங்காரம் இடுகிறது, தொலைவிலிருந்து வருகிற எதிரொலி திசைகளில் தேங்கி இறுதி ஸ்வரங்களை ரீங்கரிப்பதைப் போல். அவருடைய புருவங்களில் இயற்கையாகவே முறுக்கேறியுள்ளது, பார்வைக்கு மேலே ஆசைகள் வக்கிரமுற்று இரு மடங்காகி விட்டனபோல். சுருண்டு பரந்து கிடக்கும் கேசத்தின்மீது கிரீடம் இருக்கிறது, அதன் உச்சி இறகு தலையசைப்பில் நாணமுள்ள பெண்ணின் பார்வைபோல் கீழே குனிகிறது. தோள்களில் வலிமை

திரண்டுள்ளது, அவை நாட்டின் மேருதண்டங்கள் போலக் காட்சி அளிக்கின்றன. படைவீரர்களைப் போன்ற வேடம், மார்பில் முத்தாரம், இடுப்பில் வெல்வெட்டு உறையினுள் வாள்! மிகவும் உற்சாகம் நிறைந்த வேட அமைப்பு!

வசுகுப்தன் : (மகிழ்ச்சியாக) உண்மையில் சாம்ராட் வீர ரசத்தின் எடுத்துக்காட்டு! அதோ வாயில் காப்போன் வருகிறான்.

[வாயில் காப்போன் வருகை.]

வாயில் காப்போன் : மகாராஜா வாழ்க! சாம்ராட் வருகை புரிகிறார்.

வசுகுப்தன் : நாங்களும் அவருடைய வரவேற்புக்கு ஆவலாக இருக்கிறோம். நீ போ, வெளிவாசலில் சாம்ராட்மீது பூமாரி பொழியட்டும்.

வாயில் காப்போன் : கட்டளை. (வெளியேறுகிறான்.)

யசோவர்மன்: சாம்ராட் தக்ஷசீலத்தில் கிரேக்கப் படை நிர்வாகத்தின் திறனைக் கண்டுள்ளார். அந்தத் திறனின் வலிமையினால் அவர் பாரதம் முழுவதிலும் தம் சாம்ராஜ்யத்தை நிறுவமுடியும். அவர் வெளிநாட்டு ராஜநீதியை ஏற்றுக்கொண்டு ஏதோ எதிர்கால வேலைத் திட்டத்திற்கு அஸ்திவாரம் இட்டிருக்கிறார். இது மிகச் சிலருக்கே தெரியும்.

வசுகுப்தன் : ராஜநீதியோடு பெண்! நீ சொல்வதன் உட்பொருள் இதுதானே?

[குரலை அடக்கிக்கொண்டு இருவரும் சிரிக்கின்றனர். சாம்ராட் வாழ்க முழக்கத்துக்குப் பிறகு சாம்ராட் சந்திரகுப்தன் தன் வேலைத்திட்ட அதிகாரி புஷ்பதந்தனோடு பிரவேசிக்கிறான்.]

வசுகுப்தனும், யசோவர்மனும் : (ஒரே குரலில்) மகாராஜா வாழ்க!

சந்திரகுப்தன் : தண்டல் நாயகம் வசுகுப்தன்! குசுமபுரியின் வைபவத்தைப் பார்த்தேன். யுத்த பைரவி காவி ஆடை அணிந்திருப்பது போலவும், அவள் சந்நியாசினி ஆகிவிட்டது போலவும் எனக்குத் தோன்றுகிறது. நகரத்தின் அழகு குன்றியிருக்கிறது, வாளின் கலீர் கலீர் என்னும் ஒலி காற்றில் கலந்துவிட்டாற்போல. நகரவாசிகளின் இந்த உல்லாசம் நரிகளின் ஆரவாரம்போல் தோன்றுகிறது. அதற்கு நாம் மனிதத்தன்மை தரவேண்டும். நகரவாசிகள் தங்கள் வீட்டுக்குத் திரும்பலாம் என்று சொல்லி அனுப்பு.

வசுகுப்தன் : கட்டளை, சாம்ராட். (வெளியேறுகிறான்.)

[சிறிது சிறிதாக மக்களின் ஆரவாரம் அடங்கிவிடுகிறது.]

சந்திரகுப்தன் : ஊர்க்காவலதிகாரி யசோவர்மன்! நான் கிரேக்கப் படைவீரர்களின் பணியாட்களிடம் கண்ட தேஜஸ்கூட, குசுமபுரத்தின் மிக கண்ணியமான நகரவாசிகளிடத்திலும் இல்லை. இங்குள்ள மனிதர்களுக்கு வெளிப்படையாகப் பேசும் துணிவுகூட இல்லை. ஒரு

கரவு, ஓர் ஆத்திரம், சோன் நதியைப்போல் குசுமபுரத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அத் தளையிலிருந்து அதை விடுதலை செய், யசோவர்மன்!

யசோவர்மன் : சாம்ராட்! ஆசாரியர் சாணக்கியரின் இந்த நீதியால் குசுமபுரம் ஒரு மலரைப்போல் அழகாகவும், தங்களுடைய புகழைப் போல நிர்மலமாகவும் ஆகிவிடும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

[வசுகுப்தன் வருகிறான்.]

சந்திரகுப்தன்: ஆகலாம். ஆரியர் சாணக்கியரின் நீதி, குசுமபுரத்தின் ராஜநீதியில் எத்தகைய ஒரு சக்கரவியூகம் வகுத்துள்ளதோ, அதில் உள்ள அராஜகத்தின் பாதை சாவுச்சுவரில் போய் முடியும். அந்தச் சாவுச் சுவரின் அஸ்திவாரத்தில் என்ன இருக்கிறது, தெரியுமா? நந்தவமிசம் முழுவதும் மீளாத் துயிலில் மூழ்கியுள்ளது.

வசுகுப்தன் : அந்த நந்தவமிசத்தின் விழிகளில் போக வாழ்வின் வெறி கடைசி கணம் வரையிலும் இருந்திருக்கிறது.

சந்திரகுப்தன் : இதைப்பற்றி எனக்கும் வருத்தம்தான்; ஆனால் அரசியல் என்பது வாள்முனைப் பாதை. போக வேட்கையின் சுமையைத் தலைமீது ஏற்றிக்கொண்டு நடப்பவன், தன்னை இரண்டு துண்டாடு மாறு அந்த வாளுக்கு அழைப்புவிடுக்கிறான். நான் ஆசாரியர் சாணக்கியரின் சக்கரவியூகத்துச் சாவுச் சுவரை வாழ்க்கையின் ஒளிக் கம்பம் ஆக்க விரும்புகிறேன்.

வசுகுப்தன் : சாம்ராட்டின் புஜபலத்திலும், ஆசாரியர் சாணக்கியரின் நீதியிலும் இந்த ஆற்றல் இருக்கிறது.

சந்திரகுப்தன் : ஆசாரியர் சாணக்கியரின் உதவியால் இதுவரை நடந்திருப்பவற்றுக்காக, அவரிடம் நகரவாசிகள் வருத்தம் கொள்ளக் கூடாது. தக்ஷசீலத்தின் அனுபவத்திலிருந்து குசுமபுரத்தின் துன்பங்களைத் துடைக்க விரும்புகிறேன். ஆட்சிமுறையின் அளவுகோல் குடிகளின் மகிழ்ச்சியும் இன்பமுமாக இருக்கவேண்டும்.

யசோவர்மன் : சாம்ராட்டின் சொல், சத்தியம்.

சந்திரகுப்தன் : ஆகையால் நான் ஒரு திருவிழாவுக்கு ஏற்பாடு செய்ய விரும்புகிறேன், வெண்ணிலாத் திருவிழா. இன்று சரத்காலப் பௌர்ணமி. ஆகையால் தண்டல் நாயகம் வசுகுப்தனின் யோசனைப் படி நான் மத்தியானம் இந்த முடிவை அறிவித்துவிட்டேன். இயற்கையின் இந்த நிலா நிறைந்த தூய்மையில் மக்களின் உள்ளத்துப் பாவ வாடைகள் எல்லாம் கழுவப்பட்டுவிடும். இவ்வாறு வெண்ணிலாத் திருவிழா குசுமபுரத்தின் மாபெரும் அரசியல் திருவிழாவாகும்.

வசுகுப்தன்: சாம்ராட்! குசுமபுரத்தின் சிம்மவாயில் [illegible] வரையிலும் நரிகளுக்கே வரவேற்புத் தந்துள்ளது. தாங்கள் அவ்[illegible]ய வருகை புரிந்ததால், சிம்மவாயில் என்ற பெயர் பொருளுடையதாயிற்று.

சந்திரகுப்தன்: உன்னால் மனத்தை மகிழ்விக்கும் சொற்களைச் சொல்ல முடியும், வசுகுப்த! ஆகையால்தான் நீ குசுமபுரவாசியாக இருந்தும் வரி திரட்டும் தண்டல் நாயகம் என்னும் புதிய பதவியை வழங்கினேன். இனியவை சொல்லி நன்முறையில் வரி திரட்ட உன்னால் முடியும்.

வசுகுப்தன்: இது சாம்ராட்டின் கிருபை.

சந்திரகுப்தன்: ஆக, குடிகளின் மகிழ்ச்சியே என் இன்பத்தின் முதல் தூதன். (திட்டச் செயலர் புஷ்பதந்தனை அழைத்தவாறு) திட்டச்செயலர் புஷ்பதந்த, வெண்ணிலாத் திருவிழாபற்றி நகரவாசிகளுக்கு ஆர்வம் இருக்கிறதா?

புஷ்பதந்தன்: சாம்ராட், வெண்ணிலாத் திருவிழாச் செய்தி நகரவாசிகளுக்கு எட்டிய நேரத்திலிருந்து, ஒவ்வொரு நகரவாசியும் சூத்திரன் மகாபத்ம நந்தனின் கொடுமையின் வீழ்ச்சியைத் தங்கள் பெருந்தன்மையின் தொடக்க வாழ்த்துரையாகக் கருதுகிறார்கள். சாம்ராட் ஆரியர் சாணக்கியரின் உதவியால் ஆயுதத்தையும் பூமியையும் காத்துள்ளார். குசுமபுரத்திற்குத் தங்கள் வருகை ஆயுத வெற்றியின் அடையாளம்; அதில் சாத்திரத்தின் மகிழ்ச்சியையும் நிலத்தின் நலனும் இருக்கின்றன.

யசோவர்மன்: குடிகளின் வருக்கத்தில் சிலர் நந்த வமிசத்தை ஆதரிப்போராக இருக்கலாம்; நந்த வமிசத்து அழிவால் அவர்கள் துயரமடைவது இயற்கை. ஆகையால், வெண்ணிலாத் திருவிழா பற்றின சாம்ராட்டின் அறிவிப்பு, துயரத்தைக் களிப்பாலும் செல்வச் செழிப்பாலும் நிரப்பி அவர்களுக்குள் ராஜபக்தி அலைகள் எழுப்பக் கூடும். வெண்ணிலாத் திருவிழாவில் தங்களுடைய சிறு நகரத்தின் அழகைக் கண்ணுற்றுத் தங்கள் பகைமையையும் வெறுப்பையும் மறக்கக் கூடும். நகரத்தின் செல்வச் செழிப்பைப் பார்த்து அவர்களுடைய எண்ணப்போக்கு திசை மாறக்கூடும். ஆனால், நாம் இத் திருவிழாவை விழிப்போடு கவனிக்கவேண்டும்.

வசுகுப்தன்: விழிப்போடு கவனிப்பதற்கு அப்படிச் சிறப்பான தேவை ஏதும் இல்லை. நகரத்தின் செல்வம், மக்களின் செல்வம். தாயின் செல்வச் செழிப்பைக் கண்டு களிக்காத தனயன் உண்டா? அறிமுகம் இல்லாத யாரிடமிருந்தோ வந்த நல்வாழ்வு விழைவும் கூட மனத்துக்கு இனிக்கையில், சாம்ராட்! தங்களை நிகர்த்த பரந்த மனமுள்ள சாம்ராட்டின் நல்வாழ்வு விழைவுகள் நகரவாசிகளின்

உள்ளத்தில்சாம்ராட்டின்பால் பக்தி சிரத்தை என்னும் ஆகாய கங்கையைப்பெருகியோடச் செய்யாமல் இராது.

சந்திரகுப்தன் : அவ்வாறே ஆகுக! (திட்டச் செயலர் புஷ்ப தந்தனிடம்) திட்டச் செயலர் புஷ்பதந்த! வெண்ணிலாத் திருவிழா வுக்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

புஷ்பதந்தன் : சாம்ராட்! வெண்ணிலாத் திருவிழாவிற்காகக் குசுமபுரத்தை அலங்காரப்படுத்துவதில் நாயக் தன் சக்தி முழுவதையும் ஈடுபடுத்தி இருக்கிறன். சோன் நதியும் கங்கையும் கூடும் இடத்தில் ஒரு நூறு படகுகள் சாம்ராட்டின் திருப்பெயர் வடிவத்தில் அலங்கரிக்கப்பட்டு அவற்றின்மீது நாற்பது முழ உயரத்தில் ஆகாச தீபங்கள் அமைக்க ஏற்பாடு ஆகியுள்ளது. சரத்காலச் சந்திரனின் வெண்ணகையோடு சாம்ராட்டின் திருநாமமும் தீபங்களின் ஒளி மண்டலத்தை உருவாக்கியவண்ணம் நகரவாசிகளின் நெஞ்சில் ஊடுருவிச் சென்று நிலைத்துவிடும்.

சந்திரகுப்தன் : இது மனோதர்மத் திறன். அப்புறம்?

புஷ்பதந்தன் : நகரத்தின் வெளிப்புற மரமதிலின் அறுபத்து நான்கு வாயில்களிலும் மங்கல கலசங்கள் அணியுற அலங்கரிக்கப்படும். தூரத்திலிருந்து பார்ப்பதற்கு, குசுமபுரம் ஒளியின் ஒரு தடாகம் போலவும், அதன் நான்கு பக்கங்களிலும் தீபவொளிக் கதிர்களின் அறுபத்துநான்கு அலைகள் பிரவகிப்பது போலவும் தோன்றும்.

சந்திரகுப்தன் : இந்த அழகுப் படைப்புப் போற்றத்தக்கது!

புஷ்பதந்தன் : மதில்மேல் ஐநூற்று எழுபது மாடி மண்டபங்கள் இருக்கின்றன அல்லவா, அவற்றிலே அதே எண்ணிக்கையுள்ள பெண் மணிகள் ரத்னாபரண பூஷிதைகளாய் ஒளி வெள்ளத்தில் நாட்டியம் ஆடுவார்கள். அவர்கள் ஆடல் புரிகையில் அவர்களுடைய ரத்தினங்கள் ஒளிக்கதிர்களால் ஒளிரும்போது, கதிர்களின் தாமரைகளில் ஒளித் துளிகளின் வண்டுகள் கிரீடை செய்கின்றனபோலத் தோன்றும்.

சந்திரகுப்தன் : இது மிக அழகாக இருக்கும்!

புஷ்பதந்தன் : அப்புறம், சாம்ராட்! மதிலின் நான்கு பக்கங்களிலும் சோன் நதியின் வாய்க்கால் இருக்கிறது அல்லவா, அதில் ஆயிரக் கணக்கான தீபாராதனைகள் நடக்கும். நகரத்தின் நாலு திசைகளிலும் தீபங்களின் ஆகாய கங்கை பெருக்கெடுத்துச் செல்வது போலத் தோன்றும்.

வசுகுப்தன் : நாயக் பரிசுக்கு உரியவன், சாம்ராட்!

சந்திரகுப்தன் : சந்தேகம் இல்லாமல்! திட்டச் செயலர் புஷ்பதந்த! இந்தத் திருவிழாவுக்காக எவ்வளவு பணம் செலவானாலும், அது அரசாங்கக் கஜானாவிலிருந்து செலவு செய்யப்படாமல், என்னுடைய

சொந்த 'சந்திர-கஜானு'விலிருந்து செலவு செய்யப்படும் என்றும் அறிவிப்புச் செய்துவிடு. இதனுல் குடிமக்களுக்கு மனமகிழ்ச்சி உண்டாகும்.

வசுகுப்தன் : இது சாம்ராட்டின் தாராள குணம். சூத்திர ராஜா மகா பத்மரோ குடிகளிடமிருந்து ஆயிரமாயிரக்கணக்கில் பணத்தை எடுத்துக்கொண்டு அவற்றை எல்லாம் தன் சொந்த வாழ்க்கையின் ஆடம்பரங்களில் வீணுக்கி வந்தார். அதே நேரத்தில் குடிமக்களுக்கு மரண தண்டனைப் பரிசு கிடைத்து வந்தது. தம்மை ஒரு அரசராக அறிவித்தபோதும் அவர் குடிமக்களின் உள்ளத்தில் அணுவளவும் இடம் கொள்ள முடியவில்லை. இதே நிலைமை அவருடைய புதல்வர் கனநந்தர் காலத்திலும் இருந்தது.

சந்திரகுப்தன் : வசுகுப்த! இந்த இன்னு விஷயங்களைப்பற்றிப் பேசி நம் விழாவினை ஊறுபடுத்த வேண்டாம்.

வசுகுப்தன் : மன்னியுங்கள், சாம்ராட்!

சந்திரகுப்தன் : திட்டச் செயலர் புஷ்பதந்த! குடிகளின் வீடுகளின் அலங்காரம் எவ்வாறு இருக்கும்?

புஷ்பதந்தன் : சாம்ராட், குடிகளின் வீடுகளின் வரிசைகளில் பலபல வண்ணங்களில் ஒளித் தோரணங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இரவிலும்கூட சாம்ராட்டின் தலைநகரத்தில் ஏழு வண்ண வானவில்கள் வெவ்வேறு நாட்டிய முத்திரைகளில் அலங்கரிக்கப்பட்டுள்ளதாய்த் தோன்றும்.

வசுகுப்தன் : இத்தருணத்தில் சாம்ராட்டின் முன்னிலையில் நந்த வமிசத்து ராஜநர்த்தகியின் நாட்டியத்திற்கும் ஏற்பாடு ஆக வேண்டுமே?

யசோவர்மன் : இது நகரத்து அழகைப் பார்க்கவேண்டிய நேரம்; ராஜநர்த்தகியின் அழகைப் பார்க்கிற நேரம் அல்ல.

வசுகுப்தன் : நகர அழகைப் பார்த்த பின் சாம்ராட் இளைப்பாற்றிக் கொள்ளவும் விரும்புவாரே! இளைப்பாறும் கணங்களைத் தூக்கவயப் படுத்துவதற்கு ராஜநர்த்தகியின் நிருத்தியமும் தேவைப்படலாம்.

சந்திரகுப்தன் : திட்டச்செயலர் புஷ்பதந்த! போ, நாயக்கிடம் வெண்ணிலாத் திருவிழா ஏற்பாடுகளை விரைவுபடுத்தச் சொல். என்னுடைய 'சந்திர-கஜானு'விலிருந்து அவனுக்கு ஐயாயிரம் பொற் காசுகள் வெகுமதியாக வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துவிடு. வெண்ணிலாத் திருவிழாவின் துவக்கம் எனக்குத் தாரை முழக்கத்தால் தெரிவிக்கப்படவேண்டும்.

புஷ்பதந்தன் : கட்டளை, சாம்ராட்! (வெளியேறுகிருன்.)

சந்திரகுப்தன் : நாயக் உண்மையில் பரிசுக்குரியவன். குசுமபுரத்தில் இத்தகைய அழகுப் படைப்பு ஒருகால் இதுவே முதல் தடவையாக இருக்கலாம்! என்ன, வசுகுப்த?

வசுகுப்தன் : சந்தேகம் இல்லை, சாம்ராட்! குசுமபுரத்தில் என்னுடைய இவ்வளவு ஆயுள் கழிந்துவிட்டது. ஆனால் மகாராஜா நந்தர் போகவாழ்க்கையின் ஆழம் கண்டும்கூட, ஒருகாலும் தம் நகரத்தை இவ்வாறு அழகுபடுத்தியதில்லை. குசுமபுரம் உண்மையாகவே அழகுக் குசுமம்(மலர்) ஆக முடிந்த இச் சிறப்புத் தங்கள் ஆட்சியையே சேரும்.

சந்திரகுப்தன் : வசுகுப்த! உன்னுடைய புகழ்ச்சி மிகை மொழிகள் நிரம்பியதாக இருக்கிறது. இவ்வளவு புகழ்ச்சியைக் கேட்டுச் சிலசமயம் எனக்குச் சந்தேகம் உண்டாகத் தொடங்குகிறது.

வசுகுப்தன் : எதைப்பற்றி, சாம்ராட்?

சந்திரகுப்தன் : உன்னுடைய சொல்லின் உண்மையில்.

வசுகுப்தன் : சாம்ராட் சோதனை செய்து பார்த்துக்கொள்ளலாம். உண்மையை உண்மையென உரைப்பது மிகையுரை அல்ல, சாம்ராட்! தவிர, சாம்ராட்டே தெளிவுறப் பேசுபவர். சாம்ராட்டுக்கே இவ்விஷயம் தெரிந்திருக்கலாம்.

சந்திரகுப்தன் : சந்திரகுப்தன் யுத்த நீதியைத் தவிர வேறொன்றும் தெரிந்துகொள்ள விரும்பவில்லை, வசுகுப்த! வரிவசூல் செய்யும் புதிய பதவியில் உன்னை நியமனம் செய்ததுபற்றிக் கூட மகாமந்திரி சாணக்கியரே அறிவார். இந்த நியமனம்பற்றி அவரிடம் கேட்க எனக்கு நேரமே கிடைக்கவில்லை.

யசோவர்மன் : சாணக்கியரிடம் கட்டாயம் நீங்கள் கேட்டிருக்க வேண்டும், சாம்ராட்!

வசுகுப்தன் : என்னை அவமானம் செய்ய உங்களுக்கு உரிமை இல்லை. நீங்கள் என்னைப் போருக்குத் தூண்டி விடுகிறீர்கள்.

யசோவர்மன் : சாம்ராட்டின் ஊழியன், ஆசாரியர் மகாமந்திரி சாணக்கியரின் மாணவன் என்ற உறவில் நான் துவந்த யுத்தத்திற்கு ஆயத்தமாக இருக்கிறேன், வசுகுப்த! சாம்ராட் நான் துவந்த யுத்தத்துக்கு அனுமதி வேண்டுகிறேன்.

சந்திரகுப்தன் : யசோவர்மன்! இது அரசவை. போர்க்களம் அல்ல! வெண்ணிலாத் திருவிழாவுக்கு ரத்த அபிஷேகம் வேண்டாம்! நீயும் இவ்வளவு விரைவாய்ச் சினம்கொண்டு இருக்க வேண்டாம்.

வசுகுப்தன் : சாம்ராட்! நான் மன்னிப்பு வேண்டுகிறேன். ஆனால் உண்மை காக்கப்பட வேண்டும்?

சந்திரகுப்தன் : நிச்சயம். இன்று வெண்ணிலாத் திருவிழாவில் அழகுதான் காக்கப்படும்! ஆம், நீ ராஜநர்த்தகியைப்பற்றி என்ன சொல்லிக்கொண்டிருந்தாய்?

**வசுகுப்தன் :** சாம்ராட்டின் ஓய்வுக் கணங்களைத் தூக்க வயப்படுத்த நாஜநர்த்தகியின் நிருத்தியம் தேவையாக இருக்கும் என்றுதான் ஊழியன் விண்ணப்பித்துக்கொண்டு இருந்தேன்.

**சந்திரகுப்தன் :** ஆம், தேவைதான்.

**வசுகுப்தன் :** சாம்ராட்! நான் அவளுடைய அலங்காரத்துக்குச் சிறப்பான ஏற்பாடு செய்திருக்கிறேன். அவள் அரண்மனையின் வட சிறகில் ஆடை அணிகளால் நன்கு அழகுபடுத்திக்கொண்டிருக்கிறாள்.

**சந்திரகுப்தன் :** என் விருப்பங்களுக்கு முன்பே காரியங்களுக்கு ஏற்பாடு செய்யும் வசுகுப்த! நான் உன்னிடம் மகிழ்ச்சியாக இருக்கிறேன். வெண்ணிலாத் திருவிழாவின்போது நீ எப்போதும் என்னோடு இருப்பாய்!

**வசுகுப்தன் :** இது என் சௌபாக்கியம், சாம்ராட்!

**சந்திரகுப்தன் :** பதினெட்டு வித்தைகளையும் கற்பிக்கும் தக்ஷசீலத்தின் நினைவு இத்தருணத்தில் எனக்கு வருகிறது. ஆயிரக் கணக்கான மாணவர்கள் இருந்தார்கள். அங்கே என்னுடைய நண்பர் ஒருவர் இருந்தார். நீயும் அவருடைய பெயரைக் கேட்டிருக்கலாம். புகழ்பெற்ற சமஸ்கிருத வல்லுநர் காத்யாயனன்.

**வசுகுப்தன் :** அவர் வியாகரண கர்த்தா பாணினியின் பயிற்சியில் தேர்ந்து புகழ் பெற்றவர் ஆயிற்றே, சாம்ராட்!

**சந்திரகுப்தன் :** ஆம், நான் ஆயுர்வேதம், தனுர்வேதம், அறுவை சிகிச்சை கற்றுக்கொண்டிருந்தேன். காத்யாயனன் வேதமும் வியாகரணமும் படித்து வந்தார். பாணினியின் வியாகரண சூத்திரம் மொழிக்கும் இலக்கியத்திற்கும் முன்னாலேயே கற்பிக்கப்படும். அதே போல, உன்னுடைய வேலைகூட என் விருப்பத்துக்கு முன்னரே நடந்துவிடுகிறது.

**வசுகுப்தன் :** தாங்கள் எனக்கு மதிப்புத் தருகிறீர்கள், சாம்ராட்!

**சந்திரகுப்தன் :** அங்குதான் ஆசாரியர் சாணக்கியரோடு நட்பு ஏற்பட்டது. நீதி நிபுணர் ஆசாரியர் சாணக்கியருக்கு ஈடாக அறிவிலும் உள் நோக்கிலும் இன்று ஆரியாவர்த்தம் முழுவதிலும் ஒருவருமில்லை. அவர் என் ஆசாரியராகவும் மகாமந்திரியாகவும் அமைந்தது என் சௌபாக்கியம்.

**யசோவர்மன் :** சாம்ராட்! ஆசாரியர் சாணக்கியரின் நீதி அழியாத் தன்மை பெறும் ஆற்றல் வாய்ந்தது. ராஜநீதியோடு ஆயுர்வேதம் முதலியவற்றிலும் ஆசாரியர் சாணக்கியர் தேர்ந்தவர். சீனத்து இளவரசர் ஒருவர் கண்நோய்க்குச் சிகிச்சை பெற தக்ஷசீலம் வந்திருந்தார். ஆசாரியர் சாணக்கியர் ஒருவார சிகிச்சையில் அவருக்குத் தெளிவான பார்வை அளித்தார்.

சந்திரகுப்தன் : இது எனக்குத் தெரியும். அவருடைய ராஜநீதியில் மனம் பறிகொடுத்த தக்ஷசீல மன்னர் ஆம்பீகன் அவரைத் தக்ஷசீலத் திலேயே வைத்துக்கொள்ள விரும்பினன். ஆனல், அவர் அங்கிருக்க இணங்கவில்லை. நாங்கள் இருவரும் ஒரு சுதந்திரநாட்டை நிறுவுவோம் என்று அவர் எனக்குத் தைரியம் கொடுத்தார்.

யசோவர்மன் : சாம்ராட்! அவருடைய வாக்கு இறுதியில் எவ்வளவு உண்மை ஆயிற்று!

வசுகுப்தன் : ஏன் உண்மை ஆகாது? மனித உள்ளத்தைப் புரிந்து கொள்ளும் உள்நோக்கு அவருக்கு மிக அதிகம். ஒரே கணத்தில் அதனுடைய வேலைத்திட்டம் முழுவதையும் அவரால் தெளிவாய்க் கூறி விடமுடியும். அவருக்குச் செயல் ஆற்றும் முறை தெரியும். அரிய சக்தியும், அரிய துணிவும், அரிய புத்தியும் அவருக்கு விசித்திரமாக வாய்த்துள்ளன.

யசோவர்மன் : அவர் மனித ரத்தினம், சாம்ராட்! தங்களுடைய ஒத்துழைப்பால் அவர் நாட்டை இடையூறு அற்றதாக்குவார்.

சந்திரகுப்தன் : நானும் அவ்வாறே எதிர்பார்க்கிறேன். ஆனல், வெண்ணிலாத் திருவிழா சம்பந்தமாகவும் நான் ஆசாரியர் சாணக்கி யரைக் கலந்துகொள்ள முடியவில்லை. போரின் சிக்கல்களில் ஓய்வே தரவில்லை. ஆனல் இதைப்பற்றின அறிவிப்பு அவருக்குக் கட்டாயம் கிடைத்திருக்கும்!

வசுகுப்தன் : அவர் தங்கள் விருப்பத்தை ஆதரிக்கவே செய்வார். வெண்ணிலாத் திருவிழாவின் உபயோகத்தையும், அது உரிய காலத்தில் நடக்க இருப்பதையும் தம்முடைய உள்நோக்கினல் அவர் கட்டாயம் கண்டிருப்பார். இப்போது நேரம் அதிகம் ஆகிறது. சாம்ராட், ராஜ நர்த்தகியின் நிருத்தியம்பற்றி என்ன முடிவு செய்கிறீர்கள்?

சந்திரகுப்தன் : அவளுடைய பெயர் என்ன?

வசுகுப்தன் : 'அலகா', சாம்ராட்! அவள் இகழத்தகாத அழகி, இணையற்ற நாட்டியக்கலைச் சக்கரவர்த்தினி.

சந்திரகுப்தன் : நான் முன்னதாகவே அவளைப் பார்க்க விரும்புவேன்.

வசுகுப்தன் : கட்டாயம், சாம்ராட்! அவள் அரண்மனையின் வடசிறகில் ஆடை அணிகளால் நன்கு அழகுபடுத்திக்கொண்டிருக்கிறள். ஆணையிட்டால் அவளை சாம்ராட்டின் முன்னிலையில் பார்வை யிடுவதற்காக அழைத்துவருகிறேன்.

சந்திரகுப்தன் : அவ்வாறே ஆகுக!

வசுகுப்தன் : கட்டளை, நான் அவளை சாம்ராட்டின் திருமுன் இப்போதே அழைத்து வருகிறேன்.

[வசுகுப்தன் மகிழ்ச்சியாக வெளியேறுகிறன்.]

சந்திரகுப்தன் : ஊர்க்காவலர் யசோவர்மன்! இன்று ராஜநர்த்தகி அலகாவின் நிருத்யத்தைப் பார்த்துக் குசுமபுரத்தின் சிறந்த நிருத்தியக் கலையை அறியும் வாய்ப்புப் பெறுவேன்.

யசோவர்மன் : நான் சாம்ராட்டின் திருமுன் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன்.

சந்திரகுப்தன் : விண்ணப்பம் செய்துகொள்.

யசோவர்மன் : போகிகளான நந்த வமிசத்தினரின் ராஜநீதியில் இந்த அலகா இருக்கிறாள்.

சந்திரகுப்தன் : இந்த ராஜநர்த்தகி அலகாவா?

யசோவர்மன் : ஆம், சாம்ராட். ராஜநர்த்தகியின் வாழ்க்கையின் பெரும் சாபக்கேடு, அவள் நந்தவமிசத்தின் அழிவுக்குக் காரணம் ஆனாள் என்பது. ஆகையால் அவளைக் குற்றம் அற்றவள் எனல் முடியாது.

சந்திரகுப்தன் : குற்றம் அற்றவளா? அவள் எல்லாவிதங்களிலும் குற்றவாளி எனல் வேண்டும். கௌதமர் அகலிகைக்கு ஏன் சாபம் கொடுத்தார்? அகலிகை தன் அழகைக் காத்துக்கொள்ளவில்லையா என்ன? அவ்வாறானால் அவள் ஏன் இந்திரனைக் கண்டுகொள்ளவில்லை? சசியின் சௌபாக்கியத்தை அப்சரசுகளுக்குப் பகிர்ந்து தரும் இந்திரனின் வேட்கைக்கும் அறிமுகம் வேண்டுமா? அவ்வாறே, அலகா மகாராஜா நந்தரைப் புரிந்துகொள்ள முடியவில்லையா? மகாராஜா நந்தரின் கண்களிலே ஒளிர்ந்த மின்னலின் ரேகைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லையா? யசோவர்மன்! உனக்குத் தெரியும, விண்ணிலிருந்து விழும் எரிநட்சத்திரம் ஒரே ஒளிக்கொள்ளியாக இருக்கிறது; ஆனால் அது தோன்றும்பொழுது உலகம் எங்கும் அமங்கலத்தின் அச்சம் ஏன் ஏற்படுகிறது?

யசோவர்மன்: சாம்ராட் இவ்வாறு எண்ணுகிறார் எனில், அவளுடைய நிருத்தியத்திற்கு ஏன் அனுமதி தருகிறார்?

சந்திரகுப்தன் : வெண்ணிலாத் திருவிழாவின் அழகை அழகுபடுத்துவதற்காகத்தான். சாம்ராட் சந்திரகுப்தர் மகாராஜா நந்தரை அண்டி வாழ்ந்தோரிடமும் பரிவோடு நடந்துகொண்டார் என்று குசுமபுரத்துக் குடிகளின் மனத்தில் மகிழ்ச்சி உண்டாக்குவதற்காகத்தான். யசோவர்மன்! மகாராஜா நந்தருக்கு எது நஞ்சாக இருந்ததோ, அதை அமிர்தமாக உருமாற்ற நான் விரும்புகிறேன் என்று உனக்குத் தெரியும்.

யசோவர்மன் : சாம்ராட் தக்ஷசீலத்துக் கல்விமான். ராஜநீதியில் ராஜ்நர்த்தகியின் இடம் என்ன என்று சாம்ராட்டிற்குத் தெரியும்.

சந்திரகுப்தன் : வாளின் கூர்மையை மறைக்கும் உறைக்கு என்ன இடமோ, அதே இடம்தான். ராஜநீதி என்ற உருவில் இருக்கும் கொடும் வாளின் துன்பத்தை மறைப்பதற்கு ராஜநர்த்தகி என்ற

உருவில் உறை தேவையாகிறது. ஆனால் உறை வாளின் கூர்மையை மழுக்குவதில்லை. ராஜநீதியின் கொடுமை குடிகளின் பார்வையிலிருந்து மறைந்திருப்பது அவசியம்.

யசோவர்மன் : உண்மை, சாம்ராட்!

சந்திரகுப்தன் : ஆனால் மகாராஜா நந்தரின் ராஜநீதி ராஜநர்த்தகியால் மழுங்கிவிட்டது. வாளின் சுயேச்சையான உறையாகி இருந்துவிட்டாள். நான் ராஜநர்த்தகியை எனக்கடங்கிய ஓர் உறையாக்கியே வைத்துக்கொள்ள விரும்புகிறேன். (நிறுத்தி) என்ன காரணம், வெண்ணிலாத் திருவிழாவின் துவக்கம் பற்றின அறிவிப்பின் தாரை முழக்கம் எனக்குக் கேட்கவில்லை?

[வசுகுப்தனின் வருகை.]

வசுகுப்தன் : சாம்ராட்? ராஜநர்த்தகி சேவையில் காத்திருக்கிறாள்.

சந்திரகுப்தன் : அழைத்து வா. அவள் என் சபையின் வாயுமண்டலத்தை இசையாலும் நாட்டியத்தாலும் ஒலிக்கும்படி செய்யட்டும்.

வசுகுப்தன்: கட்டளை, சாம்ராட்! (வெளியேறுகிறான்.)

சந்திரகுப்தன் : ஊர்க்காவலர் யசோவர்மன்! வெண்ணிலாத் திருவிழாவின் உல்லாசத்து வார்ப்பை மங்கலத்தின் வண்ணத்தால் அழகுபடுத்தும் தொடக்கமே நாட்டியமும் இசையும். இன்ப ரகசியம் விழித்துக்கொள்கிற என் மனத்திற்கினிய பாவனைகளே நாட்டியம்!

[வசுகுப்தனோடு ராஜநர்த்தகி அலகாவின் வருகை ]

அலகா : சாம்ராட்டின் சேவையில் அலகாவின் வணக்கம் ஏற்கப்படுக! (மிகவும் மென்மையான பாவத்தோடு வணங்குகிறாள்.)

சந்திரகுப்தன் : (கையை உயர்த்தி) குசுமபுரத்தின் திருவுக்கும் எழிலுக்கும் உறைவிடம் ஆகிடுவாய்! (யசோவர்மனிடம்) நீ போகலாம்.

யசோவர்மன் : கட்டளை, சாம்ராட்! இந்த நாட்டிய விழாவில் ஆசாரியர் சாணக்கியரும் கலந்துகொள்ளவேண்டும் என்பது என் பிரார்த்தனை.

சந்திரகுப்தன் : (சிரித்து) ஆசாரியர் சாணக்கியரா! ராஜநீதியோடு கவிதையைக் கலக்க விரும்புகிறாயா? எனக்கு ஆட்சேபணை இல்லை. நீ விரும்பினால் அவரை இங்கே அனுப்பலாம். அவரும் ராஜநீதியின் சூழ்ச்சிகளால் களைத்திருக்கலாம். அவருக்கும் ஓய்வு தேவையாக இருக்கலாம். ராஜநீதியின் மூளை இன்று நாட்டியக் கவிதையினால் நெஞ்சத்தின் பரிவைப் பெறட்டும்!

யசோவர்மன் : கட்டளை, சாம்ராட்! (வெளியேறுகிறான்.)

சந்திரகுப்தன் : ராஜநீதியும் கவிதையும்! (ராஜநர்த்தகியிடம்) ராஜநர்த்தகி! உன்னால் ராஜநீதியின் தாளத்துக்கு நாட்டியம் ஆட முடியுமா?

அலகா : சாம்ராட்! இது வரையிலும் ராஜநீதியே என் நாட்டியத்துக்குத் தாளமாக இருந்தது; ஆனால் நான் ஒருகாலும் அதைக் கவனிக்கவே இல்லை. ராஜநீதிக்கும் ராஜநர்த்தகிக்கும் என்ன தொடர்பு, சாம்ராட்? அவள் நாட்டின் ஒரு சேவகி மட்டுமே.

சந்திரகுப்தன் : (சிரித்து) மாறுவேடம் அணிந்த இச் சொற்களில் சேவகி தலைவி ஆகிவிடுகிறாள், ராஜநர்த்தகி! மகாராஜா நந்தர் மீது நீ மோகம்கொண்டு இருந்தாயா, அல்லது மகாராஜா நந்தர் உன் மீது மோகம்கொண்டு இருந்தாரா?

அலகா : சாம்ராட் என்னை மன்னிக்க வேண்டும். உண்மையான பெண் மோகம் கொள்ள விரும்புவதில்லை; அவள் ஆத்ம சமர்ப்பணம் செய்ய விரும்புகிறாள். மோகம் கொள்ளும் பெண் தன் அழகை வியாபாரம் செய்கிறாள், இதயத்தைச் சமர்ப்பிப்பதில்லை.

சந்திரகுப்தன் : நீ எந்த வியாபாரத்தை விரும்புகிறாய்—அழகு வியாபாரத்தையா? இதய வியாபாரத்தையா?

அலகா : இதயத்தின் வியாபாரம் என்பதில்லை, சாம்ராட்!

சந்திரகுப்தன் : சரி, இதயத்தின் சமர்ப்பணம் என்றே வைத்துக் கொள்ளேன்!

அலகா : அந்த சமர்ப்பணத்துக்கு ஒரு மொழி இருப்பதில்லை, சாம்ராட்! மொழியுள்ள சமர்ப்பணம் வியாபாரம் ஆகிவிடுகிறது. இதயம் வியாபாரப் பொருள் இல்லை.

சந்திரகுப்தன் : ஆனால், மகாராஜா நந்தரோ இதயத்தின் வியாபாரம் செய்தார். அந்த வியாபாரத்தில் தம்முடைய சாம்ராஜ்யம் முழுவதையும் தோற்றுவிட்டார்! இது உண்மை அல்லவா?

அலகா : உண்மை, சாம்ராட்! ஆனால், ஆடவன் வியாபாரி. அவன் தன் வியாபாரத்தில் எல்லாவற்றையும் பறிகொடுக்கமுடியும்.

சந்திரகுப்தன் : ஆடவர்களைப்பற்றி உனக்கு மிகவும் தாழ்வான நோக்கு இருக்கிறது, ராஜநர்த்தகி!

அலகா : பெண்களைப்பற்றி ஆண்களுக்குத் தாழ்வான நோக்கு இருப்பதுபோலத்தான், சாம்ராட்! அவர்கள் பெண்களை போகப் பொருள்களாக்கிக் கைவிடுகிறார்கள்.

சந்திரகுப்தன் : ஆனால், எந்தப் பெண்ணையும் பலவந்தப்படுத்தி போகப்பொருள் ஆக்கிவிட முடியாது. அவள் தன் வெற்றிக்காக போகப்பொருள் ஆகிறாள், பின் ஆண்கள்மீது குற்றம் சுமத்துகிறாள்!

அலகா : சாம்ராட் ராஜநீதியின் ஆசாரியர். சேவகியோ ராஜநீதியின் காலடிகளில் போட்டு மிதிக்கப்பட்ட தூசு, சாம்ராட்! நான் என்ன தெரிவித்துக் கொள்ளமுடியும்?

சந்திரகுப்தன் : ஆனால், ராஜநர்த்தகி! தூசும் தலைமேல் ஏற முடியும்.

அலகா: ஆம், சாம்ராட். அவள் கால்களால் உதைபடுகிறபோது. ஆனால் சேவகிக்கு அவ்வுரிமை இல்லை.

சந்திரகுப்தன்: உரிமை இல்லை, ராஜநர்த்தகி! இது அதன் கதி. கதியில் உரிமை என்ற பகட்டு இருப்பதில்லை. அதில் சக்தியின் மின்னல் இருக்கிறது. உன்னுள் அச் சக்தியின் மின்னல் இருக்கிறது. அது வானின் நெஞ்சத்தைக் கிழித்தவாறு துடிதுடித்தவண்ணம் நந்தரைப் போன்ற பெரும் தேக்குமரத்தையும் தரையில் சாய்த்துவிட்டது.

அலகா: அப்படியானால் மின்னலைப் போலவே நானும் பூமியில் மறைந்துவிடவேண்டும், சாம்ராட்!

சந்திரகுப்தன்: ஆனால், பூமியில் மறைந்துவிட ராஜநர்த்தகி மகா பதிவிரதை சீதை ஆக முடியாது. ராஜநர்த்தகி நாட்டை அழகுபடுத்த வேண்டியுள்ளதே.

அலகா: இது என் வாழ்க்கையின் சாபக்கேடு, சாம்ராட்! பிணங்கள் மீது தூவப்படும் பூக்களுக்கு என்ன அழகு. இன்று தங்கள் திருவடிகளில் விழுந்து என் வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறுவேன்.

சந்திரகுப்தன்: அவநம்பிக்கைப் பேச்சுகள் பேசாதே. இன்று வெண்ணிலாத் திருவிழா என்று உனக்குத் தெரியும். குசுமபுர மக்கள் என்னோடு இன்பத்தில் திளைக்க விரும்புகின்றனர். இனிய பாட்டுகளால் நீ வாயுமண்டலம் ஒலிக்கச் செய்யவேண்டும்.

அலகா: சாம்ராட்டின் கட்டளைப்படி. ஆனால், இன்றுமுதல் நான் ராஜநர்த்தகிப் பதவியைத் துறந்துவிடுவேன். தங்கள் பாததூளியில் உறங்கி மரணமிலாப் பெருவாழ்வு பெறுவேன்.

சந்திரகுப்தன்: ராஜநர்த்தகி! உன்னுடைய இந்த உரையாடல் மகாராஜா நந்தரோடு நிகழவில்லை. படைவீரன் சந்திரகுப்தனோடு நிகழ்கிறது. நான் என் பாத தூளியை வீரர்களின் பரம்பரைக்காக விட்டுச் செல்ல வேண்டுமேயன்றி, ராஜநர்த்தகிகளின் பரம்பரைக்காக அல்ல. ஆனால், நான் உன்னிடம் மகிழ்ச்சியாக இருக்கிறேன். குசும புரத்து நகரவாசிகளுக்கு நாட்டியம் கற்றுக்கொடு; அதன் இறை வணக்கம், இன்று வெண்ணிலாத் திருவிழாவில் நடக்கும் உன்னுடைய நாட்டியமாக விளங்கட்டும். நாட்டியம் ஆரம்பம் ஆகட்டும். அதனால் குசுமபுரத்தின் வாயுமண்டலம் உன்னுடைய சிலம்பொலியின் வாகன மாகி வெண்ணிலாத் திருவிழாவின் அழைப்பை ஒவ்வொரு திசையிலும் சேர்க்கட்டும்.

வசுகுப்தன்: அலகா! குசுமபுரத்தின் எடுத்துக்காட்டான நாட்டியத்தை நீ சாம்ராட்டிற்கு அறிமுகப்படுத்த வேண்டும். சாம்ராட் நாட்டியத்தில் மெய்மறந்து தம் வாழ்க்கையின் எல்லாத் துயரங்களையும் மறந்துபோகும்வண்ணம் இச் சமயத்தில் நீ நடனமாட வேண்டும்.

சந்திரகுப்தன் : எனக்குத் துயரம் ஒன்றுமில்லை. வசுகுப்த!

வசுகுப்தன் : சாம்ராட்டுக்கு என்ன துயரம் இருக்க முடியும்! சாம்ராட்டோ போர் வீரர். போர்வீரருக்கு என்ன துயரம்! நான் கூற விரும்பியது என்னவென்றால், குசுமபுரத்து நகரவாசிகளின் நலம்பற்றின கவலையில் மூழ்கிக் களைத்துள்ள தங்கள் மனத்திற்கு...

சந்திரகுப்தன் : சரி. ராஜநர்த்தகி! நாட்டியம் தொடங்கட்டும்?

அலகா : சாம்ராட்டின் கட்டளைப்படி! (வணங்கிவிட்டு நாட்டியம் தொடங்குகிறாள். சற்றுநேரம் ஆடியபின் இனிய குரலில் பாடுகிறாள்.)

மதுநிறை மலர்கள் மலர்ந்தன இன்று
மதுர கீத மிசைத்திடும் வண்டு
மதுவன வீதிகள் அழகுறச் செய்து
மெல்லெனக் காற்று மெதுநடை போட
மலர்களி னருகே மொட்டுகள் விரிய
வானினின்றும் வந்தாள சந்தியா தேவி
வந்துஎம் கண்களில் மையிட்டாள் தேவி
மதுநிறை மலர்கள் மலர்ந்தன இன்று
மதுர கீத மிசைத்திடும் வண்டு—

[சிறிது நேரம் வரை நாட்டியம் நடந்துகொண்டிருக்கிறது. இறுதியில் சாம்ராட்டின் வாயினின்று பாராட்டுச் சொற்கள் வெளிப்படுகின்றன.]

சந்திரகுப்தன் : மிக அழகு! ராஜநர்த்தகி அலகா! நீ எவ்வளவு அழகாக இருக்கிறாயோ, அவ்வளவு அழகாக உன் ஆடலும் இருக்கிறது! இதை எடுத்துக்கொள், உன் பரிசு!

[சந்திரகுப்தன் தன் கழுத்திலிருந்து முத்தாரத்தை எடுக்கின்றார். திடீரென்று ஆசாரிய சாணக்கியரின் வருகை.]

சாணக்கியர் : பரிசு வழங்கப்படமாட்டாது, சாம்ராட்!

சந்திரகுப்தன் : மகாமந்திரி சாணக்கியர்!

சாணக்கியர் : சாம்ராட்! நெருப்பு அணைந்திட்டாலும் நீறு சூடாகவே இருக்கிறது. அதை நீர் கையால் எடுக்க முடியாது. இத்தனை குறுகிய காலத்திற்குள், மலர்ப் பாத்திகளைக் கட்டி அழகுபடுத்தும்வண்ணம் குசுமபுரத்து நெருப்புத் தணிந்து தண்மையான சாம்பலாகிவிட்டது என எவ்வாறு உம்மால் கருதமுடிந்தது?

சந்திரகுப்தன் : மகாமந்திரி, சந்திரகுப்தன் மலர்ப் பாத்திகளில் அல்ல, போர்க்களத்தில் தன் வாழ்க்கையின் வைபவத்தைக் கண்டவன். அவன் சிலம்புகளின் இன்னொலியில் அல்ல, வாள்கள் மோதும் ஒலியில் தன் வாழ்க்கையின் சங்கீதத்தைப் பாடியவன். சந்திரகுப்தனின் அற்ப நேர மனோவினோதத்தில் அவனுடைய போர்க்களம் மலர்ப்பாத்தி

ஆகிவிட்டது என்று தங்களால் எவ்வாறு கருதமுடிந்தது? இச் சிறு நேர ஓய்வு எதிர்காலப் போரின் முன்னுரை என்பதைத் தாங்கள் உணரவேண்டும்.

சாணக்கியர் : சாம்ராட் சந்திரகுப்த! இந்தச் சிறு நேர ஓய்விலேயே உயிருக்கு முடிவு நேர்ந்துவிட்டாலோ? உம்முடைய எதிர்கால வைபவத்தின் போர்க்களமே உம்முடைய சடலத்தின் சுடுகாடு ஆகி விட்டால், இந்தச் சிறு ஓய்வுக்கணத்தை என்னவென்று சொல்வீர்?

சந்திரகுப்தன் : ஆரிய, ஓய்வுக்கணங்களின் எல்லை என்ன, எவ்வளவு என்பதைப் புரிந்துகொள்ளச் சந்திரகுப்தனுக்குப் போதிய பகுத்தறிவு...

சாணக்கியர் : (இடையிலேயே)... இல்லை. இதை எண்ணியே என்னோடு படைவீரர்களை அழைத்து வந்திருக்கிறேன். (குரல் எழுப்பி) படைவீரர்களே! ராஜநர்த்தகியையும் தண்டல்நாயகத்தையும் உங்கள் காவலில் வைத்துக்கொள்ளுங்கள்!

[படைவீரர்கள் திரைக்குப் பின்னுலிருந்து வெளிப்பட்டு முன்னேறுகின்றனர்.]

வசுகுப்தன் : சாம்ராட்! ராஜமரியாதை குலைகிறது, காப்பாற்றுங்கள்!

சந்திரகுப்தன் : மகாமந்திரி, வசுகுப்தன் நம் புதிய தண்டல்நாயகம்!

சாணக்கியர் : ஆனுல் இப்போது அவர் கைதி. இருவரையும் உங்கள் காவலில் வைத்துக்கொள்ளுங்கள். ஏதாவது எதிர்ப்புச் செய்தால் வன்முறை பயன்படுத்துங்கள்!

வசுகுப்தன் : (பரிதாபமான குரலில்) நான் குற்றமற்றவன், நான் குற்றம் அற்றவன், சாம்ராட்! மகாமந்திரி! நான் குற்றம் அற்றவன்.

அலகா : (மிகப் பரிதாபமான குரலில்) என்னை யாரும் தீண்டக் கூடாது. நான் பெண். பெண்ணின் மானம் காக்கப்பட வேண்டும். சாம்ராட்! பெண்ணின் மானம் காக்கப்படவேண்டும். நானே காவலுக்கு உட்படுகிறேன். பெண், ஐயோ, காவலில், எப்போதும் காவலில், ஆயுள்முழுவதும் காவலில்! (கலங்குகிருள்.)

சந்திரகுப்தன் : (முன்வந்து) ஆரிய சாணக்கிய...

சாணக்கியர் : ஒன்றும் சொல்லவேண்டாம் இப்போது, சாம்ராட் சந்திரகுப்த! சாணக்கியன் தன் கடமையை நன்ருக அறிவான். படைவீரர்களே! இருவரையும் காவலில் அடுத்த அறைக்கு அழைத்துச் செல்லுங்கள்!

படைவீரர்கள் : கட்டளைப்படி.

[இருவரையும் கைதிகளாக்கிக்கொண்டு படைவீரர்கள் வெளியேறுகிருர்கள்.]

சந்திரகுப்தன் : இது ராஜமரியாதைக்கு எல்லாவற்றிலும் பெரிய அவமதிப்பு. எந்த ராஜமரியாதையை நாம் ரத்தம் ஊற்றி வழி

பட்டோமோ, அதே ராஜமரியாதையைத் தாழ்ந்த படைவீரர்கள் கால் தூசினால் மாசுபடுத்துகிறார்கள் எனில், இது எத்தகைய ராஜநீதி! இன்று, வெண்ணிலாத் திருவிழா நிகழ்கையில்...

சாணக்கியர் : வெண்ணிலாத் திருவிழாவா?

சந்திரகுப்தன் : ஆம், வெண்ணிலாத் திருவிழா. தாங்கள் என் அறிவிப்பைக் கேட்கவில்லையா?

சாணக்கியர் : அது கேட்கத் தகுந்ததாக இல்லை.

சந்திரகுப்தன் : தாங்கள் ராஜமரியாதையை இவ்வாறு எப்படி அவமானம் செய்கிறீர்கள், மகாமந்திரி? வெண்ணிலாத் திருவிழாவின் அறிவிப்புக் குசுமபுரத்தில் என் முதல் அரசாங்க அறிவிப்பு.

சாணக்கியர் : அந்த அறிவிப்பு, பிறக்கு முன்னரே இறந்துவிட்டது.

சந்திரகுதன் : (வியப்போடு) இறந்துவிட்டதா? யாருக்கு இத் துணிவு வந்தது?

சாணக்கியர் : எனக்கு, ஆரியன் சாணக்கியனுக்கு!

சந்திரகுப்தன் : இதனால்தான் அறிவிப்பின் தாரை முழக்கம் எனக்குக் கேட்கவில்லை! ஆக, தாங்கள் வெண்ணிலாத் திருவிழாவின் அறிவிப்பை நிறுத்திவிட்டீர்கள்?

சாணக்கியர் : நான்தான் அறிவிப்பை நிறுத்திவிட்டேன்.

சந்திரகுப்தன் : நான் காரணம் அறிய விரும்புகிறேன்.

சாணக்கியர் : நான் காரணம் கூறமுடியாது.

சந்திரகுப்தன் : சாம்ராட் யார்—சந்திரகுப்தரா, சாணக்கியரா?

சாணக்கியர் : சந்திரகுப்தர்.

சந்திரகுப்தன் : பின், சாம்ராட் சந்திரகுப்தரின் ஆணை ஏன் அவமதிக்கப்படுகிறது?

சாணக்கியர் : அந்த ஆணை அடம்பிடிக்கும் குழந்தையின் பிடிவாதம் போல் இருக்கிறது என்பதால்.

சந்திரகுப்தன் : ஆயினும் அது போற்றப்படவேண்டும்.

சாணக்கியர் : இல்லை, குழந்தை தீயைப் பிடிக்க விரும்புகிறது. அது தீயைப் பிடிப்பதற்கு வசதி செய்து தரமுடியாது.

சந்திரகுப்தன் : இது உங்கள் கர்வம், மகாமந்திரி!

சாணக்கியர் : இது உம் அறிவீனம், சாம்ராட்!

சந்திரகுப்தன் : (சினமுற்று) மகாமந்திரி, குசுமபுரத்து வெற்றியில் உங்களுக்குப் பங்கு இருக்கிறது. ஆனால், இந்தச் சின்னஞ் சிறு வெற்றி உங்கள் கர்வத் தீப்பொறிகளை ஊதிஊதிப் பெருநெருப்பாக மாற்றி விட்டதா? உங்களுடைய ராஜநீதி எரிந்து சாம்பல் ஆகக்கூடிய சிதையின் ஜுவாலையே இந்தக் கர்வம்!

சாணக்கியர் : இதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை, சாம்ராட்! கர்வம் என் உட்பொறியின் உரிமை. அது நாட்டின் ஆணைக்குக் கட்டுப்பட்டது

அன்று. ஆனால், சாணக்கியனின் கர்வத்துத் தீப்பொறி சொர்க்கத்தின் ஆட்சி கிட்டினாலும் பெருநெருப்பு ஆகாது என்பதைத் தெளிவு படுத்திவிட விரும்புகிறேன். ஆம், அவமானத்தின் சிறு காற்று வீச்சினாலேயே அது காட்டுத் தீயாகி உம்முடைய வைபவப் பூங்காவை ஒரு கணத்தில் பொசுக்கிச் சாம்பல் ஆக்கிவிட முடியும். நந்தவம்சத்து நாசம் திரும்பவும் நிகழ வேண்டும் என்று எதிர்பார்க்கிறீரா?

சந்திரகுப்தன் : ஆரிய சாணக்கிய! வீழ்ச்சிப் பொந்தின் வாசலில் நின்றுகொண்டு எளிமையான ராஜநீதியின் மோதலை எதிர்பார்க்கும் உல்லாசி நந்தன் அல்ல, படைவீரன் சந்திரகுப்தன். மௌரிய சந்திரகுப்தன் இமயமலை போன்று உறுதியானவன். அம் மலையை மகாமந்திரி சாணக்கியரின் வஞ்சக ராஜநீதி வடிவப் புயல்களின் தாக்குதல் ஒருகணம்கூட அசைக்கமுடியாது.

சாணக்கியர் : மௌரிய சந்திரகுப்த! பிராமணத்தனத்தைக் காலால் உதைக்கும் அளவுக்கு க்ஷத்திரியத்தனம் இழிந்துவிட்டதா? மௌரியன் இமயமலையைப்போல் உறுதிபெற்றது எவ்வாறு என்பதை நீர் அறிவீரா? அந்த உறுதியைத் தாங்கும் பூமி இதே பிராமணனின் ராஜநீதி. இந்தச் சக்தி ஒருகணம் விலகினாலும், இமயமலை கீழே விழுகின்ற வேகத்தில் அது தனக்கு அருகிலுள்ள மரங்களையும் சேர்த்துக்கொண்டு கடலின் அடித்தளத்துக்குள் சென்றுவிடும். அப்போது கடல் அலைகள் இதே பிராமணனின் காலடிகளில் விழுந்து புரள வரும். இந்த பிராமணன் அந்தப்பக்கம் பார்க்கவும் மாட்டான்.

சந்திரகுப்தன் : ஆரிய சாணக்கிய ! உலகத்தில் எத்தனையோ புகழ் பெற்ற ராஜ்யங்கள் இருந்திருக்கின்றன. அவை யாவும் மகாமந்திரி சாணக்கியரின் வலிமைமீது எழுந்தனவா? மகாமந்திரி சாணக்கியர் இல்லாத இடத்தில் எந்த நாடும் நிறுவப்படாதா? எல்லா ராஜ்யங்களின் சக்தியும் மகாமந்திரி சாணக்கியரின் சக்தியிடமிருந்து பிச்சை வாங்கித்தான் உலகத்தில் இயங்கியுள்ளதா? அந்தச் சக்தியின் வலிமையாலேயே வெற்றி பெறுகிற அளவு சந்திரகுப்தன் தாழ்ந்தவனா? அப்படியானால், அச் சக்தி போகட்டும். அதை நான் இன்றே அகற்றுகிறேன். மகாமந்திரி சாணக்கிய! நீர் மகாமந்திரிப் பதவியிலிருந்து விடுவிக்கப் பட்டுவிட்டீர்.

சாணக்கியர் : மௌரிய! எடுத்துக்கொள் உன் ஆயுதத்தை! (எறிந்து விடுகிறார்.) இந்த மாசை இப்போதே அகற்றுகிறேன். நந்த மந்திரி ராட்சசனின் ராஜநீதியின் சூழ்ச்சியில் சிக்கும் சந்திரகுப்த! என் தலைமுடியை மீண்டும் அவிழ்த்து அழிவுச் சபதம் மீண்டும் செய்ய வேண்டுமா? எந்த பிராமணனின் முடிநாகம் ஒரே கடியில் நந்த வம்சத்தைத் தீர்த்துக்கட்டியதோ, அதே நாகத்தின்மீது மௌரியனும்

கை வைக்க விரும்புகிருனு? எந்தச் சந்திரகுப்தனை எனக்கு வேண்டியவன் என்று சிம்மாதனத்தில் ஏற்றினேனே அதே சந்திரகுப்தனை அழித்து நான் மயானத்தை அலங்கரிக்கட்டுமா! நன்று பிராமணு! பிரும்ம ஞானத்தில் உயிர் வாழ வேண்டியவன் இன்று ராஜ்யத்துச் சூழ்ச்சிகளால் மாசுபடுகிருன்! இன்று என் சிருஷ்டிக்கடலின் விஷத்தை நானே குடித்துக்கொண்டிருக்கிறேன்; ஆனுல், சந்திரகுப்த! காளகூட விஷத்தையும் குடிக்கக்கூடிய நீலகண்ட சக்தி எனக்கு உண்டு என்று நீர் அறிவீரா?

சந்திரகுப்தன்: அறிவேன், சாணக்கிய! (ஆயுதத்தைத் தூக்கியவாறு) இந்த ஆயுதம் இப்போது என் அதிகாரத்தில் இருக்கிறது. இன்று நான் ராஜநீதி முழுவதையும் என்னுடைய தோள்வலியில் திரட்டிக்கொண்டு குசுமபுரத்தை ஆட்சி புரிவேன்; கலகப் பாம்புகளை எரிக்கப் பெரும் யாகம் செய்வேன்.

சாணக்கியர்: செய்யும், இப்போதே அப் பெரும் யாகத்தைச் செய்யும்; அதில் நீரும் அழிந்து போம்! இன்று வெண்ணிலாத் திருவிழா கொண்டாடும், உம் புதிய தண்டல் நாயகம், ராஜநர்த்தகியின் உருவத்தில் உம் சாவுக்கு அழைப்பு தாரும்!

சந்திரகுப்தன்: என் ஆனந்த விழாமீது பொருமை கொள்ளும் சாணக்கிய! நீங்கள் இதையே சொல்வீர்கள்! இந்த ஐசுவரியங்களைப் பார்த்தால் பிராமணனுக்குத் துவேஷம் உண்டாவது இயற்கைதான்.

சாணக்கியன்: ஆத்ம சிந்தனையில் உள்ள ஐசுவரியம், க்ஷத்திரியனே! இந்த இழிந்த, பகட்டான வைபவங்களில் இல்லை — தம்மோடு சாவை அழைத்துவரும் வைபவங்கள்! பகைவர்களின் ஒற்றர்களையும் விஷக் கன்னிகைகளையும் நம்புகிற சாம்ராட், ஒரே தாவலில் விட்டில் பூச்சி நெருப்புச் சுடருக்குள் எரியும் சாவில் சாம்பல் ஆவதைப்போல் ஒரு அடியெடுத்து வைக்கும்போதே சாவைத் தழுவிக்கொள்கிருன். நீரும் நீருகப் போம்! உம் வைபவத்தின் எரிந்திட்ட கரும்புகையை உமக்குப் பின்னுல் விட்டுப் போம்!

சந்திரகுப்தன்: தம்முடைய ராஜநீதியில் அவநம்பிக்கை கொண்டு விட்ட சாணக்கிய! நீங்கள் ஒவ்வோர் ஆணையும் ஒற்றன் என்றும் ஒவ்வொரு பெண்ணையும் விஷக் கன்னிகை என்றும் நினைக்கலாம்! நாட்டு எல்லைக்கோட்டில் ஊர்ந்துகொண்டிருக்கும் உங்கள் கண்மணிகளுக்குக் கருப்புப் புழுவைப் போன்று சும்மா இருக்கும் ஜீவன்களைத் துன்புறுத்தவே தெரியும். மகாமந்திரியின் சிறப்பு...

சாணக்கியர்: மகாமந்திரி என்று கூறுதீர், மௌரியரே? நான் இப்போது உம்முடைய மகாமந்திரி அல்ல. நான் ஒரு பிராமணன் மட்டுமே. எவனுடைய முடி பல நாட்கள்வரை முடியப்படாமல் இருந்ததோ,

எவன் தன்னுடைய சபதத்தின்படி நந்தவமிசத்தை நாசம் செய்த பின்பே தலையை முடிந்துகொண்டானோ, அந்த பிராமணன். இப்போது அவனுக்கு முன்பு இரண்டே வழிகள் உள்ளன. ஒன்று அவன் மீண்டும் தன் முடியைப் பிரித்துப்போட்டு மௌரிய வமிசத்தை ஒழிப்பதாய்ப் பிரதிக்ஞை செய்ய வேண்டும், அல்லது அடிவானத்தைப்போன்று தன் கைகளைப்பரப்பி நட்சத்திரக் கண்களிலிருந்து மண் மங்கையைத் தன் கருணையாலும் அமைதியாலும் பேண வேண்டும். அப்போது படைப்பு முற்றிலும் அவனுடைய ராஜ்யம் ஆகும்; விலங்குகளும் பறவைகளும் அவனுக்குத் துணைவர்கள் ஆவர்; காற்றின் உலுக்கலில் குலுங்கி சாம கானம் செய்துகொண்டே உம்மை மன்னிப்பான்.

சந்திரகுப்தன்: இது தபோவனம் அன்று; ஆரியரே! சந்திரகுப்தன் மன்னிக்கப்பட வேண்டியவன் அல்ல, அதை வேண்டவும் இல்லை. இனி தபோவனத்தின் ஹோமகுண்டத்தில் ஹிம்சை செய்யுங்கள் அல்லது தருப்பையும் முள்ளும் மேயும் மான்களை மன்னியுங்கள். ஆனால் போகு முன் நம் புதிய தண்டல் நாயகம் வசுகுப்தன்மீதும் ராஜநர்த்தகி அலகாமீதும் சாட்டிய குற்றங்களை நிரூபித்தாக வேண்டும்? இந்தக் குற்றச்சாட்டு பொய் என்று ஏற்பட்டால் நாட்டின் தண்டனைச்சட்டம் குற்றவாளியை கவனித்துக்கொள்ளும். இது என் இறுதிக் கட்டளை.

சாணக்கியர்: உம்முடைய புதிய மகாமந்திரிக்குக் கட்டளை இடும், மௌரியரே! நான் உமக்கு முன்னிலையில் மெய்யை நிரூபிக்கக் கட்டுப் பட்டவன் அல்ல.

சந்திரகுப்தன்: மெய்யை வெளிப்படுத்த விரும்பாத பிராமணனை நான் எந்தக் கணக்கில் சேர்த்துக் கூப்பிடுவது?

சாணக்கியன்: மெய்யை என் விருப்பப்படி நானே வெளிப்படுத்த முடியும். ஆனால், இவ்வாறு வெளிப்படுத்திய பிறகு நான் இங்கு ஒரு க்ஷணமும் தங்க இயலாது. இந்தச் சூழல் சாபக்கேடாகி என்னுடைய ஒவ்வொரு ரோமத்திலும் கடுமையான வஞ்சஜ்வாலையை மூட்டிக் கொண்டிருக்கிறது.

சந்திரகுப்தன்: முதன்முதலாக ருசுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும்?

சாணக்கியர்: (குரல் கொடுத்து) யாரங்கே?

[படைவீரன் வருகை]

படைவீரன்: கட்டளை மஹாராஜ்!

சாணக்கியர்: தண்டல் நாயகம் வசுகுப்தரையும் ராஜநர்த்தகி அலகாவையும் அழைத்து வா!

படைவீரன்: கட்டளைப்படி. (போகிறான்.)

சாணக்கியர்: சந்திரகுப்த, குடிமக்களைப் பழைய வாசனை எளிதில் விடுவதில்லை. இப்போதும் மகாராஜா நந்தரிடம் பரிவு உள்ளவர்கள்

குசுமபுரத்தில் கலகப் பெருநெருப்பு மூள்வதற்குத் தீப்பொறிகளாய் இருக்கிறார்கள். ராஜமந்திரி ராட்சசன் குசுமபுரத்துக்கு வெளியே இருந்தாலும் குசுமபுரத்தின் மக்களுக்குள் இருக்கிற அவநம்பிக்கை விதைகள்மீது தன்னுடைய ராஜநீதித் தண்ணீர் பாய்ச்சிக்கொண் டிருக்கிறான். குசுமபுரத்தின் எல்லாக் காரியங்களிலும் சூழ்ச்சிவலை, வெற்றிமுழக்கம் என்ற மாறுவேடத்தில், நாலாப்பக்கங்களிலும் விரிக்கப் பட்டுள்ளது. நீரோ, வெண்ணிலாத் திருவிழாவில் அஜாக்கிரதையுற்று விஷக் கன்னிகையைத் தீண்ட விரும்புகிறீர்! சந்திரகுப்த! விருப்பற்ற என் கண்களால் நான் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நீரோ பார்த்துக்கொண்டிருந்தும் வெண்ணிலாத் திருவிழாவின் தண்மையில் ஆலகால நஞ்சைப் பருகப் போகின்றீர்! நான் மீட்டும் கூற விரும்புவது...

[படைவீரன் வசுகுப்தனோடும் அலகாவோடும் வருகிறான்.]

நன்று! தண்டல் நாயகம் வசுகுப்த! ராஜநர்த்தகி அலகா! படைவீரனே! நீ வாயிலுக்குப் போய் உன் இடத்தில் இரு!

[படைவீரன் வணங்கிவிட்டு வெளியே போகிறான்.]

[வசுகுப்தரைக் கூப்பிட்டவண்ணம்] தண்டல் நாயகம் வசுகுப்த! படைவீரர்களின் காவலில் உங்களை வைத்ததற்கு நான் வருந்துகிறேன். நீங்கள் சாம்ராட் சந்திரகுப்தரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான புதிய வரி அதிகாரி என்று எனக்குத் தெரியும்!

வசுகுப்தன்: நான் தண்டல் நாயகம் அல்ல, மஹாமந்திரி! நான் தண்டல் நாயகமாக இருந்தால், சாம்ராட், தண்டல் நாயகம் அவமதிக்கப்படுவதை இவ்வாறு பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்!

அலகா: (பரிதாபமான குரலில்) இன்றுவரை குசுமபுரத்து அரசவை யில் பெண்ணுக்கு இவ்வாறு அவமானம் நேர்ந்ததில்லை! நான் அவமதிக்கப்பட்டிருக்கிறேன், சாம்ராட்!

சந்திரகுப்தன்: (உறுதியோடு) சந்தேகம் இல்லாமல்! நான் இந்த இருவருடைய அவமானத்திற்கும் ஈடு செய்வேன்.

சாணக்கியர்: (வசுகுப்தனிடம்) சாம்ராட்டிடமிருந்து உங்களுக்கு ஆறுதல் கிடைத்துள்ளது, வசுகுப்த! (ராஜநர்த்தகியிடம்) ராஜநர்த்தகி! உனக்கும் சாம்ராட்டின் தோள்களின் தண்ணிழல் கிட்டிவிட்டது! ஆனால் (வசுகுப்தனிடம்), தண்டல் நாயகம் அவர்களே, உங்களுக்கும் ராஜநர்த்தகிக்கும் உள்ள பழக்கம் எவ்வளவு பழமையானது என்று அறிய விரும்புகிறேன்.

வசுகுப்தன்: எனக்கு ராஜநர்த்தகியின் பெயர்கூடத் தெரியாது, மகாமந்திரி! எனக்கு வெண்ணிலாத் திருவிழாவின் அறிவிப்புக்குச் சில கணங்களுக்கு முன்தான் ராஜநர்த்தகி அறிமுகம் ஆனாள்.

சாணக்கியர் : நீங்கள் குசுமபுரவாசியா?

வசுகுப்தன் : குசுமபுரத்தின் ஒரு கிராமமான அமராவதியைச் சேர்ந்தவன். அங்கு நான் காவல் அதிகாரியாக இருந்தேன்.

சாணக்கியர் : அப்படியானால், குசுமபுரத்தில் எவ்வளவு காலமாக வசிக்கிறீர்கள்?

வசுகுப்தன் : நான் சொன்னேனே, மகாமந்திரி! நான் குசுமபுரவாசி அல்ல, அமராவதி வாசி.

சாணக்கியர் : சாம்ராட் சந்திரகுப்தர் உங்களைக் குசுமபுரத்தில் கண்டாரா, அமராவதியிலா? உங்களுக்கு வரிதிரட்டும் பதவி அளிக்கும் போது குசுமபுரத்தின் குடிமையைத்தானே அவர் கவனத்தில் கொண்டிருப்பார்?

வசுகுப்தன் : நான் குசுமபுரத்தில் வசிக்கவில்லை, மகாமந்திரி! நான் அமராவதியிலிருந்து குசுமபுரத்துக்கு வருவது வழக்கம்.

சாணக்கியர் : ஆண்டில் எத்தனை தடவைகள் வருவீர்கள்?

வசுகுப்தன் : என்னால் கூற கூடியாது.

சாணக்கியர் : (கடுங்குரலில்) கேள்வியை அலட்சியம் செய்யக் கூடாது. சரியான மறுமொழி சொல்லுங்கள்.

வசுகுப்தன் : மகாராஜா நந்தரின் முக்கியமான விழாக்களுக்கு வருவது வழக்கம்.

சாணக்கியர் : சென்ற வருடம் வசந்தோற்சவத்தில் கலந்துகொண் டீர்களா, அமராவதியின் காவலரே!

வசுகுப்தன் : ஆம், மகாமந்திரி!

சாணக்கியர் : அப்படியானால், அலகாவின் பெயர் உங்களுக்குப் பழக்க மானதுதான்.

வசுகுப்தன் : ஆம், மகாமந்திரி!

சாணக்கியர் : கொஞ்ச நேரத்துக்கு முன், எனக்கு அலகாவின் பெயர் கூடத் தெரியாது என்றீர்களே! வெண்ணிலாத் திருவிழாவுக்கு ஒரு கணத்துக்கு முன்புதான் ராஜநர்த்தகி அறிமுகமானாள் என்றும் கூறினீர்களே!

வசுகுப்தன் : நான் ராஜநீதி விஷயங்களை வெளியிடுவதில்லை!

சாணக்கியர் : (சிரித்து) பெரிய ராஜநீதி வல்லுநர்! நன்று, ராஜநீதி விஷயங்களைச் சொல்லாதீர்கள். நேராகப் பதில் கூறுங்கள். நீங்கள் ராஜமந்திரி ராட்சசரின் ஒற்றரானது எப்போது?

வசுகுப்தன் : மகாமந்திரி, துஷ்டன் ராட்சசனை எனக்குத் தெரியவே தெரியாது.

சாணக்கியர் : ராஜநர்த்தகியை உங்களுக்குத் தெரியாமல் இருந்ததே, அதே போல.

**வசுகுப்தன் :** (சந்திரகுப்தனிடம்) சாம்ராட்! என் மரியாதையைக் காப்பாற்றுங்கள்!

**சந்திரகுப்தன் :** நான் காப்பாற்றுகிறேன். முதலில் மகாமந்திரி ஆசாரியர் சாணக்கியரின் கேள்விக்கு விடை சொல்லு.

**வசுகுப்தன்:** நான் விடை தர இயலாதவனாக இருக்கிறேன், சாம்ராட்! வெண்ணிலாத் திருவிழாவின் இவ்வேளையில் நான் அதிகமாய் மதுபானம் செய்திருக்கிறேன். இக் காரணத்தால்தான் என் பதில் சரியாக இல்லை.

**சாணக்கியர் :** அதனால் என்ன, தண்டல் நாயகம் அவர்களே! நான் உங்களுக்கு இன்னும் மதுபானம் தரச் சொல்கிறேன். அதனால் உங்களுக்கு வெண்ணிலாத் திருவிழா இன்னும் களிப்பூட்டுவதாக இருக்கும்.

**வசுகுப்தன் :** மிகுதியாக மதுபானம் செய்வதை ராஜதர்மத்துக்கு முரணானது என்று நான் கருதுகிறேன், மகாமந்திரி!

**சாணக்கியர் :** அதிகமாக மதுபானம் செய்த காரணத்தால் சரியாக விடை தர முடியவில்லை என்று இப்போதுதான் கூறினீர்கள். அதிகமாக மதுபானம் செய்வது ராஜதர்மத்துக்கு முரணானது என்று கருதுவதாய் இப்போது கூறுகிறீர்கள்!

**வசுகுப்தன் :** நான் ராஜநீதியின் ரகசியத்தைத் தங்களுக்கு முன்னால் வெளிப்படுத்த விரும்பவில்லை.

**சாணக்கியர் :** அடிக்கடி ராஜநீதி! ஒவ்வொரு கேள்வியிலும் ராஜநீதி! ராஜ்யத்தின் தண்டல் நாயகம், ராஜ்யத்தின் மகாமந்திரியிடம் ராஜ நீதியின் ரகசியத்தை வெளியிட விரும்பவில்லையா? மதுபானத்திலும் உங்கள் ராஜநீதி இருக்கிறது! ஆம், உங்களுடையது அல்ல, என்னுடையது. வசுகுப்த! நீங்கள் விரும்பவில்லை என்றால் ராஜநீதி ரகசியங்களை வெளிப்படுத்துமாறு நான் உங்களிடம் சொல்லமாட்டேன். கவிதை விஷயங்கள் சொல்கிறேன். கவிதை விஷயங்கள் பேச முடியுமா? பதில் கூறுங்கள். காட்டுப் பூக்களின் நறுமணம் கொண்டுள்ள மது இத்தனை போதை தருவதாக இருப்பது ஏன்?

**வசுகுப்தன் :** எனக்குத் தெரியாது, மகாமந்திரி!

**சாணக்கியர் :** உங்களுக்குத் தெரியாது, எனக்குத் தெரியும். காட்டுப் பூக்களின் நறுமணம் கொண்டுள்ள மது இத்தனை போதை தருவதாக இருப்பது ஏன் எனில், அதை அழகிகள் தங்கள் கரங்களால் ஊட்டுவதால் — கண்களில் மதுவைத் தேக்கியுள்ள அழகிகள். அவர்கள் உங்கள் மதுவைப் பார்க்கையில் தங்கள் கண்களின் மதுவையும் அதில் கலந்து அதை மேலும் மயக்கமூட்டுவதாய் ஆக்கிவிடுகிறார்கள்.

**வசுகுப்தன் :** தாங்களோ ராஜநீதி, கவிதை இரண்டிலுமே கரை கண்டவர், மகாமந்திரி!

சாணக்கியர் : சாணக்கியனின் வறண்ட தலையில் கவிதை எங்கே! ஆனால், உங்களுடைய விருப்பப்படி ராஜநீதியின் ரகசியங்களுக்குப் பதிலாக உங்களுக்குக் கவிதை தர விரும்புகிறேன். இன்னொரு விஷயம் கேட்கட்டுமா? அழகிகளின் விழிகளுக்கு போதையூட்டும் சக்தி அதிகமா, இதழ்களுக்கா?

வசுகுப்தன்: இந்த வினவுக்கு விடை தருவது கஷ்டம், மகாமந்திரி!

சாணக்கியர் : ராஜநீதியின் ரகசியங்களைவிடவுமா கஷ்டம், தண்டல் நாயகம் அவர்களே! — அதில் நீங்கள் கரைகண்டவர் ஆயிற்றே! அமராவதியின் ஊர்க்காவல்காரரும், மகாராஜா நந்தரின் வசந்தோற்சவத்தில் கலந்துகொள்கிறவருமான வசுகுப்தருக்கு இக் கேள்வி கஷ்டமானது அல்ல. மகாராஜா நந்தரின் வசந்தோற்சவத்தில் 'அநங்க கிரீடை'க்கு ஏற்பாடு நடந்ததா?

வசுகுப்தன் : ஆம், மகாமந்திரி!

சாணக்கியர் : அதில் நீங்கள் கலந்துகொண்டீர்கள். அப்படியானால் சுந்தரிகளின் கண்களைவிட அதரங்களுக்குத்தான் போதையூட்டும் சக்தி மிகுதி என்று உங்களுக்குத் தெரியும். மிகுதிதானே, வசுகுப்த? (கடுமையான குரலில்) பதில் சொல்லுங்கள்!

வசுகுப்தன் : ஆம், மகாமந்திரி!

சாணக்கியர் : அப்படியானால், சுந்தரிகள் தங்கள் அதரங்களால் தொட்டுத்தரும் மது இன்னும் அதிக போதை உண்டாக்கும். (கடுமையான குரலில்) பதில் சொல்லுங்கள்!

வசுகுப்தன் : ஆம், மகாமந்திரி!

சாணக்கியர் : இனி நான் உங்களிடம் கேள்வி கேட்கவேண்டியதில்லை. உங்களை இவ்வளவு கேள்விகள் கேட்டுத் துன்புறுத்தியதற்காக உங்களுக்குப் பரிசு அளிக்க விரும்புகிறேன். என் பரிசு: ராஜநர்த்தகி அலகாவின் அதரங்களால் தீண்டப்பெற்ற போதை தரும் மதுவை நீங்கள் ஒரு வாய்...

அலகா : (கவலையுற்று) மன்னியுங்கள், மகாமந்திரி! நான் மதுவைத் தொடமாட்டேன். இன்றுவரை நான் மதுவைப் பருகியதில்லை, பருக வைத்ததும் இல்லை. நான் மன்னிப்புப் பிச்சை வேண்டுகிறேன் மகாமந்திரி!

சாணக்கியர் : வெண்ணிலாத் திருவிழாவில் பரிசு கிடைக்கிறது, தேவி! பிச்சை அல்ல! (குரல் கொடுத்து) யார் அங்கே! (படை வீரன் வருகை) மதுக்கோப்பை ஒன்று கொண்டு வாருங்கள்!

ஒரு படை வீரன் : கட்டளைப்படி. (வெளியேறுகிறான்.)

அலகா : (புலம்பி) மகாமந்திரி! என் வாழ்க்கை சாபக்கேடுகளால் நிறைந்தது. நான் ராஜநர்த்தகி ஆகிப் பெண்ணாகவும் இருக்கமுடிய

வில்லை. நான் உலகத்திலேயே எல்லாவற்றிலும் பெரிய இழுக்கு, நான் பாவத்தின் மாசு, நான் ரௌரவ நரகத்தின் ஜுவாலை! நான்...நான்...

சாணக்கியர்: இல்லை, தேவி! நீ மகாராஜா நந்தரின் ராஜநர்த்தகி! இகழத்தகாத அழகி, கலை நிறைந்த நாட்டியச் சக்கரவர்த்தினி! ஆம் நான் வருந்துகிறேன், உன் வாழ்க்கை... (படைவீரன் கோப்பை எடுத்துக்கொண்டு வருகிறான்) கொண்டுவந்தாயா கோப்பை? ஆம், நான் என்னோடேயே கோப்பையும் மதுவும் கொண்டுவந்தேனே! எடுத்துக்கொள்; இதை நீ அருந்து, ராஜநர்த்தகி!

அலகா: மகாமந்திரி! என்னை மதுபானம் செய்விக்காதீர்கள், எனக்கு நஞ்சு கொடுத்துவிடுங்கள்! கொடிய ஆலகால விஷத்தைக் கொடுங்கள்! அதனால் எனக்கு அமைதி கிட்டும்! என்னுடைய நாக்கின்மீது பாம்புக் கடி வேண்டும், பாம்புக் கடி! பாம்புக் கடி, மகாமந்திரி!

சாணக்கியர்: பாம்புக் கடி உனக்கு வேண்டியதில்லை, ராஜநர்த்தகி! வேறு யாருக்கோ வேண்டும். (படைவீரனிடம்) வீரனே, பலவந்தமாக இவளுக்கு இந்த மதுவைப் புகட்டிவிடு! (படைவீரன் பலவந்தமாக ராஜநர்த்தகிக்கு மதுபானம் செய்விக்கிறான். விருப்பமின்றித் தள்ளாடும் மூச்சில் மதுபானம் செய்யும் ஒலி) போதும், விடு! (படைவீரன் கோப்பையை ராஜநர்த்தகியின் இதழ்களிலிருந்து எடுக்கிறான்.) இப்போது இம் மது ராஜநர்த்தகியின் அதரங்களைத் தொட்டு இன்னும் போதை ஊட்டுவதாகிவிட்டது. இப்போது வெண்ணிலாத் திருவிழா வில் தண்டல் நாயகம் வசுகுப்தருக்கு அவருடைய பரிசு வேண்டும். படைவீரனே! எஞ்சியுள்ள இந்த மதுவை தண்டல் நாயகம் வசுகுப்தர் அருந்துவார்.

வசுகுப்தன்: சாம்ராட்! என்னைக் காப்பாற்றுங்கள். இந்த மதுவை அருந்தமாட்டேன், அருந்தமாட்டேன்!

சாணக்கியர்: படைவீரனே! வசுகுப்தருக்கு எஞ்சியுள்ள மதுவை பலாத்காரமாய்ப் புகட்டிவிடு!

[படைவீரர்கள் பலாத்காரமாய் மதுபானம் செய்விக்கிறார்கள். குடிக்கும் தொண்டையின் ஒலி.]

வசுகுப்தன்: (தடுமாறும் சொற்களில்) ஓ! கொடிய... ஆலகால... நெருப்பின் ஜுவாலை! பாம்புக்கடி.... பாம்புக்— கடி... மகாமந்திரி சாணக்கிய!... நீங்கள்... ராஜமந்திரி... ராட்சசனை... வென்று விட்டீர்கள்... வெண்ணிலா... திருவிழா... நடக்கவில்லை... அலகா... என்னை... மன்னி... வெண்ணிலா... திரு... விழா... வெ... ண்... ணி...லா...த்... தி ..ரு...வி...ழா... (உயிர் பிரிகிறது.)

சந்திரகுப்தன்: ஓ, விஷக் கன்னிகை! ராஜநர்த்தகி விஷக் கன்னிகை! அவளுடைய இதழ்களால் தொடப்பட்ட மது நஞ்சாகிவிட்டது! த டல் நாயகம்...

சாணக்கியர் : அவர் இப்போது இவ்வுலகில் இல்லை, சந்திரகுப்த! இப்போது அலகா...

அலகா : சாம்ராட் என்னை மன்னியுங்கள்! மகாமந்திரி! உயிர்ப் பிச்சை அளியுங்கள்! நான் குற்றமற்றவள், நான் குற்றமற்றவள்! சாம்ராட்! நான் தங்கள் பாதங்களை முத்தம் இட்டு... (பாதங்களில் விழுவதற்கு முன்னால் வருகிறாள்.)

சாணக்கியர் : பின்னால் நகர்ந்துவிடு! பின்னால் நகரு, சந்திரகுப்த! (சந்திரகுப்தன் பின்னால் நகர்ந்துவிடுகிறான்.) இவள் உன் கால்களைத் தன் பற்களால் குத்தி உன்னை மரணத்தின் வாயில் தள்ளி விடுவாள்! இது இவளுடைய இறுதி ஆயுதம். பெண்ணுருவிலுள்ள கொடிய நாகம், விஷக்கன்னிகை! ராஜமந்திரி ராட்சசன் வெண்ணிலாத் திருவிழா யோசனையை வசுகுப்தன்வாயிலாகச் செய்வித்து அஜாக் கிரதையான சந்திரகுப்தனை விஷக்கன்னிகையைப் பயன்படுத்திக் கொல்லச் சூழ்ச்சி செய்தான். படைவீரர்களே! ராஜநர்த்தகியைக் கைது செய்யுங்கள். அவளைப் பகைவர்மீது பிரயோகம் செய்யலாம். (படைவீரர்கள் ராஜநர்த்தகியைக் கைதி ஆக்குகிறார்கள்.) தண்டல் நாயகம் வசுகுப்தன் ராட்சசனின் ஒற்றன். ராஜநர்த்தகி அலகா விஷக் கன்னிகை! இந்த மெய்யை என் விருப்பப்படி நிரூபித்துவிட்டேன். இவ்வாறு நிரூபித்தபிறகு நான் இங்கு ஒரு கணமும் தங்க முடியாது. எனக்கு வழி விடுங்கள்! விலகுங்கள்! தபோவனம் என்னை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது. சந்திரகுப்த! உம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான தண்டல் நாயகம் வசுகுப்தனின் இறுதிச் சடங்கையும் வெண்ணிலாத் திருவிழாவின் தொடக்கத்தையும் ஒன்றாகச் செய்யும். உம் நாட்டை நீரே ஆண்டுகொள்ளும்! (வெளியேறுகிறார்.)

சந்திரகுப்தன் : (துன்பக்குரலில்) ஆரிய சாணக்கியரே! மகாமந்திரி சாணக்கியரே! சந்திரகுப்தனுக்கு நீங்கள் தேவை. மகாமந்திரி சாணக்கியர் இல்லாமல் இந்த நாடு அழிந்துவிடும்; சந்திரகுப்தனும் அழிந்துவிடுவான்! மகாமந்திரி சாணக்கிய! வெண்ணிலாத் திருவிழா நடவாது! (சாணக்கியருக்குப் பின்னாலேயே விரைந்து செல்கிறான். அவருடைய குரல் சிறிது சிறிதாய்க் குறைந்து கேட்கிறது.) வெண் ணிலாத் திருவிழா நடவாது!... வெண்ணிலாத் திருவிழா நடவாது!... வெண்ணிலாத் திருவிழா நடவாது!!!

# சாபமும் வரமும்

—சேட் கோவிந்த தாஸ்

# முன்பாதி

பாத்திரங்கள் :

ஒரு மனைவி

ஒரு கணவன்

[இடம் : மனைவியின் பிரசவ அறை]

[நேரம் : மாலை]

(பிரசவ அறை. இக்காலப்பாணியில் ஓர் அறை. சுவர்களில் பல ஜன்னல்களும் கதவுகளும் இருக்கின்றன; ஆனால் பின் சுவரின் எல்லாக் கதவுகளும் ஜன்னல்களும் மூடப்பட்டுள்ளன. வலது, இடதுபக்கச் சுவர்களின் கோடியில் மட்டும் ஒவ்வொரு ஜன்னல் அறைக் காற்றைச் சுத்தப்படுத்துவதற்காகத் திறந்துள்ளன. சுவர்களுக்குக் கிரீம் நிறத்தில் டிஸ்டெம்பர் பூசப்பட்டு, அதன்மீது சாம்பல் நிறக் கோடுகள் இருக்கின்றன. சுவர்களில் சில படங்களும் உள்ளன. கூரையிலிருந்து மின் விளக்குகள் தொங்குகின்றன; அவற்றுக்கு அழகான ஷேட்கள். மின் விளக்குகளில் இப்போது வெளிச்சம் இல்லை. தரையில் சலவைக்கல் தளம்; அதன்மேல் விரிப்பு ஏதுமில்லை. பின்புறச் சுவருக்கு அருகில் இக்கால மாதிரியில் ஒரு பெரிய கட்டில்; அதன்மீது மிகத் தூய வெள்ளைப் படுக்கை. இதே கட்டிலுக்கு அருகில், வெண்ணிற இரும் பாலான, இக்காலத்து மாதிரி சிறு தொட்டில் ஒன்று; தொட்டில்மீது கொசுவலை இருப்பதால் அதற்குள் என்ன இருக்கிறது என்று தெளி வாய்த் தெரியவில்லை. கட்டிலுக்கு அருகில் ஒரு மேஜை ஒருபுறம் இருக்கிறது; அதன்மீது பல மருந்துச் சீசாக்கள், தெர்மாமீட்டர் முதலியவை வைக்கப்பட்டிருக்கின்றன. ஓர் அழகான டைம்பீஸ் கடி காரமும் வைக்கப்பட்டுள்ளது. கட்டிலுக்கு மறுபுறம் இரண்டு மெத்தை களுள்ள நாற்காலிகள்; அவற்றின்மீது இரண்டு வெல்வெட்டுத் தலை யணைகள். நாற்காலிகளுக்கு இடையில் பட்டு விரிப்பால் மூடுண்ட சிறிய மேஜை ஒன்று. மேஜைமேல் மலர்கள் நிரம்பிய ஒரு பூச்செண்டு வைக்கப்பட்டுள்ளது. வலதுபக்கச் சுவருக்கு அருகில் மரத்தாலான ஒரு சட்டை ஸ்டாண்டு; அதில் சில துணிகள் மாட்டப்பட்டுள்ளன. கட்டில்மீது ஒரு பெண்மணி படுத்திருக்கிறாள். அவள் மிக நேராய்ப் படுத்திருக்கிறாள்; அவளுடைய கழுத்துவரை விலையுயர்ந்த ஒரு பழுப்புக் கம்பளியால் மூடப்பட்டுள்ளது. அவளுடைய இரண்டு தோள்கள் மட்டும் கம்பளிக்கு வெளியே இருக்கின்றன. அவளுடைய முகத்தையும் தோள்களையும் தவிர, உடலின் வேறு எந்தப் பகுதியும் வெளியில் புலப் படவில்லை. அவளுக்குச் சுமார் 30 வயது இருக்கும். வெண்ணிறத்தில் சாதாரண அழகி. அவளுடைய கட்டிலுக்கு அருகிலுள்ள இரு நாற்காலி

களில் ஒன்றில் ஓர் ஆடவன் உட்கார்ந்திருக்கிறுன். அவனுக்குச் சுமார் 32-33 வயது இருக்கும். கோதுமை நிறம், சகஜமான உயரம், சாதாரண உடலழகன்; பட்டர்ஃப்ளை மீசை, ஆங்கிலேயப்பாணி உடை. பெண்ணின் முகமுத்திரையில் மிக மிகுதியான துயரத்தோடு சினமும் அவநம்பிக்கையும் ததும்புகின்றன. அவள் ஆடவனைப் பார்த்து ஏதோ சொல்லிக்கொண்டிருக்கிறுள். அவளுடைய குரல் நலிந்துள்ளது; ஆனுல், அந் நலிவிலும் ஒரு விந்தையான உறுதி இருக்கிறது. நலிவும் உறுதியுமாகிய இரு பகைப் பொருள்கள்கூடிய அக் குரலுக்கு மறு மொழி கூறக் குரலெடுக்க முடியாது எனக் கூற முடியாவிட்டாலும், மிகவும் கஷ்டம் என்பது நிச்சயம். ஆடவன் ஆடாமலும் அசையா மலும், ஏதும் பேசாமலும் உட்கார்ந்தபடி நாலு பக்கங்களிலும் பார்த்துக்கொண்டு இருக்கிறுன். அவன் பார்க்கும் விதம் விந்தையாக இருக்கிறது; எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தாலும் அவன் எதனையும் பார்க்கவில்லைபோலத் தோன்றுகிறது. அவன் உட்கார்ந் துள்ள விதமும், பார்க்கும் விதமும், அவனுடைய முகத் தோற்றமும் வெறும் வெறுமையையே வெளியிடுகின்றன. அவனுடைய கண்ணின் மணிகள் இங்கும் அங்கும் வட்டமிட்டவண்ணம் இருக்கின்றன. மேலுதடு கீழுதட்டின்மேல் அழுத்தயாய் அமர்ந்துள்ளது—டப்பி ஒன்றை மூடினுற்போல்.)

பெண் : ஆம், இன்று கேட்டுத்தான் ஆக வேண்டும், போவதற்கு முன்னுல் மனமாரப் பேசிவிடுகிறேன். ஒரு வேளை அதற்காகவே பிழைத்துக் கிடக்கிறேனே என்னவோ. (சற்று நிறுத்தி) பன்னிரண்டு வருடத்து ஒரு யுகத்திலும் நீங்கள் கேட்கவில்லை. இன்று கேட்டாக வேண்டும், பேசாமல் எவ்விதத் தடையும் செய்யாமல் கேட்க வேண்டும். பன்னிரண்டு ஆண்டுத் தவம், வெறுக்கப்பட்ட தவத்திற்குப் பிறகு, இவ்வளவு பயன் கிட்டியது ஒரு வேளை அதிகம் இல்லையோ என்னவோ.

[கணவன் எதிரிலுள்ள சுவரைப் பார்க்கிறுன், மனைவியின் பக்கம் பார்க்கிறுன், நெடுமூச்சு விடுகிறுன்.]

பெண் : இதற்கும் கஷ்டமாயிருக்கிறதா? பெருமூச்சாய் வாயி லிருந்து வருகிறதே? கஷ்டமானுல் ஆகட்டும், அடிக்கடி நெடுமூச்சு வரட்டும், ஆனுல் கட்டாயம் கேட்டாகவேண்டும்.

[கணவன் மனைவியைக் கூர்ந்து பார்க்கத் தொடங்குகிறுன், அவனுடைய உதடுகளில் வறண்ட புன்னகை கீற்றாய்த் தோன்றி மறைகிறது.]

பெண் : இப்படி வரண்ட... இப்படி உயிரற்ற... இப்படி நொடியில் மறையும் புன்னகை! ரசம் நிறைந்த, வாழ்க்கை நிரம்பிய, என்றும் நிலையான புன்னகையை எதிர்பார்த்து, அந்தப் புன்னகையிடம் என்

னுடையவை எல்லாவற்றையும் காணிக்கையாக்கும் விருப்பத்தோடு நான் உங்கள் வீட்டில் கால்வைத்தேன். (சற்று நிறுத்தி) கலியாணத்துக்கு முன்னால் தாய், தகப்பனார், தோழிகள், அண்டை அயல்வீட்டுக் காரர்கள் என்ன என்ன கனவு கண்டார்களோ. இந்தச் சம்பந்தத்தால் தம் பிறவிப்பயனையே அடைந்துவிட்டதாய் அப்பாவின் எண்ணம். நான் எவ்வளவு பெரிய வீட்டுக்குப் போகிறேன் என்பதை எண்ணி எண்ணி அம்மாவின் கண்கள் அடிக்கடி கண்ணீரால் கலங்கும்; தோழி களில் சிலருக்கு மகிழ்ச்சி, சிலருக்குப் பொறாமை; அண்டைவீட்டாரோ எனக்குக் கிட்டமுடியாத இன்பம் இல்லை என்பார்கள். என்னுடைய எதிர்காலத்து ஏழேழு இன்பங்களைக் கற்பனைசெய்து, அந்த இன்பங்களை வருணித்து, அந்த என்னுடைய இன்பவுலகத்தை என்னைச் சுற்றிலும் எவ்வளவு அழகாய்ப் படைத்தார்கள். (சற்று நிறுத்தி) உண்மையில் நான் பெரும் பாக்கியவதி என்று எனக்கும் எண்ணம். இந்த நாட்டில் கோடீசுவரர்களுக்குமேல் நூறு கோடி படைத்தவர்களே இல்லை கோடீசுவரர் வீட்டில் புகுந்துகொண்டிருந்தேன். நீங்கள் மிகவும் அழகு, நன்கு படித்தவர்கூட என்று கேள்விப்பட்டிருந்தேன். அப்படி இருக்க, வாழ்க்கையில் என்ன குறை ஏற்படமுடியும்? (சற்று நிறுத்தி) என் பெற்றோர் உங்களைப்போல் பணக்காரர்கள் அல்ல; ஆனால், அவர்கள் பட்டினி கிடந்தவர்கள் அல்ல. என்னை நல்ல முறையில் படிக்க வைத்தார்கள். சில சமயம் மலைவாசத்திற்கும் சில சமயம் பெரிய நகரங்களைப் பார்க்கவும் அழைத்துப் போனார்கள். நான் காளிதாசனும் வேர்ட்ஸ்வர்த்தும் செய்துள்ள இயற்கை வருணனையை அடிக்கடி படிப்பேன். சில சமயம், பவபூதியும் ஷெல்லியும் எழுதிய காதல் கற்பனைகளைப் படிப்பேன். சில சமயம் சூர்தாசின் காதல் யமுனையில் மூழ்கித் திளைப்பேன். சில சமயம் துளசிதாசின் கடமைக் கங்கையில் அமுங்கி மகிழ்வேன். ரவீந்திர பாபுவை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை; ஆனால், மைக்கேலின் வரிகளின் ஹிந்தி மொழிபெயர்ப்பு எனக்குப் பாடமாகிவிட்டது. காலிப்பும் சௌக்கும் செய்த மொழி பெயர்ப்பையும் பார்த்தேன்; பந்த்தையும் மகாதேவியையும் நான் விட்டுவைக்கவில்லை. வாழ்க்கையை வாழ்வதைப்பற்றி ஏதேதோ எண்ணியிருந்தேன். எனக்குள் ஓர் உலகத்தைப் படைத்து வைத் திருந்தேன். நாம் இருவரும், எந்த எந்தப் பருவத்தில் எப்படி எப்படி உண்போம், சுற்றுவோம், காலையிலும் மாலையிலும், நிலா இரவிலும் இருண்ட இரவிலும் நாம் என்ன என்ன செய்வோம் — இதைப்பற்றி எல்லாம் ஒரு சார்ட் தயாரித்து வைத்திருந்தேன், ஒரு சார்ட்! சில சமயம் மலைகள்மீதும், சில சமயம் கடற்கரையிலும், சில சமயம் பெரிய பெரிய நகரங்களிலும், சில சமயம் தோப்புகளிலும் தோட்டங்களிலும்

நம்முடைய வேட்கைகள் எப்படி உயிர்த்து உருக்கொள்ளும் என்பதைப் பற்றி நான் அடிக்கடி கற்பனை செய்வது வழக்கம். படைப்பு முழுவதுமே நம் காலடியில் விழுந்து வணங்கும்; உலகம் முழுவதும் இருப்பினும் எனக்கு நீங்கள் மட்டும், உங்களுக்கு நான் மட்டும் இருப்போம்— இந்த எண்ணமே என் உலகத்தின் அஸ்திவாரம்; ஆம், அஸ்திவாரம்! (சற்று நிறுத்தி) என்ன என்ன எண்ணி வந்தேன்; ஆனால், ஐயோ! என்னுடைய மலர்ந்த பூங்காவில் பனி கொட்டிவிட்டது. இங்கு வந்ததும் முற்றிலும் இலைகள் உதிர்ந்துவிட, அதற்குப்பின் வரப்போகும் வசந்தத்தைக் காணவே முடியவில்லை. (மீண்டும் சற்று நிறுத்தி) காரணம்?... ஒரே ஒரு காரணம்... நீங்கள்... நான் எண்ணியபடி நீங்கள் இல்லை.

[கணவன் கொஞ்சம் அச்சத் தோற்றத்தோடு எதிர்ச் சுவரி லுள்ள ஒரு சித்திரத்தைப் பார்க்கத் தொடங்குகிறான்— உயிரற்ற அச் சித்திரம் அவனிடம் ஏதோ வினவுவதுபோல்.]

பெண்: பாருங்கள், இப்படிப் பாருங்கள்; இப்போதுதானே நான் ஆரம்பம் செய்திருக்கிறேன். இன்னும் நான் எவ்வளவோ சொல்ல வேண்டும். ஒரு யுகத்தின் வரலாறு அல்லவா? இவற்றை வைத்துக் கொண்டு ஒரு புராணம் எழுதலாம், புராணம்!

[கணவன் மீண்டும் மனைவியின் பக்கம் பார்க்கத் தொடங்கு கிறான்.]

பெண்: உங்களுடைய அன்பு... உங்களுடைய அன்பு கிடைத்தால் அல்லவோ என் உலகத்தைப் படைக்கமுடியும். அந்த மனோகரமான மலைகள், அந்தப் பாற்கடல், அந்த மணம்வீசும் தோட்டங்கள், அந்த உயிர்த்துடிப்புள்ள நகரம், அந்த மாறிவரும் பருவங்கள், அந்த அழகிய நிலா இரவுகள், அன்பின் அச் சிறு முளை வளர்ந்து, காதலின் அச் சிறு துளி பெறும்போதுதானே உருவாகும். அன்பு செய்து அதில் ஆழ்வது இருக்கட்டும், நீங்கள் என்னை அன்போடு ஒரு பார்வைகூடப் பார்க்க வில்லை. அசட்டை... அவ்வளவு அசட்டை!... வைராக்கியம்... அவ்வளவு வைராக்கியம்!

[கணவன் எழுந்திருக்க விரும்புகிறான்.]

பெண்: ஒருகாலும் இல்லை; கூடாது, நீங்கள் போகவே கூடாது. (கெஞ்சும் குரலில்) நான் சொல்வதைக் கேளாமல் இன்றும் போவீர்களா?

[கணவன் உட்கார்ந்துவிடுகிறான்; ஆனால், உட்காருகையில் தன்னைச் சுற்றிலும் புழுபூச்சிகள் திரண்டிருப்பது போலவும், அல்லது, ரீங்காரம் செய்வது போலவும், அவற்றை அகற்றி விட்டு உட்காருவது போலவும், தலையையும் கைகளையும் ஆட்டுகிறான்.]

பெண் : உங்களுடைய அன்பு இல்லாததால், நிறைவான இந்த வீடு சுடுகாடு போலக் காட்சி அளிக்கத் தொடங்கியது. இங்குள்ள செல்வம், உயிரற்ற தங்கம் – வெள்ளித் துண்டுகள், இங்குள்ள ரத்தினங்கள், மணி மாணிக்கங்கள் எல்லாம் வெறும் கால்களில் குத்தும் கூர்மையான கல்துண்டுகள்; இந்த முழு வைபவமும் சிதையின் தீ நாக்குகள்!

[கணவன் நீண்ட மூச்சுவிடுகிறான்.]

பெண் : ஆம், ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு விநாடியும் விடுங்கள், இந்தப் பெருமூச்சுகளை விடுங்கள்; ஆனால்... ஆனால் இப்போது இவை அணைந்திருக்கின்றன; முற்றிலும் அணைந்திருக்கின்றன! (சற்று நிறுத்தி) ஆம், என் உலகம் வேண்டுமானால் 'இல்லை' என்ற சொல்லால் நிரம்பி இருக்கலாம்; ஆனால், உங்களுடைய உலகத்தில் அப்படி இல்லை. என்னுடைய அந்தச் சூனிய உலகத்தில்கூட நீங்கள், நீங்கள் மட்டுமே இருந்தீர்கள்; ஆனால், உங்களுடைய உலகத்தில், இந்த உலகத்தில் உள்ள எந்தப் பொருள்தான் இல்லை? பணத்தால் நான் விரும்புகிற அன்பு போன்ற பொருளை வாங்க முடியாமல் இருக்கலாம்; ஆனால், காமத்தை ஏராளமான அளவில் வாங்க முடியும். அதைத் திருப்தி செய்வதற்காக நீங்கள் ஆடிய களிக்கூத்துகளும் கேளிக்கைகளும் அவற்றில் கூடியாடிய மோகினிகளும்! (சற்று நிறுத்தி) இதைப்பற்றி எல்லாம் நான் கேள்விப் படும்போது, என்... என் நிலைமை; என்னுடைய... என்னுடைய எரிச்சல்... அந்த எரியிலிருந்து எழுந்துள்ள உங்களுடைய இந்த நீண்ட மூச்சுகளைவிட மிகவும்... மிகவும்... பயங்கரமான சாம்ப லாக்கிக்கொண்டுவந்த மூச்சுருவ தீ நாக்குகள், அனல்காற்று! (மறுபடியும் சற்று நிறுத்தி) மாமனாரும் மாமியாரும் சில சமயம் மலைகளுக்கு அழைத்துப் போனார்கள்; ஆனால், நீங்கள் இல்லாமல் தனியே இருந்ததால், பனியால் மூடுண்ட மலைச்சிகரங்கள் சூரிய கிரணங்கள் பட்டு ஒளிருவதால் எரிமலைகள் போலத் தோன்றலாயின. சில சமயம் அவர்களோடு கடற்கரைக்குப் போனேன்; நீங்கள் இல்லாததால், கடல் அச்சமூட்டும் நீர்ப்பிராணிகளின் பயங்கர நிலையமாகத் தென்பட்டது. சில சமயம் அவர்களோடு பம்பாய், கல்கத்தா, தில்லி போன்ற நகரங்களுக்குப் போனேன்; ஆனால் நீங்கள் இல்லாமல் தனியே இருந்ததால், அவை நாடகம், சர்க்கஸ், சினிமா முதலிய சீவனற்ற பொம்மை விளையாட்டுப் போல் வெறுமையாய்க் காட்சிதந்தன. நீங்கள்தான் என்னுடைய உண்மையான உயிர். உங்களால்தான் இப் பொருள்களில் எல்லாம் உயிர் பெய்யமுடியும். உயிர் இல்லாத உடல் பிணமாக இல்லாமல் வேறு எப்படி இருக்கும்? (சற்று நிறுத்தி) என்னால் உங்களை மகிழ்விக்க முடியாததால் இப்போது

நான் என் விதியை நோகலானேன். இந்தப் பிறவியில் நான் ஒரு பாவமும் செய்யவில்லை; முன் பிறவியில் செய்த பாவங்களை எண்ணினேன். ஆனால்... ஆனால்... விதியும் முன்பிறவியும் துயரப்படுவோருக்கு ஆறுதல் தரும் பொருள்கள்தானே? இந்தச் சந்தேகம் எழுந்தது, அடிக்கடி எழத்தொடங்கியது; பிறகு... பிறகு உங்கள்மீது கோபம் உண்டாயிற்று. இப்போது... இப்போது... திடீரென்று ஓர் எண்ணம், நானும் உங்களைப்போல் போகவாழ்க்கை வாழ்ந்தால் என்ன என்று. நான்... நானும்...

*[கணவனின் முகத்தில் சின உணர்ச்சி ஜொலிக்கிறது; பற்களால் கீழுதட்டைக் கடிக்கிறான்.]*

பெண்: (வெறுப்போடு புன்னகைத்து) கோபம் வருகிறதா? நான் எண்ணினேன் என்பதற்கே கோபம்! ஏன் வராது? மற்றச் சொத்துக்களைப் போல மனைவியும் விலைக்கு வாங்கப்பட்ட பொருள் தானே? உயிர் இருந்தாலும் அவளைப் புருஷர்களான நீங்கள் உயிரற்றவளாய்க் கருதுகிறீர்கள். அவளுடைய மனத்தில் காமம் தோன்றினால் பாவம்; சினம் வந்தால் மன்னிக்க முடியாத குற்றம்; ஆனால் ஏன்? ஏன் அப்படி?... நான்... நான் உங்களைப் போல வாழ்க்கை கழிக்க வேண்டும் என்று தானே எண்ணினேன்? உங்களிடம் நம்பிக்கை இழந்து... நீங்கள் இப்படி வாழ்வதைப் பார்த்து, நான் வேறு என்னதான் எண்ண முடியும்?... என் பாவனைக்காகவே கோபம் வருகிறது; உங்கள் செய்கைகளால் எனக்கு எவ்வளவு கோபம் வந்திருக்கும் என்பதை... யோசியுங்கள்.

*[கணவன் திடீரென்று எழுந்து நிற்கிறான்.]*

பெண்: (உட்காருமாறு கையால் ஜாடை காட்டி) பயப்படாதீர்கள். உட்காருங்கள், உட்காருங்கள். என் பாவனை எண்ணத்தோடு நின்று விட்டது.

*[கணவன் மறுபடியும் உட்கார்ந்துவிடுகிறான். நாற்காலியின் கைப்பிடியை வருடத் தொடங்குகிறான்.]*

பெண்: ஜட்ஜ், ஜூரி, அஸெஸர் போல முகத்தை வைத்துக் கொள்ளாதீர்கள். நானாகவே என் பாவனையை உங்கள் விருப்பப்படி முடிவு கட்டிவிட்டேன். ஹிந்து... துரதிர்ஷ்டம் பிடித்த ஹிந்து வாசனை இருந்ததே. ராமாயணம் படித்திருந்தேன், புராணங்கள் கேட்டிருந்தேன். அவை எல்லாவற்றிலும் ஈடுபாடும் இருந்தது. எல்லாம் கூடிக் கண்ணுக்குப் புலப்படாத விலங்குகளால் மனத்தையும் புத்தியையும் கட்டிப்போட்டிருந்தன. அப்புறம் சமூகம்... அற்ப சமூகத்தில் கெட்ட பெயர் வந்துவிடுமே என்ற பூதம். ஆண்கள்...ஆண்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், பெண்கள்... பெண்கள்...? எந்தக்

குடும்பம், எந்த வீடு என் வாழ்க்கையின் உயிரை வாங்கும் பிரளயமாக இருந்ததோ, அதே குடும்பத்தின், அதே வீட்டின்... மான மரியாதை பற்றிக் கவலையாக இருந்தது. நீங்கள் இருந்தது போல நான் ஆக முடியவில்லை. (சற்று நிறுத்தி) காலம் போகப் போக என் துயரம் அதிக மாயிற்று. இந்தத் துயரத் தீயை, குழந்தை வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்ட யக்ஞங்களில் கொட்டப்பெற்ற ஆகுதி நெய் மேலும் தூண்டிவிட்டது. அப்புறமும் குழந்தை பிறக்காமல் போகவே இரக்க முள்ள மாமனார் மாமியாரின் பார்வையும் மாறிவிட்டது. வாழ்க்கையின் ஒரு விபரீதமான கிண்டல் அப்போது... அப்போதுதான் எனக்குப் புரியத் தொடங்கியது. குழந்தை பிறக்காதது என் குற்றமா? உங்கள் குற்றம் இல்லையா? மாமியார் அடிக்கடி சொல்லிவிட்டார், 'மலடி, கல், மூதேவி' என்று. சில நாளுக்குப் பிறகு மாமனாரும் பேச ஆரம்பித்தார். 'அம்மாவுக்கே ஒரு பெண், பிள்ளைக் குழந்தையே இல்லை, நம் வமிசம் இந்த மலடியால் எப்படித் தழைக்கும்?' என்னை மட்டும் அல்ல, என்னைப் பெற்றவர்களையும் பழித்தார்கள். (மறுபடியும் சற்று நிறுத்தி) அப்போது... அப்போது... என் மனத்தில் என்ன தோன்றியது தெரியுமா?

[கணவன் மனைவியின் பக்கம் பார்த்தவாறே பேசுவதற்குத் தயாராயிருப்பதாய்த் தோன்றுகிறது. மனைவி மௌனமா யிருந்து விடுகிறாள். ஆனால், பேசுவதா, வேண்டாமா என்ற போராட்டம் மட்டும் தென்பட்டதேயன்றி, அவ னுடைய வாயிலிருந்து வார்த்தை ஒன்றும் வெளிவராது போகவே, மனைவி மட்டும் பேசத் தொடங்குகிறாள்.]

பெண் : வாயிலிருந்து வார்த்தை வெளிவரவில்லை. எப்படி வரும்? குழந்தை பிறக்காதது யாருடைய குற்றம்? உங்களுடையதா, என்னுடையதா என்பதை மிக விரைவில் என்னால் வெளிப்படுத்த முடியும் என்றுதான் என் மனத்தில் தோன்றியது. மகாபாரதத்தில் விசித்திர வீரியனுக்கும் சித்திராங்கதனுக்கும் இருந்த குறைபாடுகளை அவர்கள் இறந்த பிறகு வேதவியாசர் வெளிப்படுத்தினார். பாண்டுவும் திருதராஷ்டிரனும் நியோகத்தில் பிறந்தார்கள். அந்த அரசிகளையோ வியாச முனிவரையோ யாரும் பாவிகள் என்று கூறவில்லை. நீங்கள் உயிரோடு இருக்கும்போதே நான் இக்கால மகரிஷி யாரையாவது தேடிக் கண்டு, மலடி என்ற குற்றச்சாட்டிலிருந்து விடுதலைபெற்று, உங்களுடைய வமிசத்தை விருத்தி செய்யலாமா என்று என் மனத்தில் தோன்றியது.

[கணவன் திடீரென்று நின்று இங்குமங்குமாக நடக்க தொடங் குகிறான்; அவனுக்கே தன் உடம்பு அற்புதமாய்த் தோன்று வதுபோல்.]

பெண் : உட்காருங்கள், உட்காருங்கள்... ஆனால், என் எண்ணத்தை என்னால் செயல்படுத்த முடியவில்லை. அதே சமயத்தில் உங்களுடைய பெற்றோரின் அச்சத்தைக் கண்டு உங்களுக்கு இரக்கம் வந்துவிட்டது. ஒரு வேளை, ஆஸ்திக்கு ஒரு வாரிசு வேண்டுமே என்பதாலும் உங்களுக்குக் குழந்தை ஆசை உண்டாகி இருக்கலாம். நீங்கள் என்னிடம் வரத் தொடங்கினீர்கள். சொல்கிறேன், உட்காருங்கள்.

*[இதுவரை நின்றிருந்த கணவன் உட்கார முடிவு செய்கிறான். ஆனால், உட்காருமுன் நாற்காலியில் நசுங்கிய தலையணையைச் சரி செய்கிறான்.]*

பெண் : யாருடைய துணை இல்லாததால் எனக்கு உலகம் வெறிச்சோடிக் கிடந்ததோ, அந்த உங்கள் துணையாலும் எனக்கு இப்போது இன்பம் உண்டாகவில்லை. இந்த நசுங்கிய தலையணையை நீங்கள் சரி செய்ய முடிந்தது; ஆனால் நசுங்கிய என் உள்ளத்தைச் சீர்ப்படுத்த முடியவில்லை; காரணம் தெரியுமா?

*[கணவன் மறுபடியும் பேச முயலுகிறான். மனைவி மௌனம் ஆகிறாள். ஆனால், கணவனின் உதடுகள் அசைந்ததோடு சரி, வார்த்தை வெளிவராது போகவே, மனைவி மீண்டும் பேசத் தொடங்குகிறாள்.]*

பெண் : உங்களால் பேச முடியாது. சரி, கேளுங்கள். நானே காரணம் சொல்கிறேன். நீங்கள் வந்துபோனதால் எனக்கு ஆனந்தம் ஏற்படாததற்குக் காரணம், நீங்கள் ஏன் வருகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்களும் உங்களுடைய பெற்றோரும் பேசிக்கொண்டதைப் பற்றின வதந்தி என் காதுகளுக்கும் எட்டிவிட்டது. நீங்கள் என்னிடம் எவ்வித அன்பாலும் வரவில்லை. உங்களுடைய வமிசத்தின் பெயரைக் காக்கவும், உங்களுடைய சொத்தையும், உங்களுடைய பெருமையையும் பொறுப்பேற்கவும் தேவையான ஒரு பொம்மையை என் எலும்புகளிலிருந்தும், சதையிலிருந்தும், ரத்தத்திலிருந்தும் உண்டாக்க வேண்டும் என்பதற்காகவே நீங்கள் என்னிடம் வருகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்... எந்தக் குடும்பத்தின்மீது, எந்த வீட்டின் மீது என் நெஞ்சில் அன்பும் பற்றும் ஒரு சிறிதும் மிச்சம் இல்லையோ, அந்தக் குடும்பத்துக்காக, அந்த வீட்டிற்காக. அப்போது... உங்களுடைய அந்த வருகையால் என் மனத்தில் விரக்தி, பெரும் விரக்தி தான் உண்டாயிற்று.

*[கணவன் வியப்போடு கதவுபோல வாயைத் திறந்தவாறு மனைவியை நோக்குகிறான்.]*

பெண் : (கடகடவென நகைத்து) வியப்பாக இருக்கிறதா?... ஏன் இருக்காது? ஆண்பிள்ளை அல்லவா, ஆண்பிள்ளை... என்னைப்

பாலையாக்கி, அதன்மீது காதல் மழை பொழியாமல், அதிலிருந்து விளைச்சல் எதிர்பார்த்தீர்களா? யந்திரம் போன்ற உங்கள் தோற்றம் என்னை அதன் ஓர் உறுப்பு ஆக்கலாம்; ஆனால் உண்மையான பெண்ணாக்க முடியாது. அந்த உறுப்புச் சரியாக இல்லை. மெஷின் ஜாம் ஆகி விட்டது என்றதும் புது உறுப்புக் கொண்டு வருவதைப் பற்றிப் பேச்சு எழுந்தது. உங்களுக்கு இரண்டாவது கலியாணம்! இப்பேர்ப்பட்ட கயவன், இப்பேர்ப்பட்ட கடையன், இப்பேர்ப்பட்ட அரக்கனின் கையில் மற்றோர் ஆத்மாவையும், மற்றொரு நெஞ்சையும் கொடுத்து நாசமாக்குவதற்கு இந்தக் கொடிய ஏற்பாடு! பணக்காரர்களுக்குச் சந்ததி வேண்டும் என்கிற இந்த ஆசையும், அதற்காக இந்த நெஞ்சை நடுங்கவைக்கும் காணிக்கையும்! சமூகத்தில் மென்மையான நெஞ்சுள்ள பல நல்லொழுக்கமுள்ள இளைஞர்கள் பிரமசாரிகளாகவே இருந்து விடுகிறார்கள்; ஆனால், பணக்காரனுக்கு மனைவி இருக்கும்போதே அவன் மறுமணங்கள் செய்துகொள்ள முடியும். ஏன் செய்யக் கூடாது? ஆஸ்திக்கு வாரிசு உற்பத்தி செய்யும் மனைவியும் உயிருள்ள ஆஸ்திதானே? பணத்தால் அவளை வாங்க முடியும் அல்லவா! அட கேடுகெட்ட சமூகமே, உயிர் வேருக்காக இருப்பது போலவும், வேர் உயிருக்காக இல்லை போலவும். என்னைப் போன்ற ஒரு பெண்ணை பலிகொடுத்த பிறகு, யாரோ ஒரு மெல்லியல் அபலையை ஆகுதியாக்கும் இந்த அரக்க யாகம் செய்யமுயலும் இந்த அரக்க ஆசை என்னை உலுக்கிவிட்டது, இதே காரணத்தால்... ஒருகால் இதே காரணத்தால் அதே சமயத்தில் நான் கருத்தரித்துவிட்டேன்.

[கணவன் சிறிது அமைதியாக நாற்காலியில் அழுந்தி அமருகிறான் ]

பெண் : உங்களுக்கு அமைதி உண்டாயிற்று. ஏன் உண்டாகாது? இதனால் எனக்கும் அமைதி உண்டாகி இருக்கும் என்று எண்ணி யிருப்பீர்கள். ஆனால், இருங்கள். முதலில் எனக்குத் திடீரென்று காட்டப்பட்ட மரியாதையையும் பெருமையையும் கேளுங்கள்; பிறகு என் பாவனைகளின் கதையைக் கேட்கலாம். (சற்று நிறுத்தி) மலடி அழகிய வயிற்றுக்காரி ஆகிவிட்டாள்; கல் பூவினும் மென்மையான தாகிவிட்டது; மூதேவியின் கால்கள் சீதேவியின் சரணங்கள் ஆகி விட்டன. மாமனார் மாமியாரின் மனத்தில் என்மீது உண்டான அன்புவெள்ளம் வடியவே இல்லை. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும், ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு வினாடியும் இந்த வெள்ளம் பெருகிக்கொண்டே போயிற்று. நாள்தோறும் டாக்டரும் லேடி டாக்டரும் என்னைப் பார்க்க வந்தார்கள். என் உடல்நிலை நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக உலகத்தின் கடைக்கோடியில்

கிடைக்கும் சாமாஞைக இருந்தாலும் வரவழைக்கத் தயாராக இருந்தார்கள். ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் பலவகை மருந்துகளுக்காகவும், பலவகை உணவுப் பொருள்களுக்காகவும் எத்தனையோ தடவைகள் ஆர்டர்கள் போயின. அவை இந்தியாவில் கிடைக்காது அல்லவா; கிடைத்தாலும் பழையனவாக இருக்கும்; நேராக வருவது போல் ஃபிரஷ்ஷாக இருக்காது. ஒவ்வொரு நாளும் எனக்காகப் புதிய இனிப்பு, புதிய காரம், எவ்வளவோ வகை சுவையான பொருள்கள் செய்து கொடுத்தார்கள். காலையில் ஒருவகை, மத்தியானம் மற்றொரு வகை, மாலையில் வேறொரு வகை. என்னைப் போல் சூனியமான உங்கள் உள்ளத்திலும் அன்பின் சலங்கை ஒலித்ததோ என்னவோ.

[கணவன் மகிழ்ச்சியோடு மனைவியின் பக்கம் பார்க்கிறான். அவன் ஏதோ சொல்லவும் விரும்புகிறான். ஆனால் வாயிலிருந்து சொற்கள் வெளிவரவில்லை. விரல்கள் நாற்காலியின் கைப்பிடிமீது நடமாடுகின்றன.]

பெண்: [வரண்ட சிரிப்புச் சிரித்து] இதைக் கேட்டு மகிழ்ச்சியாக இருக்கிறது; அந்த மகிழ்ச்சியால் விரல்கள் ஆடுகின்றன. விரல்கள் ஏன் ஆடா? குறைந்தபட்சம் ஒரு முறையாவது உங்கள் இதயத்தில் என்மீது அன்பு தோன்றியது என்பதை என் வாயால் சொல்லக் கேட்டு மகிழ்ச்சி உண்டாகக்கூடும். (சற்று நிறுத்தி) குழந்தை வேண்டும் என்று பெண் எவ்வளவு ஆசைப்படுகிறாள், தாயாக வேண்டும் என்று எவ்வளவு ஆவலாக இருக்கிறாள் என்பதைப்பற்றி நான் கேட்டிருக்கிறேன், படித்திருக்கிறேன். மாமனாரும் மாமியாரும் நீங்களும் இவ்வளவு உற்சாகமாக இருப்பதைக் கண்டு என் நிலைமை என்ன ஆயிற்று தெரியுமா?

[கணவன் கம்பீரத்துடன் மனைவியின் பக்கம் பார்க்கிறான்.]

பெண்: அதற்கு எதிர் விளைவு. இதுவரை நீங்களும், உங்கள் பெற்றோரும் என் நல்லெண்ணங்களை மிதித்து அழித்துவிட்டீர்கள். இந்தச் செல்வமும் இந்தச் சிறப்பும் என் நெஞ்சுமீது சுமையாக வைக்கப்பட்டிருந்தன. உங்களுடைய குடும்ப கௌரவமும், வம்ச மரியாதையும் எனக்கு வெறும் கேலிக்கூத்தாய்ப் பட்டன. இவற்றுக்கெல்லாம் என் மூலம் ஒரு வாரிசு உண்டாகும் என்பது எனக்கு இன்பமோ உற்சாகமோ தருகிற விஷயமல்ல. ஆனால், துன்பமும் பித்தும் உண்டாக்கும் விஷயமாக இருந்தது. எல்லாருடைய அழிவையே நான் விரும்பினேன், பாதுகாப்பை அல்ல.

[கணவன் நடுங்கிவிடுகிறான்.]

பெண்: நடுங்குகிறீர்களா? நடுங்குங்கள், நடுங்குங்கள், அடிக்கடி நடுங்குங்கள். உங்களுடைய நடுக்கத்தை இந்தச் சமூகமும் உலகமும் பார்க்கட்டும். (சற்று நிறுத்தி) பிணமான எனக்கு உயிருள்ள குழந்தை

வேண்டும் என்கிற விருப்பமே அற்றுவிட்டது. அது என் வயிற்றில் வளர வளர உங்கள் தாயார் என்னைக் கல் என்று பழித்தாளே, அந்தக் கல்லே என் வயிற்றில் வளருவதாய்த் தோன்றியது.

[கணவன் மறுபடியும் எழுந்து உலாவத் தொடங்குகிறான். இந்தத் தடவை அவனுடைய நடை, தன்னுடைய உடலையே சமாளிக்க முடியாது கஷ்டப்படுகிறவன் நடைபோல் இருக்கிறது.]

பெண் : (மிகக் கூர்மையான குரலில்) உட்காருங்கள்!

[இச் சிறு வாக்கியத்தின் தாக்குதலால் தயங்கியவண்ணம் உடனே உட்கார்ந்துவிடுகிறான்.]

பெண் : பிரசவ வேளை வந்தது. ஐயோ, எவ்வளவு கொடிய வலி! அந்த நேரத்தில், என் உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால் சிசுவின் தலையை உடைத்து வெளியில் எடுக்க வேண்டும், அல்லது குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமானால் என் வயிற்றைக் கிழிப்பதால் என் உயிர்போகும் என்று டாக்டர்கள் சொன்னபோது... நீங்கள்... நீங்கள் எல்லாரும் ஃபுட்பால் போல் எப்படி குதித்தீர்கள். இருவருமே எப்படியாவது பிழைத்துவிட வேண்டும் என்று முதலில் விரும்பினீர்கள். பணக்காரன் ஒரு பொருளைப் பிடித்தால் அதை எளிதில் விட விரும்புவதில்லை. விடுவதாயிருந்தால் அந்தப் பொருளைவிடப் பெரியபொருளைப் பெற்று அல்லது பெறும் ஆசையில்தான் விடுவான். கடைசியில்... கடைசியில் முடிவாயிற்று—என் வயிற்றைக் கிழிப்பது என்று. கயவர்களே! பாவிகளே! குழந்தை வேண்டும் என்று இவ்வளவு நரக ஆசையா! சொத்துக்கு வாரிசு வேண்டும் என்று இவ்வளவு வெறுக்கத்தக்க ஆசை! வயிற்றைக் கிழித்துக்கொள்ள நான் மறுத்துவிட்டேன். அப்போது... அப்போது... கிசுகிசுவென்று யோசனை நடந்தது. குழந்தையின் தலையை உடைத்து வெளியில் எடுக்கப்படும் என்று சொல்லி என்னை ஏமாற்றி மயக்கம் அடையச் செய்தீர்கள். எனக்கு உணர்வு வந்தபோது என் வயிறு கிழிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. டாக்டரையும் — ஆண்பிள்ளைதானே? — லேடி டாக்டரையும் — அவள் ஒரு பெண்ணாக இருந்தும் — ஒரு குழந்தைக்காக — நாளுக்கு எத்தனையோ குழந்தைகள் பிறக்கின்றன, இறக்கின்றன; அம்மாதிரிக் குழந்தைக்காக — கல்வியறிவும் நாகரிகமும் பண்பாடும் உள்ள பெண்ணின் வயிற்றைக் கிழிக்க விலைக்கு வாங்கினீர்கள். (சற்று நிறுத்தி) ஒரு பெண்ணின் உணர்ச்சிகளோடும் உடலோடும் விளையாடப்பட்ட இந்த விளையாட்டை, ஓர் ஆணின் ஆத்மாவுடனும் உடலுடனும் விளையாட முடியுமா? முடியாது என்று எனக்குத் தெரியும். (சற்று நிறுத்தி) உணர்வு வந்ததும் நான் முதலில் கேட்ட குரல் உங்கள்

தாயின் குரல். 'பெண் குழந்தை பிறந்திருக்கிறது' என்ற அவள் குரலில் எவ்வளவு வேதனை நிறைந்திருந்தது, அந்த வேதனையில் எவ்வளவு ஆத்திரம்! 'பெண் பிறந்திருக்கிறது', பூகம்பம் உண்டாகி விட்டாற்போல்! இடிவிழுந்துவிட்டாற்போல்! நெருப்பு மழை பெய்து விட்டாற்போல்! சமுத்திரத்தைக் கீறியதால் அதன் அலை, இந்த வீட்டின் வாரிசுரிமையில் பிரளயமாடிவிட்டது. திடீரென்று எனக்குக் கொடுக்கப்பட்டு வந்த மரியாதை ஒரு களத்தில் மண்ணாகிவிட்டது. என் தாய்க்கும் பெண்தானே பிறந்தது. எனக்கு வேறென்ன பிறக்கும்? கல், சரளை, விறகு, கரி இப்படி ஒன்றும் பிறக்காமல் இருந்ததே பெரிய ஆச்சரியம்! பெண் மிகவும் வெறுக்கப்பட்ட, கெட்ட பொருள். குழந்தையை யாரும் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ஆனால்... ஆனால்... எனக்கு மிகுந்த உபசாரம் செய்யப்பட்டது. நான் மலடி இல்லை என்றாகிவிட்டதல்லவா?... அடுத்தது ஆண் குழந்தையாகப் பெறலாம் அல்லவா? நான் ஆண் குழந்தை ஈனும் மெஷின் ஆகிவிட்டால் எனக்கு எல்லா மரியாதையும் கிடைக்கும்! எனக்கு என்று ஒரு மதிப்பும் இல்லை. ஆண் குழந்தைக்காக எனக்கு உபசாரம் நடக்கிறது. ஆனால்... ஆனால்... நான் போய்க்கொண்டிருக்கிறேன், போய்க்கொண்டிருக்கிறேன். காய்ச்சல் ஏறிக்கொண்டிருக்கிறது.

[கணவன் திடுக்கிட்டு எழுந்து நின்று விடுகிறான்.]

பெண்: இல்லை, இவ்வளவு சீக்கிரம் இல்லை, சிறிது நேரமாகும். சீக்கிரமாகப் போய்விட்டால், உங்களுக்கு அருகில் உட்கார்ந்திருந்த காரணத்தால் பெண்பூதமாகி உடனே உங்களைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன். பூதமாகி உங்கள் தலையில் ஏற விரும்பினால் நீங்கள் ஓடினாலும் தப்பமுடியாது. (அதட்டி) உட்காருங்கள்!

[கணவன் பதறி உட்கார்ந்துவிடுகிறான். அவனுடைய முகத்தில் எஞ்சியிருந்த நிறமும் மறைந்துவிடுகிறது.]

பெண்: இந்த நேரத்தில் எல்லாரையும் விட எனக்கு யார்மீது அதிகப்பிரியம் உண்டாகிறது தெரியுமா? (சற்று நிறுத்தி, தொட்டிலின் பக்கம் விரலால் சுட்டி) அந்தப் பெண் குழந்தை; ஏன் என்று தெரியுமா?

[வெகு தொலைவிலுள்ள யாரையோ பார்க்கிறவன் போல் கணவன் அவள் பக்கம் பார்க்கிறான். வெகு தொலைவி லிருந்து வரும் ஒலியைக் கேட்கிறவன் போல், அவள் சொல் வதைக் கேட்கிறான்.]

பெண்: இந்தக் குழந்தையிடம் யாருக்கும் அன்பு இல்லை, யாருக்கும் விருப்பம் இல்லை என்பதால் எனக்கு இதன்மீது அன்பு. இன்று தாய்மை உணர்ச்சிகள் என் நெஞ்சில் தோன்றிக்கொண்டிருக்கின்றன. என் பாலை ஊட்டி, என் கண்ணீரால் நனைத்து இதை வலிமையும் தூய்மையும் உள்ளதாய் ஆக்க விரும்புகிறேன். (சற்று நிறுத்தி) ஆனால்... ஆனால்... நான் இதற்காகப் பிழைக்கமாட்டேன் என்று

எனக்குத் தெரியும்... உங்களையும் உங்கள் தாய் தந்தையரையும், இந்தச் செல்வ ஆடம்பரத்தையும், இந்தக் குடும்பத்தையும், யாரையும் விட்டுப் போவதைப் பற்றி வருத்தம் இல்லை ஆம், இந்தக் குழந்தையை விட்டுப் பிரிவதைப் பற்றி எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. நீங்கள் எல்லாரும் சேர்ந்து நீண்ட காலத்துக்கு முன்பே என் இதயத்தையும் என் ஆத்மாவையும் கொலை செய்துவிட்டீர்கள். இன்று குழந்தை ஆசையால் என் வயிற்றைக் கிழிக்கச் செய்து என் உடலையும் கொலை செய்துவிட்டீர்கள். (சற்று நிறுத்தி) போகும்போது ஆண்டவனை வேண்டிக்கொள்கிறேன்: ஹிந்து ஜாதியில் நான் பிறக்கக் கூடாது, அப்படிப் பிறந்தாலும் பணக்காரக் குடும்பத்தில் பிறக்கக் கூடாது. பணக்காரக் குடும்பத்தில் பிறந்தாலும் பணக்காரவீட்டில் கலியாணம் ஆகக் கூடாது, இவை எல்லாம் நடந்துவிட்டாலும் எழுதப் படிக்கத் தெரிந்தவளாகவும் நாகரிகமும் பண்பாடும் உள்ளவளாகவும் இல்லாமல் குழந்தைபெறும் மெஷினாக மட்டும் இருக்க வேண்டும்; பெரும்பாலும் சீமான்கள் வீட்டுப் பெண்களின் நிலைமை என்னுடைய நிலைமை போலவே இருக்கிறது; கல்வியறிவும் நாகரிகமும் பண்பாடும் வாய்ந்தவளாக இருந்தால், மத, சமூக, குடும்பக் கட்டுப்பாடுகளை ஏற்காதவளாக இருக்கவேண்டும். பணக்காரக் கணவர்களான நீங்கள் எப்படிப் பெண்களாகிய எங்களைக் கொலை செய்து அந்தப் பிணங்களின் மீது தாண்டவம் செய்கிறீர்களோ, அதே போல உங்கள் உடல்களின் ரத்தத்தைப் பெருக்கி உங்கள் சடலங்கள்மீது நான் கூத்தாடவேண்டும். ஊழிக்கூத்து! (இரைப்பினால் சற்று நிறுத்தி) ஏழைகள் இன்பமாக இருக்கிறார்கள். அவர்களிடையே பெண்கள் நாள் முழுவதும் கூலிக் காரிகள் போல் நாள் முழுவதும் வீட்டு வேலைகள் செய்யவேண்டி யுள்ளது என்பது உண்மைதான். ஆனால் ஆண்பிள்ளைகளும் இப்படி டம்பாச்சாரிகளாய் வாழமுடியாது அல்லவா? அவர்களுக்குள் கணவ னுக்கும் மனைவிக்கும் இடையில் அன்பு, மாமனார் மாமியாருக்கு மரு மகளிடம் அன்பு,—சீமான்களான நீங்கள் ஆடுகிற கூத்துக்கு அங்கு ஒரு கால் இடம் இல்லாதிருக்கலாம். வாரிசு வேண்டுமே என்ற கவலை இருக்காது. என்னைப் போல யாராவது ஒருத்திக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டால் ஆஸ்பத்திரியில் குழந்தையைத்தான் சேதப்படுத்து வார்கள்; மாளிகையில் என் வயிற்றைக் கிழித்தார்களே, அம்மாதிரி அங்கு நடக்காது. (சற்று நிறுத்தி) ஆண்டவனிடம் இன்னொரு பிரார்த் தனை! என்னைப் போல் என் இடத்தில் யாரும் கொடிய ஆகுதி ஆகவே கூடாது. ஆகவேண்டுமானால் என் இடத்தில் வருகிறவள் மலராகவோ மொட்டாகவோ இருக்கக் கூடாது; வற்றி உலர்ந்த கல்வி வாசனையோ மரபின் மென்மையோ இல்லாத கிளையாக இருக்கவேண்டும். இது

சுடுகாடு, இங்கு சவங்களே தேவை. (சற்று நிறுத்தி நலிந்த குரலில்) உயிருள்ள மனிதர்கள் அல்ல. ஒவ்வொரு படத்திலும் லேட்டும் ஷேடும் இருக்கின்றன. ஆனால் என் வாழ்க்கைப் படத்தில் லேட்டின் அடையாளம் கூட இல்லை. அதற்குமேல் அதனுடைய எல்லா வண்ணங்களையும் அருவி போல் கொட்டும் என் கண்ணீர் கழுவிவிட்டது. நான் ஒன்றையும் பார்க்க முடியவில்லை, கேட்க முடியவில்லை, சொல்ல முடியவில்லை. என் கண்களும் காதுகளும் நாக்கும் எப்போதும் குளிர்ந்து கிடந்தன, பனிக்கட்டி போல் குளிர்ந்து—இல்லை, இல்லை, உயிரற்றன போல் செயலற்று. என் வாழ்க்கையின் மணி, நாள், மாதம், இல்லை—வருடம்... ஆம், வருடத்துக்குப்பின் வருடமாய் பயனற்ற பக்கங்களைப் போல் கிழித்துக் கிழித்து நான் எறிந்துவிட்டேன்; என்னுடைய இம்மாதிரி வாழ்க்கை உங்களுக்கு கேலிப்பொருளாக இருந்திருக்கிறது. ஒருவருடைய உள்ளத்து வேதனை மற்றொருவருக்கு கேலிப் பொருளானால்... அப்போது... அப்போது...

*[பூச்செண்டிலிருந்து ஒரு பூ விழுகிறது; கணவன் அதை எடுத்து மறுபடியும் செண்டில் வைக்கிறான்.]*

பெண்: (மிக வரண்ட புன்னகையால் நலிந்த குரலில்) வீழ்ந்த பூவை வேண்டுமானால் நீங்கள் திரும்பவும் செண்டில் வைக்கலாம்... இந்த வீழ்ந்துவிட்ட வாழ்க்கை...

*[தன் குரலைக் கேட்டுத் தானே அஞ்சியவள் போல் அவள் திடீரென்று பேசாதிருக்கிறாள். சில வினாடிகள் நிசப்தம்.]*

பெண்: (திடீரென்று கடுங்குரலில்) பாருங்கள்... பாருங்கள்... நான் போய்க்கொண்டிருக்கிறேன் போலிருக்கிறது. கேளுங்கள்... கேளுங்கள், போகும்போது சாபம்... ஆம், சாபம் தருகிறேன். உங்களுடைய வமிசம் வமிசமற்றுப் போகட்டும். இந்த ஜடத்தில் புதைவதற்காக ஓர் உயிரும் உற்பத்தி ஆகக் கூடாது. இந்தத் தங்கம், வெள்ளி, இந்த வைரங்கள், முத்துக்கள், இந்த உயிரற்ற ஆடம்பரம், இதயமோ, உணர்வுகளோ, ஆத்மாவோ அற்ற இந்த ஏற்பாடுகள் எல்லாம்... (மிகமிக நலிந்த குரலில்) எல்லாம்... எல்லாம் நடந்தும் நான் தருமம் பிசகாமல் பதிவிரதையாக... பதிவிரதையாக இருந்தது உண்மையானால்... என் சாபம்... சா...ப...ம்... சா...ம்...ப...ல்... சா...ம்...ப...ல்...சா...

*[பெண் கண்களை மூடிக்கொள்கிறாள். அதே சமயத்தில் தொட்டிலிலிருந்து அழுகை ஒலி வருகிறது. கலவரம் நிறைந்த முகத்தோடிருந்த கணவன் திடுக்கிட்டு விரைந்து எழுந்து, எங்கும் விழுந்துவிடாமல் இருப்பதற்காக ஒவ்வொரு பொருளையும் பற்றியவாறு, கதவைத் திறந்து கொண்டு வெளியே போகத் தொடங்குகிறான்.]*

## பின்பாதி

**பாத்திரங்கள் :**

ஒரு மனைவி

ஒரு கணவன்

**இடம் :**

ஒரு கிராமம்

[இடம் : மனைவியின் பிரசவ அறை]

[நேரம் : மாலை]

*(பிரசவ அறை, கிராம வீட்டில் ஒரு பெரிய அறை; ஆனால் மிகச் சுத்தமானது. சுவர்கள் வெள்ளைக் காரைமண் பூசிச் சுத்தமாயுள்ளன. அவற்றில் சிறு சிறு கதவுகளும் சிறு சிறு ஜன்னல்களும் இருக்கின்றன. எல்லாவற்றின் நிலைகளும் கதவுகளும் கிராமிய முறைப்படி செய்யப் பட்டவை; ஆனால், எண்ணெய் பூசியும் தண்ணீரால் கழுவியும் எல்லாம் சுத்தமாக வைக்கப்பட்டுள்ளன. எல்லாக் கதவுகளும் ஜன்னல்களும் மூடியுள்ளன. கூரையில் சாக்குகளைத் தைத்து அவற்றின் கீழ் வெள்ளைத் துணி கட்டப்பட்டுள்ளது. அதன் எல்லாப் பக்கங்களிலும் சிவப்புத் துணியில் கொசுவம் வைக்கப்பட்டுத் தொங்குகிறது. தரை சாணத்தால் மெழுகப்பட்டுள்ளது. தரைமீது மவுஞ்சிப்புல் கயிறால் நெய்த, சாதாரணப் பாதங்களுடைய ஒரு கட்டில் இருக்கிறது. அதன்மீது தூய்மையான படுக்கை விரிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டிலுக்கு அருகில் ஒரு பெரிய மரப் பலகைமீது பிரசவம் சம்பந்தமான சில சாமான்கள் வைக்கப்பட்டுள்ளன. மரப் பலகைக்கு அருகிலேயே ஒரு மண் கணப்புச் சட்டியில் கொஞ்சம் தணல் இருக்கிறது. கட்டிலுக்கு அண்டையில் தரைமீது சிவப்பு வண்ணத்தில் அச்சிட்ட ஒரு சிறு விரிப்பு விரிக்கப்பட்டுள்ளது; ஆனால், கட்டிலுக்கும் விரிப்புக்கும் நடுவில் ஒரு மஞ்சள் வரப்பு கட்டப்பட்டுள்ளது—விரிப்பில் உட்காருகிறவர்களுக்கு பிரசவ அறைத் தீட்டு பட்டுவிடாமல் இருப்பதற்காக. கட்டில்மீது ஒரு பெண்மணி படுத்திருக்கிறாள். ஒருக்களித்துப் படுத்திருப்பதால் அவளுடைய பார்வை விரிப்பின் பக்கம் இருக்கிறது. கழுத்துவரை அவள் உடம்பு, தூய்மையான செந்நிற 'ரஜாயி' (மெல்லிய மெத்தை) யால் போர்த்தப்பட்டுள்ளது. அவளுடைய முகமும் இரு தோள்களும் மட்டும் ரஜாயிக்கு வெளியே இருக்கின்றன. அவளுடைய முதுகுப் பக்கத்தில் மற்றொரு சிறு ரஜாயியால் மூடப்பட்டு, அவளுடைய புதிதாய்ப் பிறந்த சிசு தூங்குகிறது. ஆனால் அதனுடைய முழு உடம்பும் முகமும் ரஜாயியால் மூடுண்டிருப்பதால் அது தென்படவில்லை. பெண் மணியின் வயது சுமார் 30 இருக்கும். கோதுமை நிறம்; சாதாரணமான அழகி. விரிப்பின்மேல் ஓர் ஆடவன் அமர்ந்திருக்கிறான். அவனுக்குச் சுமார் 32-33 வயது இருக்கும். அவனும் கோதுமை நிறம், சகஜமான*

உயரம், உடலமைப்பு, சாதாரணமாய் அழகான ஆள். வெள்ளைப் பனியனும் வேட்டியும் அணிந்திருக்கிறன். கழுத்தில் சிவப்புச் சதுரத் துண்டு; ஆடைகள் மிகச் சுத்தமாக இருக்கின்றன. ஒரு பித்தளைக் குத்து விளக்கில் எரியும் திரிகளின் வெளிச்சத்தால் காட்சி தெரிகிறது—குறிப்பாக, ஆண்-பெண் இருவருடைய முகங்களும்—பெண்ணின் முகத்தோற்றத்தில் மிக மிகுதியான அன்பு புலப்படுகிறது; கண்ணீர் வழியும் விழிகள் திறந்திருப்பினும் அவள் ஏதோ கனவு காண்பது போலத் தோன்றுகிறது. அவள் ஆடவன் பக்கம் பார்வை செலுத்தி ஏதோ கூறிக்கொண்டிருக்கிறள். அவள் குரல் நலிந்திருப்பினும் அது கனத்திருக்கிறது; பொங்கும் கண்ணீரை அடக்குவதற்காகச் செய்யும் முயற்சியால் இந்தக் கனம். கண்ணீர்த்துளிகளை விழுங்க அவள் ஓயாமல் முயலுகிறள்; இந்த முயற்சியில் கண்கள், முகம், கழுத்து ஆகியவற்றுக்கு இடையில் விந்தையானதோர் இணைப்பு ஏற்பட்டுள்ளது. அவள் மெது மெதுவாய், ஆனல் ஒவ்வொரு சொல்லையும் அழுத்தி அவள் பேசும் விதத்தைப் பார்க்க, பேசுவதற்கு ஆற்றல்தரும் பேசுவதற்கான வலிமை, பேசுவதற்கான துணிச்சல் ஆகிய இரண்டும் நழுவிவிடக் கூடாதே என்று எண்ணுவதுபோல் இருக்கிறது. ஆடவன் முகத்தில் துயரமும் அச்சமும் ஆட்சி செய்கின்றன. அவன் ஒன்றும் பேசாமல் மிக மிகுதியான உணர்ச்சிகள் மண்டிய பார்வையால் பெண்மணியின் முகத்தை நோக்கிக்கொண்டிருக்கிறன். அவனுடைய இதயமே திரண்டு கண்களுக்கு வந்து விட்டனவோ என்னும்படி அவனுடைய பார்வை ஒளிருகிறது.)

பெண் : ஆம், இன்று கடைசி... கடைசி முறையாக நான் சொல்வதைக் கேட்டுவிடுங்கள், நாதா! யாரை நீங்கள் உயிரினும் அதிகமான அன்புடையவள் என்று சொல்வீர்களோ, யாருடைய உடலும் முகமும் சாதாரணத்திலும் சாதாரணமாக இருந்தும் உலகத்திலுள்ள எல்லாவற்றையும்விட அழகானவையாக உங்களுக்குத் தென்பட்டதோ, யாருடைய குரல் ஒரு சிறப்பும் இல்லாதிருந்தும் உங்களுக்கு உலகத்திலுள்ள எல்லா ஒலிகளும் இனிதாகத் தோன்றியதோ, அவள் பேசுவதை.

[கணவனின் கண்களில் கண்ணீர் ததும்புகிறது. அவன் கண்களைத் துடைத்துக்கொள்கிறன்.]

பெண் : இதென்ன... இதென்ன செய்கிறீர்கள், பிராணபதி. நீங்கள் இப்படித் துயரப்பட்டால் என் பேச்சு வேளைக்கு முன்பே நின்றுவிடும். ஒரு... ஒரு தடவை மறுபடியும் எல்லாவற்றையும் உங்களிடம் சொல்லித் தீர்த்துவிட வேண்டும் என்ற ஆசையும் மனத்துக்குள்ளேயே தங்கிவிடும். காதலர்கள் என்ற ஜீவன்கள்தானே

ஒரே கதையை, ஒரே நிகழ்ச்சியை, அதன் புதுமை குலையாமல் திரும்பத் திரும்ப சொல்ல முடியும். இப்பேர்ப்பட்ட... இப்பேர்ப்பட்ட வேளையிலோ... (மௌனமுற்று அச்சம் கொண்ட பார்வையால் கணவனின் பக்கம் பார்த்தவாறு சிறிது கழிந்தபிறகு) என்னுடைய கடைசி ஆசை நிறைவேற விடமாட்டீர்களா?

[கணவன் தொண்டையைச் சுத்தம் செய்து கொண்டு சற்று விறைப்பாக உட்காருகிறான்.]

பெண் : ஆம், இப்படித்தான்... இப்படியேதான், நாதா. இப்போது நீங்கள் வீரர் ஆகவேண்டும். எல்லாம் கேட்டுவிடுங்கள். நீங்கள் எப்போதும் என் ஆசைகளை எல்லாம் நிறைவேற்றி இருக்கிறீர்கள். இந்தக் கடைசி ஆசையும் தீர்த்துக்கொள்ள விடுங்கள். (சற்று நிறுத்தித் தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டே) பிராணநாதா, இன்று... இன்று பன்னிரண்டு ஆண்டுகளான ஒருயுகம். உங்களை அண்டியபிறகு கழிந்த அந்தக் காலம் எனக்கு முன்னால் சினிமாக் காட்சிகள் போலத் தோன்றிக்கொண்டிருக்கின்றன. பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு, மலையும், காடும், தோப்பும், தோட்டமும், வயலும், புதியபுதிய இலைகளையும், புதியபுதிய மலர்களையும், புதிதாய்த் தோன்றிய கனிகளையும் ஏந்திப் பசுமையாக இருந்த இதே வசந்த பருவத்தில் எனக்கு நிச்சய தார்த்தமும், சில நாட்களுக்குப் பிறகு உங்களோடு திருமணமும் நடந்தது. அக்கம்பக்கம் உள்ள கிராமங்களின் குடியானவர்களுக்கு இடையில் உங்கள் குடும்பம் பிரபலமானது. குடியானவ இளைஞர் களில் உங்களைப் போலப் படிப்பும் அழகும் யாருக்கும் இல்லை. என்னையும் ஏனோ எல்லாரும் அழகு என்றார்கள்.

[கணவன் வரண்ட புன்சிரிப்போடு தலையை அசைக்கிறான்.]

பெண் : (வரண்ட முறுவலுடன்) உங்களுடைய கண்களுக்கோ நான் இப்போது சொன்னேனே—உலகத்திலேயே எல்லாரையும்விட நானே அழகி. (சற்று நிறுத்தி) அம்மா மிகவும் செல்லமாய் வளர்த்து, நெஞ்ச மொட்டு எந்தவிதத்திலும் வாடாமல் பாதுகாத்தாள்; அப்பாவோ நாலாவது வகுப்பு வரை பள்ளிக்கூடத்தில் படிக்க வைத்தார். அதுமட்டும் அல்ல, அவர் பண்டிதர், அவரைப் போல் சமஸ்கிருதமும் மொழியும் அறிந்தவர்கள் வெகுதூரம் வரையில் யாரும் இல்லை. ஆகையால் அவரே வீட்டில் சமஸ்கிருதமும், மொழி இலக்கியமும் எனக்குக் கொஞ்சம் சொல்லித் தந்தார். சங்கீதமும் ஓரளவு கற்பித் திருந்தார்.

[கணவன் துண்டினால் தலையிலும் கழுத்திலும் உள்ள வேர்வையைத் துடைக்கிறான்: துண்டின் ஒரு நுனியால் காதுகளைச் சுத்தம் செய்கிறான்.]

பெண் : (அதே போன்ற வரண்ட புன்சிரிப்புடன்) காதுகளை விடுங்கள். என் குரல் உலகத்திலுள்ள எல்லாக் குரல்களிலும் இனிய தாக உங்களுக்குப் படுகிறது என்று சொன்னேனே. (சற்று நிறுத்தி) எவ்வளவோ ஆசைகளோடு என் பெற்றோர் என்னை உங்களிடம் ஒப் படைத்தார்கள். கன்யாதானத்தின்போது, தாமே பண்டிதராக இருந் ததால் அப்பா எவ்வளவு தெளிவாகவும், சங்கீதமயமாகவும் மந்திரங் களை உச்சரித்து தான சங்கற்பம் சொன்னார். நம் இருவரையும் ஒரு வருக்கொருவர் உள்ள கடமைகளைச் சொல்லும் பிரதிக்ஞைகளை எவ்வளவு உறுதியாகச் செய்வித்தார்... (சற்று நிறுத்தி) நாதா, அக்கினி சாட்சியாகச் செய்த அந்தப் பிரதிக்ஞைகளை நான் எந்த அளவு நிறைவேற்றினேன் என்று கூற முடியாது. ஆம், நீங்கள்... நீங்கள் ஒருவார்த்தை பிசகாமல் அவற்றை அப்படியே நிறைவேற்றினீர்கள்.

[கணவன் வலது கை நகங்களை இடது உள்ளங்கையில் தேய்க்கிறான். மனைவி மீது விசித்திரமான பார்வை செலுத்துகிறான்.]

பெண் : (அதே போன்று முறுவலித்து) என்னிடம் உங்களுக்கு ஒரு குறையும் தெரியவில்லையா? கடவுள் ஒருவரே குறையற்றவர் என்று நான் சொல்லும்போது நீங்கள் எப்போதும் சொல்லும் பதிலை நான் எப்போதாவது மறக்க முடியுமா? 'இன்னொரு குறையற்ற ஆளும் உண்டு' என்பீர்கள். சில சமயம், 'அது யார்?' என்று கேட்பேன். 'நீ' என் பீர்கள். நீங்கள் இப்படிக் கூறுவதாலேயே நான் அந்தக் கேள்வியே வெகுநாளாய்க் கேட்பதில்லை. (சற்று நிறுத்தி) இதய தெய்வமே, அந்த... அந்த... சங்கல்பத்தின்போது... அந்தப் பிரதிக்ஞைகளின் போது என் தோழிகள் பாடினார்களே, அந்தப் பாட்டு... அது என் காதுகளில் எத்தனையோ... எத்தனையோ தடவை ஒலித்துவிட்டது... முன்பு ஒலித்ததுபோலவே இன்றும்... இன்றும் அது ஒலிக்கிறது. (மறுபடியும் சற்று நிறுத்தி) நான்... நான் அப்போதுதான் முதன் முறையாக உங்களைப் பார்த்தேன்... முக்காட்டுக்குள்ளிருந்து, நான் பார்ப்பதை யாரும் பார்த்துவிடக் கூடாதே என்று கடைக் கண்களால்... அவசர அவசரமாகப் பார்த்தேன். தெளிவில்லாத, மங்கலான உங்கள் பார்வை பட்டு என் ரோமங்கள் எப்படிக் குத்திட்டு நின்றன, என் உள்ளத்தில் எவ்வளவு குறுகுறுப்பு உண்டாயிற்று? அந்த... அந்த நிகழ்ச்சி என் வாழ்க்கையின் ஒரு செல்வமாக... வற்றாத செல்வமாக இருந்து வருகிறது. (மறுபடியும் சற்று நிறுத்தி) விடைபெறும்போது, அம்மா, அப்பா, பிறந்த வீடு, அங்குள்ள சூழலை விட்டுப் பிரியக் கஷ்ட மாய்த்தான் இருந்தது. கண்களும் நிறையக் கண்ணீர் பெருகின. ஆனால், புறப்படும் சமயம் மாட்டு வண்டியில் உடையும் என் உள்ளத்

துக்கு அரிய ஆதரவு போல் நீங்கள் என் வலது பக்கம் வந்து உட்கார்ந்தீர்கள்... உங்கள் கிராமம், உங்கள் வீடு நெருங்கி வர வர, என் மனதில் ஒரு புதிய பூரிப்பு, ஒரு புதிய களிப்பு அலைமீது அலையாக மோதத் தொடங்கியது. எந்தக் கிராமத்தில், எந்த வீட்டில் நீங்கள் பிறந்தீர்களோ, பெரியவனாக வளர்க்கப்பட்டீர்களோ, கல்வி கற்றீர்களோ அந்தக் கிராமத்தையும் வீட்டையும் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஒரே ஆவலாயிருந்தது. மாமனாரை முன்பே பார்த்துவிட்டேன். அவரைப் பார்த்ததும் அவரிடம் மரியாதை நிறைந்த ஒரு பக்தி மனத்தின் ஒவ்வொரு மூலையிலும் நிறைந்தது. இப்போது மாமியாரைப் பார்க்க வேண்டும் என்று மனம் ஏங்கியது. (சற்று நிறுத்தி) உங்களுடைய கிராமம் இன்னும் எவ்வளவு தூரம் என்று உங்களைக் கேட்க வேண்டும் என்று அடிக்கடி ஆசைவரும். ஆனால், அதற்குமுன்பு உங்களோடு ஒருபோதும் பேசாததால் என் நாக்கு விறைத்துக்கொண்டு பேசாதிருந்துவிடும்... வண்டி ஒரு கிராமத்தின் பக்கம் திரும்பி மெதுவாய் போகத் தொடங்கியதும் உங்கள் கிராமமே வந்துவிட்டதை நான் உணர்ந்துவிட்டேன். அதே கிராமத்தில்தான் நீங்கள் பிறந்தீர்கள், பெரியவராய் வளர்ந்தீர்கள், படித்தீர்கள் என்ற எண்ணமே என் மனத்தில் நிறைந்தது. அக்கிராமத்தின் ஒவ்வொரு பொருளிலும் எவ்வளவோ அழகும் தூய்மையும் தோன்றத் தொடங்கியது. அதன் புழுதியின் பரமாணுவிலும், மரங்களின் இலைகளிலும்கூட, அழகும் தூய்மையும் ஜொலித்தன. உங்களுடைய வீட்டருகில் வந்து வண்டி நின்றதும், ஸ்திரீகள் இனிமையாகப் பாடி என்னை வரவேற்றதும், அந்தப் பாட்டினால் என் உள்ளத்தில் எப்படி உவகை நிறைந்தது! மாமியார் எனக்கு ஆரத்தி சுற்றி, தண்ணீர் தெளித்து, அவர் கால்களைத் தொட்டு வணங்கிய என்னை மார்புறத் தழுவிக்கொண்டபோது... எனக்கு... உண்டான சுகத்தையும் ஆனந்தத்தையும் நான் எப்போதாவது மறக்க முடியுமா?... மாமனாரைத் தரிசித்தபோது, மரியாதை நிறைந்த பக்தி பாவம் என் உள்ளத்தில் தோன்றி இருந்தது. மாமியாரின் பொருட்டு என் உள்ளத்தில் எழுந்த பாவனை பூசிக்கத்தக்கதுதான் எனினும் அதில் மரியாதை இல்லை. எந்த மார்போடு மாமியார் என்னைத் தழுவிக் கொண்டாரோ, அந்த மார்பு கடலைப்போலவும் வானத்தைப்போலவும் எல்லையற்றதாய்த் தோன்றியது. (சற்று நிறுத்தி) அப்பால்... அப்பால்... அன்றைக்கே... சாந்திமுகூர்த்தம்... அந்த சாந்தி...

*[கணவனின் கண்களில் மீண்டும் தண்ணீர் ததும்புகிறது.]*

பெண் : இல்லை, இல்லை... இல்லை, இல்லை. ஒரு கண்ணீர்த்துளி உங்கள் கண்ணிலிருந்து சிந்தினாலும் என் உயிர் நின்றுவிடும், என் கடைசி,... கடைசி ஆசை நிறைவேறாமல் போய்விடும். (சிறிது நிறுத்தி,

அச்சம் கொண்ட பார்வையால் கணவன் பக்கம் பார்த்துக்கொண்டே) சரி, விடுங்கள். சாந்திமுகூர்த்த இரவுபற்றி நான் பேசவில்லை; அது உங்களுக்குத் தெரியும். ஊமை இன்பம்போல் அதை மனத்தில் வைத்துக் கொண்டு மேலே செல்கிறேன். (மறுபடியும் நிறுத்தி) எந்த ஆசை களோடு வந்தேனே, அவை ஒவ்வொன்றும் பூர்த்தி ஆயின; பிராணேசா, அதுமட்டும் அல்ல. நான் நினைக்கவும் நினைக்காத புதிய புதிய இன்ப நினைவுகள் மனத்தில் தோன்றி நிறைவுபெறத் தொடங்கின. நான் பூசிக்கத்தகுந்த மாமியாரின் கண்மணி ஆகிவிட்டேன், பூசிக்கத் தகுந்த மாமனுருக்கு எல்லாம் ஆகிவிட்டேன். உங்களுடைய... உங்க ளுடைய... உங்களுடைய என்ன, என்ன ஆனேன் என்பதே தெரிய வில்லை...

[கணவன் கைமேல் கை போட்டுக்கொண்டு நெடுமூச்சு விடு கிறான்.]

பெண்: இந்த நீண்டமூச்சு... இந்த மூச்சு இப்... இப்போது என் மூச்சை வாங்கிவிடும்.

[கணவன் விறைப்பாக உட்காருகிறான்.]

பெண்: ஆம், அப்படித்தான், அப்படித்தான். இப்போது... தைரியமாக இருங்கள், இதயநிதியே. (சற்று நிறுத்தி) மாமியாருக்கு வயதாகிவிட்டது; ஆயினும் என்னை வீட்டு வேலைகள் செய்யவிடுவ தில்லை. மிகவும் கஷ்டப்பட்டு வீட்டுவேலைகளை அவரிடமிருந்து பறித்துக்கொண்டேன். நான் ஏதாவது... ஏதாவது வேலைசெய்தால் 'நாட்டுப்பெண் களைத்துப்போவாள், களைத்துப்போவாள்' என்பார். அவருடைய இனிய சொல்லைக்கேட்டு எனக்கு வேலையில் புதிய உற் சாகம் உண்டாகும். மாமனுர் வந்து நான் வேலை செய்வதைக் கண்டு விட்டால், 'வேளாவேளைக்குச் சாப்பிட்டு விளையாடிக்கொண்டிருக்க வேண்டிய நேரம், வேலை செய்கிற நேரம் அல்ல' என்பார். அதைக் கேட்க என்மீது புதிய... புதிய வாழ்க்கை மழை பொழிந்தாற்போல் இருக்கும். உங்... உங்களுக்கோ எந்நேரமும் என்னையே சுற்றிக் கொண்டிருக்கவேண்டும்; இரவில்மட்டும் அல்ல, பட்டப்பகலிலும்... நீங்கள் இளைஞர் ஆகிவிட்டீர்கள். குழந்தை அல்ல, ஆனால் குழந்தை களைப்போல் சீட்டி அடிப்பதும், மாமியாருக்குத் தெரியாமல் எனக்குக் கண்ஜாடை காட்டுவதும், கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து சந்து வழியாகப் பார்ப்பதும், அவற்றைத் தட்டியும், உங்கள் அறைக்கு வரும்படி என்னை அழைப்பதற்காக என்ன என்னவோ செய்வீர்கள். பலமுறை நானும் எப்படியாவது வந்துவிடுவேன். இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு நான் அவசரமாய்ப் புறப்பட்டால், முந்தா னையைப் பற்றிக்கொண்டு என் முகத்தைப் பரிதாபமாய்ப் பார்ப்

பீர்கள்... உங்களுடைய அந்தப் பார்வை... இணையற்ற அந்தப் பார்வை...

[கணவன் தலையைத் திருப்பி வேறுபக்கம் பார்க்கத் தொடங்கு கிறான்.]

பெண் : (அச்சத்தோடு) இப் பக்கம் பாருங்கள், பிராணேசா, இப்பக்கம்.

[கணவன் உடனே தலையைத் திருப்பி மனைவியின் பக்கம் பார்க்கத் தொடங்குகிறான். இன்னும் விறைப்பாக உட் கார்ந்துவிடுகிறான்.]

பெண் : நானே சொல்லிச் சொல்லி வீட்டு வேலைகளை உங்களைச் செய்யவைத்து மாமனாருக்கு ஓய்வுதரச் செய்தேன். உங்களுக்கும் எனக்கும் இப்படி வேலைகள் அதிகமானதால், நம்முடைய பிரிவு நேர மும் அதிகமாகி வந்தது. ஆனால் பிரிவுக்குப் பிறகு இரவு சந்திக்கும் போது, அந்தச் சந்திப்பு! நிலா உள்ள இரவுகளாக இருந்துவிட்டாலோ கேட்கவே வேண்டாம். நிலா இன்பத்தை முதலில் நம் அறையிலேயே நுகர்ந்தோம். அறையிலிருந்து வெளிவர நாணம் நம்மை எங்கே அனுமதித்தது! நாம் ஜன்னலைத் திறப்போம், சந்திரிகையின் ஒவ்வொரு கதிரும் நம் நெஞ்சங்களில் ஒவ்வொரு புதுப்புது வேட்கை அலையை எழுப்பியவாறு ஊடுருவிப் பாயும். அந்தக் கதிர்களின் ஆடலோடு, நம் நெஞ்சங்களில் உல்லாச அலைகளின் ஆடல்! (சற்று நிறுத்தி) சில நாளுக்குப்பின் நாம் வெளியிலும் சுற்றத் தொடங்கினோம். அப்போது சில சமயம் நீங்கள் பாடுவீர்கள், வற்புறுத்தி என்னைப் பாடவைப் பீர்கள். என் பாட்டைக் கேட்டு உங்கள் மனமயில் ஆடும் ஆட்டம்! நிலா மாதாமாதம் வருகிறது, ஆனால், ஊஞ்சல் வருடம் முழுவதிலும் ஒரே நாளுக்குத்தானே வருகிறது? கிராமத்தின் இப் பண்டிகைகள்! ஆவணிப் பாட்டும் ஹோலிக் கூத்தும்! அந்த இன்பங்களுக்கு எல்லாம் வழிபாட்டுக்குரிய தேவன் நீங்கள்...

[கணவன் திடீரென்று எழுந்து உலாவத் தொடங்குகிறான். தன் உடலே தனக்குச் சுமையானது போல் அவன் நடை இருக்கிறது. மனைவி பேசாமல் அவனைப் பார்த்துக்கொண் டிருக்கிறாள். ஏதோ சொல்ல அவள் வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிறாள் என்று அவள் முகத்தோற்றத்திலிருந்து தெரிகிறது. சிறிது நேரம் நிசப்தம்.]

பெண் : எனக்குத் தெரியும், பிராணநாதா, இன்று உங்களுக்கு நான் மிகவும் கஷ்டம் தருகிறேன், ஆனால்... ஆனால்... இன்று... இன்று நீங்கள் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். (சற்று நிறுத்தி) உட்காருங்கள், பிராணேசா! உட்காருங்கள் இதயச்செல்வமே.

[கணவன் மறுபடியும் மௌனமாக உட்கார்ந்துவிடுகிருன்; ஒரு கையால் மறு கைவிரல்களை முறுக்கத் தொடங்குகிருன்.]

பெண்: சுற்றியதோடு, உணவுக்கும் உடைக்கும் நமக்குக் குறை இல்லை. பசும்பால், எருமைத்தயிர், மோர், வெண்ணெய், நெய், கம்பு, சோளம், பார்லி, கோதுமை ரொட்டிகள், கடலைப்பருப்பு, பயத்தம் பருப்பு, உளுந்துத் துவையல், நம் தோட்டத்துப் பசுமையான புதிய புதிய காய்கறிகள். தை, மாசி மாதங்களின் கடலையும் கோதுமையும், ஐப்பசி, கார்த்திகையின் சோளமும், மக்காச் சோளமும் கொண்டு செய்த 'ஹோலா'க்கள். இந்த உணவோடு தடித்த, ஆனல் எளிய, தூயஆடை. அந்த ஆடைகளிலும் சில சமயம் எண்ணற்ற வண்ண ஜாலங்கள். ஆவணிமாதச் சுங்கடிப்புடவை, வசந்தகாலத்தில் வசந்தி ஆடை, தீபாவளியின்போது மாமியார் கைப்படத் தங்க நாடா தைத்துப் பள பளக்கும் கரையுள்ள சிவப்புச் சேலை. எந்த ஜமீன்தாராவது, லட்சாதி பதியாவது, கோடீசுவரனாவது நம்மைப் போல் இன்பம் அநுபவிப்பானா? (சற்று நிறுத்தி) நமக்குத் துயரமே உண்டாகவில்லை என்பதில்லை. சுகமும் துக்கமும் சக்கரம்போல் சுற்றிக்கொண்டே இருக்கும். ஆனல், துக்கசக்கரத்திலும் நம்முடைய அன்பு அச்சு நம்மைத் தாங்கிக் காத்துக் கொண்டிருந்தது. மாமியார் போனதும் வீடு முழுவதிலும் இருளடைந்துவிட்டதாய் எனக்குத் தோன்றியது. மாமனர் போனதும் உலகம் முழுவதும் இருளடைந்துவிட்டதாய் எனக்குத் தோன்றியது. விளைச்சல்கள் குறைந்தன; சில சமயம் பணக்கஷ்டம் வந்தது; ஆனல் எனக்கு நீங்கள்; உங்களுக்கு... உங்களுக்கு... (அவள் நிறுத்திவிடுகிருள்.)

[இப்போது கணவனல் கண்ணீரை அடக்க முடியவில்லை; ஆனல், சடுதியில் அவன் துடைத்துக்கொண்டு சமாளிக்க முயல்கிருன், கீழுதட்டைப் பற்களால் கடித்து. சிறிது நேரம் நிசப்தம்.]

பெண்: (மெல்ல மெல்ல) மாமியாருக்குப்பின் எனக்கும், மாமனருக்குப்பின் உங்களுக்கும் வீட்டு வேலைகள் மிகுந்துவிட்டன. பகலில் நமக்கு ஓய்வு கிடைப்பதில்லை; ஆனல் இரவோ நம்முடையது. பகலில்... பகலில்கூட.... விடிகாலை நீங்கள் வயலுக்குப் போய் விடுவீர்கள் என்பது மெய்தான். ஆனல் உங்கள் நினைவாகவே எல்லா வற்றையும் செய்வேன். பால் கறக்கும்போது பசுக்கள், எருமைகளின் உடலிலிருந்து சுரக்கும் ஒவ்வொரு பால் தாரையிலும் உங்களுடைய அன்புத் தாரையே புலப்படும். பால் பாத்திரத்தில் விழும் ஒலியில் உங்களுடைய காதலின் ஓசையே கேட்கும். தயிர் கடையும்போது மத்திலிருந்து வெளிப்படும் வெண்ணெயில் உங்களுடைய அன்பின் மிருதுவே தென்படும். மாவு பிசையும்போதும், பருப்புக் கடையும்

போதும், திரிகையின் மிகக் கோரமான சத்தத்திலும், மேக முழக்கத்தின்போதும் எனக்கு உங்கள் காதல் தழுவல் நினைவு வரும். ரொட்டி தட்டும்போதும், அது பூரிக்கும்போதும் எனக்கு வசந்தகால மலர்களின் மலர்ச்சியும், அப்போது நீங்கள் இடும் முத்தமும் நினைவு வரும். பாத்திரம் தேய்ப்பதிலும் எனக்குச் சுகம்; ஏனெனில், தேய்த்துப் பளிச்சிடும் பாத்திரங்களில் உங்களுக்காகத்தான் உணவு சமைப்பேன் என்பதை நான் மறந்தால்தானே? அந்தப் பாத்திரங்களில் உணவாக்கி, தட்டுகளில் வைத்து, பால் வெண்ணெயோடு அவற்றை எடுத்துக் கொண்டு உங்களுக்கு ஊட்டுவதற்காக வரும்போது... நீங்கள் அதைச் சாப்பிடுவதைப் பார்க்கும்போது... அப்போது உங்களுடைய அன்புத் தோற்றத்தைத் தரிசிக்கும்போது... என் பிறவி முழுவதன் பயனை அடைந்துவிட்டதாய்த் தோன்றும். (சற்று நிறுத்தி) மாலையில் அவசர அவசரமாய் உங்களுடைய அறையைக் கூட்டுவேன். விளக்குமாற்றின் ஜர்ஜர் ஒலி என் நெஞ்சில் காதலின் ஜல்ஜல் ஒலி எழுப்பும். வயல் மண்ணில் அளைந்த உங்கள் கால்களைக் கழுவிய பின், மறுபடியும் உங்கள் கால்களில் தூசி படக்கூடாது என்பதுதான் அந்த அறை மிக மிகச் சுத்தமாக இருப்பதற்குக் காரணம். இரவு... இரவில் என் சோர்ந்த கைகளால் உங்கள் சோர்ந்த பாதங்களை வருடும்போது, என் கைகளுக்குச் சோர்வு ஏற்படுவது ஒருபுறம் இருக்கட்டும்; நாள் முழுவதன் களைப்பும் எங்கோ போய்விடும். அந்த... அந்த...

[கணவன் மீண்டும் திடீரென்று எழுந்து ஏதோ போதைப் பொருளைச் சாப்பிட்டவன்போல் வேகம் வேகமாக உலாவ ஆரம்பிக்கிறான். அவன் அடிக்கடி கண்களைத் துடைக்கிறான். அவனுடைய முக நிறம் ஒவ்வொரு நொடியும் ஒளியும் இருளுமாக மாறிக்கொண்டிருக்கிறது.]

பெண் : (மென்குரலில்) இனி அதிக நேரம்... அதிக நேரம் கஷ்டம் தர மாட்டேன், பிராணேசா! காய்ச்சலும் ஏறிக்கொண்டிருக்கிறது.

[கணவன் திடுக்கிட்டு நின்று மனைவியின் பக்கம் பார்க்கிறான்.]

பெண் : (நலிந்த குரலில்) உயிரினும் இனியவரே, உட்காருங்கள்... இன்னும் சில வார்த்தை... வார்த்தை மட்டும் கேட்டுவிடுங்கள்.

[கணவன் உட்கார்ந்து இரு கைகளாலும் வலுவாய் நெஞ்சை அமுக்கிப் பிடித்துக்கொள்கிறான்—அது உடலை விடுத்து ஓடி விடப் போவதுபோல்.]

பெண் : நம் இருவரையும் சிலர் ஆண்பொம்மை, பெண்பொம்மை என்றார்கள். சிலர் ஆண்குழந்தை, பெண்குழந்தை என்றார்கள். ஏன் சொல்லமாட்டார்கள்?... எந்த வயதில் குழந்தைகளின் எளிமையும் கபடமின்மையும் தூய்மையும் போய்விடுகின்றனவோ,

காதலின் காரணமாக அந்த வயது நமக்குப் போகவே இல்லை. எதுவரையிலும் நம் இருவரின் சம்பந்தமும் இருக்கிறதோ அது வரையிலும் நமக்கு சாந்திமுகூர்த்த இரவன்று முதன்முதலில் சேர்ந்தோமே அந்தச் சேர்க்கையின்போது இருந்தது போலவேதான் இருக்கும். நாம் ஒருவருக்கொருவர் புது மணமகன், புது மணமகள் போலவே இருக்கிறோம். (மெள்ளமெள்ள) சொல்வதற்கு இன்னும் எவ்வளவோ இருக்கிறது. பன்னிரண்டு வருடங்களில் நம் பேச்சு எப்போதாவது முடிந்திருக்கிறதா? ஒருவேளை இந்தக் கதை முடிவு பெருதோ என்னவோ. ஆனால்... நேரம்... நேரம் அதிகம் இல்லையோ என்னவோ. (சற்று நிறுத்தி) ஒரு வருத்தம் இருந்துவிட்டது, நாதா. மாமியார் மாமனருக்கு ஒரு மகிழ்ச்சி தரமுடியவில்லை. அவர்களுக்குப் பேரனைப் பார்க்க வேண்டும் என்று மிகவும் ஆசை. அதன் மழலையையும் ஆரவாரத்தையும் கேட்டு இன்புற வேண்டும்; அதனுடைய தூசிபடிந்த கால்களால் தங்கள் துணியை அழுக்காக்கிக்கொள்ள வேண்டும்; தங்களுடைய மடியை நிரப்பிக்கொள்ள வேண்டும் என்று ஒரே ஆவலாக இருந்தார்கள். எனக்கும் தாயாக வேண்டும் என்ற ஏக்கம் நாளுக்குநாள் மிகுந்து வந்தது. மாமியார் எத்தனையோ பிரார்த்தனைகள் செய்துகொண்டார். என் உடலில் எத்தனையோ தாயத்துக்கள் கட்டினார். மாமனர் எத்தனையோ அனுஷ்டானங்கள் செய்வித்தார். அவர்களுடைய எண்ணம் நிறைவேருததால் நான் வருத்தப்படுகிறேன் என்று கண்டதும் அவர்கள் இந்தப் பேச்சையே நிறுத்திவிட்டார்கள். அதுமட்டும் அல்ல. மாமியார் ஏதேதோ சொல்லி என்னை மகிழ்விக்கத் தொடங்கினார்... அவருடைய ஆசை இப்போது பூர்த்தி ஆயிற்று. அவர்கள் புண்ணியாத்மாக்கள்; சொர்க்கத்தில் இருப்பார்கள். அங்கே அவர்களுக்கு ஆனந்தம் உண்டாக்கி இருக்கும். (சற்று நிறுத்தி) எனக்கு... உங்களுடைய இந்த அமிசத்தை வயிற்றில் ஏற்றுக்கொண்டதால் ஏற்பட்ட இன்பத்தை, அதிகமாகும் சுமையால் எனக்கு ஏற்பட்ட ஆனந்தத்தை, நான் எப்படி வார்த்தைகளால் சொல்வேன். தாயாகப்போகும் எண்ணங்கள் எனக்கு உண்டாக்கிய களிப்பையும், என் மனத்தில் உண்டாக்கிய உற்சாகத்தையும் என்னல் வருணிக்கவும் முடியாது... இவன் என் வயிற்றில் துள்ளத் தொடங்கியதும் உலகத்தின் உணர்வு முழுவதும் என்னுள் துள்ளுவதுபோலத் தோன்றியது. இவன் புரளத் தொடங்கியதும் மூவுலகங்களும் என் வயிற்றுள் புரளுவதாய்த் தோன்றியது. பிரசவ வேதனையின்போது ஒருபுறம் எனக்கு வலித்தாலும், மறுபுறம் மனத்தில் மகிழ்ச்சி அலைமோதியது.

இவனுடைய முகத்தைப் பார்த்து... இவன் உங்களைப்போல் இருப்பதைக் கண்டு... (அவளுக்குக் கண்ணீர் பெருகுகிறது.)

[கணவனுக்கும் தாரைதாரையாய்க் கண்ணீர் பெருகுகிறது. அவன் இரு கைகளாலும் வலது முழங்காலை பலமாகப் பற்றிக்கொண்டிருக்கிறான். சிறிது நேரம் நிசப்தம் நிலவுகிறது.]

பெண்: (மிகமிக நலிந்த குரலில்) எனக்குச் சிகிச்சை செய்வதில் என்ன குறை வைத்தீர்கள், பிராணநாதா? டாக்டர்களாலும் வைத்தியர்களாலும் ஹகீம்களாலும் வீட்டை நிரப்பிவிட்டீர்கள். ஆனால்... ஆனால் ஒருவர் போகிற வேளை வந்துவிட்டால் யாரால்தான் தடை செய்ய முடியும்?... எல்லாரும் போக வேண்டியவர்கள்தானே, பிராணபதி? பழுத்த பிறகு சிலர் போகிறார்கள்; காயாகவே சிலர் போகிறார்கள்; சிலர் விரைவாகப் போகிறார்கள்; சிலர் மெதுவாக. இளம் வயதிலேயே போய்விடுவதைப் பற்றி எனக்குச் சந்தோஷம் தான். (யோசித்தவாறு) நெஞ்சு உலர்ந்து போய், நாக்கும் கண்களும் ஏமாற்றத் தொடங்குவதற்கு முன்பே மனிதன் இந்தத் தீயவுலகத்திலிருந்து போய்விடுகிறான் என்பதால் இளம் வயதில் சாவு நல்லது என்கிறேன். போவதைப்பற்றி எனக்கு வருத்தம் இல்லை; உங்களைப் பிரிய வேண்டுமே என்றுதான் வருத்தம். நான் சுமங்கலியாகவே போகிறேன்... போகும்போது பிரார்த்தனை செய்துகொள்கிறேன். எனக்கு ஒவ்வொரு பிறவியிலும் உங்களைப் போன்ற கணவர், உங்கள் பெற்றோரைப் போன்ற மாமியார் மாமனார், உங்கள் வீட்டைப் போன்ற வீடே எனக்கு வாய்க்கவேண்டும். இன்னும்... இன்னும்... நெஞ்சின் செல்வமே, உங்களிடம்... உங்களிடம்... ஒரு வரம் யாசிக்கிறேன். நீங்கள்... அதை... அதைத் தராவிட்டால், எந்த இன்பத்தோடு உங்களோடு இருந்தேனோ, அந்த இன்பத்தோடு நான் போக முடியாது.

[கணவன் அழுதவாறே மனைவியின் பக்கம் பார்க்கிறான்; தலையைத் தன் இரு கைகளிலும் தாங்கிக்கொள்கிறான்]

பெண்: வரம் தாருங்கள், நாதா. வீட்டை வெறுமையாக வைத்துக் கொள்ளக் கூடாது. வாழ்க்கையை நீங்கள் தனியே கழிக்கக்கூடாது இந்தக் குழந்தையைத் தாயற்ற குழந்தை ஆக்கிவிடாதீர்கள்... சொர்க்கத்திற்குப் போகிறேன், இதயத்தெய்வமே, சொர்க்கத்திற்கு. நரகம் எதற்குப் போவேன்? சொர்க்கத்திலிருந்து உங்களுடைய திருமணத்தைப் பார்ப்பேன். அதைப் பார்த்து எனக்கும், என் மாமியார் மாமனாருக்கும் உண்டாகும் இன்பத்தை நீங்கள் கற்பனையும் செய்ய முடியாது. 32-35 வயதில் துறவு மேற்கொள்ள முடியாது. சாத்திரம் 75 வயதில் வானப்

பிரஸ்தம் மேற்கொள்ளும்படி கட்டளை இடுகிறது. (தன்னுடன் தானே பேசிக்கொள்வதுபோல் மிக மிக நலிந்த குரலில் பேசுகிறுள். சற்று நிறுத்தி) நீங்கள் தனியாக... தனியாக இருந்தால் எனக்கு... சொர்க்கத்திலும் உங்கள் கவலையாகவே இருக்கும்... யார் உங்களுக்கு... உணவு ஊட்டுவார்கள்... உங்களுக்கு வயலுக்கு யார் உணவு கொண்டு போவார்கள்? யார் இரவில்... உங்கள்... கால்களை வருடுவார்கள்? (மூடிக்கொள்ளும் கண்களைத் திறந்து வைத்துக்கொள்ள முயன்று கொண்டே) யார்... யார் ...இ...ந்...தக்... குழந்தையை...வ...ள...ர்...ப் ...பா...ர்...க...ள்...வ...ர...ம்...வ...

[மனைவியின் கண்கள் மூடிக்கொள்கின்றன. மூச்சு முற்றிலும் விரைவுபட்டுத் தடைபடுவது போல் இருக்கிறது. கணவன் விரைந்தெழுந்து அந்த மஞ்சள் வரப்பைத் தாண்டி, மனைவியின் கட்டிலை நெருங்கி, அவளைக் கூர்ந்து பார்த்துத் தேம்பித் தேம்பி அழுதவாறு அவளுடைய உடலைக் கட்டிக் கொள்கிறுன். அதே சமயத்தில் அவனுடைய அழுகைக்குத் துணையாகச் சேருகிறது புதிதாய்ப் பிறந்த சிசு.)

(திரை)

# துவாலைகள்

—உபேந்திரநாத் ‘அஷ்க்’

## பாத்திரங்கள் :

வசந்தன்

மது

சுரோ

சிந்தி

மங்களா

[இடம் : புது தில்லி]

(வசந்தனின் டிராயிங் ரூமில் திரை எழுகிறது. டிராயிங் ரூம் பெரிதும் அல்ல, சிறிதும் அல்ல, மிகுதியாக அலங்கரிக்கப்பட்டதும் அல்ல. வசந்தனுக்கு மாதம் இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம்; ஆனால் புது தில்லியில் இருநூற்றைம்பது...ஆயினும் அவன் கம்பெனியின் மானேஜர் ஆகையால் டெலிபோன் வைக்கப்பட்டுள்ளது; ஆகையால் அறையும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இடது சுவரை ஒட்டினாற்போல் ஒரு மேஜை, அதன்மீது கடிதங்களைத்தவிர, டெலிபோனும் இருக்கிறது.

மேஜைக்கு இப்பால் ஒரு கதவு; அது உள்ளறைக்குச் செல்கிறது. மேஜைக்கு அந்தப்பக்கம் ஒரு மூலையில் ஒரு கணப்பு இருக்கிறது; ஆனால் அது இப்போது எரியவில்லை என்று தெரிகிறது. ஏனெனில், அதன்மேல் அழகிய துணி விரிக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது அலங்காரப் பொருள்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. நடுத்தர வர்க்க வீடுகளில் இருப்பது போல்—ஆனால் சிதறியிராமல் ஒழுங்காய் அடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு பித்தளை பூ தாங்கிகள்—மற்றப் பொருள்களின்றி—கணப்பின் இரு கோடிகளிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. கணப்பின்மேல் விரிக்கப் பட்டுள்ள துணியின் விளிம்பைத் தொட்டாற்போல் ஒரு ரேடியோசெட், கீழே ஒரு சிறிய மேஜைமேல் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் மேஜை விரிப்பின் டிசைன் கணப்புத்துணியுடன் 'மாட்ச்' ஆகி, மதுவின் நல்ல சுவையைக் காட்டுகிறது.

கணப்புக்குமேல் சுவர்மீது காலண்டர் ஒன்று தொங்குகிறது—மேஜையில் உட்காரும் ஆளுக்கு நேர் எதிரில். காலண்டரை ஒரு பார்வை இட்டால் நவம்பர் மாதம் என்று தெரிகிறது.

கணப்பை அடுத்தாற்போல் ஒரு கதவு. அது சமையலறைக்குப் போகிறது.

இந்தக் கதவிலிருந்து சற்று எட்டி எதிர்ச்சுவரோடு ஒட்டினாற்போல ஒரு பிரம்பு 'கௌச்'. இதற்குப் பக்கத்தில் ஒரு முக்காலி. கௌச்சின் திண்டுகள் அழகாகவும் நற்சுவை நிறைந்தவையாகவும் இருக்கின்றன. முக்காலிப் போர்வை கணப்புத் துணிக்கு 'மாட்சாக' இருக்கிறது.

எதிரில், சுவரின் இடதுபக்கம், கௌச்சிலிருந்து சற்று எட்டி ஒரு கதவு; குளியலறைக்குப் போகும் வழி அது.

இடது சுவரை ஒட்டி அலங்கார மேஜை இருக்கிறது. அதை வசந்தன், மது இருவருமே தங்கள் டாய்லட் பணிக்குப் பயன்படுத்துகிறார்கள்.

இதற்குமேல் கொடிகளில் துவாலைகள் தொங்குகின்றன. மேஜையின் இருபுறங்களிலும் இரண்டொரு நாற்காலிகள் கிடக்கின்றன.

வலது சுவருக்கு இப்பக்கம் ஒரு கதவு; அது வெளியே போகும் வழி.

திரை உயரும்போது வசந்தன் அலங்கார மேஜைமுன் உட்கார்ந்து முகச்சவரம் செய்துகொள்வதைக் காண்கிறோம். உண்மையில் சவரம் முடிந்து விட்டது. துவாலையால் முகத்தைத் துடைத்துக்கொள்கிறான். அதே நேரத்தில் சமையலறைக் கதவு வழியாக ஸ்வெட்டர் பின்னியவாறு மது நுழைகிறாள்.)

மது : மறுபடியும் நீங்கள் மதனின் துவாலையை எடுத்துக்கொண்டு விட்டீர்களா! நான் சொல்லுகிறேன், நீங்கள்...

வசந்தன் : (முகம் துடைத்துக்கொண்டிருந்ததை நிறுத்தி) ஓ! இந்தப் போக்கிரித் துவாலைகள்! எனக்கு கவனமே இருப்பதில்லை! விஷயம் என்ன தெரியுமா? (சிரிக்கிறான்) மதனின் துவாலையும் சின்னது, சவர...

மது : (சினமுற்று) சவரத் துவாலையும் அதுபோலவே இருக்கிறது. கொஞ்சம் கண்ணைத் திறந்து பாருங்கள், சவரத்துவாலைகள் எவ்வளவு நிறமாயிருக்கின்றன; அவற்றில் எத்தனை கோடுகள் இருக்கின்றன; ஆனால் மதனின் துவாலைகள் ரொம்ப சாதாரணம்...

வசந்தன் : ஆனால், ஒரே சிடுக்காக...

மது : (கேலியாக) இரண்டும்தான் அப்படி இருக்கின்றன. கண்ணை மூடிக்கொண்டு இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை யாரும் சொல்ல முடியும். நான் சொல்லுகிறேன்...

வசந்தன் : (மறுமொழியற்று) நிஜமாக என் கவனம் வேறு எங்கோ இருந்தது. கொண்டு வா, சவரத் துவாலையை என்னிடம் கொடு. எங்கே இருக்கிறது, எனக்குத் தெரியவில்லையே.

மது : (கொடியில் தொங்கும் துவாலையை எடுத்து) இதோ எதிரிலேயே தொங்குகிறது. இருந்தும்...

வசந்தன் : கண்ணாடியை எடுத்துவிட்டேன் அல்லவா; கண்ணாடி இல்லாவிட்டால் நம் உலகம் எப்படி என்று உனக்குத் தெரியுமே—

[வெட்கச் சிரிப்பு சிரிக்கிறான்]

மது : நீங்களும் உங்கள் உலகமும்! நீங்கள் எந்த உலகத்தில் இருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. இப்போது கண்ணாடி இல்லை! கண்ணாடி இருந்துவிட்டால் மட்டும் உங்களுக்கு என்ன தெரிந்துவிடுகிறது—

[முகத்தைத் தூக்கிக்கொண்டு சௌளச்சில் தொப்பென்று விழுந்து ஸ்வெட்டர் பின்னத் தொடங்குகிறாள். வசந்தன் சவரக்கருவிகளை எடுத்து வைக்கிறான்; பிறகு திடீரென்று அவள் பக்கம் பார்த்து]

வசந்தன் : மறுபடியும் முகத்தைத் தூக்கிக்கொண்டுவிட்டாயே. கோபம் வந்துவிட்டதா?

மது : (கேலியாகச் சிரித்து) எனக்குக் கோபம் இல்லை.

வசந்தன் : இதைக்கூடப் புரிந்துகொள்ள முடியாத அவ்வளவு முட்டாள் நான் என்று உன் எண்ணமா?

மது : (அது போலவே சிரித்து) நான் எப்போது சொன்னேன்?

வசந்தன் : (சவரச் சாமான்களை அப்படியே போட்டுவிட்டு, நாற்காலியை அவள் பக்கம் திருப்பி) உணர்ச்சிகளை மறைத்துக் கொள்ளும் திறமை உனக்குக் கிடையாது என்று உன்னிடம் எத்தனையோ தடவை சொல்லிவிட்டேன். உன் அலட்சியம், உன் கோபம், உன் உணர்ச்சிகள் எல்லாமே உன் தோற்றத்தில் பிரதிபலிக்கின்றன. என் பழக்கங்கள் உனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் நான் உன்னிட மிருந்து எதையும் ஒளிக்கவில்லை. என்னைப்பற்றி, என் சுபாவத்தைப் பற்றி, எல்லாம் உன்னிடம் சொல்லிவிட்டேன். நான் என் எல்லா கார்டுகளையும்...

மது : மேஜைமீது வைத்துவிட்டீர்கள். (அதேபோல் கேலியாகச் சிரித்து) நான் இல்லை என்கிறேனா?

வசந்தன் : உன்னுடைய இந்தச் சிரிப்பு நச்சுச் சிரிப்பு! இதே மாதிரி விஷம் கக்கிக் கக்கித்தான் உன் உடம்பையே கெடுத்துக்கொண்டு விட்டாய்?

மது : (மௌனமாயிருக்கிறாள்.)

வசந்தன் : நானும் சுத்தத்தை மிகவும் ஆதரிப்பவன் என்று உனக்கு எப்படித்தான் நம்பிக்கை உண்டாக்குவது?

மது : (சிரிக்கிறாள்) இதில் என்ன சந்தேகம்?

வசந்தன் : எனக்கு அழுக்கு என்றாலே பிடிக்காது.

மது : (மறுபடியும் சிரிக்கிறாள்.)

வசந்தன் : ஆனால், நான் உன்னைப்போல் 'அரிஸ்டோக்ராடிக்' சூழ் நிலையில் வளரவில்லை. எனக்குத் தளுக்காயிருக்க வராது. எங்கள் வீட்டில் ஒரே ஒரு துவாலை இருக்கும். அதை ஆறு அண்ணன் தம்பி களும் உபயோகிப்போம்.

மது : 'அரிஸ்டோகிராட்' என்று நீங்கள் என்னைப் பரிகாசம் செய் கிறீர்கள். பத்து, பத்துத் துவாலைகள் வேண்டும் என்று நான் எப்போதாவது சொன்னேனா?

வசந்தன் : பத்துத் துவாலை வேறு எப்படி வரும்? குளிப்பதற்குத் தனி, சவரத்துக்குத் தனி, கையும் முகமும் துடைத்துக்கொள்வதற்குத் தனி, உனக்கு, உன் மதனுக்கு...

மது: (மாறி உட்கார்ந்து) அதில் என்ன தப்பு என்கிறேன்? நம்மால் வாங்க முடியும் என்கிறபோது பத்து பத்துத் துவாலைகள் வைத்துக் கொள்வோமே. நாளைக்கு — அப்படி நேராமல் பகவான் காப்பாற்றட்டும்! — நமக்கு வாங்குகிற தகுதி இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள், ஏழ்மையிலும் தூய்மையாக இருப்பது எப்படி என்கிறதை நான் உங்களுக்குக் காட்டுகிறேன் — துவாலைகளே வேண்டாமே, காதித் துவாலையே இருக்கட்டும், பழைய கிழிந்த அங்க வஸ்திரம் அல்லது வேட்டித் துண்டாக இருக்கட்டும், எதையாவது வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஒருவர் உடம்பைத் துடைத்துக் கொண்டபின் அதே துண்டால் இன்னொருத்தர் எப்படி உடம்பைத் துவட்டிக்கொள்ள முடியும்?

வசந்தன்: நாங்கள் ஆறு அண்ணன் தம்பிகள் ஒரே துவாலையால் உடம்பைத் துவட்டிக்கொள்வோம் என்று சொன்னேனே.

மது: அதனால் வியாதி...

வசந்தன்: எங்களில் யாருக்கும் எந்த வியாதியும் வரவில்லை.

மது: ஆனால், தோல்வியாதி...

வசந்தன்: உனக்கு மதனுக்கும் வியாதி ஒன்றும் இல்லை... வியாதி இப்படி எல்லாம் வந்துவிடுவதில்லை. பலவீனத்தால் வியாதி வருகிறது. நம் உடம்பில் நோயை எதிர்க்கும் உயிரணுக்கள் குறைந்தால், வியாதி வரும். சூஹா சைதன்ஷா விஷயம் உனக்குத் தெரியுமா?

மது: சூஹா சைதன்ஷா...

வசந்தன்: வேட்டையாடுவதற்காகச் சில ஆபீசர்கள் சூஹா சைதன்ஷா போனார்கள். அவர்களில் அமெரிக்கா ராக்ஃபெலர் டிரஸ்ட்டின் சில டாக்டர்களும் இருந்தார்கள். லஞ்ச் நேரத்தில் அவர்களுக்குத் தண்ணீர் வேண்டியிருந்தது. கிராமத்தில் கிணறு இல்லை என்று பியூன் சொல்லிவிட்டான்; அவ்வூரில் எல்லாரும் குட்டை நீரே குடிப்பதாய்ச் சொன்னான். டாக்டர்களுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை, ஏனென்றால், குட்டை நீர் ஒரே சேறாயிருந்தது. இருக்கிற நோய்களை எல்லாம் உண்டுபண்ணும் புழுக்கள் எல்லாம் குட்டையில் இருந்தன; ஆனால் சூஹா சைதன்ஷாவின் ஜாட்[1]களோ நல்ல பலசாலிகளாய்க் கொழுகொழுவென்று...

மது: அப்படியானால் நாமும் குட்டை ஜலம் குடிக்க ஆரம்பிக்கலாம் என்கிறீர்களா? (சிரிக்கிறாள்.)

வசந்தன்: (எழுந்து அறையில் நடமாடிக்கொண்டே) நீ இந்த விஷயத்தின்மேல் உன் நச்சுச் சிரிப்பை வீசலாம். (அவளுக்கு எதிரில்

---

1 ஒரு ஜாதிப் பெயர்—'ஜாட்' சமூகத்தவர்.

நின்று) ஆனால், அமெரிக்க டாக்டர்கள் அங்கேயே இருந்தார்கள் என்பதை நீ தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் ஒரு ஜாட்டின் ரத்தத்தைச் சோதனை செய்தார்கள். அதில் நோயை எதிர்க்கும் சிவப்பு உயிரணுக்கள், நோய்க்கு உதவுகிற வெள்ளை உயிரணுக்களைவிட மிக ஏராளமாக இருப்பதை அவர்கள் கண்டார்கள். பிறகு அவர்கள் அங்குள்ள ஜனங்களின் உணவை ஆராய்ச்சி செய்தார்கள். அவர்கள் தயிரும் மோரும் அதிகமாய் உபயோகிக்கிறார்கள் என்று தெரிந்தது. தயிரில் பல நோய்களின் புழு அணுக்களைக் கொல்லும் சக்தி இருக்கிறது. நோயை எதிர்க்கும் சக்தி இந்தத் தனுக்கு மினுக்கில் இல்லை: ஆனால், வியாதியின் தாக்குதலை எதிர்க்கிற சக்தியை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். (மறுபடியும் உலாவத் தொடங்குகிறான்.)

மது : ரூஹா சைதன்ஷா விஷயத்தைக் கேட்டுக்கொண்டேன். அழுக்குத் துவாலைகளால் உடம்பில் சிவப்பு உயிரணுக்கள் பரவுமா, வெள்ளை உயிரணுக்கள் பரவுமா என்பதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. குழந்தைப் பருவத்திலிருந்தே எனக்குச் சுத்தம் பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். மாமா...

வசந்தன் : (மேஜை நுனியைப் பற்றிக்கொண்டு) நீ மறுபடியும் உங்கள் மாமாவையும் சிற்றப்பாவையும் பற்றிக் கதை சொல்ல ஆரம்பித்துவிட்டாய். அவர்கள் வெளிநாடு போய் வந்தவர்கள்தான், ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதற்காக அவர்கள் சொல்வது எல்லாம் வேத வாக்கியம் என்று அர்த்தமில்லை. அன்றைக்கு உங்கள் சிற்றப்பா வந்திருந்தார். அவர் கைகளைக் கழுவிய பிறகு, நான் மறதியாகத் துவாலையை நீட்டிவிட்டேன். (மதுவை நெருங்கிப் போய்) அவர் பல்லை இளித்தார். (குரலை நகல் செய்து) –'நான் இன்னொருத்தர் துவாலையால் கையைத் துடைத்துக்கொள்வதில்லை'. —அவர் தம் கைக்குட்டையால் கையைத் துடைத்துக்கொள்ள ஆரம்பித்தார். துவாலையால் கை துடைத்துக்கொண்டிருந்தால் அவருக்கு என்ன வியாதி வந்திருக்கும் என்று நான் கேட்கிறேன்.

மது : இப்போது இது...

வசந்தன் : உங்கள் மாமா இருக்கிறாரே... (திரும்பிப்போய் மறுபடியும் மேஜைமீது உட்கார்ந்துவிடுகிறான்.) நீ போனபிறகு நான் ஒரு நாள் அவர் வீட்டுக்குப் போனேன். இரவு அங்கேயே தங்கினேன். மறுநாள் நான் சீக்கிரம் ஆபீசுக்குப் போகவேண்டியிருந்தது. இங்கேயே சவரம் செய்துகொள் என்றார். 'ஒருநாள் விட்டு ஒருநாள் நான் செய்துகொள்வது வழக்கம், வேண்டியதில்லை,' என்றேன். பிறகு அவர் மிகவும் கேட்டுக்கொண்டாரே என்று ஒப்புக்கொண்டேன், 'சரி, செய்துகொள்கிறேன்' என்று. சகிக்கவில்லை. ஒரு ரேசர் கொண்டுவந்து

சொல்கிறார்—(குரலை நகல் செய்து) 'நான் என் ரேசரை மற்றவர்கள் சவரம் செய்துகொள்ளத் தருவதில்லை. விருந்தாளிகளுக்கென்று தனியாக ஒரு ரேசர் வைத்திருக்கிறேன்.'—கோபத்தால் என் ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது; ஆனால், அடக்கிக்கொண்டு, 'இருக்கட்டும், விடுங்கள், நான் வீட்டுக்குப்போய் ஷேவ் செய்துகொள்கிறேன்' என்று மட்டும் சொன்னேன்.

மது : மாமா...

வசந்தன் : (தன் பேச்சைத் தொடர்ந்து) இதற்குப் பிறகுதான் அவருடைய பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை என்று அவருக்குப் புரிந்தது. தம் ரேசராலேயே சவரம் செய்துகொள்ளும்படி என்னைக் கட்டாயப் படுத்திவிட்டார். ஆனால் நான் சவரம் செய்துகொண்டானதும் எனக்கு முன்னாலேயே பிளேடை வெளியே எறிந்துவிட்டார். வேலைக் காரனிடம் ரேசரை 'ஸ்டெரிலைஸ்' செய்யும்படி கட்டளை இட்டார். (குரலை நகல் செய்து) மாமா...

மது : நான் சொல்கிறேன். அவருடைய சுபாவம் உங்களுக்குத் தெரியாது; அதனால் உங்களுக்குப் பிடிக்கவில்லை. தூய்மையின் பாவனை காவியத்தையும் கலையையும் போல...

வசந்தன் : (உணர்ச்சி வேகத்துடன் அவளுக்கு அருகில் வந்து) காவியத்தையும் கலையையும் உன்னுடைய இந்த வெறுப்பில் ஏன் இழுக்கிறாய்? உங்களைப்போன்ற சூழ்நிலையில் வளர்ந்த ஜனங்களின் மேன்மையில் வெறுப்புணர்ச்சிக்குத்தான் இடம் இருக்கிறது—உடல்மீது, அசுத்தத்தின்மீது, வாழ்க்கையின்மீது வெறுப்பு!

மது : (பேசாதிருக்கிறாள்.)

வசந்தன் : எனக்கு வாழ்க்கைமீது வெறுப்பு இல்லை. உடல்மீது கூட வெறுப்பில்லை. நிஜமாகச் சொன்னால், எனக்கு அசுத்தத்தின்மீது கூட வெறுப்பில்லை.

மது : (சிரிக்கிறாள்) அப்படியானால் குப்பைமேட்டில் போய் உட்காருங்கள்!

[வசந்தன் மீண்டும் நாற்காலியில் போய் உட்காருகிறான், நாற்காலியை இன்னும் அருகில் கொண்டுவருகிறான்.]

வசந்தன்: எனக்கு அசுத்தத்திடம் வெறுப்பு இல்லை, ஆனால் எனக்கு அசுத்தத்திடம் ஆசையும் இல்லை—மிகவும் சூட்சுமமான வித்தியாசம். வாழ்க்கையை நாம் எதிர்க்க வேண்டுமானால், ஒவ்வொரு நாளும் அசுத்தத்தோடு கலந்தாக வேண்டும். அப்படி இருக்க அதை எப்படி வெறுக்க முடியும்? நீ ஏழைகளை வராந்தாவில் இருக்கும் விரிப்பின்மீது கால் வைக்கவும் விடமாட்டாய்; நான் அவர்களோடு மணிக்கணக்கில் உட்கார்ந்திருக்க முடியும்,

மது : (சிரிக்கிறாள்.)

வசந்தன் : நான் இப்பேர்ப்பட்ட வட்டாரங்களில் வாழ்நாளில் பல வருடங்கள் கழித்திருக்கிறேன்; உன்னுடைய தூய்மைப் பித்தம் அந்தப் பக்கம் கால்வைக்கவும் விடாது. தெரியுமா!

மது : (அங்கேயே உட்கார்ந்து அப்படியே ஸ்வெட்டர் பின்னியவாறு) ஆனால், இப்போது உங்களுக்கு எவ்விதத் துன்பமும் இல்லை; இப்போது நீங்கள் அசுத்தமான வட்டாரங்களில் வசிக்கவில்லை. துன்பத்தின் நிர்ப்பந்தத்தை என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் அசுத்தத்தின் இயற்கை என் அறிவுக்கு எட்டாத விஷயம்.

வசந்தன் : அப்படியானால், நான் இயற்கையிலேயே அசுத்தமானவன் என்பது உன் கருத்தா?

மது : (அதே நச்சுச் சிரிப்புடன்) நான் சொன்னேனா எப்போதாவது?

வசந்தன் : (நிற்கிறான்) தூய்மை கெட்டதில்லை; ஆனால் நீ ஒவ்வொன்றையும் வெறி எல்லைக்குக் கொண்டுபோய் விடுகிறாய். வெறி என்றால் எனக்கு வெறுப்பு. (மீண்டும் அறையில் உலாவத் தொடங்குகிறான்) பனியன்களும் துவாலைகளும் எனக்குக் குழம்பிவிடுகின்றன என்பதை ஒப்புக்கொள்கிறேன்; ஆனால், நான் தவறுதலாக பனியன் மாற்றிக் கொள்ளாவிட்டாலோ, அல்லது தவறான துவாலையை எடுத்துக்கொண்டாலோ, நீ அதனால் என் இயற்கைக்காக முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, உன்னுடைய இந்த நச்சுச்சிரிப்பு எறியவேண்டும் என்று அவசியமில்லை.

மது : (மௌனமாயிருக்கிறாள்.)

வசந்தன் : (ரேடியோவின் அருகிலிருந்து) என்னுடைய சின்னத் தப்புகூட உறுத்தும்படி இந்தப் பொய்யான பந்தங்களால் நீ உன்னையே கட்டிக்கொண்டிருக்கிறாய். உன்னுடைய கொள்கைகளை நீ வெறியளவுக்குக் கொண்டுபோய் விட்டாய். ஊஷியும் நிம்மோவும்...

மது : (பின்னுவதை நிறுத்திவிடுகிறாள்) நீங்கள் மறுபடியும் ஊஷியையும் நிம்மோவையும் பற்றின பேச்சை எடுத்திருக்கிறீர்கள். ஊஷியும் நிம்மோவும்...

வசந்தன் : (சிரித்தவாறு) நேற்று கடைத்தெருவில் கண்டு விட்டார்கள். 'நிம்மோ, நீ இவ்வளவு நாளாக வரவில்லையே' என்று கேட்டேன். 'எங்களுக்குச் சின்னம்மாவிடம் பயமாக இருக்கிறது'— என்று சொல்ல ஆரம்பித்தாள். (சிரிக்கிறான்.)

மது : (அதே நச்சுச்சிரிப்புடன்) நான் அவளைத் தின்றுவிடுகிறேனா?

வசந்தன் : (முக்காலி அருகிலிருந்து) நீ தின்கிறதென்ன, ஆனால் அவர்கள் சிறு குழந்தைகள்...

மது : குழந்தைகள்! (கேலியாகச் சிரிக்கிறாள்.)

**வசந்தன் :** (அவளுடைய கேலியைக் கேட்டும் கேளாதவன்போல், மூக்காலிமீது உட்கார்ந்துகொண்டே) சிரிப்பது அவர்கள் சுபாவம். அவர்கள் சிரித்தால் விஷயமல்லாத விஷயத்துக்கும் சிரிப்பார்கள்—உன் 'எடிகெட்'—அடங்கி—அடங்கி, மூச்சைப் பிடித்துக்கொண்டு நடக்க வேண்டும் என்பது— ஊ கூம்! (வருத்தமாய்த் தலையாட்டிக்கொண்டே எழுகிறான்) எவனால் மனமார உண்ணவும் குடிக்கவும் முடியவில்லையோ, அவனால் சிரிக்கவோ சிரிக்கவைக்கவோ முடியாது! வாழ்க்கையில் அவனால் என்னதான் செய்ய முடியும்? கவலைகள், துன்பங்களின் தளைகள் போதாதென்று, ஒழுக்கத் தளைகளிலும் கட்டுப்பட்டுவிட்டால்—இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே, இப்படிப் பேசாதே, அப்படிப் பேசாதே!—இந்த அறிவுரைகளுக்கு எங்காவது முடிவு இருக்கிறதா?

**மது :** (மௌனமாக இருக்கிறாள்.)

**வசந்தன் :** தவிர, உங்களுடைய இந்த ஒழுக்க முறையில் அந்த மென்மை எங்கே? நீ வருவதற்கு முன்பு, நான், தேவன், நாராயணன் எல்லாரும் ஒரே மெத்தையில் உட்காருவது வழக்கம். கொஞ்சம் கற்பனை செய்து பார்—குளிர்காலத்துக் காலை அல்லது மாலை நேரம், ஒரே கட்டில்மீது ஒரே ரஜாயியை முழங்கால்கள் வரை போர்த்திக் கொண்டு நாலைந்து நண்பர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அரட்டை அடிக்கிறார்கள். சுக துக்கங்களைப்பற்றிப் பேச்சு நடக்கிறது. அங்கேயே தேநீர் வருகிறது. கூடவே பேச்சு, கூடவே குடித்தல்—இந்தக் கற்பனையில் எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது, எவ்வளவு மென்மை இருக்கிறது! இப்போது, நண்பர்கள் வருகிறார்கள்; தனித்தனி நாற்காலிகளில் உட்காருகிறார்கள். ஒருவருக்கு ஒருவர் சுமையாகத் தோன்றுகிறார்கள். (ஆவேசமாக) நீ உன் படுக்கையருகில் குருவிகள் சிறகடிக்கக்கூட விடுவதில்லை. இந்த வெளி மரியாதைகளால் எனக்கு மூச்சுத் திணறுகிறது.

[வந்து நாற்காலியில் உட்காருகிறான். சவரச் சாமான்களைச் சரியாக வைக்கத் தொடங்குகிறான்.]

**மது :** எனக்கும் வெளி மரியாதை பிடிப்பதில்லை. ஆனால் மற்றவர்கள் சுத்தம்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாதபோது இதைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழி இல்லை. நீங்களே சொல்லுங்கள்—சுத்தம் பழக்கமானவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? நம்மைப் போல் கால்களைக் கழுவிக்கொண்டு ரஜாயியில் உட்காருகிறவர்கள் எத்தனை பேர்?

**வசந்தன் :** (அங்கிருந்தே) கால் கழுவுகிற கஷ்டம் ரஜாயியில் உட்காருகிற சுகத்தையே கெடுத்துவிடுகிறது.

மது: நாயும் உட்காருகிறது, வாலே ஆட்டிவிட்டு உட்காருகிறது. மனிதன் இயற்கையாகவே சுத்தத்தை விரும்புகிறவன். நான் அசுத்தமானவர்களே வெறுக்கிறேன். (மீண்டும் ஸ்வெட்டர் பின்னத் தொடங்குகிருள்.)

வசந்தன்: வெறுப்பு—இதைத்தான் நான் சொல்கிறேன். உனக்கு என்மேல் வெறுப்பு, என் சுபாவத்தின்மேல் வெறுப்பு, உன்னுடைய சூழ்நிலே என் சூழ்நிலேயை வெறுக்கிறது.

மது: (அதே நச்சுச் சிரிப்போடு) நீங்கள் அப்படி நினைப்பதில் தவறில்லே.

வசந்தன்: என்னுடைய ஒவ்வொரு விஷயத்திலும் உனக்கு வெறுப்பு—நான் உண்பது, குடிப்பது, உட்காருவது, எழுவது, சிரிப்பது, பேசுவது எல்லாவற்றிலும் உனக்கு வெறுப்பு—நான் சிரிக்கிறபோது, மார்பு விரியச் சிரிக்கிறேன். இதனுல்தான் ஊஷியும் நிம்மோவும்...

மது: (ஸ்வெட்டரை எறிந்துவிட்டு) நீங்கள் மறுபடியும் ஊஷி—நிம்மோ கதையை ஆரம்பித்துவிட்டீர்களா. எனக்குச் சிரிப்பு கெட்டதாய்ப் படவில்லே, ஆனுல், சரியான நேரமா இல்லேயா என்பதையும் கவனிக்க வேண்டும். அன்றைக்குப் பார்ட்டியில் வந்ததும் ஊஷி என் காதில் விரலேச் சொடுக்கினுள்; நிம்மோ என் கண்களேப் பொத்தினுள். இம்மாதிரி சிரித்து விளேயாடுகிற நேரமோ அது? எனக்குச் சிரிப்பு, விளேயாட்டின்மீது வெறுப்பு இல்லே; ஒழுங்கீனம் மீதுதான் வெறுப்பு.

வசந்தன்: ஊஷி...

மது: ஒழுங்கில்லாத, அநாகரிகமான பெண். மதனின் பிறந்த நாளன்று அவர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். நிம்மோ மிகவும் குறும்புக்காரி. ஆனுல் அவள் ஒரு பக்கம் உட்கார்ந்துவிட்டாள். இந்த இளவரசி, சாண்டலோடு எனக்கு எதிரில் கால்களே நீட்டிக் கொண்டு உட்கார்ந்தாள். அவளுடைய ஆபாசமான சாண்டல்ஸ் என் சேலேக்கு மிகவும் அருகில் வந்துவிட்டன. இம்மாதிரி ஒழுங்கீனத்தை நீங்கள் தாராளமாக விரும்பலாம். நான் இதை ஒருகாலும் விரும்ப முடியாது. உட்காருவதிலும் எழுந்திருப்பதிலும் பேசுவதிலும் முறை இல்லாதவன் மனிதனல்ல, மிருகம்.

வசந்தன்: (கத்தி) மிருகம்! அப்படியானுல் நீ என்னே மிருகம் என்று எண்ணுகிருயா? நீ மனிதனின் இயற்கையான உணர்ச்சிகளேக் கட்டி வைக்க விரும்புகிருய்; கடினமான கொள்கை விலங்குகளில் பூட்டி, அதன் ஆத்மாவையே சாகவைக்க விரும்புகிருய். இதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லே. இதனுல் என்னே வெறுக்கிருய். உன்னுடைய இந்த நச்சுச் சிரிப்பில் எவ்வளவு வெறுப்பு ஒளிந்திருக்கிறது என்று எனக்குத்

தெரியும்; என்றைக்காவது ஒரு நாள் நிசமாகவே மிருகம் ஆகிவிடு வேனோ என்று பயமாயிருக்கிறது. இந்த அற்பமான துவாலையைத் தூக்கி வெளியில் எறிந்துவிடலாமா என்று இப்போதுதான் எனக்குத் தோன்றியது... உம்...உம்...உன்னுடைய இந்தச் சிரிப்பின் கழுத்தை ஒடித்துவிடலாமா என்று தோன்றுகிறது. வெறுப்பு—நீ என்னுடைய ஒவ்வொரு விஷயத்தையும் வெறுக்கிறாய்—என்னை நீ மிருகம் என்று நினைக்கிறாய்?

மது : (ஸ்வெட்டர் எடுத்தவாறு, தொண்டை அடைக்க) நீங்கள் வீணாய் ஒவ்வொரு விஷயத்தையும் உங்களுக்கென்று எடுத்துக்கொள் கிறீர்கள். நான் கனவில்கூட நினைக்காத விஷயங்களை என் மனத்தில் இருப்பதாய் உங்கள் கற்பனையால் பார்க்கிறீர்கள். எனக்கு உங்கள் மீது வெறுப்பு இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத்தான் தெரியும். ஆனால், உங்களுக்கு நிச்சயமாக என்மேல் வெறுப்பு இருக்கிறது. நீங்கள் என்னை மணந்துகொண்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஏன் செய்து கொண்டீர்கள் என்றும் எனக்குத் தெரியும். நீங்கள் கலியாணத்துக்குத் தயார் ஆனது, உங்களுக்கு என்மீது வெறுப்பு இல்லை என்பதைக் காட்ட வில்லை. அந்தக் கோபத்தை இப்போது நீங்கள் என் சுத்தத்தின்மீது காட்டலாம், என் உடைமீது அல்லது சுபாவத்தின்மீது காட்டலாம்!

வசந்தன் : நீ...

மது : நான் உங்களுக்கு இன்பம் தர முடியும் என்று எண்ணினேன். ஒழுங்கு குலைந்த உங்கள் வாழ்க்கையில் ஒழுங்கைக் கற்பிக்கலாம் என்று எண்ணினேன்; ஆனால், என் முயற்சி எல்லாம் வீணானதைக் காண கிறேன்... உங்களுக்கு இந்த அசுத்தத்தில், இந்த ஒழுங்கின்மையில் சுகம் கிடைக்கிறது. உங்களுக்கு என் ஒழுங்கு முறையும் சுத்தமும் பிடிக்கவில்லை. உங்களுடைய உலகத்தில் எனக்கு இடமில்லை. நான் இன்றே போய்விடுகிறேன்.

[எழுந்து நிற்கிறாள் — டெலிபோன் மணி அடிக்கிறது. வசந்தன் விரைந்து சென்று குழாயை எடுக்கிறான்.]

வசந்தன் : ஹலோ, ஹலோ, சார், சார்!

மது : (வேலைக்காரிக்குக் குரல் கொடுத்து) மங்களா!

மங்களா : (குளியலறைப்பக்க வாயில் வழியாக வருகிறாள்) அம்மா!

மது : என் படுக்கையைத் தயார் செய், என் டிரங்குப் பெட்டியை இந்த அறையில் கொண்டுவா!

மங்களா : அம்மா, நீங்கள்...

மது : சொன்னபடி செய், கொண்டுவா.

[மங்களா போய்விடுகிறாள். வசந்தன், 'சார், சார், மிகவும் சரி' என்று போனை வைக்கிறான். சிரித்தவாறு வருகிறான்.]

வசந்தன் : *நீ உன் சாமான்களைக் கட்ட யோசிக்கிறாய். முதலில் என் சாமான்களைச் சரிசெய் என்கிறேன். முதல் வண்டியில் நான் பனாரஸ் போக வேண்டும். இப்போதுதான் முதலாளி உத்தரவிட்டார். உன் சாமானை அப்புறம் கட்டலாம். (சிரிக்கிறான்.)*

*[திரை விழுகிறது]*

*(சில கணங்களுக்குப் பிறகு திரை மறுபடியும் எழுகிறது. அறை அது தான். சாமான்களும் அவையே. வித்தியாசம் இதுதான்: முன்பு மேஜை இருந்த இடத்தில் கட்டில் இருக்கிறது, அதன் தலைப்பக்கம் ஒரு முக்காலிமீது டெலிபோன் வைக்கப்பட்டிருக்கிறது; மேஜை டிரெஸ்ஸிங் டேபிள் இருந்த இடத்துக்குப் போய்விட்டது; டிரெஸ்ஸிங் டேபிள் தன் நாற்காலியோடு வலது மூலைக்கு நழுவிவிட்டது.*

*கட்டில்மீது மது மெத்தைப்போர்வையை முழங்கால்களில் போட்டுக் கொண்டு, எங்கோ நினைவாய்ச் சுவர்மீது அரைகுறையாகச் சாய்ந்து கொண்டிருக்கிறாள்.*

*சில கணங்களுக்குப்பின் அவள் காலண்டர்ப் பக்கம் பார்க்கிறாள். அவளுடைய பார்வையைப் பின்பற்ற, ஜனவரி மாதம், புதிய ஆண்டு வந்தாயிற்று என்று தெரிகிறது. அதன் பொருள், மதுவை நாம் இரண்டு மாதங்களுக்குப் பிறகு பார்க்கிறோம்.*

*வெளிக்கதவு திறந்திருக்கிறது. பலமான காற்று உள்ளே வந்து கொண்டிருக்கிறது. மெத்தைப் போர்வையைத் தோள்வரை இழுத்துக் கொண்டே வேலைக்காரியைக் கூப்பிடுகிறாள்: ''மங்களா! மங்களா!''*

*குரல் மிகவும் சன்னமாக இருந்ததால் மங்களாவுக்கு எட்டவில்லையோ என்னவோ. மது ரஜாயியைப் போர்த்திக்கொண்டு படுத்துவிடுகிறாள். சில கணங்களுக்குப்பின் மங்களா தானாக வருகிறாள்.)*

மங்களா : *ஏனம்மா வருத்தமாயிருக்கிறீர்கள்?*

மது : *(படுத்தவாறே சற்று தலைகுனிந்து) மங்களா! இந்தக் கதவை மூடு; பனிக்கட்டிபோலக் காற்று உள்ளே வருகிறது.*

மங்களா : *(கதவை மூடிக்கொண்டே) நான் கேட்டதற்கு பதில் சொல்லவில்லையே, அம்மா.*

மது : *சும்மா உடம்பு கொஞ்சம் எப்படியோ இருக்கிறது மங்களா?*

மங்களா : *ஐயாவிடமிருந்து கடிதம் ஏதாவது வந்ததா?*

மது : *வந்தது. இன்றோ, நாளையோ வந்துவிடுவார்.*

மங்களா : *பின் ஏன்...*

மது : *(வருத்தத்தோடு சிரித்து) உடம்பு கனக்கிறாற்போல் இருக்கிறது. குளிர் காரணமாக இருக்கலாம்...*

*[கதவு தட்டப்படுகிறது.]*

மது : *(சிறிது எழுந்து) யார்?*

சுரோ : (வெளியிலிருந்து) கதவைத் திறவேன்.

மது : (உட்கார்ந்து) மங்களா, கொஞ்சம் கதவைத் திற.

[மங்களா கதவைத் திறக்கிறாள். சுரோவும் சிந்தீயும் வருகிறார்கள்.]

மது : (போர்வையை விலக்கி) அட, சுரோ, சிந்தீ, நீங்கள் எங்கே இந்தப் பக்கம்?

சுரோ : இன்று காலைதான் இங்கே இறங்கினோம்.

சிந்தீ : அம்மா யாத்திரை செய்கிறார். தில்லியும் பார்த்துக் கொண்டே போகலாம் என்று சரிதா அக்கா சொன்னாள்.

மது : எங்கே தங்கி இருக்கிறீர்கள்?

சிந்தீ : கனாட் பிளேசில் மலிக் சித்தப்பா வீட்டில். பல நாளாய்ச் சொல்லிக்கொண்டே இருந்தார், தில்லிக்கு வந்தால்...

மது : எனக்குக் கடிதம்கூட எழுதவில்லை. இத்தனை நாளாய் நான் சொல்லிக்கொண்டே இருந்தேன், தில்லிக்கு வந்தால்...

சுரோ : எல்லாருக்கும் முன்னால் உன்னைத்தான் பார்க்க வந்திருக்கிறாள். அம்மா சொன்னார், குதுப்மினார்...

சிந்தீ : நான் சொன்னேன், குதுப்மினார் ஒரு பக்கம், மது அக்கா ஒரு பக்கம்...

[மது கலகலவென நகைக்கிறாள்.]

சுரோ : அப்புறம் இரண்டு மணி நேரமாய் உன்னைத் தேடி அலையாய் அலைகிறாள்.

மது : ஆனால் என் முகவரி...

சிந்தீ : சுரோ அக்கா மறந்துவிட்டாள். இவள் தாங்காவாலாவிடம் பைரவர் கோயிலுக்குப் போகும்படி சொல்லிவிட்டாள்.

மது : (வியப்போடு) பைரவர் கோயில்...

சிந்தீ : தாங்காவாலா காய்கறி மண்டிக்கு அழைத்துப்போனான், தீஸ் ஹஜாரி மாதா கோயிலுக்குப் பக்கம்.

மது : மாதா கோயிலுக்குப் பக்கம்... (உரத்து கலகலவெனச் சிரிக்கிறாள்.)

சிந்தீ : (தன் பேச்சைத் தொடர்ந்து) அப்புறம்தான் இவளுக்கு ஹனுமான் கோயில் அல்லவா என்று ஞாபகம் வந்தது. புது தில்லிக்குத் திரும்பிவந்தாள்.

[மது மறுபடியும் உரத்துச் சிரிக்கிறாள்.]

சுரோ : அப்புறம்தான் வீணாய் அலைகிறோம் என்று புரிந்தது. உன் வீடு பக்கத்தில்தான் இருந்தது.

மது : நீங்கள் இரண்டுபேரும் இருக்கிறீர்களே...

[உரத்துச் சிரித்துவிடுகிறாள்.]

சுரோ: இவ்வளவு சிரிக்க எங்கிருந்து கற்றுக்கொண்டாய்? நீ பிறவியிலேயே சிடு...

சிந்தி: இப்படி பலமாய் கலகலவென்று சிரிக்க அண்ணு சொல்லித் தந்தாரா? எங்கே அவர்?

மது: பனாரஸ் போயிருக்கிறார், இரண்டு மாதமாயிற்று. அங்குள்ள கம்பெனி மானேஜருக்கு உடல்நலமில்லை. இன்றோ நாளையோ வந்து விடலாம்.

சிந்தி: நல்லபடி இருக்கிறாரா?

மது: நல்லபடி இருக்கிறார், ஆனந்தமாக இருக்கிறார். ஆனால் நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்? இங்கே படுக்கைமீது வாருங்கள். (வேலைக்காரியைக் கூப்பிடுகிறாள்) மங்களா, மங்களா!

[சுரோவும் சிந்தியும் நாற்காலிகளில் உட்காரத் தொடங்குகிறார்கள்.]

மது: அட, நாற்காலியில் வேண்டாம். இங்கே வாருங்கள் கட்டிலில், ரஜாயியை வைத்துக்கொண்டு உட்காரலாம்...

சுரோ: ஆனால், கால்கள்... (சிரித்து)... இவற்றை நான் கழுவவும் முடியாது.

மது: அட, உன் கால்களுக்கு என்ன ஆயிற்று? நீதான் ஸாக்ஸ் போட்டிருக்கிறாயே?

சுரோ: ஆனால், உன் படுக்கை?

மது: படுக்கைக்கு ஒன்றும் ஆகிவிடாது. என் படுக்கை பற்றின கவலையை விடு. சரி, வா இங்கே. இந்தக் கதவை மூடு. பனிக்கட்டி போல் காற்று உள்ளே வருகிறது.

[மங்களா வருகிறாள்]

மங்களா: கூப்பிட்டீர்களா அம்மா?

மது: தேநீர் தயார்செய்து கொண்டுவா!

[சிந்தி கதவை மூடிவிடுகிறாள். மூவரும் முழங்கால்கள்மீது ரஜாயியைப் போர்த்திக்கொண்டு வசதியாகக் கட்டில்மீது உட்காருகின்றனர்.]

சுரோ: புஷ்பாவுக்குக் கலியாணம் நடக்கிறது, அடுத்த மாதம்.

மது: (திடுக்கிட்டு மகிழ்ச்சியாக) லெப்டினென்ட் வீரேந்திரரோடு தானே?

சிந்தி: (சிரித்து) எல்லாரும் உன்னைப்போல் இல்லை. அவள் ஆயுள் முழுவதும் வீரேந்திரரைக் காதலித்துக்கொண்டிருப்பாள். ஆனால் கலியாணம் என்னவோ அவளுக்கும் புரபசர் முன்ஷீராமுக்கும்தான் நடக்கும்.

மது: ஆனால் முன்ஷிராம்...

சுரோ: தீவிரமான கால்சா.[1] லெப்டினென்ட் வருடத்தில் எப்போதாவது இரண்டொரு முறை வருவார். ஆனால் புரபசர் எந்நேரமும் வளையவருகிறார், கெட்ட நிழல் மாதிரி.

சிந்தி: நெட்டையோ நெட்டை என்று பனைமரம் போல் இருப்பாரே, அவர். பலமாய்க் காற்றடித்தால் பறந்துபோய்விடுவார். அவனுக்குப் புஷ்பாவைப் போன்ற ஒரு கொழுத்த பெண்ணிடம் எப்படித்தான் காதல் உண்டாயிற்றோ, எனக்குத் தெரியவில்லை.

மது: அவனைப் புஷ்பா எப்படி விரும்புகிறாள் என்று எனக்கு ஒரே மலைப்பாக இருக்கிறது. என்னால் அவனை ஐந்து நிமிடங்கள்கூடப் பொறுக்க முடியாது. அவன் முகத்திலிருந்து மூதேவித்தனம் கொட்டுகிறது, பார்த்தால்...

சிந்தி: வருடக்கணக்காய்க் குளியலறையையே பார்க்காதவன் மாதிரி.

சுரோ: அவள் இதையெல்லாம் சகித்துக்கொள்ள வேண்டியதுதான். அவளுடைய தகப்பனுருக்குப் புரபசர் முன்ஷிராமை மிகவும் பிடித்துவிட்டது. அவரே புரபசரைப் படிக்க வைத்துத் தம் காலேஜில் சேர்த்தார். வீரேந்திரர் பி.ஏ.யில் நாலு வருடம் இருந்தார். புரபசர் முன்ஷிராம் அந்த ரிக்கார்டையும் மீறிவிட்டார்.

[மங்களா டீ ட்ரே கொண்டு வருகிறாள்.]

மங்களா: எங்கே வைக்கட்டும் அம்மா?

மது: அங்கே மேஜைமீது வை: ஒவ்வொரு கப் எங்கள் கைகளில் கொடு. முக்காலியை நகர்த்தி இதன்மேல் பிஸ்கோத்துகளை வை.

சுரோ: (வியப்போடு) மது!

மது: அட, எழுந்து எங்கே போவது? இங்கேயே உட்காரு. இந்த கதகதப்பான கட்டிலிலிருந்து எழுந்து டைனிங் டேபிளுக்குப் போனால் டீ சாப்பிடுகிற சுகமே இராது...

சிந்தி: (எழுந்திருக்க முயன்றவாறு, சிறிது சினத்தோடு) மது...

மது: சும்மாயிரு. இப்போது இங்கே உட்கார்ந்திரு.

சிந்தி: (கேலியாக) அப்படியானால், திருமணத்துக்குப் பிறகு ராணி மதுமாலதி அம்மாள் தன் கொள்கைகளை எல்லாம் மாற்றிக்கொண்டு விட்டார் போல் இருக்கிறது. இப்போது டைனிங் டேபிளுக்கு பதிலாகப் படுக்கையிலேயே தேநீர் அருந்துகிறார்; படுக்கையிலேயே சாப்பாடும் பரிமாறச் சொல்கிறார்.

சுரோ: ஒரு கிளாஸ் தண்ணீர் சாப்பிடவேண்டும் என்றால்கூட டைனிங் ரூமுக்கு ஓடுகிறவளா இப்படி...

---

1 சீக்கியர்

மநு : இந்தப் பழக்கத்தில் என்ன இருக்கிறது. நிசமாகச் சொல்லு, மெத்தென்று கதகதப்பாயிருக்கிற இந்தப் படுக்கையைவிட்டு டைனிங் டேபிளுக்குப் போக யாருக்காவது மனசு வருமா? எடுத்துக்கொள். எல்லாரும் பிஸ்கோத்தையும் தேநீர்க் கப்பையும் எடுத்துக்கொள்ளுங்கள்! ஆறிப் போகிறது.

[எல்லாரும் தேநீர் கப்களை எடுத்துக்கொள்கிறார்கள், அருந்தியவாறு பேசுகிறார்கள்.]

சுரோ : கேட்கிறேன், படுக்கையில் தேநீர் கொட்டிவிட்டால்?

மநு : அதனால் என்ன ஆகிவிடும்! விரிப்பைக் கழுவச்சொன்னால் போகிறது. என்றைக்கோ திடீரென்று வரப்போகும் ஆபத்துக்கு அஞ்சி, நாள்தோறும் கிடைக்கிற சுகத்தையும் அமைதியையும் யாராவது விடுவார்களா?

சுரோ : சுகமும் அமைதியும்! (கேலியாகச் சிரிக்கிறாள்) படுக்கையிலிருந்து தேநீர் சாப்பிடுவதை நீ பெரிய சுகம் என்று நினைக்கிறாய்... (மறுபடியும் சிரிக்கிறாள்.)

சிந்தி : அப்புறம் நாகரிகம், பண்பாடு...

மநு : மனிதனின் அடிப்படை உணர்ச்சிகளின்மீது புதிது புதிதாக ஒவ்வொரு நாளும் ஏற்றப்படும் திரைகளின் பெயர்தானே பண்பாடு. சொசைடியின் ஒரு வர்க்கத்துக்கு மற்றொரு வர்க்கம் என்றைக்கும் அநாகரிகமானதாயும் பண்பாடற்றதாயும் இருக்கும். அப்புறம், நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் பின்னால் மனிதன் எதுவரையில்தான் ஓட முடியும்?

சுரோ : இதென்ன சொல்கிறாய்? இவ்வளவு கற்றறிந்தபின் மனிதன் மறுபடியும் முன்னைப்போல் காட்டுமிராண்டி ஆக வேண்டும் என்று விரும்புகிறாயா?

மநு : இல்லை, எதற்காகக் காட்டுமிராண்டி ஆக வேண்டும்? மனிதன் எல்லைகளைத் தொட்டவாறே ஏன் நடக்க வேண்டும்? நடுவழியை ஏன் ஏற்கக் கூடாது? காட்டுமிராண்டியாகக் காட்சி தரும்படி அவ்வளவு வெளிப்படையாக இருக்க வேண்டாம், வெறிபிடித்தவனைப் போல் இவ்வளவு கட்டுண்டும் இருக்க வேண்டாமே. மகாத்மா புத்தர் சொன்னார்...

சுரோ : (சிரித்து) மகாத்மா புத்தர்! உனக்கு என்ன ஆகிவிட்டது? நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழமையான, அழுகி நாறிப்போன கருத்துக்களை எல்லாம் நாகரிகத்தின்மேல் சுமத்த விரும்புகிறாயே!

சிந்தி : மனிதன் ஒவ்வொரு மணியும், ஒவ்வொரு வினாடியும் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்துக்கொண்டிருக்கிறான்.

இன்றைய கொள்கை நாளைக்குப் பயன்படாது, நாளைய கொள்கை மறுநாள் பயன்படாது. பெர்னார்ட் ஷா...

மது : (கேலியாகச் சிரித்து) பெர்னார்ட் ஷா — ஏன் அர்த்தமற்ற விவாதம் செய்துகொண்டிருக்க வேண்டும்; விடு. மங்களா, இன்னொரு கப் டீ எல்லாருக்கும் தயார் செய்.

சிந்தி : போதும், நாங்கள் கிளம்புகிறோம். நாங்கள் இங்கே வந்து வெகு நேரம் ஆகிவிட்டது. மங்களா, எங்களுக்குக் கை கழுவும் இடம் காட்டு.

மது : அட, இன்னும் ஒரே ஒரு கப் சாப்பிடுங்கள்.

சுரோ : இல்லை மது, இப்போது புறப்படுகிறோம். அங்கே எல்லாரும் கவலைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். மதுவின் வீட்டை மட்டும் பார்க்கப் போகிறோம். அரை மணி, ஒரு மணி நேரத்தில் திரும்பி விடுவோம் என்று சொல்லிவிட்டு வந்தோம். இங்கே வருவதற்கே இரண்டு மணி நேரம் ஆகிவிட்டதே.

சிந்தி : குளியலறை எங்கே? அங்கேயே நாங்கள் கை கழுவிக் கொள்கிறோம்.

மது : அட, இந்தக் குளிரில் எப்படிக் கை கழுவுவீர்கள்?

சுரோ : இல்லை, நாங்கள் கட்டாயம் கை கழுவ வேண்டும். பிசுபிசு வென்று இருக்கிறது.

மது : அப்படியானால் உயிரை விடுங்கள்! (மங்களாவிடம்) மங்களா இவர்களுக்குக் கை கழுவி விடு.

சுரோ : பாத்ரூம்...

மது : பாத்ரூமில் போய் என்ன செய்வாய்? இங்கே வராந்தாவில் கழுவிக்கொள்ளுங்கள்.

[கதவைத் திறந்து சுரோவும் சிந்தியும் கை கழுவுகின்றனர். மது பேசாமல் கிண்ணத்தில் எஞ்சியிருந்த தேநீரைப் பருகுகிறாள்.]

சுரோ : (ஈரக் கையுடன் திரும்பிவந்து) துவாலைகள் எங்கே?

மது : மங்களா துவாலை தரவில்லையா? சரி, அதோ கொடியில் தொங்குகிறதே, அதை எடுத்துக்கொள்.

சுரோ : (கோபமாக) மது, உனக்கு நன்றாய்த் தெரியும்...

மது : மங்களா, இவர்களுக்கு உள்ளேயிருந்து சலவை செய்த துவாலையைக் கொண்டு வந்து கொடு.

[சிந்தியும் ஈரக் கையோடு வருகிறாள். மங்களா துவாலை கொண்டு வருகிறாள். இருவரும் கை துடைத்துக்கொள்கிறார்கள்.]

மது : இன்னும் கொஞ்ச நேரம் இருந்து போகலாம் நீங்கள்.

சிந்தி : இல்லை, நாளைக்கு வர முயலுகிறோம்.

[கை துடைத்துக்கொண்டு துவாலையை நாற்காலி முதுகில் போடுகிருள்.]

மது: முயலுவதென்ன, கட்டாயம் வாருங்கள். மறந்துவிட வேண்டாம். சாப்பாடும் இங்கேதான் சாப்பிடவேண்டும்.

சுரோ: ஆம், ஆம் கட்டாயம் வருகிறேன்.

[மது எழுந்திருக்க முயலுகிருள்.]

சுரோ: இப்போது எழுந்திருக்கிற சிரமம் வேண்டாம். உன் கத கதப்பான போர்வைக்குள்ளேயே உட்கார்ந்திரு. கதவை நாங்கள் மூடிக்கொண்டே போகிருேம். பனிக்கட்டிபோல் காற்று உள்ளே வருகிறது.

[சிரித்துக்கொண்டே போய்விடுகிருள், கதவை மூடிக்கொண்டு போகிருள்.]

மது: எனக்கு ஒரு கப் தயார் செய்து கொடு, மங்களா.

மங்களா: (தயாரித்த கப்பைக் கொடுத்தவாறு) யாரம்மா இவர்கள்?

மது: என் தோழிகள். காலேஜில் நாங்கள் சேர்ந்து படித்தோம், ஹாஸ்டலிலும் சேர்ந்து தங்கி இருந்தோம்.

[சிலகணங்கள் மது பேசாமல் தேநீர் அருந்துகிருள். பிறகு]

மது: மங்களா!

மங்களா: அம்மா!

மது: மங்களா, கொஞ்சம் என் பக்கம் பார்த்துச் சொல்லு. நிசமாக நான் மாறியிருக்கிறேனு?

மங்களா: (மௌனமாயிருக்கிருள்)

மது: (தனக்குள் பேசிக்கொள்வது போல்) நான் மாறிவிட்டேன் என்று என் தோழிகள் சொல்கிருர்கள். பக்கத்து வீட்டுக்காரிகளும் இதையே சொல்கிருர்கள். என் பக்கம் கொஞ்சம் பார்த்துச் சொல்லு, மங்களா. உண்மையாக நான் மாற முடிந்திருக்கிறதா?

மங்களா: நான்தான் எட்டு ஜாமமும் உங்களோடு இருக்கிறேனே, அம்மா, எனக்கு என்ன தெரியும்?

மது: (தன் பேச்சைத் தொடர்ந்து) என் கண்களில் பார்த்துச் சொல், மங்களா. நான் மாற முடிந்திருக்கிறதா? இவற்றில் வெறுப்பின் சாயல் இல்லையே?

மங்களா: (வியப்போடு) வெறுப்பு...

மது: என் நடத்தையில் ஒழுங்குமுறையும் செயற்கையும் இல்லையே?

மங்களா: (அதே வியப்போடு) செயற்கை, ஒழுங்குமுறை...

மது: ஒழுங்குமுறை, செயற்கை, வெறுப்பு—மூன்றையும் என் நெஞ்சிலிருந்து அகற்றிவிட விரும்புகிறேன். (தனக்குள் பேசிக்

கொள்வது போல்) இரண்டு மாதங்களுக்கு முன் இதற்காகத்தான் என்னோடு சண்டை போட்டுக்கொண்டு போனார்.

மங்களா: என்ன சொல்லுகிறீர்கள் அம்மா நீங்கள்? ஐயா...

மது: (சூன்யத்தில் பார்த்தவாறு) அவருக்கு இன்னும் கோபம் ஆறவில்லை. இந்த இரண்டு மாதங்களில் அவர் எனக்கு ஒரு கடிதமும் எழுதவில்லை.

மங்களா: ஒரு கடிதமும் எழுதவில்லையா! ஆனால்...

மது: (ஏளனமாக) ''நான் நலமாக இருக்கிறேன், உன் நலம்பற்றி எழுதவும்,'' அல்லது ''மானேஜருக்கு உடல் நலமில்லை. குணமானதும் வருகிறேன்.'' இவற்றை நீ கடிதங்கள் எழுதுவது என்று சொல்லலாம். அவருக்கு என்மேல் கோபம். நான் அவரைவெறுப்பதாக அவருடைய எண்ணம்.

மங்களா: (ஒன்றையும் புரிந்துகொள்வதில் வெற்றி பெற முடியாத வளாய்) வெறுப்பு, வெறுப்பு!

மது: குழந்தைப்பருவம் முதல், சுத்தத்தையும் ஒழுங்குமுறையையும் மிகவும் கவனிக்கிற ஒரு சூழ்நிலையில் வளர்ந்துவிட்டேன் என்றால் அது என் தவறு? (பெரும்பாலும் அடைபட்ட குரலில்) அவர் சுத்தத்திலும் ஒழுங்கு முறையிலும் எனக்குள்ள விருப்பத்தை வெறுப்பு என்கிறார். இந்த சுத்தம் - கித்தம் எல்லாம் விட்டுவிட வேண்டும் என்று நான் மிகவும் முயற்சி செய்கிறேன். இந்த ஒழுங்கு முறைக்கு எள்ளு நீர் விட்டு விட வேண்டும் என்று பார்க்கிறேன். இந்த முயற்சியில் எனக்கே என் மீது சில சமயம் வெறுப்பு ஏற்படத் தொடங்குகிறது. (நெடுமூச்சு விட்டு) குழந்தைப் பருவத்திலிருந்தே வந்துவிட்ட பழக்கங்களிலிருந்து விடுதலை பெறுவது அவ்வளவு சுலபம் அல்ல. (திடீரென்று உறுதியாக) ஆனால், இல்லை, நான் இந்தப் பிரமைகளை எல்லாம் விட்டுவிடுவேன். பழைய பழக்கங்களிலிருந்து விடுதலை பெற்றுவிடுவேன். நான் அவரை வெறுப் பதாக அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார்.

மங்களா: நீங்கள் என்னம்மா சொல்கிறீர்கள்?

மது: நான் அவரை, அவருடைய சுபாவத்தை, அவருடைய சூழ் நிலையை, அவருடைய ஒவ்வொரு விஷயத்தையும் நான் வெறுப்பதாக அவர் நினைக்கிறார். (விசிக்கத் தொடங்குகிறாள்.) இந்த இரண்டு மாதங்களில் நான் என்னையே மாற்றிக்கொண்டுவிட்டேன். நான் என்னையே முற்றிலும் மாற்றிக்கொண்டுவிட்டேன்.

[திடீரென்று கதவு திறக்கிறது, வசந்தன் உள்ளே வருகிறான்.]

வசந்தன்: ஹால்... லோ மது—அம்மையார் எப்படி இருக் கின்றீர்கள்? (மங்களாவிடம்) மங்களா, தாங்காவிலிருந்து சாமான்களை இறக்கு. (பையிலிருந்து காசு எடுத்து) இந்தா, ஒண்ணரை ரூபாய். தாங்காவாலாவிடம் கொடு.

[மங்களா காசை எடுத்துக்கொண்டு போய்விடுகிருள்.]

வசந்தன் : (மறுபடியும் மதுவை நெருங்கி) என்னம்மா; எப்படி இருக்கிருய்? முகம் ஏன் இப்படி வாடிக் கிடக்கிறது? மனசு சரியாக இல்லையா?

மது : (இதற்கு இடையில் கட்டிலிலிருந்து இறங்கி வந்துவிட்டவள் சிரிக்க முயன்றபடி) வரட்சியான குளிர்; மூன்று நான்கு நாளாய் எனக்குக் காய்ச்சல்.

வசந்தன் : உடம்பைப் பார்த்துக்கொள் என்று உனக்கு நான் எத்தனையோ தடவை சொல்லிவிட்டேன். ஆரோக்கியம் — ஆரோக்கியம் — ஆரோக்கியம்! உலகத்தில் இருப்பது எல்லாம் ஆரோக்கியம்! வாழ்க்கையில் உன்னுடைய இந்த சுத்தமும் அழகும், இந்த மென்மைகளும், ஆரோக்கியத்தைப் போலப் பயன்படா. இதைச் சரியாக வைத்துக்கொள்ளாவிட்டால் மற்றவையால் என்ன பயன்? இது சரியாக இருந்துவிட்டாலோ மற்றவை தேவை இல்லை. (தன்னுடைய பேச்சின் நுட்பத்தில் தானே மகிழ்கிருன்; மறுபடியும், அறையை முதல் தடவையாக நன்ருய்ப் பார்த்தவன் போல்) அட, இந்தத் தலைகீழ் மாற்றம் ஏனோ? இந்தக் கட்டில் டிராயிங் ரூமில் எப்படி வந்தது? இந்த ட்ரேயும், கோப்பைகளும்...

மது : உங்களுக்கும் உங்களுடைய நண்பர்களுக்கும் கொஞ்சமும் கஷ்டம் உண்டாக வேண்டாம் என்று நான் கட்டிலை இங்கேயே போட்டுவிட்டேன். மகிழ்ச்சியாக மெத்தைப் போர்வையை வைத்துக் கொண்டு உட்காருங்கள். டெலிபோன் உங்கள் தலைப்பக்கம் இருக்கும்.

வசந்தன் : (உவகையோடு) ஓ! நான் சொல்கிறேன், என்ன இருந்தாலும் நீ ... ரொம்ப ரொம்ப நல்லவள்!

மது : நானும் என் தோழிகளோடு இந்த மெத்தைப்போர்வையிலேயே உட்கார்ந்திருந்தேன்.

வசந்தன் : (வியப்பு கலந்த உவகையோடு) நிசமாகவா!

மது : (அவன் பக்கம் பாராட்டை வேண்டும் அன்பு நிறைந்த பார்வையால் பார்த்தவாறு) தேநீர்கூட நாங்கள் இங்கேயே சாப்பிட்டோம்.

வசந்தன் : (மகிழ்ச்சியோடு) ஓ... கோ! நான் சொல்கிறேன்—வாழ்க்கையின் ரகசியம் உனக்குத் தெரிந்துவிட்டது. வாழ்க்கையின் ரகசியம் வெளிப்படையான படபடப்பில் இல்லை, உள்ளத்து உறுதியில் இருக்கிறது. நம்மிடம் எதிர்ப்பு சக்தி (Power of Resistence) இருக்குமானல்...

மது : இனி உங்களுடைய மென்மையான படுக்கைமேல் அமர்ந்து இங்கேயே தேநீர் சாப்பிடுங்கள்.

வசந்தன்: (மிகுதியான உவகையோடு) பேஷ்! பேஷ்! எனக்குத் தேநீருக்கு வெந்நீர் வைக்கும்படி மங்களாவிடம் சொல்லு.

மது: இப்போது உங்களுக்கு என்மீது கோபம் இல்லையே?

வசந்தன்: (வியப்போடு) கோபமா!

மது: நீங்கள் இவ்வளவு நாள் மனத்தில் கோபம் வைத்துக்கொள்வீர்கள் என்று நான் கனவிலும் எண்ணவில்லை.

வசந்தன்: (இன்னும் வியப்புடன்) கோபமா!

மது: இரண்டு மாதங்களாய் நீங்கள் நல்லபடி எனக்குக் கடிதம்கூட எழுதவில்லை.

வசந்தன்: ஆனால் நான்...

மது: எழுதினீர்கள். 'நான் நலமாக இருக்கிறேன், உன் நலத்துக்கு எழுதவும்' — இதைக் கடிதம் எழுதுவது என்கிறீர்களா?

வசந்தன்: (உரத்துக் கடகடவென்று சிரிக்கிறான்.) உன்மேல் எனக்குக் கோபம்தான் இதற்குக் காரணம் என்று நீ எண்ணிவிட்டாயா? பைத்தியக்காரி! உன்மேல்கூட யாராவது கோபித்துக்கொள்ள முடியுமா?

மது: ஆனால் இரண்டே வரி.

வசந்தன்: இரண்டு வரி எழுதவாவது நேரம் கிடைத்ததே, அதுவே அதிகம் என்று நீ நினைக்க வேண்டும்.

மது: சரி, நீங்கள் போய்க் கையும் முகமும் கழுவிக்கொண்டு வாருங்கள். நான் தேநீர் தயார் செய்கிறேன்.

வசந்தன்: நான் சொல்கிறேன், நீ மிகவும்... நீ மிகவும்... நீ மிகவும் நல்லவள்!

மது: (முறுவலித்தவாறு) சரி, சரி. போய் முதலில் கையும் முகமும் கழுவிக்கொண்டு உடை மாற்றிக்கொள்ளுங்கள்.

வசந்தன்: இதென்ன, மறுபடியும் உடை மாற்றும்படி வீண் பேச்சு வளர்க்கிறாயே?

மது: ஏன், உடை மாற்றமாட்டீர்களா? ஓர் இரவும் ஓர் பகலும் வண்டியில் பிரயாணம் செய்திருக்கிறீர்கள். வழித்தூசி உடம்பெல்லாம் படிந்திருக்கிறது. போங்கள், போங்கள். விரைவில் கை, முகம் கழுவி உடை மாற்றிக்கொள்ளுங்கள். நான் அதற்குள் தேநீர் தயார் செய்கிறேன். (வசந்தனைக் குளியல் அறைக் கதவுப்பக்கம் தள்ளிவிடுகிறாள். வேலைக்காரிக்குக் குரல் கொடுக்கிறாள்.) மங்களா, மங்களா!

மங்களா: (இரண்டாவது அறை வாயிலிலிருந்து எட்டிப்பார்த்து) அம்மா!

மது: சாமான்களை எல்லாம் எடுத்துவைத்தாயா, இல்லையா?

மங்களா: ஆயிற்று, அம்மா!

மது : இந்த ட்ரேயையும் கோப்பைகளையும் எடு. தே
வைத்த வெந்நீர் ஆறிப்போயிருக்கும். ஐயா அங்கே கையும் மு
கழுவிக்கொள்ளப் போயிருக்கிறார்.

[மங்களா ட்ரே முதலியவற்றைத் தூக்கிக்கொண்டு போகிறாள். ஒரு ஸ்பூன் கீழே விழுந்துவிடுகிறது.]

மது : (சற்றுக் கடுங்குரலில்) மறுபடியும் இந்த ஸ்பூனை விரிப்புமீது நீ போட்டுவிட்டாயா. ஸ்பூனை விரிப்புமேல் போடாதே, பிசுபிசுவென்று ஆகிவிடுகிறது என்று இருபதுதடவை சொல்லிவிட்டேன். இப்போது ட்ரேயை வெளியில் வைத்துவிட்டு இந்த இடத்தை ஈரத்துணியால் துடைத்துவிடு.

வசந்தன் : (குளியலறையில் இருந்து) அடே அப்பா, சோப் எங்கே?

மது : கவனமாய்ப் பாருங்கள்; அங்கேயே மேடைமீது இருக்கிறது.

வசந்தன் : துவாலேகள்?

மது : கையும் முகமும் கழுவிக்கொண்டு வாருங்கள். இங்கே அறையிலிருந்து உலர்ந்த புதிய துவாலேயை எடுத்துத் துடைத்துக்கொள்ளுங்கள்.

[மங்களா துணித்துண்டு நனைத்துக்கொண்டு வருகிறாள்; மௌனமாக விரிப்பைச் சுத்தம் செய்யத் தொடங்குகிறாள்.]

மது : நீ விரிப்பைச் சுத்தம் செய்துவிட்டு டீ ஸ்டாண்டையும் கோப்பைகளையும் கழுவு; நான் தேநீருக்கு வெந்நீர் வைக்கிறேன்.

[சமையலறை வாசலிலிருந்து போய்விடுகிறாள். சிலகணங்கள் வரை மங்களா பேசாமல் விரிப்பைச் சுத்தம் செய்கிறாள். அப்பால், வசந்தன் கை, முகம் கழுவிக்கொண்டு சட்டைக் கைகளை மடித்து விட்டுக்கொண்டு ஒரு பாட்டை முணுமுணுத்தவாறு வருகிறான்.]

உள்ளம் ஆடும் ஆட்டத்திலே நான்
  ஊஞ்சல் எப்படி ஆடிடுவேன்—என்
உள்ளம் ஆடும் ஆட்டத்திலே—நல்
  ஊஞ்சல் எப்படி ஆடிடுவேன்.

[தன்னில் மெய்மறந்திருந்த அவன், சுரோவும் சிந்தியும் கை துடைத்துக்கொண்டு நாற்காலி முதுகில் போட்டிருந்த துண்டை எடுத்து, முகத்தைத் துடைத்துக்கொள்ளத் தொடங்குகிறான்.]

மது : (சமையலறையிலிருந்து) இந்தக் கெட்டிலே எப்படி ஆக்கிவைத்திருக்கிறாய் நீ, மங்களா. டன் கணக்கில் நடுவில் தூசி சேர்ந்திருக்கிறதே, (கெட்டிலேக் கையில் எடுத்துக்கொண்டு வருகிறாள்.) பாத்திரத்தைச் சுத்தம் செய்ய உனக்கு ஒருகாலும் வராது, மங்களா,

வசந்தன் ...யா தடவை சொல்லிவிட்டேன், சுத்தத்தின்... (திடீரென்று, தேநீர் ...ா துடைத்துக்கொண்ட துண்டால் வசந்தன் முகம் துடைத்துக் கொள்வதைக் கண்டு ஏறக்குறைய கூச்சலிட்டு) உலர்ந்த புதிய துவாலையா நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்? கேட்கிறேன், உலர்ந்த துவாலைக்கும் ஈரத்துவாலைக்கும் கூடவா உங்களால் வித்தியாசம் கண்டுகொள்ள முடியாது? இப்போதுதான் சுரோவும் சிந்தீயும் டீ சாப்பிட்டு இந்தத் துவாலையால் கை துடைத்துக்கொண்டு போனார்கள்.

வசந்தன் : (திடுக்கிட்டு) ஆனால் புதிய...

மது : புதிய துவாலை அங்கே அறையில் தொங்குகிறது.

வசந்தன் : இந்தப் போக்கிரித் துவாலைகள்! எனக்கு கவனமே இருப்பதில்லை. இரண்டு துவாலைகளும் உண்மையில் சுத்தமாக இருக்கின்றன, எனக்கு...

மது : சுத்தமாக இருக்கின்றன; சரி. கொஞ்சம் கண்ணைத் திறந்து பாருங்கள். ஈரமாக இருப்பதற்கும் உலர்ந்ததற்கும்...

வசந்தன் : நான் கண்ணாடியை எடுத்துவிட்டேனல்லவா? உனக்குத் தான் தெரியுமே, கண்ணாடி இல்லாவிட்டால் நம் உலகம்...

[வெட்கச் சிரிப்பு சிரிக்கிறான்.]

மது : ஆமாம், உங்கள் உலகம். நீங்கள் எந்த உலகத்தில் இருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. இப்போது கண்ணாடி இல்லை. கண்ணாடி இருந்துவிட்டால் மட்டும் உங்களுக்கு என்ன தெரிந்துவிடுகிறது?

[முகத்தைத் தூக்கிக்கொண்டு 'கௌச்'சில் தொப்பென்று விழுகிறாள்.]

வசந்தன் : இதென்ன மறுபடியும் முகத்தைத் தொங்கவிட்டு விட்டாயே. கோபம் வந்துவிட்டதா?

மது : (கேலியாகச் சிரித்து) இல்லை, எனக்குக் கோபம் இல்லை.

வசந்தன் : (கத்தி) இதைக்கூடப் புரிந்துகொள்ள முடியாத அவ்வளவு முட்டாள் நான் என்று உன் எண்ணமா?

(திரை திடீரென்று விழுகிறது.)

# ஸ்டிரைக்

—புவனேச்வர்

# பாத்திரங்கள்

## முதல் காட்சி

கணவன்
மனைவி

## இரண்டாம் காட்சி

மூன்று ஆண்கள்
ஓர் இளைஞன்

## மூன்றும் காட்சி

முதல் காட்சியின் கணவன்
இரண்டாம் காட்சியின் இளைஞன்

## (முதல் காட்சி)

(ஒரு நடுத்தர வர்க்கத்து பங்களாவின் சாப்பாட்டு அறை; அது தாழ்வாரத்தில் ஒருபக்கம் திரையிடப்பெற்று உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு பெரிய சைட் டேபிள்; அதன்மீது சர்க்கரைப் பாத்திரங்கள், பிளேட்கள், கோப்பைகள் பகட்டான முறையில் வைக்கப்பட்டுள்ளன. பக்கத்தில் ஒரு சிறு மேஜையின்மீது ஜாம், குவேக்கர் வோட்ஸ், பால்சன் வெண்ணெய், ஊறுகாயின் இரண்டு ஜாடிகள் வைக்கப் பட்டுள்ளன. சாப்பாட்டு மேஜை முட்டை வடிவமாக இருக்கிறது. அதற்கு நான்கு பக்கங்களிலும் நாற்காலிகள் கிடக்கின்றன. இரண்டில் ஓர் ஆடவனும் ஸ்திரீயும் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆடவன் நல்ல கணவன். ஸ்திரீ ஏதாவது பேசினால்தான் தெரியும்; குறைந்த பட்சம் பத்து நிமிடங்களாய் மௌனமாக மூன்றும் வேளைத் தேநீர் பருகிக்கொண்டிருக்கிறாள்.)

மனைவி: (தேநீர்க் கோப்பையைச் சுழலவிட்டபடி) அப்படியானால், சர்தார் மிகவும் திடுக்கிட்டாராக்கும்?

கணவன்: (கவனமின்றி) உம்...

மனைவி: (ஏதோ சொல்ல வாயெடுக்கிறாள், ஆனால் சொல்வதில்லை.)

கணவன்: அப்படியானால் இன்றைக்கு இரண்டு வேலைக்காரர்களும் விடுமுறை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்...

மனைவி: (இரண்டு வாய் தேநீர் அருந்தி, கைக்குட்டையால் உதடுகளைத் துடைத்தபடி) சர்தாருக்கு டைரக்டர்களிடம் நல்ல செல்வாக்கு...

கணவன்: (கேலிக்கிடமாகும் உற்சாகத்தோடு) இதுதானே! இது தான் இந்த துரதிர்ஷ்டசாலிகளைக் கெடுக்கிறது. பெரும்பான்மை இவர்களைக் கழுதையிலிருந்து கன்றுக்குட்டி ஆக்கிவிடும் என்று இவர்கள் நினைக்கிறார்கள். இந்த துரதிர்ஷ்டசாலிகளுக்குப் பெரும்பான்மை என்பதன் அர்த்தமே மாறிவிட்டது என்று தெரியாது. பெரும் பான்மைக் கருத்து என்பது பல துன்பப்படும், பாதி செத்த மண்ணுணிப் பாம்புகளின் பெயரா என முடியுமா! அது சக்தியின், உலகத்தை உலுக்க வல்ல சக்தியின் பெயர். அது எப்போதும் ஒரு மனிதன்—ஒரே மனிதனிடம் இருக்கும்.

[மனைவி பேசாமல் தேநீரை ஊற்றுகிருள், பாலை அதில் கலந்த வாறு. கோப்பையில் கவனமாக இருக்கிருள். கணவன் ரொட்டிமீது இரக்கமின்றி வெண்ணெய் தடவிக்கொண் டிருக்கிருன். சிறிது நேரம் மௌனம் நிலவுகிறது.]

கணவன் : சர்தார், ராஜா, பாபூ இவர்களிடம் எல்லாம் இதே கோளாறு. துரதிர்ஷ்டசாலிகளுக்கு வாழ்க்கைக் கலையே தெரியாது. செத்தவர்களைப்போல், ஆயுதமற்ற போக்கிரிகளைப்போல், இவர்கள் சாவுவரை நழுவிக்கொண்டே போகிருர்கள்! நான் அவர்களிடம் பிச்சை கேட்கவில்லை; அவர்களுடைய உள்ளங் கைகளைச் சொறியவில்லை; கூட்டுச் சேரவில்லை; சதி செய்யவில்லை என்று கண்டதும் அவர்கள் வாயை 'பே' என்று பிளந்துகொண்டு இருந்துவிட்டார்கள்; ஆம். வாயை 'பே' என்று பிளந்துகொண்டு இருந்துவிட்டார்கள்! (கோப்பையை வைத்துவிட்டுச் சிரிக்கிருன்) இவர்களுக்கு ஒன்றுமே புரிவதில்லை. எப்போதாவது அடிபடும்போது, எழுந்து நின்றுகொண்டு 'பே' என்று வாயைப் பிளந்துவிடுவார்கள். (குரலைத் தாழ்த்துகிருன்) ஆனல், ஆடைகளுக்கு அடியில் இந்தக் கௌரவமான தடிக் குதிரை முகக்காரர்கள் எல்லாரும் கழுதைகள், ஆம், கழுதைகள்! ஆம், ஒழுங் கான சமூகத்தில் இவர்களால் கட்டாயம் ஒரு லாபம் உண்டு—இவர்கள் நன்ருக அடிகளைத் தாங்கிக்கொள்வார்கள். டிவிடெண்டு குறைந்தால், இவர்களுடைய கைகால்கள் உப்பிவிடும்; யாராவது காலேஜ் போக்கிரி ஒருவன் புத்தக இங்கிலீஷில் ஸ்டிரைக்கைப்பற்றி பயமுறுத்திஞல் இவர்களுடைய கை கால்கள் உப்பிவிடும். ஒரே கோப வெறி கொள் வார்கள். (கையை நாடகபாணியில் ஆட்டிக்கொண்டே) மூன்று ஆண்டுகள் டிவிடெண்டு பிரித்துக் கொடுக்கமாட்டேன்; என்னை மறுத்துப்பாருங்கள் என்று சொல்லிவிட்டேன்!

[விகாரமான முறையில் கட்டை விரலைக் காட்டுகிருன்.]

[மனைவி தேநீரை முடித்துவிட்டு கடிகாரத்தைப் பார்க்கிருள். புருவங்களை நெறித்து ஏதோ ஜாடை காட்டுகிருள். பாவம், கணவனுக்கு என்ன புரியும். அவன் மனமொன்றிச் சாப் பிட்டுக்கொண்டிருக்கிருன். அறையில் மீண்டும் நிசப்தம் பரவிவிடுகிறது.]

கணவன் : (அலுத்தவன் போல்) அப்படியானல் வேலைக்காரர்கள் இரண்டுபேரும் இன்று மறைந்துவிட்டார்களா! துரைசானி அம்மா தான் தேநீர் தயாரித்துக் கொடுத்தார்கள்; ஆனல், இரவு என்ன ஆகும்? எனக்கு மீட்டிங்கு முடிய சுமார் எட்டு மணிவரை ஆகலாம்.

மனைவி : (கைக்குட்டையால் விரல்களைத் தேய்த்தபடி) நான்... நான்... (திடீரென்று) போய்க்கொண்டிருக்கிறேன்,

கணவன் : எங்கே போகிறாய்? எங்கே?

மனைவி : (வெளிப்பக்கம் கைக்குட்டையை ஆட்டி) அங்கே!

கணவன் : (வெளிப்பக்கம் பார்க்கிறான்) அங்கே என்றால்? கடைத் தெரு, ஷாப்பிங்குக்கா?

மனைவி : இல்லை, நான் லக்னோவுக்குப் போகிறேன். கடைசி ஜி.ஐ.பி. வண்டியில் திரும்பிவருவேன்.

கணவன் : (தன் வியப்பை இயன்றவரை மறைத்துக்கொண்டு) லக்னோ... ஜி ஐ.பி... ஆனால் ஏன்?

மனைவி : (தேநீரை முடித்துவிட்டாள்) ஒன்றுமில்லை, சும்மா சுற்றுவதற்கு. சர்தாரின் மனைவி, மிஸஸ் நிஹால், நான், மிஸ் மித்தர், நாலு பேருமாகப் போகிறோம் மிஸ் மித்தருக்குத்தான் அங்கு ஏதோ வேலை இருக்கிறது. ரேடியோ வாங்கப் போகிறாரோ என்னவோ.

கணவன் : (விரலைத் துடைத்துக்கொண்டிருக்கிறான்) அப்படியானால் (நிறுத்தி) கார் எடுத்துக்கொண்டு ஏன் போகக்கூடாது என்று கேட்கிறேன்.

மனைவி : இல்லை, கார் - கார் வேண்டாம். அதிகமாய்ப் போனால் ஜி.ஐ.பி.-யில் திரும்பிவிடுவோம். அதுதான் கடைசி ரயிலோ என்னவோ.

கணவன் : (பையிலிருந்து தங்க 'பாக்கெட்' கடிகாரத்தை எடுத்து, அதை வெயிஸ்கோட்மேல் துடைத்தவாறு ஜி.ஐ.பி. இங்கே பத்தே காலுக்கு வருகிறது. நீ இங்கே பத்து இருபத்தைந்துக்கு வந்துவிடுவாய். நான் காரைப் பம்பில் விட்டு வைக்கிறேன்—அதுதான், மில்கிராமின் பெட்ரோல் பம்பில். சாப்பாட்டுக்கு இப்படிச் செய்யலாம்! நான் காரில் டிபன் காரியரை வைத்துவிடுகிறேன்; நீ ஸ்டேஷனில் புலால்கறி வாங்கிவந்துவிடு; ரொட்டிகளை இங்கேயே சுட்டுக்கொள்ளலாம். (பையில் கடிகாரத்தை வைத்துக்கொள்கிறான். பிறகு அங்கிருந்து மலிவான சிகரெட் பெட்டி ஒன்றை எடுக்கிறான். ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொள்கிறான். புகைவிட்டவாறு) இப்போது சர்தாருக்குக் கர்வம் அடங்கிவிடும். ஒரு கொள்கை இல்லை, ஓர் ஊக்கம் இல்லை. இதையா வாழ்க்கை என்கிறார்கள்?

மனைவி : அப்படியானால் ஜி.ஐ.பி. இங்கே பத்தரை மணிக்கா வருகிறது?

கணவன் : (மறுபடியும் கடிகாரத்தை எடுக்கிறான். மறுபடியும் அதைத் துடைக்கிறான்) இல்லை, பத்தே காலுக்கு. ஜி.ஐ.பி. ரயில்கள் லேட்டாக வருவதில்லை — இது ஈ.ஐ.ஆர். இல்லை. (யாரோ தன் பொருளை வருணிப்பது போல்) உலகத்தின் எதிர்காலம் உரிய நேரத்தில் உரிய வேலையைச் செய்பவர்களின் கையில்தான் இருக்கிறது — எவன்

தன் இடத்திலேயே இருந்து, தன்னுடைய சிறு பங்குப் பணியை மெஷின் போல் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறுனே, அவனுக்கே உலகத்தின் எல்லா இன்பமும், எல்லாப் புகழும் சொந்தம். அமெரிக்காவின் ஒரு பெரிய எழுத்தாளன் பெர்னர்ட் ஷா. அவன் சொல்லி இருக்கிறுன்...

மனைவி : (திடீரென்று அலுத்தவள்போல்) தன் காரை அனுப்புவ தாக மிஸஸ் நிஹால் சொல்லி இருந்தார். நீங்கள் மீட்டிங்குக்கு எப்போது போகவேண்டும்?

கணவன் : (திடுக்கிட்டு கடிகாரத்தின் பக்கம் பார்த்து) நாலரையா? அப்படியானுல் நான் இதோ புறப்பட்டேன். (முணுமுணுக்கிறுன்) நாலாகிப் பதினேழு நிமிஷம் — மூன்று அல்லது நாலு நிமிஷம் எனக்கு டியூக் கம்பெனியில் ஆகும் — நாலு இருபத்தொன்று. அப்படியானுல் வா, உன்னைப் பிண்டீயின் வீட்டில் விடுகிறேன். அங்கிருந்து — இல்லா விட்டால் நிஹால் வீடுவரை போய்விடலாம். இரண்டு நிமிடம்தானே?

மனைவி : (சோம்பல் முறித்தபடி) சரி! (நிற்கிறுள்) இதே சேலை இருக்கட்டுமா, அல்லது வேறு கட்டி...

[திரும்பி, சேலையைப் பார்த்துக்கொண்டு இருக்கிறுள்.]

கணவன் : (சிகரெட்டை இரண்டு மூன்று தரம் உறிஞ்சி எறிந்து விட்டு) உன் விருப்பம்போல் செய். ஆனுல் என் தலைமேல் ஆணை யாகக் கேட்கிறேன்; லக்னேவில் என்ன என்று சொல்லிவிடு.

மனைவி : (நன்கு முறுவலிக்கிறுள்) லக்னேவில்— பல பொருள்கள்— இருக்கின்றன — சிறிய-பெரிய இமாம் வாடா (முகர்ரம் பண்டிகை நடக்கும் இடம்), பறவை நிலையம், ஹஜரத் கஞ்ச், அமீனு...

கணவன் : இல்லை, இன்று இரவு முக்கியமான விஷயம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்கிறேன்.

மனைவி: (போய்க்கொண்டே) இன்று இரவு முக்கியமான விஷயமா? முக்கியமான விஷயம் ஒன்றுமில்லை.

கணவன் : (ஒரு பெரிய போராட்டத்திற்குத் தயார் ஆகிறவன் போல்) இங்கே வா, இங்கே உட்கார். (மனைவி திரும்பி நிற்கிறுள்) இங்கே உட்கார். சில நாளாய் நீ இப்படி ஆகிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். உனக்கு உற்சாகமாக இல்லை என்று எனக்குத் தெரியும். ஆனுல், விடுமுறையில் நிர்மல் இங்கே வந்துவிடுவான். மோனீகூட வந்தாலும் வரலாம். மோனீ இந்தத் தடவை பி.ஏ.யில் ஃபர்ஸ்ட் என்று உனக்குத் தெரிந்திருக்கும். ஆனுல், ஆம், உனக்கு என்ன ஆகியிருக்கிறது? சொல்லு.

மனைவி : என்ன ஆகும்? ஒன்றும் ஆகவில்லை; நீங்கள் என் மனநிலை பற்றி ஒரு திட்டம்... தயாரித்துக் கோடுபோட்டால்... அந்தக் கோடு அங்கே... அங்கே மின்னல்வரை எட்டும்...

கணவன் : (உற்சாகமுற்று) ஆம், ஆனால் பின் ஏன் இந்தக் கலக்கங்கள் ? மனிதனுக்கு முன்னுள்ள எல்லாவற்றையும்விடப் பெரிய பிரச்னை, தன்னுடைய உபரி சக்தியை எப்படிப் பயன்படுத்துவது என்பது தான். ஆதிகாலக் காட்டுத்தனத்திலிருந்து இன்றைய நாகரிகம்வரை, தன் இன்பத்திற்காகவோ துன்பத்திற்காகவோ மனிதன் செய்துள்ளது எல்லாம் இந்தச் சக்தியைப் பயன்படுத்துவதற்குத்தான். தவிர, துன்பம், இன்பம் என்பவை வெறும் திடப்பொருள்கள். ஒருநாள் அவற்றைச் சீசாவில் அடைத்து விற்கப்போகிறார்கள், பார், சீசாவில்! எனக்கு இந்தத் திசுக்களை ஊக்குகிறவர்களைக் கண்டால் வெறுப்பு, கடும் வெறுப்பு. இவர்கள் தோற்றவர்கள் மட்டும் அல்ல, இவர்களே தங்கள் தோல்விப் பாட்டுகளைப் பாடுகிறார்கள், முழங்குகிறார்கள்!

மனைவி : சரி, எழுந்திருங்கள். அப்படியானால் நீங்கள் காரில் என்னைக் கொண்டுபோய் விடமாட்டீர்களா ?

கணவன் : (மறுபடியும் கடிகாரத்தை எடுக்கிறான். அதைத் துடைக்கிறான்) முடியாது! நீ இப்போது மிஸஸ் நிஹாலை எதிர்பார்க்கவேண்டியதுதான்.

[விரைவாக உள்ளே போய்விடுகிறான். மனைவி அங்கேயே வெளிப் பக்கம் கூர்ந்து பார்த்துக்கொண்டே உட்கார்ந்து இருக்கிறாள். சற்று நேரத்தில் கணவன் உள்ளே இருந்து வருகிறான், கக்கத்தில் பழைய ஃபெல்ட் ஹாட்டை இடுக்கிக்கொண்டு; கையிலுள்ள சிறு தடியைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டிருக்கிறான்.]

கணவன் : பத்தேகாலுக்கு நீ ஸ்டேஷனுக்கு வந்துவிடுவாய். அங்கிருந்து மில்கிராம்வரை ஐந்து நிமிட நடை. பத்து இருபது, அதாவது பத்தரைக்குள் நீ இங்கே வந்து சேர்ந்திருப்பாய். அதாவது பத்து நாற்பதுக்குள் நாம் இங்கேயே இதே மேஜையில் டின்னருக்கு உட்கார்ந்திருப்போம்! நான் ஸ்டேஷனுக்கு வருவேன், ஆனால் மிஸ் மித்தர்— உனக்கு வீண் எரிச்சல் உண்டாகும் (விகாரமான சிரிப்பு சிரிக்கிறான். மனைவியை அது பாதிக்கவில்லை) சரி. சீரியோ!

[படிகளிலிருந்து விரைந்து இறங்கிப் போய்விடுகிறான். மனைவி அப்படியே உட்கார்ந்திருக்கிறாள். பிறகு ஏதோ கவனமாய் எழுந்து உள்ளே போகிறாள். மேடையில் முற்றிலும் இருளடைகிறது. இடையில் இரண்டுமுறை ஒளி பரவ, முழு சீனிலும் வெறும் மேஜையும் நாற்காலிகளும் தென்படுகின்றன. கடிகாரம் முதலில் எட்டரை காட்டி, அப்புறம் ஒன்பதேகால் காட்டுகிறது.]

## (இரண்டாம் காட்சி)

*[ஒரு நடுத்தர வர்க்கக் கிளப்பின் அறை. மிகவும் பிரகாசமான வெளிச்சம் பரவியிருக்கிறது. மேஜைகள்மீது சீட்டுகளும், நிறைந்த ஆஷ் டிரேக்களும் சிதறிக் கிடக்கின்றன. பல நாற்காலிகளும் நாலாப் பக்கங்களிலும் தாறுமாருய்க் கிடக்கின்றன. மூலேயில் ஒரு பெரிய ஃபிரஞ்ச் விண்டோ(ஜன்னல்) வுக்கு எதிரில் சோபாக்கள்மீது மூன்று பேர் உட்கார்ந்திருக்கிருர்கள். சீனில் அவர்களுடைய முதுகுகள் மட்டும் தென்படுகின்றன. அருகிலேயே, ஒரு நாற்காலியில், நல்ல ருசியோடு உடை அணிந்துள்ள ஓர் இளேஞன் அடிக்கடி சீட்டு கலேத்துப் போட்டுக்கொண்டிருக்கிருன், எதிரிலுள்ள ஒரு சிறிய மேஜை மீது. ஜன்னல் ஃபிரேமில் விண்மீன்களால் மலர்ந்த வானம் சித்திரம்போல் பதிந்துள்ளது. சுவரிலுள்ள பெரிய கடிகாரம் எட்டேமுக்கால் மணி அடிக்கிறது. அறையில் எல்லாரும் மௌனமாக இருக்கிருர்கள். ஆனுல் நிசப்தம் இல்லே.]*

**முதல் மனிதன்:** இந்தப் பீடைபிடித்த பிரிட்ஜ் ஆட்டத்தை ஏன் ஆடுகிறேன் என்று தெரியவில்லே.

*[குரல் வயதானவருடையது போன்று இருக்கிறது.]*

**இரண்டாம் மனிதன்:** *(கொட்டாவி விட்டவாறு)* என்னதான் செய்வது—வா, வேறு ஏதாவது கொடியை உயர்த்துவோம்.

**மூன்ரும் மனிதன்:** இவர்கள் வரக்காணேமே. *(நாற்காலியில் இருந்த இளேஞனின் பக்கம் திரும்பி)* இதோ பாருங்கள், சார், நீங்கள் கலப்புச் சமூகம் பற்றின பேச்சைப் பேசுங்கள்.

*[இரண்டு மனிதர்களும் திரும்பி இளேஞன் பக்கம் பார்க்கிருர்கள். மூவரும் பருத்த நடுத்தர வயதினர். விலே உயர்ந்த உடை அணிந்து, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிருர்கள்.]*

**இளேஞன்:** *(வெட்கப்பட்டவன்போல்)* நான் எப்படிப் பேசமுடியும்? ஆம், என் பெண்டாட்டி வந்துவிட்டால் கட்டாயம் நான் இப்படி செய்வேன். அவரைப் பாருங்கள்...

*[மூவரும் ஏக காலத்தில் 'உம்' என்கிருர்கள். பிறகு திரும்பி உட்கார்ந்து விடுகிருர்கள்; மௌனமாகி விடுகிருர்கள். இளேஞன் மீண்டும் சீட்டு கலேத்துப் போடத் தொடங்குகிருன்.]*

முதல் மனிதன்: (பையிலிருந்து சிகரெட் கேஸை வெளியில் எடுக்கிறான். மறுபடியும் வைத்துவிடுகிறான்.) போகலாம் அண்ணா, எழுந்திரு. எனக்குக் காலையிலிருந்தே வேலை இருக்கிறது.

இரண்டாம் மனிதன்: (திரும்பி கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே) இந்த ஸ்ரீசந்திரன் மோசம் பண்ணிவிட்டுப் போய் விட்டானே!

முதல் மனிதன்: இல்லை, அண்ணா. எங்காவது மாட்டிக்கொண்டிருப்பான். அவனுக்குச் சிலந்தியைப்போல ஆயிரம் கண்கள்.

இளைஞன்: அவர் கட்டாயம் வருவார். எனக்கு விருந்து சொல்லியிருக்கிறார்.

மூன்று மனிதர்களும்: (திரும்பி) இன்று பட்டாவின் பெண்டாட்டி இல்லை!

[எல்லாரும் ஒருவரையொருவர் பார்க்கிறார்கள்.]

இளைஞன்: எனக்குத் தெரிந்திருந்தால் நான் எதிர்பார்த்திருக்கவே மாட்டேன்.

முதல் மனிதன்: இவனை— ஸ்ரீ சந்திரனைப் பாருங்களேன். இவன் வக்கீல் தொழிலை விட்டு வியாபாரத்தில் வந்தபோது, இவன் வெற்றி பெறுவான் என்ற நம்பிக்கை எனக்குக் கொஞ்சமும் இல்லை ஆனால், பாருங்கள். அவன் இன்று ஒரு சர்வாதிகாரி ஆகிவிட்டான். (சிரிக்கிறான்)

இரண்டாம் மனிதன்: (கொட்டாவி விடுகிறான். மோதிரமணிந்த விரல்களைச் சொடுக்கிக்கொள்கிறான்.) அதிர்ஷ்டமும் ஒரு பொருள்தான் என்று நாளாக ஆக எனக்கு நம்பிக்கை உண்டாகிறது.

[இளைஞன் சீட்டை வைத்துவிட்டு இவர்கள் பேசுவதைக் கூர்ந்து கவனிக்கிறான்]

மூன்றும் மனிதன்: (எழுந்து நிற்கிறான்) வாருங்கள், புறப்படலாம். மிஸ்டர் சஹாய், வாருங்கள். உங்களைக் காரில் கொண்டு போய் விட்டு வருகிறேன். வீடுவரை...

முதல் மனிதன்: உட்காருங்கள், ஸ்ரீ சந்திரன் வந்துகொண்டிருப்பான்.

இளைஞன்: காரில் கொண்டுபோய் விடும்படி அவரும் உங்களிடம் சொல்லியிருந்தார்.

மூன்றும் மனிதன்: உம்...ம், அப்படியானால் இருக்க வேண்டியது தான்.

[இளைஞன் ஏதாவது ஒரு விஷயத்தைத் தொடங்க எண்ணுகிறான்.]

இளைஞன்: இன்று மீரட் சதி வழக்கு ஆரம்பம் ஆகிவிட்டது.

மூன்று மனிதர்களும்: என்ன? சரிதான்!

[இம்மாதிரி விஷயங்களைத் தாங்கள் கவனிப்பதில்லை என்று காட்டிக்கொள்ள மூவரும் விரும்புகிறார்கள். ஆனால் சற்று தோல்வியுற்றவர்கள் போலாகிறார்கள்.]

முதலாம் மனிதன் : ஸ்ரீசந்திரன் இதைப்பற்றி விவரமாய்ச் சொன்னான்.

[சிரிக்கிறான். எல்லாரும் அவன் பக்கம் திரும்பிக் கேட்க விரும்புகிறார்கள்.]

முதல் மனிதன் : (கோட் காலரைச் சரி செய்துகொண்டே) என்னோடு கமிஷனரைப் பார்க்க வந்தார். அவர் மீரட் விஷயம் எடுத்தார். இவர் தலை மறைந்ததும் கமிஷனர் ஹிந்துஸ்தானியில்— ஹிந்துஸ்தானியில் பேசினார் — ஐயா, இவர்களை இப்படியே விட்டு விடவேண்டும். 'இவர்கள் நம் விளையாட்டுப் பொருள்கள்' என்றார்.

[மூவரும் ஃபாஷனபிள் சிரிப்பு சிரிக்கிறார்கள். இளைஞனும் அவர்களோடு சேர்ந்துகொள்கிறான்.]

இரண்டாம் மனிதன் : ஒவ்வொரு நாடு, ஒவ்வொரு அரசாங்கத்தின் முன்னுள்ள பிரச்னை இதுதான்: எப்படி அதன் வரிகளை மிகக் குறைப்பது? வரிகளைக் குறையுங்கள், குடிமக்கள் சுபிட்சமாக இருப் பார்கள்.

முதல் மனிதன் : நம்மைப்போல் அரசுத்தொடர்பு இல்லாதவர்கள் ரஷியாவுக்குப் போய், இந்தக் கனவான்கள் அங்கு என்ன செய்து காட்டி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். உலகம் முழு வதையும் ரஷியாவுக்கு முன்னிலையில் அற்பமாக எண்ணுகிறார்கள்.

மூன்றாம் மனிதன் : அதாவது, கடவுள்கூட!

[மீண்டும் மூவரும் அலுத்தவர்கள்போல் சிரிக்கிறார்கள். வெளியில் சிறிது சத்தம் போலக் கேட்கிறது. எல்லாரும் வெளிப்பக்கம் பார்க்கிறார்கள். முதல் சீனில் கவலையாகக் காட்சி தந்த கணவன், மகிழ்ச்சியுடனும் அசட்டையுடனும் வருகிறான்.]

கணவன் : தன் ஹாட்டையும் கைத்தடியையும் ஒரு காலி மேஜை மீது வைத்தபடி) அப்படியானால் நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டு தான் இருந்தீர்களா! பிரிட்ஜ் முடித்துவிட்டீர்களா?

இரண்டாம் மனிதன் : (அறை நடுவில் வந்துகொண்டு) இன்று சஹாய் மறுபடியும் தோற்றுவிட்டார்!

கணவன் : (சிரித்தபடி) சஹாய், நீர் ஒரு பெரிய தோல்வியாளர்!

[இப்போது எல்லாரும் தங்கள் இடத்தை விட்டு எழுந்து அறைக்கு நடுவில் வந்துவிட்டார்கள்.]

முதல் மனிதன் : வெற்றி எல்லாம் உம் பங்கில்தானே இருக்கிறது.

கணவன்: தம்பி, வெற்றியாவது தோல்வியாவது. இங்கே இதைப் பற்றிக் கனவில்கூட நினைப்பதில்லை. நாம் நாணயமாக வாழ அறிவோம். மறுபடியும் சொல்கிறேன். வாழ்க்கை ஒரு கலை; எல்லாவற்றையும்விடப் பெரிய கலை!

மூன்றும் மனிதன்: (கொட்டாவி விட்டபடி) போகலாம் வாருங்கள். மிகவும் நேரம் ஆகிவிட்டது. (எல்லாரும் கடிகாரத்தின் பக்கம் பார்க்கிறார்கள். கணவன் மறுபடியும் தன் தங்கக் கடியாரத்தை எடுக்கிறான். துடைக்கிறான்.) வாருங்கள், வீடுவரை கொண்டுபோய் விடவேண்டியிருக்கும்.

[மூவரும் உள்ளே போய்த் தங்கள் ஹாட்களை எடுத்துக்கொள்கிறார்கள். இளைஞன் மட்டும் வெறும் தலையாக இருக்கிறான்.]

முதல் மனிதன்: இந்தக் காவல்காரன் எங்கே செத்துத் தொலைந்து போகிறான் என்று தெரியவில்லை.

இரண்டாம் மனிதன்: செத்துத் தொலைகிறானா? நன்றாக இருக்கிறதே! புதுப் பெண்சாதி கொண்டுவந்திருக்கிறான். கொஞ்சம் யோசியுங்கள், புதுப் பெண்சாதி!

[எல்லாரும் இளைஞர்களைப்போல் சிரிக்கிறார்கள். இளைஞன் மட்டும் சற்று வெட்கப்பட்டவன்போல் எல்லாருக்கும் பின்னால் போகிறான். வெளி வராந்தாவிலிருந்து இரண்டு மூன்று தடவை 'சௌக்கிதார்!' என்ற குரல் வருகிறது. பிறகு மோட்டார்கள் புறப்படும் சத்தம், பிறகு மௌனம். மேடையில் இருண்டு போகிறது. ஆனால் இடையில் இரண்டு மூன்று முறை வெளிச்சம் விழுகிறது. குடியானவர்களைப் போல் வதங்கிய முகத்துடன் சௌக்கிதார் மேஜைகளைத் துடைத்துக்கொண்டும் எரிந்த சிகரெட் துண்டுகளைப் பொறுக்கிக்கொண்டும் இருப்பது தெரிகிறது.]

## (மூன்றும் காட்சி)

*(முதல் சீன் அறையின் வராந்தா. நீளமானது, சராசரியைவிடச் சற்று உயரமானது. தூண்களுக்குப் பக்கத்தில் பெரிய பெரிய 'பாம்'கள் வைக்கப்பட்டுள்ளன. தூண்கள்மீது கொடிகளும் படர்ந்துள்ளன. எல்லாக் கதவுகளும் மூடியுள்ளன. அவற்றுக்கு முன்ளுல் ஒழுங்கீனமாய் நாற்காலிகள் மூன்றுநாலு கிடக்கின்றன. படிகள்மீது அடர்த்தியான ரோமமுடைய ஒரு பெரிய நாய் படுத்திருக்கிறது. காட்சியின் தொடக்கத்தில் மனிதர் யாரும் தென்படவில்லை. ஆனுல் சற்றுநேரத்தில் கிளப்பிலிருந்து வருகிற வீட்டுத்தலைவரும் இளைஞனும் படியேறுவது புலப்படுகிறது. நாய் தலைதூக்கி மெதுவாய்ப் புரிந்து கொண்டு உறுமுகிறது. பிறகு வாலை ஆட்டிக்கொண்டு பின்ளுலேயே வந்து வராந்தாவில் உட்கார்ந்துவிடுகிறது. ஸ்டேஜ்மீது மிகக்குறைவான வெளிச்சம் இருக்கிறது.)*

**கணவன்:** (சிரமப்பட்டு ஏறியபடி) அப்படியாளுல் இதைச் சொல்லுங்கள்? இருங்கள்...

*[பையைத் துழாவுகிருன்.]*

*[பிறகு ஓரே தாவலில் படிகளில் இறங்கி பங்களாவுக்குப் பின்ளுல் போகிருன். இளைஞன் அங்கேயே நின்றபடி அவன் சென்ற திசையில் ஆவலோடு பார்த்துப் புன்சிரிப்பு செய்கிருன். சென்றவன் விரைவில் திரும்பி வந்துவிடுகிருன். பரபரப்பாய்ப் பையைத் துழாவுகிருன்.]*

**கணவன்:** என் மனைவி சாவியை என்னிடம் கொடுத்துவிட்டுப் போனுளா, அல்லது, எங்காவது வைத்துவிட்டுப் போனுளா என்று தெரியவில்லை. வேலைக்காரர்கள்... என் வாழ்க்கையில் ஸ்வரம் அபஸ்வரமாக இருக்கிறது என்ருல் அது இந்த வேலையாட்கள்தான் என்கிறேன். விடுமுறை – விடுமுறை—விடுமுறை! ஒவ்வொரு நாளும் இவர்களுக்கு விடுமுறை வேண்டும். போக்கிரிகளுக்கு ஒன்றும் தெரிவதில்லை...

*[இளைஞன் திடீரென்று ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்காருகிருன். கணவன் ஸ்விட்சைத் தேடிப் பிடித்து விளக்கைப் போடுகிருன். மற்ருெரு நாற்காலியில் இளைஞனுக்கு நேர் எதிரில் அமர்ந்துவிடுகிருன்.]*

**கணவன்:** (வலுவாய்ச் சிரித்தபடி) ஸ்விட்ச் அறைக்குள் இருந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும்!

**இளைஞன்:** இங்கும் நாம் ஆனந்தமாய்த்தானே உட்கார்ந்திருக்கிறோம்.

**கணவன் :** ஆம், ஆம். ஒன்பதரை மணி ஆகி இருக்கிறது. (கடிகாரத்தை எடுக்கிறான். அதைத் துடைக்கின்றான்.) ஒன்பது இருபத்தேழு. என் மனைவி இங்கே பத்தரைக்குள் வந்துவிடுவாள். சாப்பாடும் கையோடு கொண்டு வருவாள். (கொட்டாவிவிடுகிறான்) மேலே சொல்லுங்கள்.

**இளைஞன் :** (ஆவலோடு) எனக்கு அறை நல்லதாய்க் கிடைத்து விட்டது...

**கணவன் :** (செருப்புகளைத் தட்டிக்கொண்டே) சரி, அறையும் - கிறையும் இருக்கட்டும். நீங்கள் ஏன் மணம் புரிந்துகொள்ளவில்லை? அதைச் சொல்லவில்லையே.

**இளைஞன் :** (கஷ்டத்தோடு) செய்து கொள்ளவில்லை, அவ்வளவுதான். இல்லை என்பதற்குக் காரணம் ஒன்றும் இல்லை.

**கணவன் :** (புன்னகை புரிகிறான்.) நிசமாகச் சொல்லுகிறேன், உங்களைப் போன்ற இளைஞர்களைப் பார்த்துப் பலமுறை நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

**இளைஞன் :** (இதை முற்றிலும் எதிர் பாராதவன்போல்) அப்படியா சார்! (சிரிக்கிறான்.)

**கணவன் :** (சமாளித்துக்கொண்டு) இல்லை, உங்களை நான் பரிகாசம் செய்யவில்லை. நீங்கள் எங்களைவிட ஒரு தலைமுறை முன்னால் உள்ள வர்கள். ஆனால் உங்களிடம் கணக்குக் கேட்கப்பட்டால் உங்களிடம் என்ன இருக்கிறது? நீங்கள் எனக்குச் சொல்லுங்கள்: நீங்கள் உலகத் துக்கு என்ன கொடுத்தீர்கள்? நான் விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளைப் பற்றிப் பேசவில்லை. அதற்கு ஒரு முழு ஸ்கீம் இருக்கிறது. அதில் தலைமுறை அல்லது சமூகத்தின் தலையீடு ஒன்றும் இல்லை. இயற்கை தன்னைத்தானே மெதுவாக நிறைவு செய்து கொள்கிறது...... என் கருத்துகள் கர்நாடகமானவை என்று மனத்திற்குள் சிரித்துக் கொள்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்; ஆனால், தம்பி, நீங்கள் உங்களுடைய புதிய கருத்துகளால் என்ன சாதித்துவிட்டீர்கள்? சொல்லுங்கள்.

**இளைஞன் :** திருமணம் பற்றி அல்லவா பேச்சு நடந்துகொண் டிருந்தது?

**கணவன் :** ஆம், ஆம். திருமணத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு மனிதனும் சமூக வாழ்க்கையில் கலந்துகொள்ள வேண்டும் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள். நான் அடிக்கடி சொல்வது போல், உலகம் ஒரு கூட்டுக்கடை. மேஜரான ஒவ்வொருவனும் அதில் கூட்டாளி ஆகவேண்டியது கடமை. இதற்கான முயற்சியில் நீங்கள் உயிரைத் துறக்காவிட்டால், மனிதன் என்று சொல்லிக்கொள்ள

உங்களுக்கு ஒரு உரிமையும் இல்லை. (பரபரப்புற்று) நான் சொல்கிறேன். எல்லாப் புத்தகங்களும் தவறானவை, எல்லாம் பொய்யானவை!

இளைஞன் : நானே மணம் புரிந்துகொள்ளவில்லை. ஏன் செய்துகொள்ளவில்லை என்றால், எனக்கு ஒருவேளை, ஒருகாலும் பெண்ணின் மூளை...

கணவன் : தம்பீ, திருமணம் ஓர் ஆழமான பிரச்னை. நீங்கள் அதோடு விளையாட முடியாது. நான் கேட்கிறேன்: நீங்கள் ஒரு ஃபாக்டரியில் ஒவ்வொரு வித விஞ்ஞானம், சட்டம், சிறப்பான ஞானத்தைப் பயன்படுத்திக்கொள்கிறீர்கள். அப்படி இருக்க மனிதனை மலிவிலும் மலிவான உபயோகமற்றதிலும் உபயோகமற்ற சக்திகளை மட்டும் பயன்படுத்தும்படியாக வாழ்க்கையை இப்படிப் பரமாத்மாவின் நம்பிக்கையில் எந்தக் காரணத்துக்காக விடவேண்டும்? என்று நான் கேட்கிறேன். பெண்ணை என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை என்கிறீர்கள். ஐயா, இவை எல்லாம் வெறும் சொற்கள், சொற்கள்! புரிந்துகொள்ள வேண்டும் என்று என்ன அவசியம்? மெஷினின் ஒரு புல்லி மற்றொரு புல்லியை அளக்கவோ, நிறுக்கவோ, புரிந்துகொள்ளவோ போவதில்லை. ஆணும் பெண்ணும் வாழ்க்கை மெஷினின் இரண்டு பாகங்கள்—இரண்டு பாகங்கள்!

இளைஞன் : இந்த ஃபாக்டரிக்கும் மெஷினுக்கும் ஒரு பாகம்தான்!

கணவன் : இல்லை, ஐயா, என்னைப் பாருங்கள். எனக்கு முதல் மனைவி இருந்தாள். போக்கிரிக்கு எப்போதும் என் மேல் குறை. ஆனால் அவளுக்கு வியாதி வந்ததும் ஒவ்வொரு கணமும் அவளுக்குத் தலைப் பக்கமே இருந்தேன். என் பெயரை ஜபித்துக்கொண்டே இறந்தாள். இப்போது இவள் என் இரண்டாம் மனைவி. எங்களுக்குக் குழந்தை இல்லை; அதாவது, இந்த மனைவிக்கு. நாங்கள் சேர்ந்து கிளப்புக்குப் போவதில்லை. வாரம் ஒரு முறை சினிமாவுக்குப் போவோம். மலை, காடு என்று போக எனக்கு நேரம் இல்லை. ஆனால், நாங்கள் எல்லையில்லாத மகிழ்ச்சியோடு இருக்கிறோம். ஒருகாலும் எங்களுக்குள் வேற்றுமை உணர்ச்சி ஏற்பட்டதே இல்லை. நாங்கள் இருவரும் தத்தம் இடத்தைப் புரிந்துகொண்டுவிட்டோம். அந்த இடத்தை விட்டு அசையாமல் உறுதியாக இருக்கிறோம் என்பதைத்தான் சொல்ல விரும்பினேன். அவள் நோயுற்றால் நான் டாக்டர்களால் வீட்டை நிரப்பி விடுவதில்லை; நான் நோயுற்றால் அவள் அழுது புலம்புவதில்லை. நான் எப்படிச் சொல்வது; இந்த நேரத்தில் என் மனைவி ஸ்டேஷன் புக் ஸ்டாலில் என்ன புத்தகம் பார்த்துக்கொண்டிருக்கிறாள் என்று எனக்குத் தெரியும். வண்டி வருவதற்குப் பத்து நிமிடத்துக்கு முன்னாலேயே அவள் ஸ்டேஷனுக்கு வந்துவிடுவாள் என்று எனக்குத் தெரியும்.

இளைஞன் : ஆனால் மெஷினின் ஒரு பாகம் கெட்டுவிட்டதாக வைத்துக்கொள்ளுங்கள்!

கணவன் : (சிரித்தபடி) அப்படியானால் பாகத்தை மாற்றிவிடுங்கள். நீங்களே மாறிவிடுங்கள். புத்தகங்கள் — நான் உங்களுக்குச் சொல்கிறேன் — புத்தகங்கள் என்ன? நான் பஞ்சு வியாபாரம் பற்றி ஒரு சிறு புத்தகம் எழுதினேன். ஜனங்கள் நாள்தோறும் எதை நினைத்தார்களோ எவைபற்றி விவாதித்துக்கொண்டிருந்தார்களோ அவற்றை எல்லாம் தான் நான் எழுதியிருந்தேன். முடிவு, புத்தகம் மிகப் பிரபலமாகி விட்டது. ஆனால் நான் போதித்த கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் கனவிலும் நினைப்பதில்லை.

[இளைஞன் ஏதாவது சொல்வான் என்று நம்பிக் கணவன் திடீரென்று மௌனமாகிவிடுகிறான். இளைஞன் தலைகுனிந்தபடி மௌனமாக இருக்கிறான். நாய் இவ்வளவு சந்தடி கேட்டு அருகில் வந்து நின்று இருந்தது. கொஞ்ச நேரம் மௌனம் நிலவுகிறது.]

இளைஞன் : (தலை தூக்கி) ஃபாக்டரி, பாகம். உண்மையில் இது நன்றாக இருக்கிறது!

[கணவன் ஏதோ கூறத் தயாராகிறான். ஆனால் கதவு கடகடக்கும் சத்தம் கேட்கிறது. நாய் குரைத்துக்கொண்டே ஓடுகிறது. அவன் நாயைக் கூப்பிடுகிறான். வராந்தா ஓரமாய் நின்று கொண்டு 'யாரது?' என்று பலமாய்க் கத்துகிறான். பிறகு மறுபடியும் நாயைக் கூப்பிடுகிறான். ஒரு பணியாள் சைக்கிளைக் கையால் பிடித்துக்கொண்டு வருகிறான். சலாம் செய்துவிட்டுப் பையிலிருந்து ஒரு கடிதவுறையை எடுத்துக் கொடுக்கிறான். மீண்டும் சலாம் செய்துவிட்டு நின்றுவிடுகிறான்.]

கணவன் : என்ன, நீ யார்? (உறையை எடுத்துத் தன் கடிகாரச் செயினின் கத்தியால் அதைப் பிரிக்கிறான். வெளிச்சத்தின் பக்கம் போகிறான்) ஆங்!

பணியாள் : நான் நிஹால் ஐயாவின் டிரைவர். துரைசானி அம்மா அனுப்பினார்கள். நாளைக்கு வருவதாய்ச் சொல்லச் சொன்னார்கள்.

கணவன் (கடிதம் படிப்பதை நிறுத்தி) நாளைக்கு வருவார்களாமா? ஆங்! உனக்கு என்ன தெரியும்...

பணியாள் : எல்லா துரைசானி அம்மாக்களும் அங்கேயே இருப்பார்கள். மோட்டார்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். என்னிடம் சொன்னார்கள்...

கணவன் : (உலாவியபடி பரபரப்புடன்) சாப்பாடு. வீடு... என் கார் வேறே மில்கிராமின் பம்பில் கிடக்கிறது.

*[பணியாள் மறுபடியும் சலாம் செய்கிறான். போகிறான். கொஞ்ச தூரம் சென்ற பிறகு,]*

**பணியாள் :** ஐயா, உங்கள் நாய் புத்திசாலி நாய். இங்கிலீஷ் நாயா?

**கணவன் :** (நம்பிக்கை இழந்த உணர்ச்சியோடு) கடைசியில்—கடைசியில், உம்...

**இளைஞன் :** (எழுந்தபடி) வாருங்கள் என் ஹோட்டலுக்கு வாருங்கள். உங்கள் ஃபாக்டரியில் இன்று 'ஸ்டிரைக்' ஆகிவிட்டது.

**கணவன் :** நான் சொல்கிறேன், என் கார் மில்கிராமின் பம்பில் கிடக்கிறது...

[மறுபடியும் கடிதத்தை வெளிச்சத்துக்கு அடியில் கொண்டு போய்ப் படிக்கிறான்.]

(திரை விழுகிறது.)

# இடியும் கோட்டைச் சுவர்

—விஷ்ணு பிரபாகர்

## பாத்திரங்கள்

மனீஷா

விவேக்

தீப்தி

விசுவஜீத்

கருணை

அசோக்

சரத்

இந்து

(ஒரு நடுத்தரவர்க்கக் குடும்பத்து வீடு, அதில் பழமை புதுமை எல்லாம் வேறு விதியின்றிக் கூடி இருக்கின்றன. இக்காலத்துப் பாணியில் அமைந்த அறை—ஒரு பக்கம் உணவுக்காக மேஜை, நாற்காலிகள், மறுபக்கம் சோபா முதலியவை—இரண்டுக்கும் இடையில் ஒரு திரை, அது பெரும்பாலும் விலக்கியே வைக்கப்பட்டுள்ளது. கூடத்துப் பகுதி மிக விசாலமாக இருக்கிறது. சாப்பாட்டு அறையின் டேபிள் புதிது; ஆனால் நாற்காலிகள் சௌகரியம்போல் இரு பக்கங்களிலும் போடப்படுவதால் ஒரே மாதிரி இல்லை; சில அழுக்கடைந்தும் சில உடைசலாகவும் இருக்கின்றன. மேஜைமீது புத்தகங்களும் பத்திரிகைகளும் குவியலாய்க் கிடக்கின்றன. நாற்காலிகள் சிலவற்றின்மீது துவாலைகள் தொங்கிக்கொண்டிருந்தால், சிலவற்றில் சட்டை அல்லது புஷ் ஷர்ட்டுகள். இடது பக்கம் அலமாரி; அதில் சாப்பாடு சம்பந்தமான டப்பாக்களும் இப்படி வேறு சில சாமான்களும் காணப்படுகின்றன. சாப்பாட்டு அறைப் பக்க சோபா அவ்வளவு பழையதாக இல்லை: ஆனால் அதன் உறை மிகவும் அழுக்கடைந்து விட்டது. மோடாக்கள், முக்காலிகள் நிலைமையும் இதுதான். நடு முக்காலியில் இரு வார ஏடுகள் பிரித்தபடி கிடக்கின்றன. உள்ளே போக இரண்டு வழிகள் இருக்கின்றன—ஒன்று எதிரில்; மற்றொன்று வலது பக்கத்திலிருந்து. வெளியிலிருந்து வருகிறவழி கூடத்து அறையில் வலது பக்கமாக இருக்கிறது. இடது பக்க மூலையில் ஓர் அலமாரி இருக்கிறது; அதில் புத்தகங்கள் உள்ளன. ஆனால், மேல் தட்டில் சில விளையாட்டுச் சாமான்களும் இருக்கின்றன. இந்தப் பக்கம் ஒரு மேஜை, அதன்மீது மற்றப் பொருள்களோடு டெலிபோனும் வைக்கப்பட்டுள்ளது. திரை மேலே எழுந்ததும் வெளிச்சம் எல்லாவற்றையும் மெதுமெதுவாய்க் காட்டுகிறது—ஒழுங்கு முயற்சியையும் அசட்டையையும். இச்சமயம் அங்கு யாருமில்லை. மேஜைமீதுள்ள சில காகிதங்கள் காற்றில் பறந்து சிதறுகின்றன. பின்னணியில் வாண வேடிக்கைபோல் குரல்கள் கேட்கின்றன. குழந்தைகளின் சத்தம் குறைகிறது, கூடுகிறது. பல கணங்களுக்குப் பிறகு 25—26 வயதுள்ள ஓர் இளம் பெண் உள்ளே இருந்து வருகிறாள். அவளுடைய பெயர் மனீஷா. பார்க்க அழகாக இருக்கிறாள். ஒயிலான பாணியில் உடை அணிந்திருக்கிறாள்; பின்னலும் அப்படியே. சேலை, சாண்டல், பாக், லிப்ஸ்டிக் எல்லாம் ஒரே மாதிரி நிறம். அவள் இப்போது மிகவும் சிந்தனை வயப்பட்டு இருக்கிறாள். இங்குமங்கும் பார்க்கிறாள்; வாயிலில் வந்து தயங்கி நிற்கிறாள்; பேசத் தொடங்குகிறாள்.)

**மனீஷா :** யாருமில்லை. நான் போக முடியும். நீங்கள் கேட்கலாம், நான் யார், எங்கே போய்க்கொண்டிருக்கிறேன் என்று. இதுதான்

இந்த வீட்டின் பிரச்னை. இதைத்தான் நீங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்கள். கேட்கிறேன், தனக்கு நல்லது கெட்டது நினைக்க முடியாத, தன் விருப்பம்போல் வந்து போக முடியாத, எது சரியெனத் தோன்றுகிறதோ அதைச் செய்ய முடியாத, அவ்வளவு அறியாதவளாகவா நான் உங்களுக்குத் தென்படுகிறேன்? இல்லை, ஐயா, என்னுடைய வழியை நீங்கள் தேர்ந்தெடுக்க நான் உரிமை தர முடியாது; ஒருகாலும் தர முடியாது. நான் போய்க்கொண்டிருக்கிறேன்—நான் விரும்புகிற இடத்துக்கு.

[அவள் விரைந்து அங்கிருந்து போய்விடுகிறாள். ஒரு கணம் இசை பெருகுகிறது. பிறகு, மனம் போன போக்கில் ராகம் இழுத்தவண்ணம் ஒரு வாலிபன் வெளியிலிருந்து உள்ளே நுழைகிறான். அவனுக்கு ஏறக்குறைய 24 வயதிருக்கும். பெயர் விவேக். தற்காலத்து நீளமான தலைமயிர், பேறுக்கள், தாடி, டைட் பாண்ட், கலர் சட்டை, முகத்தில் அஞ்சாமையும் அலட்சியமும் சேர்ந்த பாவம். நேராகச் சாப்பாட்டு மேஜைக்குச் சென்று அதன்மேல் எதையோ தேடுகிறான். ஒரு கடிதவுறையைத் தூக்கிப் பார்க்கிறான். புன்னகைக்கிறான். அதைப் பிரித்தவண்ணம் பேசுகிறான் :]

**விவேக் :** ஆக, அவர்களுடைய பதில் வந்துவிட்டது. ஏ பகவானே, இவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள்? (விரைவாய்க் கவரைக் கிழித்துக் கடிதத்தை வெளியில் எடுக்கிறான். படிக்கிறான். மறுகணமே முகத்தின் வண்ணம் குன்றிவிடுகிறது.) தங்களுடைய விண்ணப்பம்பற்றி நாங்கள் மிகவும் ஆய்ந்து யோசனை செய்தோம். தங்களுடைய ஆற்றலுக்கு ஏற்ப எங்களிடம் இச் சமயம் வேலை ஒன்றும் இல்லாததற்கு வருந்துகிறோம். எப்போதும் தங்களுடைய ஒத்துழைப்பை வேண்டுகிற ... (ஒரேயடியாகக் கூச்சலிட்டு) பொய்யர்கள், மோசக்காரர்கள். தங்களுடைய ஆற்றலுக்கு ஏற்ப! நிசமாக எனக்கு ஏதாவது ஆற்றல் இருக்கிறதா? இருக்கிறது என்றால் அதை ஏன் பயன்படுத்திக்கொள்ள முடியாது? (நீண்ட பெருமூச்சோடு கடிதத்தைத் தூக்கி எறிகிறான்; அவையோர் பக்கம் பார்க்கிறான்.) எனக்குள் ஏதாவது ஆற்றல் இருக்குமானால், அது விண்ணப்பங்கள் தீட்டும் ஆற்றல்தான். இன்றைய இளைஞன் விண்ணப்பங்கள் எழுதி-எழுதி மெஷின் ஆகிவிட்டான். (திடீர் வேகத்துடன்) ஆனால் நான் மெஷின் ஆகமாட்டேன். நான் தீட்டமாட்டேன் விண்ணப்பங்களை. நான்... (விரைவு விரைவாகப் பல கடிதங்களைத் தூக்கி இங்குமங்கும் இறைக்கிறான். அதே நேரத்தில் உள்ளே இருந்து ஒரு இளம் பெண் அங்கே வருகிறாள். அவளுக்கு வயது இருபது இருக்கலாம். விவே

வுயர்ந்த மல்சட்டை, அதற்குமேல் சிவப்பு அரைக்கை ஸ்வெட்டர், பழுப்பு பெல்பாட்டம், கால்களில் சலங்கை, விரித்த கூந்தல் நடுவகிடு எடுக்கப்பட்டு முகத்தை மூடிக்கொண்டு இருக்கிறது. இவற்றுக்கு இடையிலிருந்து இரு அகன்ற விழிகள் ஜொலிக்கின்றன. கையில் சீப்பை வைத்துக்கொண்டு தலைமயிரை இப்படியும் அப்படியும் பரப்பி விட்டுக்கொள்கிறாள், முறுவலிக்கிறாள்.)

தீப்தி : (அவையோரிடம்) பாருங்கள், எப்போதும்போல விவேக் அண்ணாவுக்கு விண்ணப்பங்கள்மேல் கோபம். (விவேக்குக்கு அருகில் சென்று தோள்மீது கை வைக்கிறாள்.) ஏ விவேக் அண்ணா, உன் விண்ணப்பங்கள் எப்போதாவது முடிவுக்கு வருமா, வராதா? 'பாபா' எங்கே போகச் சொன்னார் என்று தெரியுமா?

விவேக் : பாபா உன்னைத் தலை மயிரை விரித்துப் போட்டுக் கொள்ளக் கூடாது என்று சொன்னது மட்டும் எனக்குத் தெரியும்.

தீப்தி : நீங்கள் என்னைப்பற்றிக் கவலைப் படாதீர்கள். பாபா உங்களை எங்கேயோ போகச் சொன்னார்.

விவேக் : உன்னை எங்காவது போகச் சொல்லியிருப்பார்.

தீப்தி : என்னை அல்ல, உன்னை.

விவேக் : (வேகமாக எழுந்து) உன்னை, உன்னை.

தீப்தி : (கடுப்புற்று) உன்னை, உன்னை. சரி, அப்பா உன்னையும் சொல்லவில்லை, என்னையும் சொல்லவில்லை; நம்மைச் சொன்னார்.

விவேக் : அப்படி வா வழிக்கு. நம்மைச் சொன்னார். ஆனால், யோசிக்க வேண்டிய விஷயம், நாம் பாபா சொல்வதைக் கேட்டாக வேண்டுமா என்பதுதான்.

தீப்தி : அசடு, வழியாதே. இது நம் லாபத்துக்கான விஷயம். இன்று தீபாவளி; அக்கா, அண்ணா, அண்ணி எல்லாரும் தீபாவளி இரவைக் கொண்டாடப் போவார்கள். நமக்கும் அழைப்பு வந்தாலும் வரக்கூடும்.

விவேக் : (விரல் சொடுக்கி) இப்போது புரிந்தது; எல்லாரும் உன்னை ஏன் புகழ்கிறார்கள்? என்று. வா, வா, சரத் அண்ணாவிடமும் இந்து அக்காவிடமும் போகிறோம். கையோடு அவர்களுக்கு ஒவ்வொரு விண்ணப்பம் தந்து வருகிறேன்.

தீப்தி : விண்ணப்பம், விண்ணப்பம். உனக்குப் புத்தி கொடுத்ததற்காக முதலில் எனக்கு நன்றி சொல்லு.

விவேக் : (கேலியாகக் கை குவித்து) தங்களுக்குப் பலப்பல நன்றி. சொல்லுங்கள், நன்றிகளின் ஒரு விண்ணப்பத்தை தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். (இருவரும் பலமாய்ச் சிரிக்கிறார்கள்.)

**தீப்தி :** *சரி, சரி, இப்போது புறப்படு, மமா—பாபா வருவதற்குள் வெளியே போய்விடலாம். இல்லாவிட்டால், லட்சியங்களின் இன்னொரு விருந்து படைப்பார்கள்.*

**விவேக் :** வா, வா. (இருவரும் சிரித்தவண்ணம் போகிறார்கள். ஒரு கணத்துக்குப் பிறகு வீட்டுத் தலைவர் விசுவஜீத் வெளியிலிருந்து அங்கு நுழைகிறார். வயது 60—70-க்கு இடையில் எங்கோ இருக்கும். தளர்த்தியான சட்டை, இறுக்கமான பைஜாமா, தலையில் காந்திக் குல்லாய், முகத்தில் ஆழ்ந்த அவநம்பிக்கை. இங்குமங்கும் பார்த்த வாறும் முணுமுணுத்தவாறும் உள்ளே வருகிறார். ஒரு கணத்துக்குப் பின் திரும்பி அறையைப் பார்வை இடுகிறார்; அவையோரிடம் பேசு கிறார்.)

**விசுவஜீத் :** பாருங்கள். அதே நிசப்தம், அதே விண்ணப்பக் குவியல், அதே ஒழுங்கீனம், இந்த வீட்டில் மனிதர்கள் அல்ல, பூதங்கள் வசிப்பதுபோல. தீபாவளி நாள்; ஆனால் இங்கு மனம் போன போக்கில் எல்லாம் சிதறிக் கிடக்கின்றன. அவர்களும் வீட்டில் இல்லை. பக்கத்து வீட்டுக்கு அரட்டை அடிக்கப் போயிருப்பார்கள். இந்த விவேக், மறுபடியும் விண்ணப்பங்களைக் கிழித்து நாலாப்பக்கமும் இறைத்துவிட்டுப் போயிருக்கிறான். குப்பைக் கூடையில் போடக்கூட அவனுக்குத் தோன்றவில்லை. (எடுத்துக் குப்பைக் கூடையில் போடு கிறார்.) ஏதாவது வேலை செய்தால் எனக்கும் உதவியாக இருக்கும். (அவையோரை நோக்கி) என்ன உதவியாகும்? பெரிய பிள்ளைகளும் சம்பாதிக்கிறார்கள். பக்கத்தில்கூட வந்து எட்டிப் பார்ப்பதில்லை. ஹூம்...... காலம் மாறிப் போச்சு. நம் காலத்தில் எவ்வளவு அன்பு, எவ்வளவு ஒற்றுமை! ஒருவன் சம்பாதிப்பான், பத்து பேர் சாப்பிடு வார்கள். ஒவ்வொருவரும் ஒருவரோடு ஒருவர் சேர்ந்திருக்க முயலு வார்கள்; இப்போது எல்லாம் மாறி வருகிறது. எல்லாரும் ஒருவரை ஒருவர் கண்டு ஓடுகிறார்கள். (இவ்வண்ணமே பேசிய வண்ணம் விண்ணப்பங்களையும் பத்திரிகைகளையும் இங்குமங்குமாய்க் கலைக்கிறார். மறுபடியும் உள்ளே சென்று டப்பாவிலிருந்து ஏதோ எடுத்துத் தின்றவாறு ஒரு பத்திரிகையை எடுத்துக்கொண்டு சோபாவில் உட்கார்ந்துவிடுகிறார்.) ஏ பகவானே, இனி யாராவது வருகிறவரை நான் இங்கேயே காத்திருக்க வேண்டியதுதான். தன் வீட்டில் தன்னுடையவர்களுக்காகக் காத்திருப்பது. (நிராசையும் ஏளனமும் கலந்த சிரிப்புச் சிரிக்கிறார். வெளிச்சம் மங்குகிறது. ஒரு கணம், இருட்டுப் பரவுகிறது. மறுபடியும் வெளிச்சம் வரும்போது விசுவஜீத் அப்படியே உட்கார்ந்து 'மதர் இண்டியா' படிப்பதில் மூழ்கி இருக்கிறார். அதே நேரத்தில் வீட்டுத் தலைவி கருணா கூப்பிட்டுக்

கொண்டே வருகிறாள். வயது ஐம்பத்தைந்தைக் கடந்துவிட்டது. தலைமயிர் கலைந்துள்ளது. எளிய, ஆனால், தூய உடை அணிந்திருக்கிறாள். மூக்கு-விழியில் கவர்ச்சி இருக்கிறது. ஆனால் கொடிய கவலை காரணமாகத் தோற்றத்தில் ஒரு வரட்சியின் பதிவு இருக்கிறது.)

**கருணா :** கேட்கிறேன், எப்போது பூஜை நடக்கும்? காத்திருந்து காத்திருந்து களைத்துவிட்டது.

**விசுவஜித் :** (திடீரென்று தலைதூக்கி) என்ன சொன்னாய்? ஓ பூஜையா, இன்னும் கொஞ்சம் இரு. எல்லோரும் வந்துகொண்டே இருப்பார்கள்.

**கருணா :** இனிமேல் நான் காத்திருக்க முடியாது. சென்ற மூன்று மணி நேரமாக நீங்கள் இதையே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நான் சொல்கிறேன், யாரும் வரமாட்டார்கள்.

**விசுவஜித் :** யாரும் எப்படி வராமல் இருப்பார்கள்? வீட்டைச் சேர்ந்தவர்களே இல்லாவிட்டால், பூஜையினால் என்ன பயன்? எல்லாரும் கூடி உட்காருகிற நேரம் இதுதானே?

**கருணா :** 'கூடி உட்காருகிற நேரம்' இல்லை, 'உட்கார்ந்த நேரம்' என்று சொல்லுங்கள். இப்போது யாரும் உட்கார முடியாது. யாருக்கு ஓய்வு இருக்கிறது?

**விசுவஜித் :** (உணர்ச்சி வயப்பட்டு) ஓய்வு! குழந்தைப் பருவம் முதல் நான் 40—40 பேருக்கு நடுவில் உட்கார்ந்து பூஜை செய்திருக்கிறேன். புரோகிதர் உரக்க உரக்க மந்திரம் சொன்னது இன்றும் எனக்கு நினைவிருக்கிறது. குழந்தைகள் மகிழ்ச்சியோடு கூத்தடித்தது, வாலிபர்களின் சந்தடி, பெரியவர்கள், வயதானவர்களின் இன்ப துன்பப் பேச்சு எல்லாம் நினைவிருக்கிறது. பிறகு, எல்லாருக்கும் நெற்றியில் பிரசாதம் இட்டு விடுவது; கையில் பெரிய லட்டுத் தட்டோடு அம்மா பிரசாதம் பிரித்துக் கொடுத்துக்கொண்டு எல்லோருக்கும் நடுவில் சுற்றி வந்தபோது அவருடைய முகத்துக் களையைப் பார்க்க வேண்டும். சாட்சாத் பாரதமாதாவோ என்று தோன்றும். (பேசிய வண்ணம் தொலைவில் எங்கோ தம்மை இழந்துவிடுகிறார்.)

**கருணா :** நான் சொல்கிறேன், பாரதமாதாவினைப் பற்றின கவலையை விட்டுவிட்டு உங்கள் குழந்தைகளைப்பற்றிக் கவலைப் படுங்கள். நீங்கள் சொல்லி யாராவது இருக்கிறார்களா? ஒவ்வொருவராய்ப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

**விசுவஜித் :** தயவுசெய்து நீ இப்போது உள்ளே போய்விடு. நான் மற்றொரு தடவை சரத்தைப் பார்க்கப் போகிறேன். அசோக்கிடம் விவேக்கை அனுப்பியிருக்கிறேன். தீப்தியை நான் இந்துவிடம் அனுப்பியிருக்கிறேன்.

**கருணா :** மனீஷாவை யாரிடம் அனுப்பினீர்கள்?

**விசுவஜீத் :** நான் அவளை யாரிடமும் அனுப்பவில்லை. நான் அனுப்பி அவள் எங்காவது போகிறாளா? தானாகவே எங்காவது போயிருப்பாள்.

**கருணா :** அதனால்தான் சொல்கிறேன், உங்கள் குழந்தைகளை அடக்க உங்களால் முடியவில்லை. பாரதமாதாபற்றிப் பேசுகிறீர்கள். பூஜைக்கு எல்லாரும் உங்கள் வீட்டுக்கு வந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறீர்கள். நான் சொல்கிறேன், யாருமே வரமாட்டார்கள். உங்கள் சொந்த சந்ததிகள்கூட வரமாட்டார்கள்.

**விசுவஜீத் :** எல்லாரும் வருவார்கள். எப்போதும் வந்துகொண்டிருக்கிறவர்கள் இப்போது ஏன் வரமாட்டார்கள்?

**கருணா :** நான் கேட்கிறேன், போன வருடம் எத்தனை பேர் வந்தார்கள்?

**விசுவஜீத் :** போன வருடமா? வராமலென்ன? ஆமாம், யார் யார் வந்தார்கள்?

**கருணா :** வீணாக ஞாபகப்படுத்திக்கொள்ள ஏன் முயற்சி செய்கிறீர்கள்? நாலு அண்ணன் தம்பிகளில் அசோக் மட்டும் வந்தான். அவனும் தனியாக வந்தான்; இந்தத் தடவை உங்கள் பிள்ளைகளும் பெண்களும்கூட வரமாட்டார்கள்.

**விசுவஜீத் :** எப்படி வராமல் இருப்பார்கள்? (வெளிப் பக்கம் நோக்கிப் புன்னகைத்தவாறு) பார், அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்.

**கருணா :** (அங்கேயே பார்த்து) தீப்தியும் விவேக்கும்......வழக்கம் போல் சண்டை போட்டுக்கொண்டே வருகிறார்கள். ஆம், விவேக்குக்குச் சொல்லுங்கள், அவன் விண்ணப்பங்களை ஒழுங்காய் வைத்துக் கொள்ளவேண்டும் என்று. அவைகளின் உதவியால் அவன் வாழலாம். என்றால் அவற்றைச் சமாளிக்க முடியவில்லை. இது வீடா? விண்ணப்ப விடுதியா? சரி, நான் போகிறேன். பூஜை செய்வதாக இருந்தால் விரைவில் வந்துவிடுங்கள். (போகிறாள். தீப்தியும் விவேக்கும் சச்சரவிட்டபடி வருகிறார்கள்.)

**விவேக் :** சீப்பு, தலையை வாரிக்கொள்ளவா, கலைத்துக்கொள்ளவா? தெரியுமா?

**தீப்தி :** எல்லாம் தெரியும்.

**விவேக் :** என்ன தெரியும்?

**தீப்தி :** நீ பூர்ஷ்வாக்கள் பேச்சுப் பேசுகிறாய் என்று தெரியும்.

**விவேக் :** வாரிக்கொள்வது என்பது பூர்ஷ்வாப் பேச்சா?

நீப்தி : இல்லாவிட்டால் என்னவாம்? இந்த ஷாம்பூவை உபயோகியுங்கள், அந்தத் தைலத்தைப் போடுங்கள், அப்படிப் பின்னல் போடாதீர்கள், வங்காளப் பின்னல், 'பிரமிட்' கொண்டை அஜந்தாக் கொண்டை, தெற்கத்திபாணிக் கொண்டை, 'போனி டெயில்', 'பாப் ஹேர்', அடேயப்பா, எங்களுக்கு எது பிடிக்கிறதோ அது செய்வோம். நடுவில் வருவதற்கு நீங்கள் யார்? இப்படி இருப்பதுதான் எங்களுக்கு அழகாய்ப்படுகிறது. (பேசியவண்ணம் விசுவஜீத்துக்கு அருகில் வந்துவிடுகிறார்கள்.)

விசுவஜீத் : வந்துவிட்டீர்களா இரண்டு பேரும்? கேட்கிறேன், நீங்கள் இருவரும் சண்டை போட்டுக்கொண்டுதான் இருக்கப்போகிறீர்களா? அல்லது, ஏதாவது செய்யப் போகிறீர்களா? உனக்குத்தான் சொல்கிறேன் விவேக். இது வீடா? விண்ணப்ப விந்தியா? கொஞ்சம் பாரேன், நீ அரைகுறையாக எழுதிய விண்ணப்பங்களும் எழுதிக் கிழித்த விண்ணப்பங்களும் பாதி அரையை நிரப்பிக்கொண்டிருக்கின்றன.

நீப்தி : பாருங்கள் பாபா, இந்த விவேக் அண்ணன் இவ்வளவு குப்பை கொட்டுகிறான்; தலைமயிரை வாரிக்கொள் என்று எனக்கு உபதேசம் செய்கிறான்.

விவேக் : பாபா, நீங்களே சொல்லுங்கள், சீப்பினால் தலையை வாரிக் கொள்வார்களா, தலையைக் கலைத்துக்கொள்வார்களா?

நீப்தி : அசடு, இந்தக் காலத்தில் கலைத்துக்கொள்வதுதான் வாரிக் கொள்வதாகும்.

விசுவஜீத் : பேசாதே, நான் உன்னை எங்கே அனுப்பினேன், கேட்கிறேன்?

நீப்தி : இந்து அக்காவிடம். அவளும் அத்திம்பேரும் தீபாவளி இரவு கொண்டாடப் போகிறார்கள். பூஜைக்கு வரமாட்டார்கள் என்று தெரிகிறது.

விசுவஜீத் : வரமாட்டார்களா, ஏன் வரமாட்டார்கள்? மனீஷா எங்கே?

நீப்தி : எங்கே இருக்கிறாள் என்று எனக்கு என்ன தெரியும்? யாராவது நண்பனோடு தீபாவளி இரவு கொண்டாட அவளும் போயிருப்பாள்.

விசுவஜீத் : உலகத்துக்கு என்ன ஆகிவிட்டது? எல்லாரும் தனித் தனியே தனக்காக வாழவிரும்புகிறார்கள். பிறரைப்பற்றி யாருக்குமே கவலை இல்லாமல் போய்விட்டது. எங்கள் காலத்தில் பெரியவர்களின் அனுமதி இல்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது.

**விவேக் :** பாபா, உங்கள் காலம் எப்போதோ கழிந்துவிட்டது. இப்போது சென்றுவிட்ட வாழ்க்கையின் துடிப்பைக் கேட்பதைவிட, நிகழ்காலத்து மூச்சைக் காப்பாற்றுவது நல்லது.

**தீப்தி :** ஆனல் சில பேர் இருக்கிருர்கள், கழிந்துபோன வரலாற்றிலேயே இருக்க விரும்புகிருர்கள்.

**விசுவஜீத் :** உங்களுடைய புத்தகப் பேச்சை நிறுத்துங்கள். நமக்கும் கொஞ்சம் தெரியும். கழிந்து போனதுதான் வரலாறு ஆகிறது. அதுவே நம்முடையது ஆகிறது. அதை மறந்து நிகழ் காலத்தை எப்படிக் காப்பாற்ற முடியும்? ஆனல்—நான் கேட்கிறேன், இதுவரை நீ எங்கே இருந்தாய்?

**விவேக் :** அசோக் சித்தப்பா வீட்டுக்குப் போயிருந்தேன். பூஜைக்குப் பிறகுதான் அவர் வரமுடியும்; அங்கே பூஜை நடக்க நேரமாகும். தீபக் அண்ணு தீபாவளி நல்வாழ்த்துக்கள் சொல்ல முதலமைச்சர் வீட்டுக்குப் போயிருந்தார்.

**தீப்தி :** பாபா, தீபக் அண்ணு நம் கட்சியிலிருந்து முதலமைச்சர் கட்சிக்கு மாறியது முதல், அவர் ஓர் அமைச்சர் ஆகலாம் என்று பேசிக்கொள்கிருர்கள். ஒருகால் இன்று இரவே அறிவிக்கப்படலாம்.

**விவேக் :** ஆகிவிட்டால் நல்லதுதான். நான் இதுவரை நூறு விண்ணப்பங்கள் அனுப்பியாகிவிட்டது. ஒரு நூற்று ஒன்ருவது விண்ணப்பத்தை நான் அவரிடம் கொடுப்பேன். இந்தத் தடவை எனக்குக் கட்டாயம் வேலை ஆகிவிடும்.

**விசுவஜீத் :** இப்படி வேலை ஆவது வெட்கக் கேடு. நல்லது கெட்டது பற்றின யோசனையே இல்லாமல் போய்விட்டது. காந்திஜீ சொன்னர்......

**விவேக் :** காந்திஜீ சொன்னதை எல்லாம் எழுதி என் அறையில் மாட்டியிருக்கிறேன். பெரியவர்களின் சொற்கள் எல்லாம் தொங்க விடுவதற்குத்தானே? இதோ பாருங்கள், தொங்குகிறது. காந்திஜீயால் கூறப்பட்ட 'பாரத சமுதாயத்தின் இழிகுணங்கள்', 'கொள்கை இல்லாத அரசியல்', 'உழைப்பு இல்லாத செல்வம்', 'ஆத்மா இல்லாத ஆனந்தம்', 'ஒழுக்கம் இல்லாத அறிவு', 'நீதி நெறி இல்லாத வியாபாரம்', 'மனிதத்தன்மை இல்லாத விஞ்ஞானம்', 'தியாகம் இல்லாத பூஜை' (சொல்லச்சொல்ல, அவற்றின்மேல் வெளிச்சம் விழுந்துகொண்டிருக்கிறது.)

**தீப்தி :** இவையெல்லாம் பூர்ஷ்வா மொழிகள். இதன் யுகம் இப்போது கழிந்துவிட்டது. அரசியலோடு கொள்கைகளுக்கும், செல்வத்தோடு உழைப்புக்கும், ஆனந்தத்தோடு ஆத்மாவுக்கும், அறிவோடு ஒழுக்கத்துக்கும், வியாபாரத்தோடு நீதி நெறிக்கும், விஞ்ஞானத்

தோடு மனிதத்தன்மைக்கும், பூஜையோடு தியாகத்துக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? (இருவரும் சிரிக்கிறார்கள்.)

**விசுவஜீத் :** (கத்தி) வாயை மூடுங்கள். யுகம் கழிந்துவிடுகிறது. நீதி நெறி என்றைக்கும் வாழ்கிறது.

**விவேக் :** ஆனால், அதன் அர்த்தங்கள் மாறிப்போகின்றன— தீப்தியின் பார்வையில் தலையை ஒழுங்கு செய்துகொள்வது என்பதன் அர்த்தம் மாறினதுபோல.

**விசுவஜீத் :** உங்களுடைய பாஷை என் புத்திக்கு விளங்கவில்லை.

**விவேக் :** உங்களுடைய பாஷையும் எங்கள் புத்திக்கு விளங்கவில்லை. ஆனால் பாஷைக்குத் தனி இருப்பு ஏது? அது நாம் மதிப்பவற்றின் எதிரொலி உருவம்தானே? இப்படி ஆகவேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள்; இப்படி ஆகிறது என்று நாங்கள் சொல்கிறோம்.

**விசுவஜீத் :** ஓகோ, இந்தப் பேச்சை நிறுத்துங்கள். சரத் எங்கே, அவன் இதுவரை ஏன் வரவில்லை?

**தீப்தி :** சரத் அண்ணா அண்ணியோடு தீபாவளி கொண்டாட ஹோட்டலுக்குப் போயிருக்கிறார். பாபா, நீங்கள் விரைவாகப் பூஜை செய்துவிடுங்கள். நாங்களும் அங்கே போகிறோம்.

**விசுவஜீத் :** நீங்கள் அங்கே போகவில்லை.

**விவேக் :** ஏன் போகவில்லை?

**விசுவஜீத் :** ஏனென்றால், நான் சொல்கிறேன். நான் உங்கள் தகப்பன், அதனால்.

**விவேக் :** நீங்கள் எங்கள் தகப்பனார். இதில் ஒரு சந்தேகமும் இல்லை. ஆனால், இதனால் நீங்கள் எங்களைத் தடுத்துக்கொண்டிருக்கவில்லை. நீங்கள் எங்களுக்குப் பணம் தருகிறீர்கள். இதனால்தான் எங்களைத் தடுக்கிறீர்கள். நீங்கள் சரத், இந்து, மனீஷா எல்லாருக்கும்தான் தகப்பனார். அவர்களைத் தடுக்க முடிந்ததா உங்களால்? நாங்கள் உங்களை அண்டி இருக்கிறோம். ஆனால், உங்களுடைய அடிமைகள் அல்ல.

**விசுவஜீத் :** (நடுங்கி) உனக்கு......உனக்குக் கொஞ்சமும் வெட்கம் இல்லை. நீ என்ன சொல்கிறாய் என்று உனக்குப் புரிகிறதா?

**விவேக் :** இருப்பதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். எது ஆகவேண்டும் என்பதைச் சொல்லிக்கொண்டிருக்கவில்லை. தீபக் அண்ணாவை மந்திரி ஆகவிடுங்கள்.

**விசுவஜீத் :** தீபக், தீபக், தீபக். அவன் செய்திருப்பது அநீதியானது. நீங்கள் அநீதி நெறியில் போக நான் விடமாட்டேன்.

**விவேக்** : மறுபடியும் அதே பூர்ஷ்வாக்களின் மொழி. வாழ்க்கை முழுவதும் நீதிநெறியை விளம்பரம் செய்ததைத் தவிர, நீங்கள் வேறு என்ன செய்திருக்கிறீர்கள்? வெறும் வெற்றியையே குறிக்கோளாய்க் கொண்டவர்கள் உங்களைவிட எவ்வளவோ மேல்.

**விசுவஜீத்** : நான் சொல்கிறேன்; எதற்கும் எல்லை இருக்கிறது. அந்தக் கட்சி மாறியோடு நீ என்னை ஒப்பிடுகிறாய். அவனிடம் நீ வேலைக்காகச் சொல்வாயா?

**விவேக்** : நாள் முழுவதும் உட்கார்ந்துகொண்டு பத்திரிகைகளில் விளம்பரங்கள் பார்ப்பது, அப்புறம் விண்ணப்பங்கள் அனுப்புவது—இதைவிடத் தீபக் அண்ணாவிடம் போவது எவ்வளவோ மேல். காரியம் ஆகும் என்றால் யாரிடம் போனால் என்ன தப்பு? (கருணா வேகமாக வருகிறாள்.)

**கருணா** : தர்க்கம், தர்க்கம், தர்க்கம். நான் எந்நேரம் வரை காத்திருப்பது? நீங்கள் ஏன் வரவில்லை?

**தீப்தி** : ஆம், ஆம், பாபா வாருங்கள், விரைவில் பூஜையை முடியுங்கள்.

**விவேக்** : பூஜையில் எவ்வளவு நேரம் ஆகிறது. ஐந்து நிமிடம். பண்டிதர் வரவில்லை. நீங்கள் காயத்ரி மந்திரத்தை மும்முறை படியுங்கள், போதும்.

**தீப்தி** : காயத்ரி மந்திரம்தான் படிப்பது என்றால் அதை இங்கேயும் படிக்கலாமே. அப்புறம் பூஜை செய்ய வேண்டிய தேவை என்ன?

**கருணா** : பூஜைக்குத் தேவை இருக்கிறது. அது எப்போதும் நடந்துவந்திருக்கிறது. வருடத்துக்கு ஒரு முறை லட்சுமி அன்னை எல்லாருடைய வீட்டுக்கும் வருகிறாள்.

**விவேக்** : (ஏளனமாய்ச் சிரிக்கிறான்) அப்படியானால், நான் இன்று ஒரு விண்ணப்பம் எழுதி லட்சுமி அன்னையிடம் கொடுத்துவிட்டால் என்ன?

**விசுவஜீத்** : இளம் ரத்தம். தேவி தேவதைகளைப் பரிகாசம் செய்கிறான். அதனால்தான் காந்திஜி அறிவோடு ஒழுக்கமும் தேவை என்றார்.

**விவேக்** : ஒழுக்கம், ஒழுக்கம், ஒழுக்கம். (கடுமையாக) நீங்கள் ஒழுக்கத்தோடு இருந்து எங்களுக்கு என்ன கொடுத்தீர்கள் பாபா? உங்களுடைய வழியைப் பின்பற்றியதால் இன்று விண்ணப்பங்கள் எழுதத்தான் நான் கற்றுக்கொள்ள முடிந்திருக்கிறது. உங்களுடைய வழியைக் கைவிட்டவன்தான் வெற்றிபெற முடிந்திருக்கிறது. விமல் அண்ணா கனடாவில் ஆடம்பரமாக இருக்கிறார். சரத் அண்ணா தம் வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார். இந்து அக்காவும் தன் இன்ப வாழ்க்கையைக் கழித்துக்கொண்டிருக்கிறாள். ஒழுக்கம் இல்லாதவன்

என்று நீங்கள் இகழும் தீபக் அண்ணா அமைச்சர் ஆகப்போகிறார். அப்போது உங்கள் ஒழுக்கத்தைக் கொண்டுபோய் நான் அவருக்குப் போர்த்தட்டுமா, விரிக்கட்டுமா?

தீப்தி : விரிக்கவேண்டும் என்பது வெளிப்படை; போர்த்துவது அடிமைத்தனம். (சிரிப்பு வெடிக்கையில் எல்லாருடைய கடுமையான பார்வை காரணமாக அடங்குகிறது.)

கருணா : இப்போது நீங்களெல்லாம் வரப்போகிறீர்களா இல்லையா?

தீப்தி : (மூச்சு இழுத்து) வா, அண்ணா. பழைய பழக்க வழக்கங்களைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்ற முடிகிறவரையில் பின்பற்று.

விசுவஜீத் : காலம் எப்படியெல்லாம் மாறிவிட்டது! 40—40 பேருக்கு இடையில் அமர்ந்து முழு விதிமுறைப்படி மணிக்கணக்கில் பூஜை செய்தேன். இப்போது எல்லாம் முடிந்துவிட்டது. மிஞ்சி இருப்பவை, திருப்தியற்ற இரண்டு குழந்தைகளும் ஒரு காயத்ரி மந்திரமும்.

கருணா : இன்று இந்த நேரத்தில் மனீஷாவும் எங்கோ போய் விட்டாள்.

தீப்தி : கவலைப்படாதே, மம்மி. மனீஷா அக்கா மேஜர் யாருடனாவது தீபாவளி இரவு கொண்டாடப் போயிருப்பாள்.

கருணா : அவளுக்கு நாமும் ஒன்றுமில்லை, வீடும் ஒன்றுமில்லை. 'யாரோ' தான் எல்லாம் ஆகிவிட்டது. சே, பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா?

விவேக் : பொறுமைக்கு ஓர் எல்லையும் கிடையாது. மனீஷா இன்று உங்களை அண்டி வாழவில்லை.

விசுவஜீத் : அண்டி வாழவேண்டாம். ஆனால், இந்த வீட்டுக் குழந்தைதானே! நாங்கள் எங்கள் தந்தையை அண்டியா வாழ்ந்தோம்? ஆனால், அவருடைய உத்திரவு இல்லாமல் வீட்டை விட்டு வெளியே கால்வைக்க எங்களுக்குத் துணிச்சல் வந்திருக்குமா?

தீப்தி : பாபா, அப்போது ஜனங்கள் சந்திரனுக்குப் போகவில்லை. டெரிலினும் அணியவில்லை. அக்காலத்தில் ரூயிங்கம்கூட எங்கே இருந்திருக்கப்போகிறது? இது விஞ்ஞான உத்தி யுகம், பாபா. கம்ப்யூட்டர், மனிதனைவிடத் திறமையாக வேலை செய்கிறது. (திடீரென்று கூப்பிட்டுக்கொண்டே வெளியிலிருந்து அசோக் நுழைகிறார். வயது ஏறக்குறைய 60 இருக்கும். பெரும்பாலும் விசுவஜீத் போலவே ஆடை அணிந்துள்ளார். முகத்தில் அப்பாவித்தனம் சொட்டுகிறது.)

அசோக் : அண்ணா! எங்கே இருக்கிறீர்கள் அண்ணா? உங்களுக்கு வாழ்த்துக்கள். உங்களுடைய தீபக் அமைச்சன் ஆகிவிட்டான். (எல்லாரும் திடீரென்று உணர்ச்சிவசப்படுகிறார்கள்.)

விவேக் : நிசமாவா சித்தப்பா?

தீப்தி : நான் இப்போதே போய் அண்ணுவுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கிறேன். அமைச்சராவது பூர்ஷ்வாத்தனம், ஆனாலும் அண்ணு ஏதாவது செய்துகாட்டிருரே.

கருணு : எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. மிகவும் மகிழ்ச்சி. நாள் முழுவதும் விவாதம் செய்துகொண்டிருப்பதையும், விண்ணப்பங்கள் எழுதிக்கொண்டிருப்பதையும், ஹிப்பி ஆவதையும் விட இது எவ்வளவோ நல்ல வேலை.

விசுவஜீத் : ஆம், அதைவிட நல்லதுதான். எனக்கும் மிகவும் மகிழ்ச்சி. அவன் எங்கே? அவன் இங்கு வந்திருக்கவேண்டும்.

அசோக் : இன்னும் அவன் வீட்டுக்கே வரவில்லை. நான் தனியாகத் தான் பூஜை செய்தேன், முற்றிலும் தனியாக. (திடீரென்று தீப்தியைப் பார்த்து) அட, நான் பார்க்கவில்லையே. தீப்திக்கண்ணு, நீ நிசமாக ஹிப்பினி ஆகியிருக்கிறுயே. மல்லில் வெள்ளைச்சட்டை, சிவப்பு அரைக்கை ஸ்வெட்டர், கறுப்பு இருகல் பைஜாமா, காது களில் நீளமான தலைமயிர், அதுவும் பரட்டைத் தலைமயிர்.

விவேக் : சித்தப்பா. நீங்கள் பரட்டைத்தலை என்கிறீர்கள். இவளுடைய பாஷையில் அது வாரிக்கொண்ட தலை. இது பைஜாமா இல்லை, 'பெல்பாட்டம்'. சரி, இந்தப் பேச்சை விடுங்கள். நான் இப்போதுதான் 101ஆவது விண்ணப்பம் எழுதித் தயாரித்தேன். இதை நீங்கள் உங்கள் சிபாரிசோடு தீபக் அண்ணுவிடம் கொடுத்து விடுங்கள். சிபாரிசு இல்லாமல் இந்தக் காலத்தில் ஒன்றும் நடப்ப தில்லை என்று உங்களுக்குத் தெரியும். இந்தத் தடவை எனக்கு வேலை கிடைத்துவிடவேண்டும்.

அசோக் : வேலை கிடைக்கும், கட்டாயம் கிடைக்கும்; இப்போது கிடைக்காவிட்டால் வேறு எப்போது கிடைக்கும்? ஆனுல் சத்தம் போடக்கூடாது. வேலை செய்வதற்கு முறை ஒன்று இருக்கிறது.

விசுவஜீத் : நானும் அதையேதான் சொல்கிறேன்; ஆனுல் ஒவ்வொரு தடவையும் பூர்ஷ்வா என்று சொல்லி என் வாயை மூடி விடுகிறுர்கள்.

கருணு : ஆனுல் நான் சொல்கிறேன். உங்களுக்கு மனீஷா பற்றின கவனமே இல்லை. அவள் இன்னும் வரவில்லை. அவள் இந்துவோடு போயிருக்கிறுள் என்றுல் சொல்லிவிட்டுப் போயிருக்க வேண்டும். போதும்! இந்தக் குழந்தைகளின் பாடு......(போன் மணி அடிக்கிறது.)

விவேக் : மமீ, நீங்கள் சொன்னீர்கள், செய்தி வந்துவிட்டது. (மேஜையருகில் சென்று போனை எடுக்கிருன்.) ஹலோ விவேக் பேசு கிறேன். ஓ, நீங்களா. உங்களுக்காக அக்கா, ஓரே கவலைப்பட்டுக்

கொண்டிருக்கிறோம். எங்கிருந்து பேசுகிறீர்கள்? உங்களுடைய குரலில் ஏன் இவ்வளவு கவலை? என்ன சொன்னீர்கள், பாபாவிடம் போன் கொடுக்கவா? அப்படியானால், என்னிடம் சொல்ல மாட்டீர்கள். சரி, நாமும் பார்ப்போம். சரி அம்மா, கோபித்துக் கொள்ளாதே. இதோ கொடுக்கிறேன். (விசுவஜீத்திடம்) பாபா, மனீஷா அக்கா உங்களைக் கூப்பிடுகிறாள். (விசுவஜீத் அருகில் வந்து போனை வாங்கிக்கொள்கிறார்.)

**விசுவஜீத் :** ஹலோ! யார்? மனீஷாவா. ஆம், ஆம். நான் விசுவஜீத் பேசுகிறேன். நீ எங்கே இருக்கிறாய்? பூஜைக்காக நாங்கள் உன்னை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆம், ஆம், சொல்லு. என்ன? (திடீரென்று முகத்தின் நிறம் மாறுகிறது.) என்ன சொன்னாய்? மறுபடியும் சொல்லு. நிசமாகவா? நீ வீட்டுக்கு வரமாட்டாயா? இல்லை, இல்லை, இதெல்லாம் பொய்......... நான்......... சொல்கிறேன். (போன் குழாய் கையிலிருந்து நழுவிக் கீழே விழுகிறது. அவர் தொப்பென்று சோபாவில் விழுகிறார். பகைப்புலத்தில் கூர்மையான இசை பொருமுகிறது. எல்லாரும் அவரைச் சூழ்ந்துகொள்கிறார்கள்.)

**கருணை :** என்ன ஆயிற்று? மனீஷா என்ன சொன்னாள்? ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? என் பக்கம் ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்?

**விசுவஜீத் :** (ஜடம்போல்) மனீஷா கலியாணம் செய்துகொண்டு விட்டாள்.

**கருணை :** கலியாணம் செய்துகொண்டாளா? யாரை?

**விசுவஜீத் :** உங்கள் எல்லாருக்கும் தெரியும்.

**கருணை :** (தன்னை இழந்தவள்போல்) அப்படியானால் மனீஷா அசத்தை மணந்துவிட்டாளா!

**விவேக் :** அக்கா மணந்துகொண்டாள், நமக்குச் சொல்லவும் இல்லையே. நான் இப்போதே போகிறேன்.

**தீப்தி :** (களிப்போடு) எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அக்கா வாழ்க! மனீஷா அக்கா வாழ்க! நான் இப்போதே போய் மனீஷா அக்காவுக்கு வாழ்த்துக்கள் சொல்கிறேன்.

**அசோக் :** பேசாதே இந்த 'அசத் யார்' என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**கருணை :** 'லெக்சரர்'. மனீஷா சொல்லிக்கொடுக்கும் காலேஜிலேயே அவனும் சொல்லிக்கொடுக்கிறான்.

**அசோக் :** மனீஷா அவனை மணக்க விரும்புகிறாள் என்று, அண்ணி, உனக்குத் தெரியுமா?

**கருணை :** தெரியும். அவள் தன் முடிவைச் சொல்லிவிட்டாள். நாங்கள் எவ்வளவோ சொன்னோம். ஆனால், அவள் தன் எண்ணத்தை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை.

**விவேக் :** மாற்றிக்கொள்ள வேண்டும் என்று என்ன அவசியம்? அவள் ஒரு மனிதனை மணந்துகொண்டிருக்கிறாள். அவனுக்குத் தனித்தன்மை இருக்கிறது. அவன் ஆரோக்கியமாய், அழகாய், அறிவாற்றலுடையவனாய் இருக்கிறான். இனிமையான சுபாவம். நன்கு சம்பாதிக்கிறான். ஒரு ஹிந்துஸ்தானி தன் மகளுக்கு இதைவிட அதிகமாய் வேறு என்னதான் எதிர்பார்க்க முடியும்?

**தீப்தி :** அவனை முசல்மான் என்றும் எப்படிச் சொல்வது? நமாஸ் கூட ஓதுவதில்லை. வருங்காலச் சந்ததிகள் வேற்றுமைச் சுவர்களை உடைத்தெறிய வேண்டும் என்று நாட்டுத் தலைவர்கள் வாய் ஓயாமல் சொல்கிறார்கள். நாங்கள் சுவர்களை உடைக்கத் தொடங்கினாலோ, அதே தலைவர்கள் தந்தையராகி எங்களைத் தடுக்கிறார்கள். தலைவரும் தந்தையும் ஒரே மனிதனின் இரண்டு முகமூடிகள். உம்...

**விசுவஜீத் :** (உரத்து) பேசாதீர்கள். நீங்கள் இருவரும் அதிகப்படியாகப் பேசுகிறீர்கள்.

**அசோக் :** நீங்கள் இன்னும் இந்தக் கலியாணத்தை நிறுத்த வேண்டும் என்று விரும்புகிறீர்களா? தீபக்கிடம் சொன்னால் ஏதாவது நடக்கலாம். அவன் அமைச்சன் அல்லவோ.

**கருணா :** இல்லை, இப்போது ஏதும் செய்யத் தேவை இல்லை. அவள் மேஜரானவள், சம்பாதிக்கிறாள்.

**விசுவஜீத் :** ஆம், இனி ஒன்றும் நடக்காது. நான் மனீஷாவை இழந்துவிட்டேன்.

**கருணா :** அவளுக்கு உரிமை இருந்தது, அவள் தன் வழியைத் தேர்ந்துகொண்டுவிட்டாள்.

**தீப்தி :** பாபா, நான் கேட்கிறேன். நீங்கள் பூஜை செய்யப் போகிறீர்களா, இல்லையா?

**விவேக் :** ஏன் செய்யமாட்டார்? ஆண்டுதோறும் செய்துவருகிறார், இப்போதும் செய்வார். சுபாவம் ஆகிவிட்டது; நிர்ப்பந்தம். ஆனால், நான் காயத்ரி மந்திரத்தைச் சுத்தமாக உச்சரிக்கவும் மறந்து விட்டேன். நினைவு வைத்துக்கொள்ள அர்த்தமும் ஒன்றும் இல்லை. வெறும் வேஷம். அர்த்தம் இல்லாத இடத்தில் வேஷம்தானே போட வேண்டி இருக்கிறது.

**விசுவஜீத் :** (அலறி) பேசாதே.

[பகைப்புலத்தில் தீவிரமான சங்கீதம் பொருமுகிறது; மேடை மீது திடீரென இருள் பரவுகிறது. (திரையும் விழலாம்.) மறுபடியும் ஒளி வருகையில் (அல்லது, திரை எழுகையில்) மேடையின் நிலைமை பெரும்பாலும் முதன்முதலில் இருந்தது போலவே இருக்கிறது. விசுவஜீத்தும் கருணாவும் சோபாவில்

உட்கார்ந்திருக்கிறார்கள். விசுவஜீத் மிக மெல்ல மெல்ல தம்மோடு உரையாடுகிறவர்போல் பேசுகிறார்.]

விசுவஜீத்: இந்த மனம் எப்படி இருக்கிறது? இடையீடு இல்லாமல் தோண்டிக்கொண்டே இருக்கிறது. சில சமயம் தொலைவில் கனடாவில் இருக்கிற விமல் எப்படி இருக்கிறானோ? அவனுடைய வேலை சரியாக நடக்கிறதா என்று யோசிக்கிறேன். ஒரு நேரத்தில் இந்துவை நினைக்கிறேன்; அவளுடைய குடும்பத்தில் எல்லாரும் சுகமாக இருப்பார்கள். பிறகு, சரத்தைப்பற்றிக் கவலை வந்துவிடுகிறது; அவன் தன் உடல் நலத்தைச் சரியாகக் கவனித்துக் கொள்கிறானா, இல்லையா; அவனுடைய மனைவி அவனோடு ஒத்துழைக்கிறாளா, இல்லையா என்று எண்ணுகிறேன். மனீஷாவிடம் இப்போது நான் கோபமாக இருக்கிறேன். அவள் அசத்தை மணப்பதை நான் ஒருகாலும் விரும்பவில்லை. ஆயினும் என் மனம் எல்லாரையும்விட அதிகமாய் அவளைப் பற்றியே கவலைப்படுகிறது. அந்த அந்நியர் வீட்டில் அவளுக்கு எப்படி இருக்கிறதோ? அவள் துயரப்படவில்லையே? எல்லாரும் சுகமாக இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். என் குழந்தைகள் சுகமாக இருப்பதைக் காண விரும்புகிறேன். மனத்தால் விரும்புகிறேன். ஆனால், குழந்தைகளோ இதை நிர்ப்பந்தம் என்கிறார்கள்; சுயநலம் என்கிறார்கள்.

கருணா: சரியாகத்தான் சொல்கிறார்கள். பார்க்கப்போனால் நீங்கள் அவர்களுக்காக என்னதான் செய்தீர்கள்? அன்பும் பணமும் எல்லாம் ஆகிவிடாது. அவர்களுடைய எதிர்காலத்தைப்பற்றி எப்போதாவது கவலைப்பட்டதுண்டா? எப்போதாவது அவர்களுக்கு நண்பராக இருந்ததுண்டா? இப்போது அவர்கள் தத்தம் வழியைத் தேர்ந்துகொள்ளும்போது உங்களுக்கு உறுத்துகிறது.

விசுவஜீத்: ஆம், உண்மைதான். அவர்களுடைய எதிர்காலத்தை உருவாக்க என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், அவர்கள் தங்கள் வழியைத் தேர்ந்துகொள்வதை நான் தடுக்கிறேனா? அந்த வழி சரியானதாக இருக்கவேண்டுமே என்பதுதான் என் கவலை. இப்போது பார், இந்த தீப்தி இருக்கிறாள். மனம் போகும் போக்கில் நடக்கிற வயசுப் பெண். சொன்னால் கொஞ்சமும் கேட்பதில்லை. இவளுடைய உடையையும், இவளுடைய நடவடிக்கையையும் பார்க்க எனக்கு அச்சமாக இருக்கிறது. என்றாவது ஏதாவது நடந்துவிடக் கூடாதே...இந்த விவேக்கோ.. (திடீரென தீப்தியும் விவேக்கும் கடுமையாக விவாதித்தவண்ணம் நுழைகிறார்கள்.)

தீப்தி: நான் எங்கே போகிறேன்? எங்கே போகவில்லை? அதற்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? நீ உன் விண்ணப்பங்களின் எண்ணிக்கையை நினைவில் வைத்துக்கொள்.

**விவேக் :** நீ சிகரெட் பிடிக்கத் தொடங்கி இருப்பதை பாபாவிடம் நான் சொல்லிவிடுவேன்.

**தீப்தி :** சொல்லிவிடு.

**விவேக் :** பயப்படவில்லை!

**தீப்தி :** நீ ரொம்பத்தான் பயப்படுகிறாய். சந்தடி செய்யாமல் வெளிநாடு போக நீ ஏற்பாடு செய்யவில்லை? (பேசியவண்ணம் இருவரும் சோபாவை நெருங்கிவிடுகின்றனர்.)

**கருணா :** அப்பப்பா! இதென்ன ரகளை எப்பப் பார்த்தாலும்! இரண்டு பேரும் எப்போதும் தர்க்கம் செய்தபடிதான் இருக்கிறீர்கள். எங்கே இருந்து வருகிறீர்கள் நீங்கள்? தீபக் என்ன சொன்னான் விவேக்?

**விவேக் :** நான் தீபக் அண்ணாவிடம் போகமாட்டேன்.

**கருணா :** ஏன் போகமாட்டாய்?

**விவேக் :** அவர் நல்லபடி பேசவில்லை. சித்தப்பா சொல்வதையும் கேட்கவில்லை. எத்தனை நாட்கள் நாற்காலியில் இருக்க முடியும் என்பதுதான் அவருடைய ஒரே கவலை.

**விசுவஜீத் :** உன்னுடைய 101ஆவது விண்ணப்பமும் வீணாகப் போய்விட்டது என்று நீ ஏன் சொல்லவில்லை?

**விவேக் :** போனால் போகட்டும். இனி நான் விண்ணப்பங்கள் எழுத மாட்டேன்.

**கருணா :** வேறு என்ன செய்வாய்?

**விவேக் :** கலகம் செய்வேன். எல்லாவற்றையும் நாசம் செய்ய விரும்புகிறவர்களோடு சேர்ந்துகொள்வேன்.

**விசுவஜீத் :** (ஏளனமாக) நாசம், கலகம், புரட்சி—இந்த வார்த்தைகளை நன்கு மனப்பாடம் செய்திருக்கிறான். இந்த வார்த்தைகளுக்கு அர்த்தமாவது தெரியுமோ? புரட்சியின் அர்த்தம் நாசம் செய்வது அல்ல; அது ஆக்கப்பணி. அதன் அடிப்படையில் கடமை இருக்கிறது. நாட்டுக்கும் சமூகத்துக்கும் நீ ஆற்ற வேண்டிய சில கடமைகள் இருக்கின்றன. அவற்றை மறந்துவிட்டு நீ புரட்சியின் கனவு கண்டுகொண்டிருக்கலாம். ஆனால், புரட்சி செய்ய முடியாது.

**விவேக் :** பாபா, கடமைபற்றின உங்கள் சொற்பொழிவைப் பல தடவை கேட்டுவிட்டேன். கடமையின் பெயரைச் சொல்லி நீங்கள் எல்லாரும் எப்போதும் உங்கள் சுய நலத்தை நிறைவேற்றிக்கொண்டு வருகிறீர்கள்; பிரிவினை ஆகாத குடும்பத்தில் கட்டி வைத்திருக்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கு ஊன்று கோலாக இருக்கவேண்டும் என்று இப்போதும் விரும்புகிறீர்கள். இல்லை, பாபா, ஊன்றுகோல் களின் காலம் மலை ஏறிவிட்டது.

**விசுவஜீத்:** இரண்டு புத்தகங்கள் படித்துக்கொண்டுவிட்டாயா, வாயில் வந்ததைப் பிதற்றிவிடுகிருய். கடமையை ஊன்றுகோல் என்கிருயா, ஹூம்.

**விவேக்:** நீங்கள் எங்களுக்கு அறிவுறுத்தும் கடமைக்கு அர்த்தம் ஊன்றுகோல்தான். ஆனல், நான் யாருடைய ஊன்றுகோலும் ஆக மாட்டேன். அழிந்து போவேனே அன்றி உபதேசங்களைக் கேட்க மாட்டேன்; எல்லாவற்றையும் உடைத்தெறிவேன்; நெருப்பிவிடுவேன்...

**தீப்தி:** சாபாஷ் விவேக்! சாபாஷ், வாழ்க!

**கருணு:** வாயை மூடு. உட்கார்ந்துகொண்டு யோசனை செய்வது, அப்புறம் நாள் முழுவதும் பலமாய்த் தர்க்கம் செய்வது, இதைத் தவிர வேறென்றும் காணும். நேற்றுவரை தீபக் அண்ணவின் புகழ்பாடிக்கொண்டிருந்தாய்; இன்று அவனேடு பேசக்கூட விரும்பவில்லை!

**தீப்தி:** உங்களுக்குத் தெரியாது, மம்மி. அவருடைய 15 நாள் ஆட்சி இப்போது முடியப் போகிறது. அவருடைய அரசாங்கம் வீழ்ச்சி அடைவது நிச்சயம்.

**விசுவஜீத்:** நிசயமாகவா! இந்த அரசாங்கங்கள் அநீதியானவை என்று நான் சொன்னேனு இல்லையா...

**விவேக்:** அநீதி, அநீதி. இவர்களே எனக்கு வேலை தந்தால் அப்போதுகூட இவர்களை அநீதியாளர்கள் என்பீர்களா?

**விசுவஜீத்:** நான் சொல்லவில்லை.

**விவேக்:** ஆனல், அசோக் சித்தப்பாவுக்கும் தீபக் அண்ணுவுக்கும் முன்னிலையில் இல்லை. நான் விண்ணப்பம் கொடுத்தபோதுமில்லை. இன்று அமலில் இருப்பவை வெற்றி பெற்றிருப்பவர்களுடைய நீதி நெறிகள்தாம்! ஆகையால் நானும் வெற்றி பெறுவதென்று முடிவு செய்துவிட்டேன். நான் ஐந்து வருடம் உலகச் சுற்றுப் பிரயாணம் போய்க்கொண்டிருக்கிறேன்.

**விசுவஜீத்:** உலகச் சுற்றுப் பிரயாணமா? அது எதற்கு?

**விவேக்:** மாறிவரும் இன்றைய நிலைமைகளில் நீதிநெறி என்பது என்ன? கடமை, உரிமை என்பதன் மெய்யான சூத்திரம் என்னவாக இருக்கமுடியும்? இன்றும், பரம்பரை நீதிநெறியோடும் உலக வாழ்க்கை மதிப்பீடுகளோடும் கடமையை இணைத்து வைத்திருக்க முடியுமா? இந்தக் கேள்விகளை வீடுவீடாகச் சென்று உலகத்தின் ஒவ்வொரு மனிதனிடமும் கேட்பேன். பிறகு, ஒரு புத்தகம் எழுதுவேன். உங்களுடைய பாஷையில் சொல்லப்போனல், கடவுள் விரும்பினல், ஏதாவது என்னல் செய்ய முடியும்.

கருணா : செய்வதற்கு இந்த நாட்டில் ஏதும் இல்லையா? வெளியில் சென்றால்தான் எல்லாம் நடக்குமா?

விவேக் : ஆம், மம்மி. வெளியே போனால் நிறைய நடக்கும். நம் விமல் அண்ணாவையே பாருங்களேன்...

கருணா : உன்னோடு வாதாட என்னால் முடியாது. இந்த விஷயங்களைப் புரிந்துகொள்ளும் அளவு எனக்குப் புத்தியும் இல்லை. ஆனால்...

விவேக் : புரிந்துகொள்வதற்கு இதில் என்ன இருக்கிறது, மமா? இந்த வீட்டின் மூச்சடைப்பிலிருந்தும் ஈரத்திலிருந்தும் விடுதலை பெற விரும்புகிறேன். மூளையை உயிரற்றதாக்கும் ஒரு நாற்றம் இந்த வீட்டில் வீசுகிறது, ஆனால், நான் என் மூளையை உயிரற்றதாக்க விரும்பவில்லை. நான் துன்பத்தில் துடிக்க விரும்பவில்லை. நான் அதிலிருந்து விடுதலை வேண்டுகிறேன்.

கருணா : இது உன் கடைசி முடிவா?

விவேக் : இன்று இந்த நிகழ்காலத்தின் ஒவ்வொரு நொடியும் வீணே கழிந்துகொண்டிருக்கும்போது, அதில் எது கடைசி என்று சொல்வது மிகவும் கஷ்டம். ஆனால், நாளை மறுநாள் அதிகாலையில் நான் இந்த மகா யாத்திரைக்காகப் புறப்பட்டுவிடுவது நிச்சயம்.

விசுவஜீத் : ஆனால் பணம் எங்கிருந்து வரும்?

விவேக் : நான் சேர்ந்து போகிற கோஷ்டி ஒரு காசுகூட எடுத்துக் கொண்டு போகவில்லை. பணம் மனிதத் தொடர்பைச் செயற்கையானதாக்குகிறது; நீதி, அநீதி பற்றி யோசிக்கச் செய்யும் நிர்ப்பந்தத்தில் வைக்கிறது. ஆகையால், நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. மம்மி, நீங்கள் கண்ணீர்கூட விடவேண்டியதில்லை. சரி, ஆடையை மாற்றிக்கொண்டு கொஞ்சம் மனீஷா அக்காவைச் சந்தித்துவிட்டு வருகிறேன். அவர்களும் கனடாவுக்குப் போக முயன்று கொண்டிருக்கிறார்கள். (உள்பக்கம் போகிறான்.)

விசுவஜீத் : போங்கள், எல்லாரும் போங்கள், நான் ஒன்றும் செய்ய முடியாது. எல்லாரும் போவதைப் பார்த்துக்கொண்டிருக்கத்தான் முடியும்.

தீப்தி : போவதைப் பார்ப்பது உங்களுக்குத் துப்பாய்ப்படுகிறதா, பாபா? நீங்கள் லேசாவதை உணரவில்லையா? உங்கள் மீதிருந்த மற்றொரு சுமை இறங்கிவிட்டதாய்ப் படவில்லையா?

கருணா : (எழுந்தவண்ணம்) போதும், இந்த விவாதத்தை நிறுத்துங்கள். நீங்கள் சாப்பிட வேண்டாமா? எவ்வளவு நேரம்தான் நான் அடுப்படியிலேயே இருப்பது?

தீப்தி : (சிரித்து) உட்கார்ந்திருக்க உங்களுக்குப் பிடிக்கிறது, உட்கார்ந்திருக்கிறீர்கள். இதைத்தான் நீங்கள் கடமை என்றும்,

பாசம் என்றும் சொல்கிறீர்கள். எங்களுடைய பாஷையில் இது ஒரு வெறும் பழக்கம். நிர்ப்பந்தம் — வேறுவழி இல்லாமை — என்றும் சொல்லலாம்.

**கருணை :** உங்கள் பாஷை இருக்கட்டும். இந்தப் பாஷைதான் மனங்களை உடைத்திருக்கிறது. எப்போது பார், தர்க்கம்—தர்க்கம், உன் மனசில் தோன்றுவதைச் செய். நான் இனி எதிர்பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன். (உள்ளே செல்கிறாள்.)

**நீப்நி :** எப்படி முடியும்? எதிர்பார்க்கவேண்டியது உன் விதி, இதோ சித்தப்பாவும் வந்துவிட்டார். (அசோக் நுழைகிறார்.) வாருங்கள், சித்தப்பா.

**விசுவஜீத் :** வா அசோக், உட்கார்.

**அசோக் :** விவேக் உலகயாத்திரை போவதாய் தீபக் சொன்னான்.

**விசுவஜீத் :** நானும் கேட்டேன்.

**அசோக் :** தடுக்க மாட்டீர்களா?

**விசுவஜீத் :** முன்பு யாரையாவது என்னால் தடுக்க முடிந்திருக்கிறதா? போவதைப் பார்க்கத்தான் என் தலையில் எழுதியிருக்கிறது. எனக்கு மட்டும் அல்ல; நம் எல்லாருடைய தலையெழுத்தும் அதுதான். தீபக்கைக் கொண்டு உன்னால் ஏதாவது செய்துகொள்ள முடிந்ததா?

**அசோக் :** இந்தக் காலத்தில் யார் சொல்வதை யார் கேட்கிறார்கள்? அவனை எப்படிக் குறை கூற முடியும்? அவனுக்குமேல் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். எல்லாருக்கும் மேலே இருக்கிறானே, அவனும் பொரிசு செய்கிறான். இப்போதே அவனுடைய ஆட்சி கவிழ்ந்துவிட்டது.

**விசுவஜீத் :** என்ன சொல்கிறாய், கவிழ்ந்துவிட்டதா?

**அசோக் :** ஆம், ஆட்சியாளர்கள் கட்சியில் இருந்த சிலர் எதிரிகளோடு போய்ச் சேர்ந்தார்கள். தீபக்கும் ஏமாற்றம் அடைந்து திரும்பிவிட்டான். பாவம், நாட்டுக்கு அவர்கள் ஏதாவது செய்வார்கள் என்று அவன் மிகவும் நம்பியிருந்தான்...

**விசுவஜீத் :** (திடீரென்று சிரித்து) நாட்டின் பெயரை நன்கு எடுத்தாய். இந்தக் காலத்தில் நாட்டு வேதனையின் பெயரைச் சொல்லித்தான் எல்லாரும் இடைவிடாமல் குடிக்கிறார்கள்.

**நீப்நி :** (திடீரென ஆத்திரமுற்று) இதெல்லாம் பொய். நாடு எங்கே இருக்கிறது? நாட்டுக்குள்ளே மற்றொரு நாடு உண்டாக்கிக் கொண்டு நாம் உட்கார்ந்திருக்கிறோம். உள்ளே இருக்கும் நாட்டின் பெயர், சுயநலம். அது ராஜ்யம், பிரதேசம், சமயம், சாதி என்று பல வடிவங்களில் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. பத்திரிகைகளில் ஒழுக்கங்கெட்டவர்களின் கதைகள் வெளியாகின்றன. பதுக்கல்

பணம் பற்றின கதைகள், பட்டப்பகலில் நடந்த போக்கிரித்தனம் பற்றின கதைகள் வெளியாகின்றன. பொய்ச்சமாதானங்கள் பக்கங்களை அடைத்துக்கொண்டிருக்கின்றன. பொய்த் தஸ்தாவேஜிகள் கூட அச்சாகின்றன. விரோதிகளை அடிப்பதற்காக—இவற்றைப்பற்றி எல்லாம் எந்தத் தேச பக்தனுக்கும் கவலை இல்லை.

**அசோக் :** (கடுமையுற்று) அப்படியானால் எதைப்பற்றிக் கவலை? நான் கேட்கிறேன், வேறு எதைப்பற்றிக் கவலை?

**தீப்தி :** கேட்க விரும்புவீர்களா? பிடிக்குமா உங்களுக்கு? கேளுங்கள். அவர்களுக்கு ஒரே ஒரு கவலைதான் — புதிய தலைமுறையினருக்கு மெய்யான தலைமை கிடைத்துவிடக் கூடாது; அவர்கள் ஏமாற்றமும் அவநம்பிக்கையும் அடைந்திருக்க வேண்டும்; கிழவர்கள் சாவின் இறுதிக் காலடிச் சத்தம் கேட்கும்வரை, ஆடம்பர அதிகார கங்கையில் மூழ்கி இருக்கவேண்டும். ஆனால், நான் சொல்கிறேன்: மனிதனின் அகத்திலும் புறத்திலும் எந்தச் செய்கையிலும் கரவு இருக்க முடியாத யுகம் வந்துகொண்டிருக்கிறது. அவன் நிர்வாணம் ஆகிவிடுவான். அதே நிர்வாணப் பிணத்தின்மீது புதிய நாகரீகம் பிறக்கும். (கருணா வேகமாய் நுழைகிறாள்.)

**கருணா :** இப்படிக் கத்திக்கத்தி யாரை எழுப்பியாகிறது? கேட்கிறேன், சாப்பிடப் போகிறாயா இல்லையா?

**தீப்தி :** இப்போது இல்லை.

**கருணா :** பின் நான் என்ன செய்வது?

**தீப்தி :** ராமாயணத்தின் தொடக்கத்தில் பல்வேறு பலன்களைத் தெரிவிக்கும் பகுதி இருக்கிறதே, அதில் நம் எல்லாருடைய எதிர் காலத்தையும் தேடு.

**அசோக் :** நீங்கள் இந்தப் பெண்ணை மிகவும் தலைக்குமேல் ஏற்றி விட்டீர்கள் அண்ணா!

**விசுவஜீத்:** நானா? எப்போதாவது ஏதாவது செய்திருக்கிறேனா நான்? இப்போதும் ஏதாவது செய்யத் தகுந்தவன் ஆகியிருக்கிறேனா? (விவேக்கின் வருகை.)

**விவேக்:** சரி, சித்தப்பா இருக்கிறார். சித்தப்பா, இனி நீங்கள் தீபக் அண்ணாவிடம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. நான் நாளை மறுநாள் உலகச் சுற்றுப் பிரயாணத்துக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன். ஆம், பாபா! இன்று இரவு நான் மனீஷா அக்கா வீட்டில் இருப்பேன்.

**தீப்தி:** கொஞ்சம் இரு, நானும் வருகிறேன்.

**விவேக்:** (சிரித்து, கருணாவிடம்) மமீ, ஆசீர்வாதம்பற்றிப் பேசுவது பூர்ஷ்வாத்தனம். இருந்தாலும் உங்களை மகிழ்விப்பதற்காக ஆசீர்வாதம் ஏற்க வருவேன். புறப்படு தீப்தி!

தீப்தி : பாபா, வரட்டுமா நான்? என் நல்ல மம்மீ, சாப்பாடு அங்கேயே சாப்பிடுகிறேன்.

[இருவரும் போகிறார்கள். ஒரு கணம் எல்லாரும் மலைத்து இருக்கிறார்கள். பிறகு நீண்ட பெருமூச்சுவிட்டு விசுவஜீத் பேசுகிறார்.]

விசுவஜீத் : இப்போது நீயே சொல்லு அசோக், நான் எங்காவது இருக்கிறேனா?

கருணா : எல்லாரும் போய்விட்டார்கள், இப்போது நீங்களாவது சாப்பிட வாருங்கள்.

விசுவஜீத் : சாப்பாடா? ஆம், அதுவும் ஒரு நிர்ப்பந்தம்தான். வா அசோக், நீயும் வா. சேர்ந்து சாப்பிட்டுப் பலநாள் ஆகிறது.

அசோக் : சேர்ந்து சாப்பிட்டா? ஆம், பழைய பிறவியின் கதை போல் இருக்கிறது. இந்த வாழ்க்கை முழுக்க முழுக்க அர்த்தமின்மையில் மறைந்துவிட்டாற்போலத் தோன்றுகிறது.

விசுவஜீத் : அர்த்தம் இல்லாததைத்தான் இவர்கள் மிகுந்த அர்த்தமுள்ளதென்று சொல்கிறார்கள். அர்த்தமின்மையில் நான் அர்த்தத்தைத் தேடமுடியும்.

அசோக் : அர்த்தமே பிசகிவிட்டபின் அதைத் தேடுவது எப்படி என்று தெரியவில்லை.

[பேசிக்கொண்டே அவர்கள் உள்ளே போகிறார்கள். மேடையில் இருட்டு கவியத் தொடங்குகிறது. இரண்டு கணங்களுக்குப் பின் ஒளி மீளும்போது அங்கு ஓர் ஒழுங்கு தென்படுகிறது. உணவு டேபிளுக்கு அக்கம்பக்கத்தில் நடுமகன் சரத், மூத்த மகள் இந்து, நடுமகள் மனீஷா, கடைசி மகள் தீப்தி அமர்ந்து தேநீர் பருகிய வண்ணம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எல்லாரும் இக்காலப் பாணியில் இருக்கிறார்கள். தீப்தி சிறிது மாறுதலோடு அதே ஹிப்பி வேடத்தில் இருக்கிறாள்.]

தீப்தி : ஒரு யுகத்துக்குப் பிறகு நாம் எல்லாரும் இங்குக் கூடியிருக்கிறோம். ஏன் சரத் அண்ணா, போன தடவை எப்போது நீங்கள் வந்தீர்கள்?

சரத் : அதெல்லாம் யாருக்கு நினைவிருக்கிறது? இரண்டொரு தடவை ஓட்ட ஓட்டமாய் வந்திருக்கிறேன், ஆனால் நீ இல்லை.

இந்து : நானும் இங்கு அதிகமாக வரமுடிகிறதில்லை. கட்டட வேலை நடக்கிறதல்லவா? ஆம், மமா எங்கே போனாள்?

தீப்தி : எங்கே போவாள்? பக்கத்து வீடுகளிலேயே இருக்கிறாள். பாபாவைப்பற்றி ஒரே கவலையாக இருக்கிறாள். அதற்காகத்தான் உங்கள் எல்லாரையும் கூப்பிட்டிருக்கிறாள். அதோ, அவளும் வந்துவிட்டாள். (கருணாவின் வருகை.)

**சரத் :** நமஸ்தே. மமீ !

**இந்து :** நமஸ்தே, மமீ!

**மனீஷா :** நமஸ்தே, மமா!

**கருணா :** (உட்கார்ந்தவண்ணம்) நமஸ்தே. ஆக, நீங்கள் எல்லாரும் வந்துவிட்டீர்களா? ஓய்வு கிடைத்ததா?

**சரத் :** ஓய்வு எங்கே இருக்கிறது? ஆனால் நீங்கள் கூப்பிட்டால் வரவேண்டியதுதானே. என்ன விஷயம், சொல்லு.

**இந்து :** ஆம். நீங்கள் மிகவும் கவலையாக இருப்பதாய்த் தோன்றுகிறது.

**மனீஷா :** பாபாவைப்பற்றி நீங்கள் கவலைப்படுவதாய் தீப்தி சொன்னாள்.

**கருணா :** தீப்தி சொன்னது சரி. உங்கள் பாபா சம்பந்தமாய் பேசுவதற்காக நான் இன்று உங்கள் எல்லாரையும் கூப்பிட்டிருக்கிறேன். அவருடைய நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிவருகிறது. ஜடம் ஆகிவிட்டாற்போல் அவருக்கு வாழ்க்கையில் ஈடுபாடே இல்லை. யாரிடமும் கொஞ்சமும் பற்று இல்லை. என்னிடமும்தான். நான் பேசினால் ஏதோ பேசுகிறார்; இல்லாவிட்டால் தனியாக உட்கார்ந்து சூன்யத்தில் ஏதோ தேடிக்கொண்டிருக்கிறார்; அல்லது முணுமுணுக்கிறார். தவிர நான் அவரிடம் ஒரு புதிய விஷயம் கண்டேன்.

**சரத் :** என்ன விஷயம் அது?

**கருணா :** மிகவும் கெட்ட விஷயம். அவர் திட்டத் தொடங்கி இருக்கிறார்.

**இந்து :** என்ன சொல்கிறீர்கள் மமீ? பாபா உங்களைத் திட்டுகிறாரா?

**மனீஷா :** நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். நான் பாபாவின் விருப்பத்துக்கு விரோதமான வேலை செய்திருக்கிறேன். அவரால் இன்னும் அசத்தை ஏற்கமுடியவில்லை. ஆனால் எப்போதாவது நேரில் அவரைச் சந்தித்தால் தம் கோபத்தைக் காட்டும்படியாக ஒரு வார்த்தையும் சொன்னதில்லை.

**சரத் :** பாபா எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் அவர் யாரையும் திட்டியதில்லை.

**தீப்தி :** அவர் என்னைக்கூடத் திட்டுவதில்லை. அவர் என்னிடம் அளவு கடந்து கோபமாக இருந்தாலும்.

**கருணா :** நீங்கள் எல்லாரும் உங்கள் குரல்களையேதான் கேட்டுக் கொண்டிருப்பீர்களா? முழு விஷயத்தையும் கேட்டுக்கொள்ளாமலே கருத்துச் சொல்ல ஆரம்பித்துவிட்டீர்களே. அவர் வேறு யாரையோ திட்டுகிறார் என்று நான் எப்போது சொன்னேன்? (கம்பீரமாக) குறிப்பாக அவர் என்னைத் திட்டலாம். நான் கொஞ்சமும் வருத்தப்

படமாட்டேன். ஆனால் அவரோ தம்மையே திட்டிக்கொள்கிறார். பழிக்கிறார்; அழுகிறார்.

இந்து : அது சரி; அது வேறு விஷயம். பிறரை வசப்படுத்த முடியாதவர்கள் இப்படித்தான் தங்களையே திட்டிக்கொள்வார்கள்.

சரத் : அவர் தாழ்வு மனப்பான்மைக்கு இரையாகிவிட்டார் என்பது தெளிவு. பெரும் அவநம்பிக்கைவாதி. சில சமயம் இம்மாதிரி ஆட்களுக்குப் பைத்தியம்கூடப் பிடித்துவிடும்.

கருணா : இதைத்தான் நானும் சொல்கிறேன். நீங்கள் அவரைப் பற்றி ஏன் யோசிப்பதில்லை? நீங்கள் எப்போதும் உங்கள் மனம் போல் செய்கிறீர்கள். உங்கள் குரலையே கேட்கிறீர்கள். நாங்கள் யாரையும் தடுக்க முடியவில்லை. விமல் கனடாவில் உட்கார்ந்திருக் கிறான். எப்போதாவது பணம் அனுப்பிப் பொறுப்பைக் கழித்துக் கொள்கிறான். விவேக் ஏதோ ஒரு கேள்விக்கு விடை கேட்டுக்கொண்டே அலைகிறான். எப்போதாவது யாருடைய கேள்விக்காவது விடை கிடைத்திருக்கிறதா? இப்போது இந்த நீப்தியைப் பாருங்கள். என்ன வேஷம் போட்டுக்கொண்டிருக்கிறாள். சிகரெட்டுப் பிடிக்கிறாள். வெகு நேரம் வரை நண்பர்களோடு சுற்றுகிறாள். இப்போது மாணவியர் விடுதியில் இருப்பதாய்க் கூறுகிறாள்.

நீப்தி : மமா, நீங்கள் என்னைப் புரிந்துகொள்ள ஏன் முயலவில்லை? நீங்கள் அன்பு செய்கிறீர்கள். பாசம் காட்டுகிறீர்கள். புரிந்து கொள்வதற்கு ஒருகாலும் முயலுவதில்லை. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதுதான் ஒருவரை நேசிப்பதாகும் என்று நான் சொல்கிறேன். மாணவியர் விடுதியில் தங்குவதால் சௌகரியம் இருக்கிறது என்பதை நீங்கள் ஏன் நினைக்கவில்லை? டாக்டர் படிப்பு லேசுப்பட்டதல்ல. நண்பர்களோடு சுற்றுகிறேன்; ஆனால் ரௌடித்தனம் செய்யவில்லை. சமூக நலத் திட்டங்களில் பங்கு கொள்வதால் நேரம் கழித்துத் திரும்பு கிறேன். உங்களுக்கு அலுப்பாக இருக்குமே என்று சில சமயம் நான் நிதினோடு போய்விடுகிறேன். நிதினும் நானும் மணந்துகொள்வ தென்று முடிவு செய்திருக்கிறோம். உங்களுடைய நன்மைக்காகவே இதை எல்லாம் செய்கிறேன். ஆயினும் நீங்கள் கோபித்துக் கொண்டால் எனக்குக் கவலை இல்லை.

கருணா : கவலைப்படும்படி யார் சொல்கிறார்கள்? கவலைதான் எதற்கு? செலவுக்குத்தான் பணம் கிடைத்துவிடுகிறதே.

நீப்தி : (வேகம் கொண்டு) அதே ஒரு பேச்சு. பணம், பணம். உங்களுக்குக் கொடுக்க விருப்பம் இல்லை என்றால் கொடுக்காதீர்கள். எனக்கு வேண்டிய ஏற்பாடு நானே செய்துகொள்கிறேன். படிக்க மாட்டேன்; ஆனால், இந்த வீட்டில் வரமாட்டேன் — பாச்சையும்

வண்டும் என்னேரமும் சரசரத்து நடமாடி ஈரம் காக்கும் இந்த வீட்டில். இங்கே எனக்கு மூச்சுத் திணறுகிறது.

கருணு : போவதானுல் போய்விடு; யார் தடுக்கிருர்கள்? ஆனுல் இம்மாதிரி கத்தாதே. இந்த வீட்டில்தான் நாங்களும் காலம் கழித்தோம். அயல்வீட்டுப் பெண் நான். நாற்பது-நாற்பது பேருக்கு நடுவில் நான் இருந்திருக்கிறேன்.

தீப்தி : அந்த 40 பேரும் எங்கே போனுர்கள்? ஏன் போனுர்கள் என்பதை எப்போதாவது யோசித்தீர்களா மமா?

கருணு : நான் எல்லாவற்றையும் பார்த்து யோசித்திருக்கிறேன். அந்தப் பேச்சை விடு. இந்த நேரத்தில் உங்கள் பாபாவைப்பற்றி தான் எனக்குக் கவலை. இன்று மிகக் காலையிலேயே எழுந்து வெளியே போனுர். இதுவரை திரும்பவில்லை. உங்களுக்கும் அவரைப்பற்றிய கொஞ்சம் பொறுப்பு இருக்கிறதல்லவா? நீங்கள் அவரைப் பாருங்கள். எனக்கு மிகவும் பயமாயிருக்கிறது.

மனீஷா : மமீ! மூன்று நான்கு மணி நேரத்துக்கு முன்னுலே நான் அசத்தோடு ரயிலிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போது பாபாவைப் பார்த்தேன்.

கருணு : எங்கே பார்த்தாய்?

மனீஷா : பாலத்துக்கு அந்தப் பக்கம். ரயில் தண்டவாளத்துக்கு அருகில் நின்றுகொண்டிருந்தார்.

சரத் : ரயில் தண்டவாளத்துக்கு அருகிலா?

இந்து : அங்கே அவர் என்ன செய்யப் போனுர்?

தீப்தி : உலாவுவதற்கு அவர் அந்தப் பக்கம் போகமாட்டாரே!

கருணு : இந்தப் பயம்தான் என்னைத் தின்றுகொண்டிருக்கிறது. அவர் எங்கே இருக்கிருர் என்று நீங்கள் போய்ப்பாருங்கள்.

மனீஷா : இவ்வளவு பயப்படத் தேவை இல்லை, மமீ. ஓடுகிற ரயிலிலிருந்து நான் அவரைக் கூப்பிட்டேன். அந்த இடத்தில் ரயில்கள் எவ்வளவு மெதுவாய்ப் போகும் என்று உங்களுக்குத் தெரியும். ஆகையால், திடுக்கிட்டு அவர் என் பக்கம் பார்த்தார். புன்னகையும் செய்தார்.

சரத் : ஆம், மமீ. பாபா வந்துவிடுவார். கவலைப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

கருணு : கவலை விஷயத்தை என்னிடம் விடுங்கள். நீங்கள் அவரைத் தேடப் போக விரும்பவில்லை என்று தெளிவாய்ச் சொல்லுங்கள்.

சரத் : காரணம் இல்லாமல் உங்களுக்குக் கோபம் வருகிறது, மமீ. போகமாட்டேன் என்று யார் சொன்னுர்கள்? ஆனுல், ஓய்வு கிடைக்க

வில்லையே என்பதுதான் பிரச்னை. எனக்குப் பெட்ரோல் பம்பு கிடைக்கப் போகிறது என்று உங்களுக்குத் தெரியும். அதற்குப் பணம் போடும் ஆளை ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன். ஆனால், மேல் பொரிசு இல்லாமல் ஒன்றும் நடக்காது. இன்று அந்த மேல் ஆளை நான் சந்திக்க வேண்டும். தீபக் அண்ணா என்னை எட்டு மணிக்கு வரச் சொன்னார். இப்போது ஏழேகால் ஆகிவிட்டது. (எழுந்திருக்கிறான்.)

கருணா : அப்படியானால் நீ எப்படிப் பார்க்க முடியும்? போ அப்பா. மேலே இருப்பவனைப் போய்ப்பார். (சரத் போகிறான்.)

இந்து : நானும் போகவேண்டும் மமீ.

கருணா : நீ எங்கே போகவேண்டும்?

இந்து : நாங்கள் வீடு கட்டுவது உங்களுக்குத் தெரியாதா? வீடு கட்டுவது எவ்வளவு தொல்லை பிடித்த வேலை என்று உங்களுக்குத் தெரியாதா? அரசாங்கத்திடம் கடன் வாங்கினோம், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் கடன் வாங்கினோம், நண்பர்களிடம் கடன் வாங்கினோம், இருந்தும் தொல்லை விட்டபாடில்லை. மெய்யாகச் சொல்கிறேன், மமீ. நாங்கள் இருவரும் உண்பதையும் உறங்குவதையும் மறந்து விட்டோம். யாராவது ஒருத்தர் அங்கே இருந்தாக வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் சாமான் மாயமாகப் போய்விடுகிறது. அன்றைக்கு இரும்புக் கம்பிகள் காணாமல் போய்விட்டன. நேற்று பத்து மூட்டை சிமெண்ட் காணோம். நீங்களே சொல்லுங்கள், இரண்டுபேர் எதையெல்லாம்தான் பார்ப்பது? சரி, மமா. வரட்டுமா, ஆட்களுக்குக் கூலிக் கணக்கும் செய்ய வேண்டும். (போகிறாள்)

கருணா : அம்மா இப்போது கிழவி ஆகிவிட்டாள்; சமைக்கும்போது அவளுடைய கைகள் நடுங்குகின்றன என்பதை உங்களில் யாராவது எப்போதாவது நினைத்துப் பார்ப்பதுண்டா என்று கேட்கிறேன்?

மனீஷா : சமையலுக்கு ஏற்பாடு செய்ய முடியும். ஆனால், பாபா வுக்கு என்ன செய்வது? அவருக்கு உங்கள் கைச்சமையல்தானே வேண்டும்?

கருணா : இதனால்தான் நான் யாரிடமும் ஒன்றும் சொல்வதில்லை. ஆனால் இப்போது அவரைத் தேட நான் எங்கே போவேன்.

தீப்தி : எங்கும் போக வேண்டாம். நீங்கள் வீணாகப் பயப்படுகிறீர்கள். பாபா தாமாகவே வந்துவிடுவார். மமீ, மனீஷா அக்காவுடன் நானும் போய்விடலாமா என்று யோசிக்கிறேன்.

கருணா : நீ இப்போதே போக வேண்டுமா? இப்போதே?

தீப்தி : ஆம், மமா. நீங்கள் கொஞ்சமும் பயப்படாதீர்கள். நாளை மறு நாள் கட்டாயம் வருவேன். என் பிறந்த நாள் அல்லவா. நாளை மறு நாள் நான் மேஜராகிவிடுவேன். அதாவது, சுதந்திரம்

பெற்றுவிடுவேன். ஓ, சுதந்திரமாவதும் எவ்வளவு நல்ல விஷயம், இல்லையா? மமீ? அஞ்சாதீர்கள். எனக்கு என் பொறுப்புத் தெரியும். மாணவியர் விடுதியில் வேறு யாருடைய அச்சமும் இல்லை. தன்னிடம் தனக்குள்ள அச்சம் மட்டும்தான். தன்னிடம் தானே அஞ்சுகிறவன், தன் பொறுப்பு உணர்ந்தவன். நான் தளைகளை உடைத்தெறிய விரும்புகிறேன். ஒழுங்கைச் சின்ன பின்னமாக்க விரும்புகிறேன். ஆனால், வாழ்க்கையை அல்ல. வாழ்க்கையை நான் நேசிக்கிறேன். (அதே சமயத்தில் சரத்தும் விசுவஜீத்தும் மேடையில் பிரவேசிக்கிறார்கள்.) அட, பாருங்கள் மமா! இதோ பாபா வந்துவிட்டார். முற்றிலும் நல்லபடி இருக்கிறார். உடம்பில் எங்கும் காயம் இல்லை, முகத்தில் வாட்டமும் இல்லை என்பது என் கருத்து.

**சரத் :** பிடித்துக்கொள்ளுங்கள், மமா! காரணம் இல்லாமல் நீங்கள் இவ்வளவு பயந்துகொண்டிருந்தீர்கள். பாபா தாமே வந்து கொண்டிருந்தார்... ஆனால், நான் இப்போது கிளம்புகிறேன்,... பணம் போடுகிறவனை ஏற்பாடு செய்யாவிட்டால் பெட்ரோல் பம்ப் கையை விட்டு நழுவிப் போகும். (போகிறான்.)

**விசுவஜீத் :** (சோபாவில் உட்காருகிறார்.) ஆம், ஆம். நீ போ, எல்லாரும் போங்கள். உங்களால் எப்படி இங்குத் தங்க முடிகிறது? இந்தத் தடைப்பட்ட வாழ்க்கையில். நீங்கள் எல்லாரும் இங்கே எப்படி வந்தீர்கள் என்று கேட்கிறேன்?

**கருணா :** நான் கேட்கிறேன், நீங்கள் காலையில் எங்குப் போனீர்கள்? (சிற்றுண்டியும் தேநீரும் தருகிறாள்.)

**மனீஷா :** பாபா, நீங்கள் நாலுமணி நேரத்துக்கு முன்னாலே ரயில் தண்டவாளத்துக்கு அருகில் நின்றிருந்தீர்கள் அல்லவா?

**கருணா :** அங்கே என்ன செய்யப் போனீர்கள்?

**விசுவஜீத் :** (அமைதியாகத் தேநீர் பருகியவண்ணம்) நீங்கள் எல்லாரும் எதை எண்ணுகிறீர்களோ, அதைச் செய்யவே போயிருந்தேன்.

**மனீஷா :** அதாவது, தற்கொலை? இல்லை, இப்படி இருக்க முடியாது. இது பொய்.

**விசுவஜீத் :** ஏன் இருக்க முடியாது என்பதைப்பற்றி நீங்கள் யோசிக்கலாம். ஆனால், இந்த விஷயங்களை விடுங்கள். (திடீரென்று எங்கோ தம்மை இழக்கிறார்.) மனீஷாக்கண்ணு, நீ என்னை பாபா என்று அழைத்தபோது ஆகாயம் முழுவதும் இந்த ஒரு சொல்லில் நிரம்பியுள்ளதாக எனக்குப்பட்டது. தற்கொலை என்பதன் அர்த்தம் சாவு. சாவு ஒரு நாள் நிச்சயம் என்று யோசித்தேன். அப்போது, தற்கொலை செய்துகொள்வது வீண் வேலை. உயிரை ஏன் விட வேண்டும்? கடைசி கணம் வரை அதைக் காப்பாற்றி வைத்துக்

கொள்ள வேண்டும், நடக்கப் போவதைப் பார்ப்பதற்காக. தன்னைக் காட்சி காண்பவன் ஆக்கிக்கொள்ளாமல் ஏமாற்றிக்கொள்வது எப்படி புத்திசாலித்தனம் ஆகும்? ஆகையால் நான் திரும்பிவிட்டேன்.

கருணை : நல்ல காரியம் செய்தீர்கள். எதிர்பார்த்து, எதிர் பார்த்துப் பைத்தியம் பிடித்துவிட்டது.

மனீஷா : மமீ, பாபா உங்களைப் பரிகாசம் செய்கிறார். இவர் தற்கொலை செய்துகொள்ளப் போகவில்லை. சரி பாபா, நான் புறப் படுகிறேன்.

தீப்தி : அக்கா, நானும் வருகிறேன். பாபா, மறந்துவிடாதீர்கள். நாளை மறுநாள், என் பிறந்த நாள். நான் மேஜர் ஆகிவிடுவேன்.

விசுவஜித் : நீயும் மேஜர் ஆகிவிடுவாயா? எல்லாவற்றையும் செய்யும் சுதந்திரம். சரி, நீ மேஜராவதையும் பார்க்கிறேன். நீ எப்போது மேஜராகிறாய், எப்போது மைனர் ஆகிறாய் என்று எனக்குத் தெரியாது. நிசமாய்க் கேட்டால் நான் மேஜரா, மைனரா என்றே எனக்குத் தெரியாது. (எல்லாரும் சிரித்துவிடுகிறார்கள். மனீஷாவும் தீப்தியும் போய்விடுகிறார்கள். பல கணங்கள் வரை விசுவஜித், கருணை இருவரும் மௌனமாக உட்கார்ந்திருக்கிறார்கள். பிறகு கருணை பேசுகிறாள்.)

கருணை : நீங்கள் நிசமாகத் தற்கொலை செய்துகொள்ளப் போனீர் களா?

விசுவஜித் : முதலில் நான் கேட்கும் ஒரு விஷயத்துக்குப் பதில் சொல்லு.

கருணை : என்ன விஷயம்?

விசுவஜித் : நான் வாழவும் இல்லை சாகவும் இல்லை. தற்கொலை வேறு, இது வேறு?

கருணை : ஆகையால்தான் நான் சொல்கிறேன்; நீங்கள் சுதந் திரமாகிவிட்டீர்கள். குழந்தைகளின் பொறுப்பிலிருந்து சுதந் திரமாகிவிட்டீர்கள் என்பதை ஒப்புக்கொள்ள ஏன் மறுக்கிறீர்கள்? சுதந்திரமாயிருப்பது எவ்வளவு நல்லது!

விசுவஜித் : நல்லதுதான். ஆனால், என நிர்ப்பந்தங்களை நான் என்ன செய்வது: சுபாவத்தின் நிர்ப்பந்தம், குழந்தைகளை நேசிக்கிற நிர்ப்பந்தம், அவர்களுக்குத் தகப்பனாகிற நிர்ப்பந்தம். (சிரிக்கிறார்) தகப்பனாகிற நிர்ப்பந்தம்... அவர்களை இழந்துவிட்ட பிறகு, ஒரு நாள் அவர்கள் திரும்பிவிடுவார்கள் என்று நம்புகிற நிர்ப்பந்தம்.

[சிரித்துக்கொண்டே இருக்கிறார். கருணை அச்சத்தோடு அவரைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். ஆனால், சிரிப்பு நிற்கவில்லை. இதே சிரிப்போடு, திரை மெள்ள மெள்ளக் கீழே இறங்குகிறது.]

# கைதி

—ஜகதீஷ்சந்திர மாதுர்

## பாத்திரங்கள்

ராய் தாராநாத்

ஹேமலதா—அவருடைய மகள்

பீரேன்

ஆயா

சேத்ராம்

லோசன்

பாலேச்வர் உர்ப்பிடி சின்ஹா

கூர்சந்த் பரைடா

சில குரல்கள்

## (முதல் காட்சி)

*(வட இந்தியாவின் ஒரு கிராமத்தில் ஒரு பெரிய குடும்பத்து பங்களாவின் தோட்டம். பின்புறத்தில் மாளிகையின் தோற்றம். அதற்கு உள்ளே போக இடதுபுறத்திலும், வெளியே போக வலது புறத்திலும் வழி உள்ளது. நேரம், சித்திரா பௌர்ணமி மாலை. மாலை நேரத்திலேயே நிலவின் சாம்ராஜ்யம் பரவுகிறது. ராய் தாராநாத் ஹேமலதாவோடு ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டியவாறு வருகிறார்.)*

**ராய் தாராநாத்:** உன் தாயார் புதைந்தப் பிறகு, துளசி மாதாவுக்குத் தண்ணீர் ஊற்ற வருகிற இடம் இதுதான்; நான் ..

**ஹேமலதா:** நீங்கள் நாத்திகராக இருந்திப்பீர்களே, பாபா.

**ராய் தாராநாத்:** உன் தாயாரைச் சீண்டுவதற்காக. ஆனால் அவளுடைய ஈடுபாடு அசைக்க முடியாதது... அப்போது நான் தோட்டத்தின் ஏதாவது மூலையில், ஒருகால் .. அதே நான்.... அதோ கல் தெரிகிறதல்லவா?

**ஹேமலதா:** நினைவிருக்கிறது.

**ராய் தாராநாத்:** என்ன நினைவிருக்கிறது?

**ஹேமலதா:** அந்தக் கல்மேல் உட்கார்ந்துகொண்டு எனக்கு நீங்கள் நட்சத்திரங்களின் கதை சொல்வது வழக்கம். (நினைவு நிறுத்தி) பாபா, கல்கத்தாவில் நட்சத்திரங்கள் நிறைந்த வானம் என் மனத்தின் மூலையில் புதைந்து கிடப்பதாய்த் தோன்றும்; ஆனால், இங்கே (அன்பு தோய்ந்த குரலில்) கிராமம் வந்ததும் இன்று இந்தச் சித்திரா பௌர்ணமியின் நிலாபோல் மலர்ந்துவிடுகிறது!

**ராய் தாராநாத்:** ஆகாயமும், உன்னுடைய மனமும், இரண்டுமே மலர்ந்து கிடக்கின்றன மகளே!... (சிரிக்கிறார்—சற்று நிறுத்தி) மணி என்ன ஆகிறது? (மெதுவாக) வண்டிக்கு நேரம் ஆகியிருக்குமே?

**ஹேமலதா:** நீங்களுமா பாபா! (வெகுந்து) எனக்கு நிலவு மகிழ்ச்சி தரவில்லை என்று எண்ணுகிறீர்கள்...

**ராய் தாராநாத்:** (பேச்சை முடிப்பவராக) பீரேனை எதிர்பார்க்கிற நேரத்தில்தான் மலருகிறது. (சிரிக்கிறார்.) தப்பு என்ன? பீரேன் நல்ல பையன். அதனால்தான் இங்கே வரும்படி அவனை அழைத்தோம்...... கிராமத்து ஒளி அவன் மனத்தில் ஏறுகிறதா இல்லையா என்று பார்க்கலாம்.

ஹேமலதா : பிறந்ததிலிருந்தே பட்டணத்துப் புழுதியில் அலைந்தவர் போல்!

ராய் தாராநாத் : அப்படியே எண்ணிக்கொள்! குழந்தைப் பருவம் முதலிலிருந்தே தகப்பனுர் இறந்த பிறகு பரேலிக்குப் போய்விட்ட தாகவும், அதற்குப் பிறகு லக்னே, அப்புறம் கல்கத்தாவுக்குப் போன தாகவும் சொன்னேன் அல்லவா?

ஹேமலதா : நீங்களும்தான் என்னைக் குழந்தைப் பிராயத்தில் கல்கத்தாவுக்கு அழைத்துக்கொண்டு போனீர்கள். இப்போதுதான் கிராமத்துக்கு முதன்முறையாக அழைத்து வந்திருக்கிறீர்கள்.

ராய் தாராநாத் : நான் உன்னை அழைத்து வந்தேனு, நீ என்னை அழைத்து வந்தாயா ?

ஹேமலதா : பாபா, வந்ததுமே நான் இந்த இடத்தைச் சேர்ந்தவள் ஆகிவிட்டேன். எவ்வளவோ யுகங்களின் உறவு கூடினாற் போல் இருக்கிறது. (மகிழ்ச்சி நிறைந்த குரலில்) இந்த நம்முடைய வீடு, பழைய அறை, அதன் சுவர்களில் விழுந்துள்ள பிளவுகள்...... புன்னகை மலர்ந்த முகத்துச் சுருக்கங்கள் போல்! வெகு வெகு தொலைவு வரை பரவியுள்ள வயல்களின்மீது மந்தமான கதியில் வீசும் காற்று அவற்றுக்கே காணிக்கை ஆகிவிடுகிறது; இந்த நிலா— எவ்வளவு சிரிக்கிறதோ அவ்வளவு ஒளித்துக்கொண்டும் இருக்கிறது! (மெய்ம்மறந்து) கல்கத்தாவில் சித்திரை நிலாவுக்கும், ஈந் நிலாவுக்கும் வேற்றுமை ஒன்றும் இருப்பதில்லை. ஆனல் இங்குக் குடிசைகள்மீதும், மூங்கில் புதர்களிலும், வயல் வரப்புகள்மேலும், கணக்கில்லாமல், பேச்சு இல்லாமல், தயக்கம் இல்லாமல் நிலாச் செல்வம் கொட்டிக் கிடக்கிறது. ஓ, பாபா! (எல்லையற்ற இன்பப் பரவச மௌனம்.)

[திரைக்குப் பின்னுலிருந்து : ''ஹேமா அம்மா, தேநீர் தயார்!'']

ராய் தாராநாத் : தேநீரா? இவ்வளவு நேரம் கழித்தா?

ஹேமலதா : ஆயாவின் பிடிவாதம்! குளிராயிருக்கிறது; கொஞ்சம் தேநீர் சாப்பிடு என்கிருள். (வீட்டின் பக்கம் திரும்பி) இங்கேயே கொண்டுவந்துவிடு ஆயா, தோட்டத்தில்! இரண்டு மோடாக்களும் கொண்டு வா.

ராய் தாராநாத் : (நினைவுக்கடலில் மூழ்குகிறார்.) உன் தாய்க்கும் உன்னைப்போல் பேசவும் எழுதவும் தெரிந்திருந்தால் அவளும் கவி யாகவோ, அல்லது உன்னைப்போல் ஆர்ட்டிஸ்டாகவோ ஆகியிருப் பாள் என்று நினைக்கிறேன்.

ஹேமலதா : அம்மாவுக்குப் பேசத் தெரிந்திருந்தால் கல்கத்தா வுக்குப் போகவிட்டிருக்க மாட்டாள்.

**ராய் தாராநாத்** : தடுத்தாள். கொஞ்சம் கண்ணீரும் விட்டாள். நான் போயிருக்கமாட்டேன் என்று நிசமாக நீ நினைக்கிறாயா, ஹேம்? எப்படிப் போகாமல் இருப்பேன்? முழு 'காரியரை'யும் சம்பந்தப்பட்ட பிரச்னை. அந்தக் காலத்தில் இந்த ஜமீன்தாரி நிறைவாகத்தான் இருந்தது. ஆனால் இறுதியில் என்னையும் சேர்த்துக்கொண்டு மூழ்கி விட்டிருக்காதா?

**ஹேமலதா** : கடவுள் கருணையால் இங்கேயே ஹைகோர்ட் இருந்தால், இங்கேயே நீங்கள் வக்கீலாக இருந்து. இங்கேயே ஜட்ஜ் ஆகியிருப்பீர்கள்.

**ராய் தாராநாத்** : போதும், மகளே! அப்படியானால், உன் தாய்க்கு நீண்ட காலம் நோய்க்குச் சிகிச்சை நடந்ததே, அந்தப் பெரிய ஆஸ்பத்திரியும் இங்கேயே இருந்திருந்தால், நீ கல்வி கற்றாயே அந்த ஹைஸ்கூலும் காலேஜும் இங்கேயே இருந்திருந்தால், இங்கேயே அந்தத் தியேட்டர், சினிமா...

*[ஆயாவின் வருகை. கையில் ட்ரே. தன் போக்கில் பேசுகிறாள்.]*

**ஆயா** : இதைத்தான் நான் சொல்லிக்கொண்டிருந்தேன், எஜமான்! ஹேமாக் கண்ணுக்கு இந்தப் பட்டிக்காடு எப்படிப் பிடிக்கும்? சினிமா இல்லை, தேட்டர் இல்லை, கிளப் இல்லை. (பின்புறம் நோக்கிக் கூப்பிட்ட வண்ணம்) அடேய் சேதுவா! மேஜை எங்கேயடா கொண்டு போனாய்?... பட்டிக்காட்டான், புத்தியும் கட்டை. (சேத்ராம் ஒரு கையில் சிறு மேஜையும், ஒரு கையில் மோடாவும் தூக்கிக்கொண்டு வருகிறான்.) அங்கே வை... ஆம், சரி... (மேஜைமீது ட்ரேயை வைக்கிறாள். தேநீர் தயாரித்தபடி) உங்களுக்கும் தயாரிக்கட்டுமா, எஜமான்?

**ராய் தாராநாத்** : (ஒரு முடிவுக்கு வராமல் மோடாமீது உட்கார்ந்தவாறு) எ..ன...க்...கா...

**ஆயா** : (சேத்ராம் நிற்பதைப் பார்த்து) அட, ஏன் நிற்கிறாய்? இன்னொரு மோடாவும் கொண்டுவா, ஓடு!

**சேத்ராம்** : இதோ கொண்டுவருகிறேன் அம்மா. (போகிறான்)

**ஆயா** : எடுத்துக்கொள்ளுங்கள் அம்மா. கதகதப்பான ஆடை கட்டாவிட்டாலும் சூடான தேநீராவது எடுத்துக்கொள்ளுங்கள். (கோப்பையை நீட்டுகிறாள்.)

**ஹேமலதா** : ஆயா, நாங்கள் ஏதோ பனிச் சிகரத்தின்மேல் இருப்பதாய் நினைக்கிறாய்.

**ஆயா** : (இரண்டாவது கோப்பை தயாரித்தவாறு) இல்லை ஹேமா அம்மா, பட்டிக்காட்டுக் காற்று பட்டணத்து ஆட்களுக்குச் சண்டியாகிவிடும், சண்டி!

**ஹேமலதா :** நீயும் பட்டிக்காட்டைச் சேர்ந்தவள்தான் ஆயா!

**ஆயா :** இப்போது முக்கால் வாழ்வு உங்களோடேயே கழிந்து விட்டது. (தேநீர்க் கோப்பையை ராய் சாகப்பிடம் நீட்டிக் கொண்டே) எடுத்துக்கொள்ளுங்கள் எஜமான்! (ராய் சாகப்பைப் பார்த்துச் சிறிது திடுக்கிட்டு) அட!

**ராய் தாராநாத் :** ஏன், என்ன ஆயிற்று? (கோப்பையை எடுத்துக் கொள்கிறார்.)

**ஆயா :** எஜமான், நீங்களும் இப்படி அநியாயம் செய்கிறீர்களே. வெளியில் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்களே. (வீட்டை நோக்கி விரை கிறாள்.)

**ஹேமலதா :** எங்கே போகிறாய் ஆயா?

**ஆயா :** (அவசரமாக) டிரெஸ்ஸிங் கவுன் கொண்டு வருவதற்கு... எஜமானின் சேவகன் கல்கத்தாவிலிருந்து வந்திருந்தால் இம்மாதிரி கவனக்குறைவு நேர்ந்திருக்குமா? (போய்விடுகிறாள்.)

**ராய் தாராநாத் :** ஹா ஹா ஹா! குட் ஓல்டு ஆயா! (தேநீர் பருகியவாறு) உலகத்தில் இருப்பவர்கள் எல்லாரும் அறியாக் குழந்தைகள், தான் மட்டும் எல்லாருக்கும் தாய் என்று எண்ணுகிறாள்!

**ஹேமலதா :** நிசமாக அவளுக்குக் கிராமப்புறம் பிடிக்கவில்லையா பாபா? என்றால் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால்... (சேத்ராம் மோடா கொண்டுவருகிறான்.) மோடாவை இங்கேயே, மேஜைக்குப் பக்கத்தில் வை.

**ராய் தாராநாத் :** எனக்கு இந்தப் பழைய மோடாக்கள் பிடிக்கும். இப்படி முற்றிலும் சரியான ஆங்கிளில் உட்காருகிறது. (சேத்ராமை நிறுத்தி) ஏ, உன் பெயர் என்ன?

**சேத்ராம் :** எஜமான், சேத்ராம்.

**ராய் தாராநாத் :** நீ கஹாரா?

**சேத்ராம் :** முசஹர், எஜமான்!

**ராய் தாராநாத் :** முசஹர்களின் ஒரு பேட்டை இங்கு எங்கோ இருந்ததே, ஒரே ஆபாசமாய்... அப்பா பெயர்?

**சேத்ராம் :** கமதூராம்!... இப்போது ஆபாசம் இல்லை, எஜமான்!

**ராய் தாராநாத் :** அட, நீ கமதூரவின் பிள்ளையா?

[ஆயா வருகிறாள்.]

**ஆயா :** எடுத்துக்கொள்ளுங்கள் எஜமான், டிரெஸ்ஸிங் கவுன். இப்படி வெளியில் உட்காரத்தான் வேண்டும் என்றால்... அட, நீ ஏன் நிற்கிறாய், சேது?

**ராய் தாராநாத் :** (டிரெஸ்ஸிங் கவுன் அணிந்துகொண்டே) ஆயா, இவன்தான் அந்த கமதூரவின் பிள்ளையாம், பதினைந்து வருடங்களுக்கு முன்னாலே இங்கே இருந்தானே...

**ஆயா :** ஆம், எஜமான்! நான் அவனைத்தான் கூப்பிட்டேன். ஆனால் அவன் பையனை அனுப்பிவிட்டான். தெரிந்த வீட்டுப் பையன், திருடினால் கிருடினால் பிடிக்கக் கஷ்டமாக இராது.

**ஹேமலதா :** நீ இருக்கிறாயே, ஆயா...

**ஆயா :** அட, ஆம் அம்மா. இப்போது கிராமத்து ஜனங்கள் நேர்மையானவர்களாக இல்லை. நம்முடைய—உங்களுடைய காதைக் கிள்ளிவிடுவார்கள். சேதூ, சீக்கிரம் ட்ரேயைச் சீக்கிரம் எடுத்துவா. கட்டில்—கிட்டிலைச் சரி செய்யவேண்டும். (போய்க்கொண்டே) சமையல்காரன் சாப்பாடு தயார் செய்துவிட்டானா என்று பார்க்கிறேன். (வெளியே போகிறாள்.)

**ஹேமலதா :** சேத்ராம்!

**சேத்ராம் :** அம்மா!

**ஹேமலதா :** முசஹர் பேட்டையில் இப்போது ஆபாசம் இல்லையா, ஏன்?

**சேத்ராம் :** பேட்டையே வெள்ளத்தோடு போய்விட்டது, எஜமானி!

**ராய் தாராநாத் :** வெள்ளத்தோடு போய்விட்டதா?

**சேத்ராம் :** போன வருடம் பெரிய வெள்ளம் வந்தது. எங்கள் பேட்டையை அது தீர்த்துக்கட்டிவிட்டது. நாற்பது வீடுகள் இருந்தன. என் தாத்தாவிடம் கொஞ்சம் பயிர் நிலம் இருந்தது. அதிலும் மணலடித்துவிட்டது. காளு பெரியப்பாவிடம் நாலு வெள்ளாடுகள் இருந்தன. எல்லாம் தண்ணீர்..

**ராய் தாராநாத் :** அரசாங்க உதவி கிடைத்ததா?

**சேத்ராம் :** பேச்சு நடக்கிறது... ஆனால், நாங்கள் இப்போது மலையடிவாரத்துக்குப் போய்விட்டோம். புதிய பேட்டை உருவாகிக் கொண்டிருக்கிறது.

**ராய் தாராநாத் :** ஓகோ, நல்ல யோசனைதான். ஆனால் அங்கே உவர்மண் ஆயிற்றே, பயிர் செய்ய முடியாதே?

**சேத்ராம் :** கஷ்டம்தான் எஜமான்! முறைவைத்துப் பத்து பத்து பேராய்க் கூடி முயற்சி செய்கிறோம். ஓர் அணை கட்டிவிட்டால் கஷ்டம் தீர்ந்துவிடும்.

**ராய் தாராநாத் :** உங்களுக்கு மிகவும் துணிவு இருக்கிறது!

**ஹேமலதா :** ஆனாலும் துன்பம்தானே. தினம் எப்படிச் சாப்பிடுகிறீர்களோ?

**ராய் தாராநாத் :** இதுதான், கூலி வேலை. கிடைத்தபோது.

**சேத்ராம் :** அதுதான் எஜமான்! ஆனால் இப்போது மூங்கில் வேலை செய்யத் தொடங்கியிருக்கிறோம். கடைத்தெரு, சந்தையில் விற்றுப்

போகிறது. இவற்றைவிட நேர்த்தியான மோடாக்கள் செய்கிறோம்.

**ராய் தாராநாத் :** அப்படியா? எங்களுக்கும் ஒரு செட் கொண்டு வா தம்பி.

**சேத்ராம் :** கட்டாயம், எஜமான்! இராப்பகலாய்த் தாத்தா இதே வேலை செய்கிறார். நானும் சிறு கூடைகள் செய்யக் கற்றுக் கொண்டுவிட்டேன், பலவர்ணக் கூடைகள். லோசன் அண்ணாவுக்கு மிகவும் பிடிக்கும். பட்டணத்தில் நிறைய விற்கும் என்கிறார்...

**ஹேமலதா :** உனக்கு அண்ணாவும் இருக்கிறானா?

**சேத்ராம் :** (சிரிக்கிறான்) இல்லை, அம்மா, லோசன் அண்ணா... லோசன் அண்ணா... அவர் எல்லோருக்கும் அண்ணா! அவர் சொல்கிறார்...

**ராய் தாராநாத் :** உலகத்துக்கே அண்ணா!

*[திரைக்குப் பின்னிருந்து ஆயா : "சேத்ரா! ஓ சேத்ரா!"]*

**சேத்ராம் :** தேநீர் கொண்டு வரட்டுமா, எஜமான்?

**ராய் தாராநாத் :** இன்னும் கொஞ்சம், ஹேமா?

**ஹேமலதா :** ஊம்... ஆம்... இல்லை! எடுத்துக்கொண்டு போ!

*[சேத்ராம் எடுத்துக்கொண்டு போகிறான். ராய் சாகப் டிரெஸ்ஸிங் கவுனின் பையில் கைகளை விட்டுக்கொண்டு உலாவத் தொடங்குகிறார்.]*

**ராய் தாராநாத் :** ஆக, இதுதான் இந்த மக்களின் வாழ்க்கை. ஏழைகளாகவும் இருக்கிறார்கள், ஆடம்பரமானவர்களாகவும் இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் அந்தப் பேட்டையில் ஏக்கைப் பிடித்துக் கொள்ளாமல் போக முடியாது. இவனுடைய தகப்பன் உழைப்பாளி. உண்மையில் இவர்கள் எல்லோரும் பாடுபட்டு வேலை செய்கிறவர்கள். ஆனால், முட்டாள்கள்!

**ஹேமலதா :** பாபா, எங்கள் ஆர்ட் மாஸ்டர் "குடியானவனின் மாலை" என்று தலைப்பிட்ட ஒரு சித்திரம் தீட்டினாரே, நினைவிருக்கிறதா? தோள்மீது கலப்பை; முன்னால் மாடு; மாலை நேரத்தின் மனங்கவரும் வர்ணக்கோலத்திலும், பற்றுதல் இல்லாமல் களைத்துச் சோர்ந்த குடியானவன்.

**ராய் தாராநாத் :** அதற்கு அவர் ஐநூறு ரூபாய் விலை வைத்திருந்தார் அல்லவா?

**ஹேமலதா :** இந்த சேத்ராமின் உருவம் அதைப் போலவே இருப்பதைக் கவனித்தீர்களா பாபா?........கிராம வாழ்க்கையிலும் காட்சியிலும் எண்ணிமுடியாத மாஸ்டர்பீஸ்களின் விதைகள் சிதறிக் கிடக்கின்றன என்று மாஸ்டர் சொல்வார். ஒவ்வொரு முகத்திலும்

பல நூற்றாண்டுகளின் துயரம். ஒவ்வொரு பார்வையிலும் யுகங்களின் ஆழம். அம்ருதா ஷேர்கில்......

**ராய் தாராநாத் :** அம்ருதா ஷேர்கில். அப்...பா! அவளுடைய சித்திரங்களில் இழவெடுத்து வாடை அடிப்பதுபோல் இருக்குமே.

**ஹேமலதா :** அது அவரவர் 'ஆட்டிட்யூட்'; அவரவர் பார்வை...... ஆனால் பாபா, ஷேர்கில்லின் நிறங்களில் பாரதநாட்டுக் கிராமத்து மண்ணின் ஒளி வீசுகிறது என்பதை ஒப்புக்கொள்வீர்கள். பாபா, இங்கே வந்த பிறகு என் பிரக்ஞைக்குப் புதிய பார்வை கிடைத்து விட்டாற்போலத் தோன்றுகிறது. எத்தனை சித்திரங்கள் என்னால் தீட்டமுடியும் தெரியுமா? முதிரும் கோதுமை வயலில் வியந்து நிற்கும் குடியானவப் பெண்! பல வண்ண மூங்கில் கூடைகள் செய்யும் இதே சேத்ராமின் குடும்பம்! காலைக் கதிரொளியில் வெள்ளை வெளேரென்று இருக்கும் பசுவைக் கறக்கும் இடையன்!

**ராய் தாராநாத் :** இந்த வெண்ணையிலா! (சிரிக்கிறார்) ஆனால், ஹேமா, அந்தச் சித்திரம் தயாராயிற்று, இல்லையா?

**ஹேமலதா :** எந்தச் சித்திரம்?

**ராய் தாராநாத் :** அதே, அதுதான்...... சிறப்புச் சித்திரம்!

**ஹேமலதா :** பாபா, நீங்கள்! (நாணி) ஆனால், பீரேன் தொடர்ச்சியாகப் பதினைந்து நிமிடம்கூட சிட்டிங் கொடுக்கவில்லை. இங்கும் அங்கும் குதித்தபடி இருந்தார்!

**ராய் தாராநாத் :** இந்த நேரத்திலும் எங்கேயோ ஐயா குதித்துக் கொண்டிருக்கிறார்போலத் தெரிகிறது!

**ஹேமலதா :** நீங்கள் அனாவசியமாய் டாங்கா* அனுப்பினீர்கள். அவர் கால்களிலேயே சனீச்வரன் இருக்கிறானே......

*[பீரேன் பின்னாலிருந்து திடீரென்று வருகிறான்.]*

**பீரேன் :** சனி அல்ல, இன்றைக்குச் சுக்கிரன்! இந்தக் காரணத்தால் டாங்கா அனுப்ப மறந்துவிட்டாயா?

**ஹேமலதா :** பீரேன்!

**ராய் தாராநாத் :** பீரேன்? அட, ஸ்டேஷனில் நீ டாங்கா பார்க்கவில்லையா?

**பீரேன் :** வணக்கம், பாபா. எனக்கு டாங்கா கிடைக்கவில்லை. ஒருகால்......

**ராய் தாராநாத் :** விசித்திரமான முட்டாள் இந்த வண்டிக்காரன்! ஒரே வழிதானே இருக்கிறது.

**பீரேன் :** ஆனால் பரவாயில்லை. எனக்கு ஒரு காரியம் ஆயிற்று.

**ராய் தாராநாத் :** சாமான் எங்கே?

---

* குதிரை வண்டி

ஹேமலதா : சேதூ! (கூப்பிட்டவாறு) ஆயா, சேதூவை அனுப்பு! சாமான்...

பீரேன் : சாமானை சௌத்திரி ஜங்க் பகாதுரின் பார்வையில் ஸ்டேஷனில் விட்டு வந்திருக்கிறேன்.

ராய் தாராநாத் : அதாவது, உன்னையும் சௌத்திரி ஜங்க் பகாதுர் சந்தித்துவிட்டார்!

ஹேமலதா : ஒவ்வொரு வண்டிக்கும் யாரையாவது வரவேற்கப் போகிறாரே, அவர்தானே பாபா?

பீரேன் : அல்லது, போகிறவர்கள் யாரையாவது வழி அனுப்ப ஒரு காரியமும் இல்லாமல் ஒவ்வொரு வண்டிக்கும் போவது விசித்திரமான ஆர்வம்தான்.

ராய் தாராநாத் : இந்தச் சிறிய ஸ்டேஷனுக்கு இரண்டு வண்டிகள் தானே வருகின்றன? ஆனால் சௌத்திரியினால் வெறிச்சோடும் ஸ்டேஷனுக்குக் களை வந்துவிடுகிறது.

பீரேன் : ஆம் ஐயா, அவரைச் சந்திக்கும் வரையில், எனக்குப் பசிபிக் மகா சமுத்திரத் தீவு ஒன்றில் வழி தவறிவிட்டாற்போல் இருந்தது.

ஹேமலதா : இங்கு சௌரங்கியின் ஆரவாரத்தை எதிர்பார்ப்பது வீண் வேலை, பீரேன்!

பீரேன் : (பலமாய்ச் சிரித்து) பேகனின் அந்தக் கூற்று நினைவு இருக்கிறதா? ''கூட்டத்திற்கு நடுவில்கூட முகங்கள் ஊமைச் சித்திரங்கள் எனத் தோன்றுகின்றன; உரையாடல் மணியோசை போல் தோன்றுகிறது; தெரிந்தவர் யாரும் இல்லாவிட்டால்.'' ஆனால், எனக்கு வெறுமை பிடிக்காது என்று நீ எப்படி எண்ணினாய்? நான் சௌத்திரியின் தொடர்பையும் வெட்டிவிட்டு அல்லவா ஓடினேன்.

ராய் தாராநாத் : அவர் உனக்கு முழுக் கதையும் சொல்லத் தொடங்கிவிட்டாரோ என்னவோ.

பீரேன் : ஆம், ஐயா. அவர் ஆண்டு முழுவதில் ஒரு தடவை, ஒரே ஒரு தடவை, கல்கத்தா ரேஸில் விளையாடுவார் என்பதைச் சொன்னார். கவர்னர் விருந்துக்கு அவருக்கு வந்த அழைப்பிதழை இப்போதும் வைத்திருப்பதைச் சொன்னார். இதுவரை இந்தக் கிராமத்துக்குக் கலெக்டர் எத்தனை தடவைகள் வந்திருக்கிறார்; வந்த கிழமை, தேதி எல்லாவற்றையும் முழுமையாக ஞாபகம் வைத்திருக்கிறார்.

ஹேமலதா : விந்தை!

ராய் தாராநாத் : ஆம், சௌத்திரியின் நினைவாற்றல் நிகரற்றது!

பீரேன் : நினைவாற்றலின் உலகத்திலேயே இருப்பவராய்த் தெரிகிறது. ஆகையால் ஸ்டேஷனில் சாமான்களைப் பார்த்துக்

கொள்ளும் பொறுப்பை அவர் ஏற்றதும் நான் விடுதலை மூச்சு விட்டுக் கொண்டே, வழியைவிட்டு வயல்களில் விழுந்து நடக்க ஆரம்பித்தேன்.

[ஆயாவின் வருகை.]

**ஆயா :** பீரேன் சார், முதலில் சூடான தேநீர் அருந்துங்கள்; அல்லது மறுபடியும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு......

**பீரேன் :** ஓ, ஹலோ, ஆயா! நலம்தானே?

**ஆயா :** நான் ஆனந்தமாக இருக்கிறேன். ஆனால், உங்களுடைய வருகையால் நம் ஹேமம்பாவுக்குக் கலகலப்பாக இருக்கிறது; இல்லாவிட்டால்...

**ஹேமலதா :** இல்லாவிட்டால் என்ன? எனக்குக் கல்கத்தாவின் ஆரவாரத்தைக் காட்டிலும் இங்குள்ள மௌன இசை நான் மகிழ்ச்சி தருகிறது.

**ராய் தாராநாத் :** ஆயா, ஹேமின் தலைகீழ்வாதம் உனக்குப் புரியாது.

**பீரேன் :** ஆனால், ஆயா, இந்தக் காட்டில் திருவிழா கொண்டாடப் போகிறேன்.

**ஆயா :** பகவான் அந்த நாளை விரைவில் காட்டட்டும்! ஹேமாக் கண்ணு, நான் வந்து......

**ஹேமலதா :** ஆயா, வாயை மூடுகிறாயா இல்லையா?

**ராய் தாராநாத் :** (பலமாய்ச் சிரிக்கிறார்) ஹாஹாஹா!

**பீரேன் :** நான் வேறு விஷயம் சொல்லிக்கொண்டிருந்தேன். இந்தக் கிராமத்தைத் தலைகீழாகப் புரட்ட வேண்டும் என்பது என் எண்ணம். இந்தக் கிராமம் என்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது; எதுபோல என்றால்... என்றால்...

**ஹேமலதா :** வீணையின் தந்திகள் நிபுணரின் விரல்களை எதிர் பார்ப்பதுபோல். (சற்று சிரித்து) சரிதானே!

**ராய் தாராநாத் :** (சிரித்தவாறு) ஹாஹாஹா! பீரேன், என் மகள் பதில் கூற இயலாதவள்தானே?

**பீரேன் :** ஒரு புதிய உலகத்தை உருவாக்குவதால் உண்டாகும் பரவசம் வீணையின் சுரத்தில் ஏது?

**ஹேமலதா :** (ஏளனம்) கொலம்பஸ்!

**ராய் தாராநாத் :** புதிய உலகத்தை உருவாக்குதல்... உம்! இது மனத்தைக் கவரும் விஷயமாகத் தெரிகிறதே, பீரேன். சொல்லு, கேட்கலாம்.

**பீரேன் :** நான் வந்தேனே ஷார்ட் கட் வழி, அதை அடுத்து இருக்கிற நிலம் கொஞ்சம் மேடாகவும் சமதளமாகவும் இருக்கிறது; அதைப் பார்த்து என் மனசு பூரித்துவிட்டது. நான் முடிவு செய்து விட்டேன்...

**ஆயா :** பீரேன் சார்!

**பீரேன் :** *(தன் பேச்சைத் தொடர்ந்து)* முற்றிலும் ஐடியலாக இருக்கும் அந்த இடம்! முற்றிலும் அதற்காகவே தயாராக நிற்பதுபோல்!

**ராய் தாராநாத் :** எதற்காக?

**ஆயா :** எஜமான், பீரேன் சாரின் பேச்சு ஆவணி நீர் வீழ்ச்சி; ஆனால், எனக்கு ஏராளமான வேலை கிடக்கிறது.

**ஹேமலதா :** *(பொறுமையற்று)* இவருக்குச் சாப்பாடு போட வேண்டாம், ஆயா!

**பீரேன் :** *(அதே நினைவுப்போக்கில்)* பாபா, நான் சொல்கிறேன், அதைவிடச் சிறந்த இடம்...

**ராய் தாராநாத் :** இல்லை, தம்பி பீரேன்! முதலில் ஆயாவின் கட்டளைப்படி செய். ஹேம், இவருக்கு அறையைக் காட்டு, வெந்நீர் ஏற்பாடு ஆகியிருக்கும். தயாரானதும், ஆயா, சாப்பாட்டுக்கு எனக்குத் தகவல் கொடு.

**ஆயா :** ஆனால் இந்தக் குளிரில் அதிக நேரம் நீங்கள் வெளியில் இருந்தால்...

**ராய் தாராநாத் :** சரி, இதோ வந்துவிட்டேன்! இதற்கு இடையில் சௌத்ரி வந்தாரானால் இரண்டு வார்த்தை அவரோடும் பேசுகிறேன்.

**பீரேன் :** *(போய்க்கொண்டே)* ஆனால், பாபா, கவனமாய்ப் பாருங்கள். கிராமப் புத்தமைப்பு நிறுவனத்துக்கு மலையடிவாரத்து நிலத்தைவிடச் சிறந்த இடம் இருக்கமுடியாது? நான் அவர்களிடம்... *(போய்விடுகிறான்.)*

**ராய் தாராநாத் :** கிராமப் புத்தமைப்பு நிறுவனம்! நல்ல யோசனை தான். ஒரு காலத்தில் நானும்... *(எதிரில் பார்த்து)* யார், சேதுவா? அட, நீ ஏன் இங்கே நிற்கிறாய்?

**சேத்ராம் :** எஜமான் .. *(தயங்கி நிறுத்துகிறான்)*

**ராய் தாராநாத்:** என்ன விஷயம், சேதூ!

**சேத்ராம் :** எஜமான்! அந்த மலையடிவார நிலம்...!

**ராய் தாராநாத் :** எந்த நிலம்?

**சேத்ராம் :** ஐயா, புதிய ஐயா எடுத்துக்கொள்வதற்காக யோசிக்கிறாரே...

**ராய் தாராநாத் :** அட, பீரேனா? அந்த நிலம்தானே, அங்கே அவர் கிராமப் புத்தமைப்பு நிறுவனம் ஏற்படுத்துவார்...

**சேத்ராம் :** ஆனால் எஜமான், அங்கேதான் நாங்கள் எங்கள் புதிய பேட்டை கட்டிவருகிறோம். எட்டு, பத்து மூங்கில் குடிசைகள் போட்டுவிட்டால் கவி தீர்ந்துவிடும்.

**ராய் தாராநாத் :** அடே, முசஹார்களான உங்களுக்கு என்ன? உட்காருகிற இடம், உங்களுக்குக் குடியிருப்பு. ஆனால், கிராமத்தில்

புத்தமைப்புப் பணி நடக்குமே... (குதிரைகளின் காலடிச் சத்தம். டாங்காவின் சத்தம்.) என்ன இது? டாங்கா வந்துவிட்டதா? பார் தம்பி, பீரேனின் சாமான்களை இறக்கிக் கொண்டுவா. (சேத்ராம் வெளியே போகிறான். டாங்கா நிற்கும் சத்தம்) சௌத்திரியா வந்திருக்கிறார்?

**பாலேச்வர்** : (வெளியிலிருந்து வருகிறான்) ஐயா, சௌத்திரிதாம் என்னைச் சாமான்களோடு அனுப்பினார். என் பெயர் பாலேச்வர், பி. பி. சின்ஹா. இவர் கரம்—கரம்சந்த் பரைடா. (கரம்சந்த் பரைடா வணக்கம் செய்கிறான்.) பச்சூவின் சிந்தப்பா பிள்ளை. நான் சௌத்திரியின் மருமான்.

**ராய் தாராநாத்** : சௌத்திரி எங்கே தங்கிவிட்டார்?

**பாலேச்வர்** : டாங்காவில் வருவதால் அவருடைய உலாவும் 'கோட்டா' பூர்த்தி ஆகவில்லை என்று உலாவப் போய்விட்டார்.

**ராய் தாராநாத்** : (சிரித்தவாறு) அப்படியா!

**கரம்சந்த் பரைடா** : உங்களிடம் சாமான்களையும் சேர்த்துவிடலாம்; உங்களைத் தரிசனமும் செய்துவிடலாம் என்று நாங்கள் எண்ணினோம்.

**பாலேச்வர்** : விஷயம் இதுதான் : கிராமப்புறங்களில் லைஃப்பே இல்லை.

**கரம்சந்த் பரைடா** : நகரத்திலிருந்து திரும்பியது முதல் கைதிகள் ஆனாற்போல் இருக்கிறது. ட்ரான்ஸ்போர்டேஷன் ஃபார் லைஃப்.

**ராய் தாராநாத்** : நகரத்தில் என்ன செய்கிறீர்கள்?

**பாலேச்வர்** : கரம்சந்த் இண்டர்மீடியட் வரை படித்துவிட்டுத் திரும்பி இருக்கிறார். நான்...

**கரம்சந்த் பரைடா** : விஷயம் என்னவென்றால், தேர்வின் வினாத் தாளையே யாரோ முறைகேடாகத் தயாரித்துவிட்டார்கள்.

**பாலேச்வர்** : நான் பி.ஏ. படித்துக்கொண்டிருந்தேன். ஓர் ஆபீசில் குமாஸ்தா வேலைக்கு விண்ணப்பம் போட்டேன். ஆனால் சிபாரிசு குறைவாக இருந்ததால்...

**ராய் தாராநாத்** : குமாஸ்தா வேலையா! உங்களுக்குப் பல பீகாக்கள் நிலம் இருக்கிறதே!

**பாலேச்வர்** : படித்தபின் உழவு வேலையா! 'படிப்பது பார்சிமொழி, விற்பது எண்ணெயா!'

**கரம்சந்த் பரைடா** : நகர வாழ்க்கையே தனிதான். சாப்பிடுவதற்கு ஹோட்டல், சுற்றுவதற்கு மோட்டார், பொழுது போக்குவதற்கு சினிமா.

**ராய் தாராநாத்** : எங்கே தங்கியிருந்தீர்கள்?

**பாலேச்வர் :** நகரத்தில் தங்குவதற்கு என்ன? நாலு அங்குல மூலையே போதுமே.

**கரம்சந்த் பரைடா :** நகரத்தின் நெருக்கள் இங்குள்ள வீட்டுக் கூடங்களைவிடத் தரமாக இருக்கும். அந்த ஆரவாரம், அந்த உல்லாசம்...

**ராய் தாராநாத் :** தம்பீ, நீங்கள் சொல்வது தவறு. நான் குழந்தைப் பிராயம், இளமைப் பிராயத்தின் பல இனிய ஆண்டுகளை இங்கே கழித்திருக்கிறேன்.

**பாலேச்வர் :** அப்போது நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும், ஜட்ஜ் சார்!

**கரம்சந்த் பரைடா :** அது மட்டுமன்றி, சிறு பிராயத்தில் நகரத்தின் வசீகரமான வாழ்க்கையைக் கிராமத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க வாய்ப்பு எங்கே கிட்டியிருக்கும்?

**ராய் தாராநாத் :** வசீகரமான!... சரி, இப்போது என்ன வேலைத் திட்டம்?

**கரம்சந்த் பரைடா :** கழுத்தில் மாட்டிக்கொண்ட டோலக்கைத் தட்ட வேண்டியதுதானே. படிக்கத் தெரிந்தவர்களைச் சேர்த்து ஒரு கிளப் அமைக்கத் திட்டம் போட்டோம்.

**பாலேச்வர் :** அதையும் செய்யவிடவில்லை ஜனங்கள்.

**ராய் தாராநாத் :** எந்த ஜனங்கள்?

**கரம்சந்த் பரைடா :** இந்தக் கிராமத்தின் பாலிடிக்ஸ், உங்களுக்குத் தெரியாதா?

**ராய் தாராநாத் :** இங்கேயும் பாலிடிக்ஸ் இருக்கிறதா?

**பாலேச்வர் :** ஏராளமாக! விஷயம் என்னவென்றால், நானும் கரம் சந்தும் முறையாகக் கிளப் நடத்த விரும்புகிறோம். ஒரு பிரசிடெண்ட், இரண்டு வைஸ்-பிரசிடென்டுகள், ஒரு செக்ரடெரி, இரண்டு ஜாயின்ட் செகரெட்ரிகள், ஐந்து கமிட்டி மெம்பர்கள்.

**கரம்சந்த் பரைடா :** ஆம், ஐயா. இதைப் பாருங்கள். (ஒரு கடிதத்தை எடுத்து ராயிடம் காட்டுகிறான்) இம்மாதிரி லெட்டர் பேப்பர் அச்சடிக்கலாம் என்று யோசனை. மேலே கிளப்பின் பெயர் இருக்கும்; இங்கே ஓரத்தில் எல்லா நிர்வாகிகளின் பெயரும்...

**பாலேச்வர் :** ஆனால் டாகுர்களின் பேட்டையில் இரண்டு பேர் இருக்கிறார்கள்; தரம் சிங், குமார் சிங் என்று பெயர். இரண்டு வைஸ்-பிரசிடென்டுகளும், மூன்று கமிட்டி மெம்பர்களும் தங்களுக்குள்ளேயே இருக்கவேண்டும் என்கிறார்கள். ஜாயின்ட் செகரெட்ரி பதவி எடுத்துக்கொள்ளுங்கள், கமிட்டியில் இருவர் மெம்பராக இருங்கள் என்று நான் சொன்னேன்...

**ராய் தாராநாத் :** அவர்களும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருப்பார்கள்.

**கரம்சந்த் பரைடா :** ஆம் ஐயா, மெட்ரிக் வரை.

**ராய் தாராநாத் :** அப்புறம்?

**கரம்சந்த் பரைடா :** தங்களைத் துரைகள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வட்டாரத்தில்தான் கிளப் இருக்கும் என்கிறார்கள்.

**பாலேச்வர் :** நல்லது, நீங்களே யோசனை செய்யுங்கள் : நாங்கள் இருக்கும்போது டாகுர்களின் பேட்டையில் கிளப்பை எப்படித் திறப்பது?

**கரம்சந்த் பரைடா :** நீங்களே நியாயம் சொல்லுங்கள்; ஜட்ஜ் சார்!

**ராய் தாராநாத் :** தம்பி, இதைப்பற்றி நீங்கள் பீரேனுடன் பேசுங்கள். இதோ, பீரேன் வந்துவிட்டார்.

**பீரேன் :** (ஹேமுடன் வந்துகொண்டே) பாபா, நான் கிராமப் புத்தமைப்பு நிறுவனப் பேச்சை முடிக்கவில்லையே.

**ராய் தாராநாத் :** பீரேன், அந்த விஷயத்தை இவர்களிடம் சொல்லு. இவர் பாலேச்வர் அலையஸ் பி. பி. சின்ஹா. இவர் கரம் சந்த் பரைடா. கிராமத்தின் படித்த இளைஞர்கள்! கிளப் திறக்க விரும்புகிறார்கள். நான் போகிறேன், நேரம் ஆகிறது. ஹேம், பீரேன் தாமதம் செய்துவிடாமல் பார்த்துக்கொள். (போகிறார்.)

**பீரேன் :** நல்லது, கிராமத்தில் கிளப் தொடங்க விரும்புகிறீர்களா?

**பாலேச்வர் :** ஆம், ஐயா! இதைப் பாருங்கள். இதுதான் எங்களுடைய லெட்டர் பேப்பர், விதிகள் பட்டியல். விஷயம் என்ன என்றால்...

**பீரேன் :** வாருங்கள், என் அறையில் வாருங்கள். அங்கே நம்பிக்கையாகப் பேசமுடியும். இந்தப் பக்கமாய்ப் போங்கள். நான் பின்னாலேயே வருகிறேன்.

[பாலேச்வரும் கரம்சந்தும் போகிறார்கள்.]

**ஹேமலதா :** நான் இங்கேயே இருக்கிறேன். விரைவில் முடியுங்கள். இல்லாவிட்டால், ஆயா என்ன செய்வாள் தெரியும் அல்லவா?

**பீரேன் :** நீயும் வந்தால் என்ன? என் திட்டம் எவ்வளவு நேர்த்தியானது என்று கேட்டதும் புரிந்துவிடுவாய்!

**ஹேமலதா :** அறையில் போவதா! ஊஹூம். அதோ நிலாவைப் பாருங்கள்! (வெளியே தொலைவில் கோஷடி கானம் கேட்கிறது.) அந்த இசையைக் கேட்டீர்களா, நிலாவே பேசுவதுபோல்!

**பீரேன் :** (போய்க்கொண்டே குறும்புக் குரலில்) நான் நிலா போன்ற யாருடைய முகத்தையோ பார்க்கிறேன், கேட்கிறேன் என்

நெஞ்சத் துடிப்பை! (கையை ஆட்டியவாறு) டா... டா... (போகிறான்)

**ஹேமலதா :** (இனிய புன்னகை) டகா டுஞகர்!

[கோஷ்டி இசை நெருங்கிவருகிறது, ஆண்-பெண் குரல்கள்.]

சந்திரன் ஒளியை எனக்கருள் ராமா!
கங்கை எந்தன் தாயாவாள் யமுனை எந்தன் சகோதரியாம்
சந்திர சூரியர் அண்ணன்மார்
சந்திரன் ஒளியை எனக்கருள் ராமா!
எந்தன் மாமி மகாராணி மாமனும் மன்னர் ஆவாரே
இளவரசர் என் மைத்துனரே
சந்திரன் ஒளியை எனக்கருள் ராமா!

[பாட்டுக்கு இடையில் சேத்ராம் விரைவாக வந்து வெளிப்பக்கம் போகிறான்.]

**ஹேமலதா :** யார், சேதூ? எங்கே போகிறாய்?

**சேத்ராம் :** அம்மா... அந்த... அந்த... பாட்டு...

**ஹேமலதா :** மிக அழகாகயிருக்கிறது!

**சேத்ராம் :** எங்கள் பேட்டையின் கோஷ்டிதான். ஒவ்வொரு பௌர்ணமி இரவும் ஒரு சந்துவிடாமல் சுற்றி வரும்.

**ஹேமலதா :** இங்கேதான் வருகிறதா?

**சேத்ராம் :** எதிரிலிருக்கிற சந்தில். அதோ பாருங்கள். அதில் லோசன் அண்ணனும் இருக்கிறார்.

**ஹேமலதா :** எங்கே?

**சேத்ராம் :** அதோ, பனியன் போட்டிருக்கிறாரே, அவர்தான. நான் போகிறேன், அம்மா. அவர்கள் என்னைக் கூப்பிட்டுக்கொண்டு இருக்கிறார்கள்... (போகிறான்.)

[பாட்டுச் சத்தம் நெருங்கி வந்து, மறுபடி எட்டிச் செல்கிறது. 'சந்திரன் ஒளியை எனக்கருள் ராமா!']

**ஹேமலதா :** (இப்போது குரல் மென்மையுற்றுவிட்டது) சந்திரன் ஒளியை எனக்கருள் ராமா!... சந்திரன் ஒளியை... எவ்வளவு இனிமையான பல்லவி இது!

**ஆயா :** ஹேமம்மா! ஹேமம்மா! இந்தக் குளிரில் எவ்வளவு நேரம் வெளியில் இருப்பீர்கள்?

**ஹேமலதா :** (உரத்த குரலில்) இதோ வந்துவிட்டேன், ஆயா! (மீண்டும் மெல்லிய குரலில்) நிலாவும் நானும்! நானும் பீரேனும்! பீரேன்! ஆனால் இந்தப் பாட்டு, அந்த... அந்த... லோசன்!

[சிந்தனையில் மூழ்கிய நிலையில் வெளியே போகிறாள்.]

## (இரண்டாம் காட்சி)

*(அதே இடம். பதினைந்து நாட்களுக்குப் பிறகு, காலை நேரம். வெளியில் பாபுவும் மற்றொருவனும் உரையாடும் சத்தம் தெளிவாய்க் கேட்கிறது. பிறகு சிறிது நேரத்தில் ஹோஹோ என்று சிரித்த வண்ணம் ராய் வருகிறார்.)*

**ராய் தாராநாத் :** ஹாஹாஹா! பலே அப்பா பலே! ஹேமாக் கண்ணு, கேட்டாயா? ஹேம்!

**ஹேமலதா :** *(திரைக்குப் பின்னாலிருந்து)* வந்தேன், பாபா!

**ராய் தாராநாத் :** ஹாஹாஹா!

*[ஹேம் வருகிறாள். கையில் ஒரு பெரிய சித்திரமும் பிரஷ்ஷும்.]*

**ஹேமலதா :** என்ன விஷயம், பாபா?

**ராய் தாராநாத் :** ஹேம், நம்முடைய சௌத்திரி இணையற்றவர். இப்போதுதான் என்னை வாசலில் விட்டுவிட்டுப் போனார். காலையில் காற்றாடப் போகும்போது இவர்கூட இல்லாவிட்டால், இந்தக் கிராமத்தில் ஊமையாகவும் செவிடாகவும் ஆகிவிடுவேன்!

**ஹேமலதா :** இன்று நீங்கள் அவருடைய வீடுவரை போவதாய்ச் சொன்னீர்களே?

**ராய் தாராநாத் :** போயிருந்தேன்; கொஞ்சநேரம் அவருடைய வீட்டுக் கூடத்தில் இருக்கலாம் என்று எண்ணித்தான் போனேன். ஆனால், அவர் வெளியில் இருந்தபடியே, ''அங்கேயே நில்லுங்கள்!'' என்று சொன்னார்.

**ஹேமலதா :** அட!

**ராய் தாராநாத் :** ''முதலில் நான் போய்விடுகிறேன். நீங்கள் கார்டு அனுப்புங்கள். அப்புறம் நீங்கள் கூடத்துக்கு வருவது உசிதமாக இருக்கும். முறை என்று ஒன்று இருக்கிறதே'' என்று சொல்ல ஆரம்பித்தார்.

**ஹேமலதா :** *(சிரிக்கிறாள்.)* இப்படி ஓர் ஆங்கில போகமா!

**ராய் தாராநாத் :** மேலே கேள்! வீட்டில் அவருடைய பிரைவேட் அறைக்கு வெளியே ஒரு மணி இருக்கிறது. யாராவது உள்ளே போக வேண்டுமானால் மணியை அடிக்கவேண்டும். மணி அடிக்காமல் யாராவது உள்ளே வந்துவிட்டால் சௌத்திரி அவர்களோடு பேசுவதில்லை, அது அவருடைய மனைவியாக இருந்தாலும் சரிதான்.

**ஹேமலதா :** மனு ஸ்மிருதிபோல சௌத்திரி எடிகெட் சம்ஹிதை ஒன்று விட்டுப் போவார்போலத் தோன்றுகிறது!

**ராய் தாராநாத் :** ஆனால் பஞ்சானனுக்கு வெள்ளை மனம். ரொம்ப நேர்மையானவர்—வைரம் போல். பிறருடைய காசைக் கையால் தொடமாட்டார்.

**ஹேமலதா :** அதனால்தான் பீரேன் அவரைக் கிராமப் புத்தமைப்புக் கழகத்தின் ஆடிடர் ஆக்கியிருக்கிறார்

**ராய் தாராநாத் :** பீரேனிடம் சொல்லிவிடு, சௌந்திரி கணக்கில் மிகவும் கண்டிப்பு, என்று. இந்தக் கழகத்தில் அவருடைய மருமகன் பாலேச்வர் சேர்ந்திருப்பதால் ஒவ்வொரு நம்பிடியிலும் கவனமாக இருப்பேன் என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

**ஹேமலதா :** பாலேச்வரை எனக்குப் பிடிக்கவில்லை. சண்டைக்காரப் பேர்வழி.

**ராய் தாராநாத் :** சண்டைதான் ரொமத்தின் ஒவ்வொரு நரம்பிலும் குடியிருக்கிறதே.

**ஹேமலதா :** முன்புகூட இப்படித்தான் இருந்ததா பாபா?

**ராய் தாராநாத் :** இருந்தது, ஆனால் இவ்வளவு பிடிவாதக் கொள்கைக்காரர்கள் இல்லை. முன்பு சிங்கமும் வெள்ளாடும் ஒரு துறையில் தண்ணீர் குடித்தன என்று நான் சொல்லவில்லை. ஆனால்... ஆனால் முன்பு படித்த இளைஞர்கள் கிராமத்தில் குறைவு...

**ஹேமலதா :** படித்தவர்கள் அல்ல, அரைவேக்காடு. ''ஹாஃப் பேக்கு கல்சர்!'' என்று டாகூர் எழுதினார் அல்லவா. ஆனால், பாபா, பீரேனின் புயல் வெறியும், நுண்ணிய அறிவும் கிராமத்தை உண்மையாகத் தலைகீழாய் மாற்றிவிடுமா?

**ராய் தாராநாத் :** நீ என்ன நினைக்கிறாய்?

**ஹேமலதா :** கிராமத்தில் புரட்சிக்கு ஒரு புதிய பார்வைக் கோணம் தேவை. ஒரு புதிய மனப்பாங்கு தேவை என்று அன்றைக்குப் பீரேன் கூறிக்கொண்டிருந்தாரே...

**ராய் தாராநாத் :** பீரேன் நன்றாய்ப் பேசுகிறான்! அதன் வசிய சக்தி...

**ஹேமலதா :** நூற்றுக்கணக்கான மக்களை ஆட்டி உலுக்கிவிடுகிறது!

**ராய் தாராநாத் :** அந்த மற்றொரு கட்சி என்ன ஆயிற்று? கிராமச் சீர்திருத்தக் கழகத்தோடு சேர்ந்ததா இல்லையா?

**ஹேமலதா :** இன்னும் இல்லை. நேற்று இரவு வெகுநேரம் வாதப் பிரதிவாதம் நடந்துகொண்டிருந்தது. பீரேன் மிகவும் நேரங்கழித்துத் திரும்பி வந்தார். என்ன ஆயிற்றோ, தெரியவில்லை!

**ராய் தாராநாத் :** ஆனால் கழகத்துக்கு இன்று அடிக்கல் நாட்டுவார்களே.

**ஹேமலதா :** ஆம், நீங்கள் விழாவில் கலந்து கொள்ளவில்லையா பாபா?

**ராய் தாராநாத் :** இல்லை, நான் வரமுடியாது என்று பீரேனிடம் முன்பே சொல்லிவிட்டேன். எனக்கு...

[பீரேன் வருகிறான். கையில் காகிதம். சட்டைப் பித்தானைப் போட்டுக்கொண்டு வாரு.]

**பீரேன் :** ஆனால், பாபா, சௌதுரி வருகிறார்.

**ராய் தாராநாத் :** அவரைச் சரியான இடத்தில் உட்காரவை, முறையாக.

**பீரேன் :** (சிரித்தவாறு) அவர் நல்லவிதமாய்க் கவனித்துக் கொள்ளப்படுவார். நீங்கள் அங்கு வரப் போவதில்லை என்றால், இதைப் பாருங்கள் என் சொற்பொழிவின் டிராஃப்ட். (காகிதங்களை நீட்டுகிறான்.)

**ராய் தாராநாத் :** முன்னால் தயாரித்துக்கொள்ளாமலே உன்னால் பேச முடியுமே. (படிக்கத் தொடங்குகிறார்.)

**பீரேன் :** ஆம். ஆனால் இன்று கிராமச் சீர்திருத்தக் கழகத்தின் திட்டம் முழுவதையும் கிராமத்துக்கு முன்னால் வைக்கவேண்டுமே... படியுங்களேன்.

**ராய் தாராநாத் :** (படித்துக்கொண்டே) மிகவும் வலுவுள்ள ஸ்கீம்!

**பீரேன் :** மேலே பாருங்கள். (ஹேமலதாவிடம்) ஹும், கழகக் கட்டடத்தில் மாட்டவேண்டிய படம் முடிந்துவிட்டதா?

**ஹேமலதா :** கிட்டத்தட்ட முடிந்துவிட்டது...

**பீரேன் :** இதுவா?... மிகவும் சுவையான வர்ணங்கள், மிகவும் கவர்ச்சிகரமான ஆடல் காட்சி... நல்லது, ஆனால்... இவர்கள்... இந்த மூலையில், இருட்டில் யார் இவர்கள்?...

**ஹேமலதா :** நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பீரேன் :** (தயங்கி யோசித்தவாறு)... நாடு கடத்தப்பட்டவர்கள்... வழி தெரியாமல் அலைகிறவர்கள்... போல!

**ராய் தாராநாத் :** (படித்துக்கொண்டே) பீரேன், உன்னுடைய கிராமச் சீர்திருத்தக் கழகத்தில் மூளைப் பயிற்சிகள் நிறைய இருக்கின்றன.. புத்தகசாலை, சொற்பொழிவு, படிப்புக் குழு...

**பீரேன் :** (சித்திரத்தை ஒருபுறமாக வைத்தவாறு) அதுதான், பாபா! கிராமத்தின் விழிப்பு என்றால் என்ன அர்த்தம்? தன்னுடைய தேவைகளையும் பிரச்னைகளையும்பற்றி யோசனை செய்யும் ஆற்றல்! கிராமத்தின் ஊமைத் துன்பத்துக்குக் குரல் தேவைப்படுகிறது. மண்ணின் பேச்சுத் திணறலை விண்ணின் முழக்கமாக உருவாக்க வல்லவர்களும், பழமையான பழக்கவழக்கங்களை எதிர்த்துக் குரல் எழுப்ப வல்லவர்களும், பொருளாதாரப் பிரச்னைகளினால் மூளையைக் குடைந்துகொள்ள முடிந்தவர்களுமான — பொறுக்கி எடுத்த

இளைஞர்கள் தேவை. நான் கழகத்தின் நூல் நிலையத்தில் மார்க்ஸ், லெனினிலிருந்து ஸ்பெங்க்ளர், ரஸ்ஸல் முதலிய எல்லாருடைய நூல்களையும் வைப்பேன். ஒரு புத்தொளி, ஒரு புதிய மனக் கடைதல்— இன்டலெக்சுவல் ஃபெர்மென்ட்!

**ராய் தாராநாத் :** சரி, பீரேன், சரி! பல விஷயங்கள் நடக்கும். ஆனல், நாட்டுப்புறத்தின் வறுமையையும் அசுத்தத்தையும் பார்த்தாலே மனம் சோர்ந்துபோகிறதே.

**பீரேன் :** (ஆவேசமாக) நீங்கள் சரியான பிரச்னையைத்தான் கிளப்பினீர்கள். வறுமையும் அசுத்தமும்! பாபா, இந்த அசுத்தத்தையும் வறுமையையும் பார்க்கும்போது என் மனத்தில் சினத் தீ பற்றி எரிகிறது. வீடு வாசல் இல்லாத அந்தக் கிழவர்களும் குழந்தைகளும், பட்டினி கிடக்கும் பிச்சைக்காரர்களின் பேட்டை, கந்தலில் ஒடுங்கியுள்ள பெண்மணிகள்—இவர்கள் எல்லாரையும் நினைத்தாலே கருணைக் கடல் பொங்குகிறது. ஆனல் கருணைக்கடலில் சினப்புயல் தேவை, பாபா. அடங்கத் தெரியாத புயல், பேசாமல் இருக்காத புயல். இந்தப் புயலை நிலையாக வைத்துக்கொள்வதற்கு, இந்தச் சினத்துக்கும் கருணைக்கும் கட்டுப்படாமலே அதே ராகத்தைத் தூண்டிவிடக்கூடியவர்கள் தேவை. வக்கீலைப்போல் உணர்ச்சியோடு வாதாடி, ஆனல் கட்சிக்காரனிடமிருந்து விலகி இருக்கக்கூடியவர்கள் சிலர் தேவை.

**ஹேமலதா :** (கேலி) தடாகத்தில் தாமரை!

**பீரேன் :** (அதே ஆவேசத்தோடு) ஆம், அதுதான் தேவை. இந்த வறுமை, அசுத்தச் சேற்றிலிருந்து விலகியிருந்து அதில் சிக்கியுள்ள உலகத்தின் நிறைவு பெருத விருப்பங்களுக்கு ஈடுபாட்டுடன் தாமரையின் உருவம் கொடுக்க வல்லவர்கள். (நிறுத்தி, சொற்பொழிவுப் படியிலின்று இறங்கியவாறு) ஆனல் —நான் போகவேண்டும், பாபா. முன்னல் போய்க் கழகத்தின் சில சிக்கல்களைத் தீர்க்க வேண்டும், இல்லாவிட்டால் விழாவின்போது தகராறு உண்டாகும்!... நீ கொஞ்ச நேரத்தில் வருவாயா, ஹேம்? அதற்குள் இந்தச் சித்திரத்தைச் சரி செய்துவிடு. சரி, நான் கிளம்புகிறேன். (போகிருன். சிறிது நேரம் மௌனம்.)

**ராய் தாராநாத் :** இதுதான் பீரேனின் மந்திரசக்தி!

**ஹேமலதா :** மண்டைக்கனம் ஏறுவதுதான் மந்திரசக்தி.

**ராய் தாராநாத் :** சில சமயம் கிராமத்தில் எனக்கு அலுப்பாக இருக்கிறது. பல வருடங்களுக்குப் பிறகு வந்திருக்கிறேன்... நகரத்திலேயே மூக்குக் கண்ணுடியை வைத்துவிட்டு வந்தாற்போல்!—பீரேன்

என்னவோ கிராமத்துக்கு வந்ததும் அதைத் தன் வசப்படுத்திக் கொண்டுவிட்டான்.

ஹேமலதா : அவர் சாப்பிட்டுக்கொண்டாரா, இல்லாவிட்டால்... [சேத்ராம் வருகிறான்.]

சேத்ராம் : எஜமானின் சிற்றுண்டி தயாராக இருக்கிறது.

ராய் தாராநாத் : (வந்துகொண்டே) சரி, சேது! வருகிறேன். (போகும்போது சித்திரத்தின்மீது பார்வை செல்கிறது) ஹும், இந்தப் படம் நிஜமாகவே நன்றாக வந்திருக்கிறது.

ஹேமலதா : கொஞ்சம் 'டச்' செய்யவேண்டியதுதான் பாக்கி.

ராய் தாராநாத் : அந்தக் குதிரையின் கோஷ்டியில் மிகவும் கலை இருக்கிறது, வர்ணத்திலும் சரி, நடையிலும் சரி! ஆனால்... மூலையில் இவர்கள் ஏன் நிற்கிறார்கள்?

ஹேமலதா : நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ராய் தாராநாத் : (யோசிப்பவராய், முயன்று) பூமியிலிருந்து வெட்டப் பெறாமல் பட்டுப்போன கனி மரங்கள் போல...

ஹேமலதா : பாபா, நீங்கள் ஒரு கவி!

ராய் தாராநாத் : (சிரிக்கிறார்) உன் தகப்பன் இல்லையா நான்?... சரி, நான் கிளம்புகிறேன். (போகிறார்.)

ஹேமலதா : (யோசனையில் மூழ்கி) பட்ட தனிமரம்!... அல்லது, நாடு கடத்தப்பட்டு, வழி தெரியாமல் அலைந்து தவிக்கிறவர்கள்!... இல்லை... இல்லை... வேறு விஷயம்! (சேத்ராமிடம்) சேது, அந்த ஈஸலைக் கொண்டு வா; இங்கேயே உட்கார்ந்து இதைச் சரி செய்கிறேன்.

சேத்ராம் : (ஈஸலை வைத்தவாறு) இதோ, வர்ணங்களையும் இங்கே வைக்கட்டுமா?

ஹேமலதா : கொண்டு வா, என்னிடம் கொடு. நான் படம் வரைய வரைய ஆவலோடு பார்க்கிற வழக்கம் உனக்கு வந்துவிட்டது. (வர்ணங்களைத் தயாரிக்கத் தொடங்குகிறாள்.)

சேத்ராம் : ஆம், அம்மா!

ஹேமலதா : கொஞ்சநேரத்தில் இந்தப் படத்தை எடுத்துக்கொண்டு நீ என்னோடு வரவேண்டும்.

சேத்ராம் : எங்கே?

ஹேமலதா : பிரேன் ஜயாவின் கழகத்தில் விழா நடக்கிறதே, அந்த மலை அடிவாரத்துக்குத்தான்.

சேத்ராம் : (தயங்கியவாறு) அம்மா, நான் அங்கே வரமாட்டேன்.

ஹேமலதா : ஏன்?

சேத்ராம் : அம்மா, அங்கே ஏழை முசாஹர்கள் பேட்டை கட்டிக் கொள்வதாக இருந்தோம். நாங்கள் மூங்கில் கழிகளை நட்டுக் கொண்டிருந்தோம். உழைத்துப் பேட்டையை உருவாக்குவதாக இருந்தோம். வீடுகள் கட்டிக்கொள்வதாக இருந்தோம். அணை இருந்தால் பயிரும் செய்ய...

ஹேமலதா : (சித்திரம் வரைந்தவாறு) ஆனால் கிராமச் சீர்திருத்தக் கழகத்தினாலும் உங்களுடைய கஷ்டங்கள் நீங்குமே.

சேத்ராம் : தெரியவில்லை, அம்மா! கழகத்தில் நீண்ட நேரம் விவாதம் நடக்கிறது. ஆனால்...

ஹேமலதா : பீரேனுக்கு உங்களிடம் எவ்வளவு அக்கறை இருக்கிறது, எவ்வளவு இரக்கம் இருக்கிறது!

சேத்ராம் : (விளங்காததொரு சக்தியின் வயப்பட்டு) எங்களுக்கு இரக்கம் வேண்டாம்.

ஹேமலதா : (திடுக்கிட்டுத் திரும்பி) இரக்கம் வேண்டாமா? சேதூ! உனக்கு இதை யார் சொன்னார்கள்?

சேத்ராம் : (சற்றுத் திகைத்து) அம்மா, லோசன் அண்ணா சொல்கிறார்...

[தெருவில் கூட்டத்தின் கோஷங்களின் சத்தம்.]

''கிராமச் சீர்திருத்தக் கழகம் வாழ்க!
பி.பி. சின்ஹா வாழ்க!
துரோகிகள் ஒழிக!
கிராமச் சீர்திருத்தக் கழகம் வாழ்க!''

[சத்தம் விலகிச் சென்றுவிடுகிறது.]

ஹேமலதா : சேதூ, இதெல்லாம் என்ன? (எழுந்து நின்று பார்க்கத் தொடங்குகிறாள்.)

சேத்ராம் : விழாவுக்குத்தான் போகிறார்கள், பாலேச்வர் கட்சியைச் சேர்ந்தவர்கள். கரம்சந்த் இவர்களோடு சேரமாட்டார்; தனியாகப் பிரிந்து டாகுர்களின் கட்சியில் போய்ச் சேர்ந்துவிட்டார்.

ஹேமலதா : நேற்று இரவு சண்டை முடிவாகவில்லையா?

சேத்ராம் : தெரியவில்லை... இதோ பாருங்கள், இன்னொரு கட்சி ஆட்களும் வருகிறார்கள். சண்டை ஏற்படாமல் இருக்க வேண்டும்.

[தெருவில் மற்றொரு கட்சி கோஷங்களை முழக்குவது கேட்கிறது.]

''கரம்சந்துக்கு ஜே!
கரம்சந்துக்கு ஜே!
கிராமச் சீர்திருத்தக் கழகம் நமதே!
கிராம விழிப்பு வாழ்க!
சுயநலமி சின்ஹா ஒழிக!''

*[சத்தம் விலகிப் போய்விடுகிறது.]*

**ஹேமலதா :** *(கவலையுற்ற குரலில்)* சேதா, இவர்கள் தடிகள் வைத்திருக்கிறார்களே.

**சேத்ராம் :** ஆம் அம்மா, முதல் கட்சிக்காரர்களும் ஆயுதங்கள் வைத்திருந்தார்கள்.

*[திரைக்குப் பின்னிருந்து கூப்பிட்டவாறு ஆயா வருகிறாள்.]*

**ஆயா :** சேதா! ஓ சேதா! இது என்ன சண்டை, பார்!

**சேத்ராம் :** பாலேச்வர், காம்சந்த் கட்சிகள். இரண்டும் பீரேன் ஐயாவின் விழாவுக்குப் போயிருக்கின்றன.

**ஹேமலதா :** தடியும் கம்பும் தூக்கிக்கொண்டு, ஆயா!

**ஆயா :** நீ இங்கேயே நிற்கிறாயா, சேதா? அடே, வேகமாய் ஓடிப் போய், போலீசுக்குத் தகவல் தரும்படி காவல்காரனிடம் சொல்லு. என்ன சண்டை வருமோ, என்னவோ. வேகமாய்ப் போ! தடியடி ஆரம்பமானால் பீரேன் ஐயாவை வளைத்துக்கொள்வார்கள்... ஓடு வேகமாய்!

*[சேத்ராம் போகிறான்.]*

**ஹேமலதா :** நானும் போகிறேன், ஆயா, பீரேன் தனியாக இருக்கிறார்.

**ஆயா :** வேண்டாம், அம்மா, உங்களைப் போகவிடமாட்டேன். (போனவாறு சேத்ராமைக் கூப்பிடுகிறாள்.) சேதா, திரும்பும்போது விழாவையும் எட்டிப் பார்த்துவிட்டு வா (ஹேமலதாவிடம்) ஹேமம்மா, பீரேன் வீண் வம்பை விலைக்கு வாங்கிவிட்டார்!

**ஹேமலதா :** அவர் சொல்வதை எல்லாரும் கேட்பார்கள்.

**ஆயா :** அம்மா, பட்டிக்காட்டு விவகாரத்தை நீங்கள் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. இங்கு நல்லவர்களுக்கு நடக்காது. நமக்குக் கல்கத்தா தான் நல்லது.

**ஹேமலதா :** (உதறிப் போகும் குரலில்) ஆயா, ஒவ்வொரு விஷயத்திற்கும் அதே பட்டணம், பட்டணம் என்று...

**ஆயா :** நான் சொல்வது சரி அம்மா. நீங்கள் இங்கே வந்து பதினைந்து நாள்தான் ஆகிறது. அதற்குள் பெரிய ஐயாவுக்கு மனசு சோர்ந்தாற்போல் ஆகிவிட்டது. சௌத்திரி இல்லாவிட்டால் அவருக்கு ஒரு நாள் தள்ளுவதே கஷ்டம். நீங்கள் ..

**ஹேமலதா :** எனக்குப் பிடிக்கிறது. பல ஸ்கெட்சுகள் எழுதி முடித்துவிட்டேன்.

**ஆயா :** அட, படங்களை நீங்கள் கல்கத்தாவிலேயே எழுதலாமே, ஏராளமாக, இவற்றைவிட அழகாக எழுதலாம்.

**ஹேமலதா :** நீ, ஆயா, வக்கிரமாகவே பேசுகிறாய். நாம் எல்லோரும் கிராமத்தின் குழந்தைகள்தானே. இந்த நிலம் நம்முடைய அன்னை. நாங்கள் மறுபடியும் இங்கே வந்து இருக்க விரும்புகிறோம். இதன் மடிக்குத் திரும்ப விரும்புகிறோம்.

**ஆயா :** அம்மா, உங்களுக்குப் புத்தி சொல்கிற அளவு புத்தி எனக்கு இல்லை. பிடுங்கப்பட்ட செடியின் வேர்மீது காற்றுப் பட்டுவிட்டால், மறுபடியும் அதை மண்ணில் நட்டுப் பயன் இல்லை. அதன் பூக்கள் பங்களாவின் பூந்தொட்டியின் அழகைத்தான் கூட்டும்.

**ஹேமலதா :** (வியப்போடு ஆயாவைப் பார்த்துக்கொண்டே இருந்து விடுகிறாள்). ஆயா, உன் பேச்சு... உன் பேச்சு... பயங்கரமாக இருக்கிறது.

[திரைக்குப் பின்னால் குரல்கள்: ''இங்கே... இப்படி... ஜாக்கிரதை யாகக் கொண்டு வா... சேத்ரா, நீ கையைப் பிடித்துக்கொள்... இங்கே... இப்படி...'']

**ஆயா :** ஆங்! யார் வருகிறது? (வெளிப்பக்கம் பார்த்துக் கொண்டே) அட, பீரேன் ஐயாவை இரண்டு பேர் பிடித்துக்கொண்டு வருகிறார்களே. காயமடைந்துவிட்டாரா? அடக் கடவுளே! (வெளிப் பக்கம் ஓடிப் போகிறாள்.)

**ஹேமலதா :** (திகிலுற்று) பீரேன்! பீரேன்! (பங்களாவின் பக்கம் குரல் கொடுக்கிறாள்). பாபா! பாபா! இங்கே வாருங்கள்! (திரைக்குப் பின்னிருந்து ''என்ன ஆயிற்று?'') பீரேனுக்குக் காயம் பட்டுவிட்டது! ஐயோ!

[உணர்வற்ற பீரேனைத் தடிகளைக்கொண்டு அமைத்த ஸ்டிரெட்சர் மீது ஜாக்கிரதையாகத் தூக்கிக்கொண்டு சேத்ராமும் மற்றொரு வனும் வருகிறார்கள். இந்தத் தொழிலாளியும் புதியவன் உறுதியான உள்ளத்தோடு காணப்படுகிறான். சேத்ராமைப் போலவே உடை .]

**ஆயா :** (திகில்கொண்டு) சேது, இவர் மயக்கமாக இருக்கிறாரே. ஐயோ ராமா!

[ஸ்டிரெட்சர் தரைமீது.]

**புது ஆள் :** பயப்படாதீர்கள்.

**ஹேமலதா :** (ஸ்டிரெட்சருக்கு அருகில் முழங்கால் ஊன்றியவாறு) பீரேன்! பீரேன்!

[ராய் தாராநாத் திகிலோடு வருகிறார்.)

**ராய் தாராநாத் :** என்ன ஆயிற்று? ஹா... இவன் மயக்கமாக இருக்கிறானே... சேத்ரா, என்ன நடந்தது?

**சேத்ராம் :** எஜமான், இரண்டு கட்சிக்காரர்களும் அடித்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். நடுவில் பீரேன் ஐயா வந்தார். லோசன்

அன்று உயிரைப் பணயம் வைத்து இவரைக் காப்பாற்றினார்; இல்லா விட்டால்...

புது ஆள் : இவரை உடனே வீட்டுக்குள் அழைத்துச் செல்லுங்கள். கட்டு கட்டியிருக்கிறது.

ஹேமலதா : பீரேன்! பீரேன்!

ராய் தாராநாத் : ஆயா, சீக்கிரம் தூக்கிக்கொண்டு போ. சேத்ரா, ஜாக்கிரதையாகப் படுக்க வை. ஹேம், மேலே இருக்கிற என் அலமாரியில் லோஷன் இருக்கிறது, சீக்கிரம், சீக்கிரம்...

[பீரேனைப் பிடித்துக்கொண்டு ஆயா, சேத்ராம், ஹேமலதா போகிறார்கள்.]

ராய் தாராநாத் : இந்த லோசன் யார்?

புது ஆள் : என் பெயர்தான் லோசன்.

ராய் தாராநாத் : உன் வீரம்தான் பீரேனைக் காப்பாற்றியது. இந்தா, பத்து ரூபாய் வைத்துக்கொள். கொஞ்சம் ஓடிப்போய்ப் பார். போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே டாக்டர் இருக்கிறார்.

லோசன் : ரூபாயை வைத்துக்கொள்ளுங்கள். டாக்டருக்கு நான் முன்பே தகவல் அனுப்பிவிட்டேன். வந்துகொண்டு இருப்பார்.

ராய் தாராநாத் : (சற்று முகம் வாடி) நீ... நீ இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவனா?

லோசன் : ஆம் என்று சொல்லலாம், இல்லை என்றும் சொல்லலாம்... நீங்கள் பீரேனைக் கவனியுங்கள்.

ராய் தாராநாத் : (வெட்கி) ஆம்... ஆம்... ஆம். (போகிறார்.)

[லோசன் இடுப்பில் கட்டியிருந்த துணியைக் கிழித்து இடது தோளில் ரத்தம் பெருகும் காயத்தின்மீது கட்டு கட்டிக்கொள்கிறான். படத்தை நேராக வைக்கிறான். அதைக் கூர்ந்து பார்க்கிறான். இதற்குள் விரைவாக ஹேமலதா வருகிறாள்.]

ஹேமலதா : உங்கள் பெயர்தான் லோசனா?

லோசன் : ஆம்.

ஹேமலதா : நீங்கள்தான் பீரேனின் உயிரைக் காப்பாற்றினீர்கள். (மகிழ்ச்சிக் குரலில்) அவருக்கு உணர்வு வந்துவிட்டது. உங்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

லோசன் : (தெளிவான குரலில்) நான் உயிரைக் காப்பாற்றவில்லை.

ஹேமலதா : உங்கள் தோளில் காயம் இருக்கிறதே.

லோசன் : அந்த ஏழை முசஹர்கள் உயிரைக் காப்பாற்றினார்கள்— அவர்களிடமிருந்து நிலத்தைப் பறித்துத்தான் பீரேன் கிராம சீர்திருத்தக் கழகத்தின் கட்டடத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார். கழகத்தின் புரட்சிக்கார இளைஞர்கள் தங்களுக்குள் தடியடிப்

பிரயோகம் செய்துகொள்ளும்போது இந்த ஏழைகளோ பீரேனைக் காப்பாற்ற என்னோடு முன்னேறினார்கள். (கேலிப் புன்சிரிப்பு) புரட்சி விளக்குத் தப்பிவிட்டது...!

ஹேமலதா : (தயங்கியவாறு) நீங்கள்... படித்தவரா?

லோசன் : படித்தவனா? ஆம் என்று சொல்லலாம், இல்லை என்றும் சொல்லலாம்... சரி, வருகிறேன்... இந்தப் படம் நீங்கள் வரைந்ததா?

ஹேமலதா : ஏதாவது பிழை இருக்கிறதா என்ன?

லோசன் : இல்லை, நீங்கள் எங்கள் ஆடலின் கதியைக் கோடுகளிலும் வண்ணங்களிலும் நன்றாய்க் காட்டியிருக்கிறீர்கள். தவிர...

ஹேமலதா : தவிர?

லோசன் : மூலையில் நின்று, நிழலில் மறைந்துவிட்டவர்கள் போன்ற இந்த நபர்கள்...

ஹேமலதா : எப்படி இருக்கிறார்கள்?

லோசன் : (தயக்கம் இன்றி) தன் சங்கிலிகளாலேயே தன்னைக் கட்டிக்கொண்ட கைதி போல!

ஹேமலதா : கைதியா? ஏன்?

லோசன் : (அதே புன்னகை) இதைப் பிறகு எப்போதாவது சொல்கிறேன்... சரி, வணக்கம். (போகிறான்.)

[ஹேமலதா வியப்பில் ஆழ்ந்து நின்றுவிடுகிறாள். பிறகு சித்திரத்தைத் தூக்கிக்கொண்டு வீட்டுப்பக்கம் போகிறாள்.]

ஹேமலதா : (போய்க்கொண்டே மெல்லிய குரலில்) கைதி!... தன் சங்கிலிகளாலேயே தன்னைக் கட்டிக்கொண்ட கைதி?

## (மூன்றாம் காட்சி)

[அதே இடம். ஒரு வாரத்திற்குப் பிறகு, வேலைக்காரர்கள் வீட்டிலிருந்து தோட்டத்து வழியாக வெளியே சாமான்களைக் கொண்டு போவது தென்படுகிறது. அவ்வப்போது ஆயாவின் வலுவான குரல் ஒலி கேட்கிறது, சில சமயம் சேத்ராமின் குரல், சிலசமயம் வேறு ஆட்களின் குரல்.]

''இந்தப் படுக்கையை இரண்டு ஆட்கள் பிடித்துக்கொள்ளுங்கள்.''

''ஜாக்கிரதை, தம்பி.''

''பெட்டியில் சர்க்கரைப் பாத்திரங்கள் இருக்கின்றன.''

''சீக்கிரம்... சீக்கிரம்...''

''இந்தக் கூடையை வேறு கையில் தூக்கிக்கொள்.''

[வீட்டுப்பக்கத்திலிருந்து கவலை தோய்ந்த முகத்துடன் ஆயா வருகிறாள்.]

**ஆயா :** எல்லாச் சாமான்களும் ஏற்றியாகிவிட்டதா, சேத்ரா?

**சேத்ராம் :** ஆகிவிட்டது, ஆயா. பெரிய எஜமானின் அட்டாச்சி மட்டும் பாக்கி, அவர் வந்த பிறகு மூடவேண்டும்.

**ஆயா :** எஜமான் எங்கே போனார்?

**சேத்ராம் :** விடை பெற்றுக்கொள்ள சௌத்திரி வீட்டுக்குப் போனார். அவருக்கு பலமான காயம் என்று கேள்வி.

**ஆயா :** மருமகன் மாமனை அடிக்கிற கிராமத்தில் இருப்பது தர்மமில்லை.

**சேத்ராம் :** பாலேச்வருக்கு இன்னும் ஜாமீன் கிடைக்கவில்லை.

**ஆயா :** நமக்கு இங்கே என்ன, இனி? கல்கத்தாவுக்குப் போய் விட்டால் நாங்கள் அமைதியாக மூச்சுவிடுவோம்.

**சேத்ராம் :** பேசாமலிரு!

**ஆயா :** நீ அசடு, சேத்ராம். கல்கத்தாவுக்கு வா. உல்லாசமாக இருக்கலாம். வசந்தம் காணலாம்; அமைதியை அனுபவிக்கலாம்.

**சேத்ராம் :** கிராமத்தை விட்டா? கூலிவேலை செய்வதாக இருந்தாலும் சொந்த மண்ணில் செய்வேன்.

**ஆயா :** அடே, நகரத்தில் கூலி வேலை செய்யாவிட்டாலும் ரிக்ஷா ஓட்டி நூற்றைம்பது இருநூறு மாதத்துக்குச் சம்பாதிக்கலாம்.

**சேத்ராம் :** நூற்றைம்பது, இருநூறு?

**ஆயா :** ஆம், தினம் மாலையில் சினிமா! ஹோட்டலில் தேநீர்! பளபளக்கும் வீதிகள், ஜொலிக்கும் மாளிகைகள்! தடபுடலாக இருக்கலாம்.

**சேத்ராம் :** (வெறுப்புத் தோற்றம்) வாடகைச் சாப்பாடு, வாடகை வீடு, பேச்சுக்கூட வாடகை!

**ஆயா :** அப்புறம் உன் இஷ்டம். பட்டிக்காட்டில் கஷ்டப்பட்டுக் கொண்டிரு.

**சேத்ராம் :** லோசன் அண்ணா சொல்வார்...

**ஆயா :** (தூக்கி எறியும் குரலில்) போ, போ, லோசன் அண்ணாவின் வக்கீல்! உள்ளே போய்ப்பார். ஹீரேன் தயாராக இருந்தால் கைகொடுத்து அழைத்துவா. ஹேமம்மா தயாராக இருக்கிறாளா?

**சேத்ராம் :** சரி! (உள்ளே போகிறான்.)

**ஆயா :** (போய்க்கொண்டே) சாமான்களை ஒழுங்காக ஏற்றி இருக்கிறார்களா என்று பார்க்கிறேன். இந்தப் பட்டிக்காட்டு வேலையாட்கள்... (போகிறாள்.)

[சிறிது நேரத்தில் ராய் தாராநாத்தும் லோசனும் உரையாடிக் கொண்டே வெளியிலிருந்து வருகிறார்கள்.]

**ராய் தாராநாத் :** தம்பி லோசன், என்னால் இங்கே இருக்க முடியாது. போகிற நேரத்தில் நீ வந்தது நல்லதாயிற்று, ஹீரேன் உன்னைப் பார்க்க விரும்பினான். அன்று நீ செய்த உதவிக்காக.

**லோசன் :** நீங்கள் இங்கேயே இருப்பீர்கள் என்று நினைத்தேன்.

**ராய் தாராநாத் :** ஆமாம்; அந்த எண்ணத்தோடுதான் — கல்கத்தாவுக்குப் பிறகு கிராமத்தில் காலம் கழிக்கலாம் என்றுதான் வந்தேன். ஆனால் ஒரே மாதத்தில், நாங்கள் இந்த உலகத்திலிருந்து கடத்தப் பட்டவர்கள் ஆகிவிட்டோம் என்பதைக் கண்டுகொண்டேன். முந்தாநாள் நான் அறிந்திருந்த அந்தப் பழைய உலகம் பொய்யாகி விட்டது. எந்தச் சமூகத்தில் வாழ வந்தேனோ அது கனவு ஆகிவிட்டது. சௌத்திரியும் ஒருகால் அதே கனவில் வழிதவறி அலையும் ஒரு துண்டோ என்னவோ. இப்போதுதான் அவரைப் பார்த்துவிட்டு வருகிறேன். அன்றைய சண்டையில் பாலேச்வர் அவருடைய உடல்மேல் மட்டும் தடியால் அடிக்கவில்லை, நெஞ்சையும் தூள் தூளாக்கிவிட்டான்.

**லோசன் :** பாலேச்வர் மட்டுமே கிராமத்தின் புதிய தலைமுறை இல்லை.

**ராய் தாராநாத் :** (ஏமாற்றமுற்ற குரலில்) புதிய தலைமுறை யார் என்று எனக்குத் தெரியாது. சமூகத்தின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளும் ஜமீன்தார்; மூதாதையரின் பழக்கவழக்கங்களைக் காப்பாற்றும் பெரியவர்கள்; பெரியவர்களிடம் மரியாதையாக நடந்து

கொள்ளத் தெரிந்த இளைஞர்கள்—இவர்கள் எல்லாரும் இல்லாத கிராமத்தில் இருந்து நான் என்ன செய்வது? நகரம்...

லோசன் : நகரம் உங்களை இழுக்கிறது, ஐயா!

ராய் தாராநாத் : (வேறு வழி இல்லை என்னும் குரலில்) நீ கூறுவது ஒரு வேளை சரியாக இருக்கலாம். நகரம் என்னை இழுத்துக்கொண்டிருக்கிறது.

லோசன் : நீங்கள் உங்கள் வசமின்றி இழுக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்.

ராய் தாராநாத் : (துன்புறும் தோற்றத்தில்) என் வசமின்றியா?... அப்படிச் சொல்லாதே, லோசன், அப்படிச் சொல்லாதே... நாங்கள் போவதற்கு என்ன காரணம் என்றால்... என்றால்...

[சேத்ராமின் கைத்தாங்கலில் பிரேன் வருகிறான். ஹேமலதாவும் கூட இருக்கிறாள்.]

பிரேன் : பாபா, இப்போது உங்களால்தான் தாமதம்.

ராய் தாராநாத் : (விடுதலை கிடைத்தாற்போல்) யார்? பிரேன், ஹேம்! நீங்கள் தயாராகிவிட்டீர்களா? நானும் என் 'அட்டாச்'சியைக் கொண்டு வருகிறேன். சேத்ரா, என்னோடு வா.

[வீட்டுப்பக்கம் வெளியேறுகிறார். அவரோடு சேத்ராம்.]

லோசன் : (ஹேமலதாவிடம்) வணக்கம்.

ஹேமலதா : யார்?... நீங்களா? பிரேன், இவர் தான் லோசன், அன்று உங்களைக் காப்பாற்றியவர்.

பிரேன் : ஓ! வணக்கம்... அன்று உங்களைப் பார்க்க முடியவில்லை, ஆனாலும் (உற்றுப் பார்த்தவாறு) முன்பே தெரிந்தவர் போலத் தோன்றுகிறது.

லோசன் : (புன்னகை செய்தபடி) முயற்சி செய்யுங்கள். ஒருவேளை புரியலாம்.

பிரேன் : (யோசித்தபடி) நீங்கள்... அவன்... அவன்... இல்லை, இல்லை. அவன் யாரோ பெரிய வீட்டுப் பிள்ளை.

ஹேமலதா : யார்?

பிரேன் : என் காலேஜ் நண்பன் எஸ். எஸ். பரமார். உன் தோற்றம் முற்றிலும் அவனைப்......

லோசன் : (புன்சிரிப்பு) எஸ். எஸ். பரமார்... லோசன் சிங் பரமார்.

பிரேன் : (திடுக்கிட்டு) ஆ!... பரமார்!... பரமார்!

லோசன் : (சலனமற்ற குரலில்) ஆம், நான் பரமார்தான், பிரேன்.

ஹேமலதா : (வியப்புற்று) பிரேன், இவர் உங்களுடைய காலேஜ் நண்பரா?

**பீரேன்** : (லோசனின் கையைப் பற்றிக்கொண்டு) இவ்வளவு காலத்துக்குப் பிறகு இந்தக் கிராம வேஷத்தில், முசஹார்களுக்கு இடையில் உன்னைக் காண்பேன் என்று நம்பவே முடியவில்லை. நீ காலேஜைவிட்டு எப்படி மறைந்துபோனாய்...

**லோசன்** : (சற்று சிரிப்பு) ஒரு நாள் நான் உங்களை விட்டு வந்தேன். இன்று (தயங்கி)... நீ போகிறாய்.

**பீரேன்** : பரமார், என் இலட்சியம் சிதைவதைக் காண விரும்பாததால் நான் போகிறேன்.

**லோசன்** : இலட்சியமா? கிராமத்தைச் சிதைக்கிற அந்த இலட்சியங்கள் என்ன?

**பீரேன்** : புரட்சியின் இலட்சியம், பரமார்! கிராமத்தின் இடைக் காலத்து உவர் மண் இன்னும் புரட்சிக்குத் தயாராகவில்லை என்பதை நான் மறந்துவிட்டேன். அதற்குத் தேவை, நகரமும், தொழிற் சாலையின் விழிப்பும் உயிர்த்துடிப்பும் உள்ள பூமியும்!

**லோசன்** : (கூர்மையான பார்வை) பீரேன், நீ ஓடிக்கொண்டு இருக்கிறாய்!

**பீரேன்** : நான் தடியடியைக் கண்டு அஞ்சவில்லை, லோசன்!

**லோசன்** : தடிகளின் அச்சத்தால் நீ ஓடவில்லை; ஆனால், கட்சிக்குப் படை திரட்டுவோர், குருட்டு நம்பிக்கை, சண்டை சச்சரவுச் சேறு— ஆகியவற்றுக்கு அஞ்சி ஓடுகிறாய். அந்தச் சேற்றை ஒரே பாய்ச்சலில் கடக்க விரும்பினாய். (ஆழ்ந்த, அறைகூவும் குரலில்) நீ புறமுதுகு காட்டிக்கொண்டிருக்கிறாய், பீரேன்!

**பீரேன்** : (பெரிதும் கலங்கி) புறமுதுகு காட்டுகிறேனா?... இல்லை... இல்லை... இது தப்பு... நாங்கள் ஏன் போகிறோமென்றால்... ஏன் போகிறோமென்றால்...

[ஆயா விரைவாக வருகிறாள்.]

**ஆயா** : ஹேமம்மா! பீரேன்? அட, நீங்கள் போகவேண்டாமா என்ன? பெரிய எஜமானர் எங்கே? நீங்கள் நல்ல வேடிக்கை செய்கிறீர்கள்...

[ராய் தாராநாத் வருகிறார். அவரோடு 'அட்டாச்சி'யைத் தூக்கிக்கொண்டு சேத்ராம்.]

**ராய் தாராநாத்** : இதோ நான் வந்துவிட்டேன். புறப்படு, ஆயா! பீரேன், நீ சேதூவின் உதவியோடு முன்னால் போ. நீதான் முதலில் உட்காரவேண்டும்.

**பீரேன்** : நான் புறப்படுகிறேன், பரமார்! பிறகு எப்போதாவது...

**லோசன்** : பிறகு எப்போதாவதா? (சிறிது சிரிப்பு) பிறகு எப்போதாவது!

[ஆயா, அட்டாச்சியை எடுத்துக்கொள்கிறாள். சேத்ராமின் உதவியோடு பிரேன் வெளியே போகிறான். பின்னால், ஆயா.]

ராய் தாராநாத் : சரி, தம்பி லோசன், நாங்களும் புறப்படுகிறோம்... ஒரு வேளை நீ சொன்னது மெய்யாக இருக்கலாம்.

லோசன் : கடவுளின் அருளால் நான் உங்களை திருத்த முடியுமானால்!

ராய் தாராநாத் : ஹும், உன் சித்திரம் அங்கேயே மூலையில் வைத்தபடி அப்படியே இருக்கிறது.

ஹேமலதா : இதோ கொண்டு வருகிறேன், பாபா. நீங்கள் இரண்டு பேரும் ஸ்டேஷனுக்குச் செல்லுங்கள். எல்லாரும் ஒரே தடவையில் போக முடியாது. எனக்காக டாங்காவை இன்னொரு தடவை அனுப்புங்கள்.

ராய் தாராநாத் : சரி, நல்லது, லோசன் சிங், மகிழ்ச்சியாக இரு. (போகிறார்.)

லோசன் : நீங்கள் போகிறீர்களா, ஹேமலதா?

ஹேமலதா : வேறுவழி இல்லை.

லோசன் : எனக்குத் தெரியும். பிரேனின் போகம்!

ஹேமலதா : நான் பிரேனை இங்கே வைத்துக்கொள்ள முடியும். ஆனால்...

லோசன் : ஆனால்?

ஹேமலதா : (மெய்த்தேட்டையில் ஊன்றிய குரல்) ஒரு விஷயத்தை பாபாவும் புரிந்துகொள்ளவில்லை, பிரேனும் புரிந்துகொள்ளவில்லை. ஆனால், எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் புரிகிறது. பெருமையிலும் ஓய்விலும் திளைக்கலாம் என்று பாபா கிராமத்துக்குத் திரும்பினார். பிரேன் கிராமத்தைப் புரட்சித் திட்டத்தின் களமாக்க விரும்பினான். நானோ... நான் கிராமத்தின் கவர்ச்சிகரமான தோற்றத்தில் கற்பனை மாளிகை எழுப்பும் விருப்போடு வந்தேன்.

லோசன் : மாளிகை மண்ணாவதற்குத்தான் கட்டப்படுகிறது..

ஹேமலதா : இது எனக்குத் தெரியும். ஆனால், எங்கள் வேர்கள் வெட்டப்பட்டுவிட்டன, நாங்கள் கிராமத்திற்கு அந்நியர்கள் ஆகி விட்டோம் என்பதை நாங்கள் மூவரும் அறியத் தவறிவிட்டோம்!... (ஆவேசக்குரல்) நீங்கள் மட்டும் இந்தச் சங்கடத்துக்கு, சிக்கலுக்கு, துன்பத்துக்கு இரை ஆகவில்லையா! ஒரு பக்கம் கிராமம், மறுபக்கம் நகரத்தின் கல்வி, நாகரிகத்தின் பலமான பிடிப்பு. ஓ, நம் உடலையும் உள்ளத்தையும் தனித்தன்மையும் இரு துண்டுகள் ஆக்கிவிட்ட இந்தப் பிளவு எவ்வளவு பயங்கரமானது! இந்தச் சங்கடம் எப்படித் தீரும்,

சொல்லுங்கள்? மண்ணின் வாடையையும், மண்ணின் ஸ்பரிசத்தையும் நாங்கள் எப்படிப் பெறமுடியும்? சொல்லுங்கள்... சொல்லுங்கள்!

லோசன் : உங்கள் கேள்விக்கு விடை என்னிடம் இருக்கிறது... இதைப் பாருங்கள், ஹேமலதா. (மண்வெட்டியைத் தூக்குகிறான்.)

ஹேமலதா : மண்வெட்டியா?

லோசன் : ஆம் அம்மா!... இந்த மண்வெட்டியும் இந்த உழைக்கும் கரங்களுந்தான் அந்தச் சிறைச்சாலையை இடிக்க முயலும் மந்திரச் சொற்கள்.

ஹேமலதா : இடிக்க முடிந்ததா?

லோசன் : முயற்சி தொடருகிறது.

ஹேமலதா : துணிவு குன்றவில்லையோ?

லோசன் : குன்றுகிறது... சிலசில சமயங்களில்!... அந்த நேரம்... மனக் கண்களுக்கு முன்னால் பரவி விடுகிறது...

ஹேமலதா : இருளா?

லோசன் : இருள் அல்ல! இருட்டாக இருந்தால் ஏதாவது விளக்கை ஏற்றிக்கொள்ளலாமே... இருள் அல்ல. ஆனால் கானல் வெளிச்சம்... ஒன்றுக்குப் பிறகு ஒன்று—பளிச்சிடும் மேல்பரப்பு, நாலு பக்கங்களிலும் பாலை. எங்குப் பார்த்தாலும், எதுவரை பார்த்தாலும்—அதே காட்சி, அதே அழைப்பு... ஒளிவீசும் மேல் பரப்பின் அழைப்பு, மின்னி நெளியும் நாக்குகளின் அழைப்பு...

ஹேமலதா : (வியப்புற்று) லோசன்!

லோசன் : (அதே ஆவேசத்தில்) சொல்லு! நீ எதுவாக இருந்தாயோ அதுவாக இருந்தாய், ஆனால் இப்போது நாங்கள் இருக்கிறோம், நீயும் இருக்கிறாய் என்று சொல்லு... நீ ஏற்ற விரும்பிய அந்த மண் விளக்கை உடைத்தெறி. எதனுடைய வெளிச்சத்தில் சிருங்காரத்தின் ஏமாற்றம் ஜொலிக்குமோ, அதனுடைய மண்ணெயில் அந்தச் சக்தி இல்லை... ஆமாம்! நாங்கள் உங்களுக்கு ஏமாற்றந்தான் தருவோம், மனத்தை மகிழ்விக்கும் ஏமாற்றம், நிறைவேறாத விருப்புகளின் மென்மையான ஏமாற்றம். பாதி செத்த வேட்கைகளின் மீனா பஜார்!... மீனா பஜார்!... வானிடி ஃபேர்! வானிடி ஃபேர்!

ஹேமலதா : நிறுத்துங்கள், லோசன்!

லோசன் : பயந்துவிட்டீர்களா?

ஹேமலதா : இல்லை!...

லோசன் : அப்படியானால்... அப்படியானால், நீங்கள் இங்கே தங்குவீர்களா? சொல்லுங்கள், தங்குவீர்கள் அல்லவா? இங்குள்ள ஆபாசத்தின், வேற்றுமைகளின், அடித்தளத்திலுள்ள வாசனையை

நுகரவும், தீண்டவும் இங்கு வந்தீர்களா? சொல்லுங்கள் 'சரி' என்று!

**ஹேமலதா :** சைஹைம்.

**லோசன் :** (விலகி) எனக்குத் தெரியும், ஹேமலதா!

**ஹேமலதா :** 'ஹேம்' என்று சொல்லுங்கள்!

**லோசன் :** பிரேனின் உயிரைப் பறிக்கமாட்டேன்.

**ஹேமலதா :** அவனைவிட நீங்கள் எனக்கு மிகவும் நெருங்கியவர், லோசன்!

**லோசன் :** நல்லது!... ''உதடுகளில் சிரிப்பு, நெற்றியில் சுருக்கம், மிருவாதரம் இருக்கிறது, மறுப்பும் இருக்கிறது.''

**ஹேமலதா :** மறுப்பு!... மறுப்பு மட்டுமே!... ஏனென்றால், எங்களுடைய வேர்கள்தான் வெட்டப்பட்டுவிட்டனவே! கிராமத்திற்கு நான்தான் வேற்றாள் ஆகிவிட்டேனே! புவியின் அமுதத் துளியை நீங்களே அருந்தியிருக்கிறீர்கள் என்று சில கணங்களுக்கு முன்பு நான் எண்ணி இருந்தேன். ஆனால்... ஆனால்.. விஷயம் அப்படி இல்லை. மண்ணின் வாடையையும் ஸ்பரிசத்தையும் அறிந்திருந்தும் எந்த உள்ளூற்றுக்களிலிருந்து நீங்கள் தண்ணீரைச் சேந்துகிறீர்களோ, அவை அந்நியமானவை. கிராமத்து மண்ணின் தாய்மையான சீமான் நீங்கள் அல்ல; நீங்களும் என்னைப் போலவே கைதி! கைதி!

**லோசன் :** (வேதனையோடு) ஹேம்!

**ஹேமலதா :** அடிபட்டதல்லவா?... எனக்குத் தெரியும்! ஆனால், சங்கிலிகளை இழுத்தால் வலிக்கத்தான் செய்யும். ஆயினும் சங்கிலிகளை ஒலிக்க வேண்டியது அவசியம். யந்திரத்தின் திரையைக் கிழிக்க வேண்டியது அவசியம்.

**லோசன் :** யந்திரம்? என்ன யந்திரம்?... ஹேமலதா .. ஹேம் .. இதென்ன சொல்கிறீர்கள்?

**ஹேமலதா :** உங்களை உங்கள் இருக்கையிலிருந்து தொலைவில் இழுப்பது யந்திரம், உங்களை உங்களுடைய உண்மையிலிருந்து தப்புவதற்கு நிர்ப்பந்தம் செய்வது யந்திரம். (நெருங்கிப் போய் இளகிய தொனியில்) கேளுங்கள்! உங்களுடைய சொற்கள் அச்சம் ஊட்டுவனவாக இல்லை!... நான் அவற்றில் உங்கள் துன்பக் கதையைக் கேட்டேன்... உங்களுடைய நிர்ப்பந்தங்களின் பெருமூச்சை, கட்டுண்டிருக்கும் உங்களுடைய ஆத்மாவின் கூக்குரலை, உங்களுடைய தனி இருக்கையின் நடுக்கத்தை!

**லோசன் :** நிறுத்துங்கள், ஹேம்... நிறுத்துங்கள்! (கைகளில் தலையைப் புதைத்துக்கொண்டு) இவ்வளவு இரக்கமின்றி முடிச்சுகளைப் பிரிக்கிறீர்கள்!

**ஹேமலதா :** *(லோசனின் தோள்மீது கை வைத்தபடி இளகிய குரலில்)* உங்களுடைய இந்தச் சங்கடத்தை, இந்தத் துன்பத்தை என்னுடையதாக உணர்ந்தேன், லோசன்.

**லோசன் :** *(துன்புற்ற குரலில்)* நீங்கள் சுட்டிக்காட்டிய என்னுடைய இந்த பலவீனத்துக்கு ஆகுதி ஆவதற்கு நான் எவ்வளவு தவம் செய்திருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது, ஹேம். மண்வெட்டியும் கலப்பையும் உபயோகித்து, உழைப்பில் என்னைக் காணிக்கை ஆக்கிக்கொண்டு, பூமியின் ரகசியத்தை மீண்டும் அறியக் கவலைகொண்டு நான் எவ்வளவு ஈடுபாட்டுடன் என்னுடைய மனோபாவங்களைக் கழுவிவிட முயற்சி செய்திருக்கிறேன்...

**ஹேமலதா :** தெரியும். ஆகையால்தான் வெளிப்புறச் சுவர்களை உங்களால் உடைக்க முடிந்திருக்கிறது, சிறை என்னை வளைத்திருப்பது போல் உங்களை வளைத்துக்கொண்டிருக்கவில்லை. ஆனால், அப்படி இருந்தாலும்... இருந்தாலும்... நாம் இருவரும் கைதிகளே. நான் என் கலைக்கும், என் குடும்பத்திற்கும், என் சுக சௌகரியத்திற்கும்; நீங்கள் உங்களுடைய நுட்பமான, ஆழ்ந்த கருத்துகளுக்கும், உங்களுடைய கற்பனைக்கும்; உங்களுடைய மனோபாவங்களுக்கும்!... ஒருகால், நாம் எப்போதுமே கைதிகளாகத்தான் இருக்க வேண்டுமோ என்னவோ.

**லோசன் :** எதற்காக? நாம் ஏன் கைதிகளாக இருக்க வேண்டும்? — ஏன்? ஏன்?

**ஹேமலதா :** நாம் ஏன் கைதிகளாக இருக்க வேண்டும் என்றால்? இதுதான் நேர்மையின் உரிமைக் கோரிக்கை. *(சற்று நிறுத்தி)* நான் புறப்படுகிறேன், லோசன்! இந்தச் சித்திரத்தை வைத்துவிட்டுப் போகிறேன், உங்களுக்காக.

**லோசன் :** எனக்கு என் நிர்ப்பந்தங்களை நினைவூட்டுவதற்காகவா?

**ஹேமலதா :** *(போய்க்கொண்டே)* எப்படி வேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளுங்கள்!... ஆனால் எப்போதாவது நெருப்புப் பொறிகளின் சூட்டைப் பொறுக்க முடியவில்லை என்றால், கல்கத்தாவைச் சுற்றிவிட்டு வாருங்கள்!... நெருப்புப் பொறிகளை ஒடுக்குவது சரியல்ல! *(வெளியே போகிறாள்.)*

*[லோசன் ஏதோ கூறத் தயாராகிறான், கை தூக்குகிறான், ஆனால் மீண்டும் கையைத் தொங்கவிடுகிறான். சித்திரத்தை இரு கரங்களாலும் தூக்கி, தன் மார்புக்கு எதிரில் மேலே உயர்த்தி உற்றுப் பார்க்கிறான்.]*

**லோசன் :** *(சற்று நேரம் பார்த்த பிறகு)* நான் சூட்டைப் பொறுப்பேன்!... பொறியைப் பெரு நெருப்பு ஆகவிடுவேன்—அது என்னைப் பொசுக்குவதற்காக!

[சேத்ராம் வருகிறான். லோசன் அவனைக் கவனிக்கவில்லை.]

சித்திரத்தின் கைதிகளே! எப்பொழுதும் நீங்கள் ஏன் கட்டுண்டு நிற்கிறீர்கள்? ஏனென்றால்...

சேத்ராம் : லோசன் அண்ணா!...

லோசன் : (தனக்குள்ளேயே மூழ்கியவனாக) இந்தக் கிராமத்து நாட்டியக்காரர்கள், ஆடட்டும், சிரித்து விளையாடட்டும், உண்டு பருகட்டும் என்பதற்காகவா? ஓ சித்திரக் கைதிகளே!... உங்களுடைய எரிவினால் இவர்களுடைய வழியிலுள்ள முள்ளும் புதரும் சாம்பலாகலாம், ஆனால் உங்களுடைய சங்கிலிகள் இவர்களுடைய தலைச் சுமை ஆகாமல் இருக்கட்டும்!... மாடிக் கோடியில் உள்ள, மேலே மாடிச் சுமை விலகிவிட்ட ஒரு சுவர் போல், இத்தகைய தேவையற்ற சுவர் போல், தானாகவே இடிந்து விழட்டும்... நானும் இடிந்துபோகிறேன்... நானும்... நானும்....

சேத்ராம் : (முன்னேறி, சற்று உரக்க) லோசன் அண்ணா, நீங்கள் சித்திரத்தோடு பேசுகிறீர்கள்!

லோசன் : (திரும்பி, சித்திரத்தை மறைத்தபடி) சேத்ராம்! (நிறுத்தி) நம்பு, சேத்ராம்! நான் மண்டியிடமாட்டேன். (சேத்ராமின் தோளைப் பற்றியவண்ணம்) சங்கிலிகள் என்னை மந்தத்தில் தோய்த்தெடுத்தாலும் சரி, வழியிலுள்ள முட்கள் என் உடலைச் சல்லடைக் கண்களாய்த் துளைத்தாலும் சரி... முன்னேறும் உங்கள் கால்களுக்கு நான் என் இருப்பைக் கரைத்துவிட ஆயத்தமாக இருக்கும்வரை இது நடக்காது... நடக்காது, நடக்கவே நடக்காது!

சேத்ராம் : (எல்லையற்ற கருணையில் மூழ்கியவனாய்) லோசன் அண்ணா, உங்கள் நிலத்தின்மீது நடக்கமாட்டீர்களா?

லோசன் : (தூங்குகிறவன் திடீரென்று விழித்துக்கொண்டது போல்) ஆங்!...

சேத்ராம் : நிறைய வேலை இருக்கிறது, அண்ணா! அடிவாரத்து நிலம் திரும்பக் கிடைத்துவிட்டால்...

லோசன் : (ஆழ்ந்த குரலில்) சரிதான், போய்த் தோண்ட ஆரம்பிக்கலாம்.

சேத்ராம் : (தடைப்படும் குரலில்) ஒரு வேலை... ஒரு வேலை உங்களுக்குக் கொஞ்சம் ஓய்வெடுக்க வேண்டியிருக்கும், அண்ணா!

லோசன் : ஓய்வா? (வரண்ட சிரிப்பு) இல்லை, சேத்ராம்! வா, போகலாம். எனக்கு என் வியர்வையைக் கால்வாயாக்கி அந்தக் கால்வாயில் என் நிழலை எப்போதும் பார்த்தவண்ணமிருக்க வேண்டும். (மண்வெட்டியைத் தூக்குகிறான்) வா!

[இருட்டு]

# காபி ஹவுஸில் எதிர்பார்த்தல்

—லக்ஷ்மி நாராயண் லால்

## பாத்திரங்கள்

முதல் ஆள்

இரண்டாம் ஆள் (இளைஞன்)

வெயிட்டர்

(இடம் : காபி ஹவுஸ்)

*[காபி ஹவுஸில் ஓர் அறை, ஒரு மேஜை, ஒரே நாற்காலி. பகைப் புலத்தில் மூன்று பேர் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டு; முதல் ஆள்— வயது நாற்பத்தைந்து இருக்கும்—பைஜாமாவும் சட்டையும் அணிந்து, விரைவாக வருகிறான்; ஓடிச் சென்று நாற்காலியில் உட்கார்ந்து விடுகிறான். அவனுக்குப் பின்னாலேயே இரண்டாவது ஆள் வருகிறான்— அவனுக்கு இருபத்தைந்து வயது இருக்கும்—பாண்ட், சட்டை அணிந்திருக்கிறான். இவனைப் பார்த்ததும் முதல் ஆள் அவசரம் அவசரமாக மேஜைமீது தன்னுடைய காகிதங்களை வைக்கிறான்.]*

**முதல் ஆள் :** *(உரிமையோடு)* வெயிட்டர்!

**வெயிட்டர் :** *(வருகிறான்)* சார், சொல்லுங்கள்... சார், ஆர்டர் கொடுங்கள்!

**முதல் ஆள் :** ஒரு காபி, மூன்று கிளாஸ் தண்ணீர்... ஒரு காபி... மூன்று தண்ணீர்... ஒரு காபி... மூன்று தண்ணீர்!

*[அதையே வெயிட்டர் திரும்பக் கூறுகிறான். பேச்சு முடிந்ததும் நான் பேசலாம் என்று இரண்டாம் ஆள் காத்திருக்கிறான். ஆனால் பேச்சு முடியக்காணோம். வெயிட்டர் பேசியவாறு போகிறான்.]*

**முதல் ஆள் :** நான் தினம் இங்கே உட்காருகிறேன். நான் சென்ற பதின்மூன்று வருடங்களாய்த் தொடர்ந்து இங்கேயே உட்கார்ந்து வருகிறேன். உலகம் பூராவுக்கும் இது தெரியும். யாராவது ஒருவருக்குத் தெரியவில்லை என்றால் நான் என்ன செய்வேன்?

**இரண்டாம் ஆள் :** நீங்கள் பொய் சொல்கிறீர்கள். சென்ற ஆறு நாளாய் நான் தொடர்ந்து இங்கே உட்கார்ந்துவருகிறேன். இங்கு ஒரு நாற்காலி இருக்கும். நான் இங்கு உட்கார்ந்து அவளை எதிர் பார்ப்பது வழக்கம். அவள் வருவாள், அப்புறம் நாங்கள் எதிர் எதிராக உட்கார்ந்து பேசுவது வழக்கம்.

*[முதல் ஆள் டேபிள்மீது தன் எழுத்துச் சாமான்களை அடுக்கியபடி இருக்கிறான்.]*

**முதல் ஆள் :** நான் இங்கு உட்கார்ந்து என் வேலையைச் செய்கிறேன்...

**இரண்டாம் ஆள் :** நானும் என் வேலையாகத்தான் இங்கே வந்திருக்கிறேன்...

**முதல் ஆள் :** பேசுவது ஒரு வேலை அல்ல.

**இரண்டாம் ஆள்** : இங்கே உட்கார்ந்து எழுதுவதும், படிப்பதும் ஒரு வேலை அல்ல!

**முதல் ஆள்** : நீ இன்னும் படிக்கிறாயா?

**இரண்டாம் ஆள்** : அதைப் பற்றி உங்களுக்கு என்ன?

**முதல் ஆள்** : உன் நாட்டு வரலாறு படித்திருக்கிறாயா?

[இரண்டாம் ஆள் சிகரெட் பற்றவைத்துக் கொள்கிறான். கோபமாக வாயை மூடிக்கொண்டு ஒரு பக்கம் பார்க்கத் தொடங்குகிறான்.]

**முதல் ஆள்** : விந்தையான விஷயம். இந்தக் காலத்து இளைஞர்கள் தங்கள் நாட்டு வரலாற்றைக் கேட்டவுடன் சிகரெட் பிடிக்கத் தொடங்குகிறார்கள். எங்கள் தலைமுறையில் இப்படி இல்லை. நாங்கள் வரலாற்றை வாழ்ந்திருக்கிறோம். அனுபவித்திருக்கிறோம். வரலாற்றின் மகத்தான அத்தியாயங்களை இயற்றியிருக்கிறோம். நாங்கள் சுதந்திரப் போராட்டம்...

**இரண்டாம் ஆள்** : (குறுக்கிட்டு) வாயை மூடும். இதை எல்லாம் சொல்வதற்காகவா நீர் தினம் இங்கே வருகிறீர்?

**முதல் ஆள்** : (எழுந்து) என்னைக் கோபித்துக்கொள்வதற்காகவா நீ இங்கு வருகிறாய்? (நிறுத்தி) எனக்கு ஒரு சிகரெட் தர முடியாதா? (வாங்கிக்கொண்டு) அடடா, நீங்கள் எல்லாம் எவ்வளவு தரமான சிகரெட் பிடிக்கிறீர்கள்! எங்கள் காலத்தில் இம்மாதிரி சிகரெட் பிடிக்கிற வழக்கம் இல்லை. நாங்கள் இந்த வயதில் சத்தியாக்கிரகிகளாக இருந்தோம். எங்களுக்கு முன்னால் ஒரு மாபெரும் லட்சியம் இருந்தது. யாராவது . அல்லது .. எதாவது... ஒவ்வொரு கணமும் எங்களை 'இன்ஸ்பயர்' செய்துகொண்டே இருந்தது. (இதைக் கூறிக்கொண்டு டேபிளிலிருந்து விலகி நிற்கிறான். சிகரெட் பிடிக்கிறான். புகையை ஊதி, அதைப் பார்த்தவாறே பேசுகிறான்.)

**முதல் ஆள்** : புகையில் எண்ணற்ற கோடுகள் இருக்கின்றன. எல்லாம் தனித்தனியாகச் சிதறி உடைந்துகொண்டு வாயு மண்டலத்தின் வாயில் ஒடுங்கிக்கொண்டே போகிறது. இந்தச் சுழல், ஒரு மிகப் பெரிய பல்லி போலவும், அது தன் வாயினால் இந்தக் கோடுகளை எல்லாம் நக்கிக்கொண்டே போவது போலவும் இருக்கிறது!

**இரண்டாம் ஆள்** : (சிகரெட்டைத் தேய்த்தபடி) இம்மாதிரி 'போர்' அடிக்க உங்களுக்கு உரிமை இல்லை!

**முதல் ஆள்** : நாங்கள் அப்போது சிகரெட் பிடிக்கவில்லை. காபியின் பெயரையும் கேட்டதில்லை. 1944-ல் முதல்தடவை இதன் பெயரைக் கேட்டோம் — எங்கள் சுயராஜ்யக் குரு பதின்மூன்று நாள் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார் — ஆத்மசுத்திக்காக உண்ணா

விரதம்—ஆங்கிலேயக் கலெக்டர் தன் கையால் அவருக்குக் காபி சாப்பிடக் கொடுத்தான்.

[வெயிட்டர் வருகிறான்.]

**வெயிட்டர் :** ஒரு காபி—மூன்று கிளாஸ் தண்ணீர்...

**முதல் ஆள் :** விசித்திரமான ஆட்கள்—இவர்களுக்கு யார் புரிய வைப்பது.. இவர்களுக்கு யார் என்ன சொல்வது... இவர்களுக்கு இவ்வளவு அர்த்தமற்ற கோபம் வருகிறது...!

**இரண்டாம் ஆள் :** வாயை மூடுங்கள்!

[இவனுடைய குரலின் ஒரு கணத்துக்கு எல்லாம் கலகலத்து உடைந்ததுபோல் இருக்கிறது.]

**இரண்டாம் ஆள் :** இங்கு ஏற்கெனவே நாற்காலி இருந்தது.

**முதல் ஆள் :** இருந்தது... அதாவது, இது வரலாற்றுத் தகவல். வரலாற்றில் என்ன இல்லை?

**இரண்டாம் ஆள் :** இங்கிருந்த அந்த நாற்காலி எங்கே?

**வெயிட்டர் :** உள்ளே இருக்கிறது. அதில் ஒரு கனவான் உட்கார்ந்திருக்கிறார்.

**இரண்டாம் ஆள் :** ஆனால், அந்த நாற்காலி இங்கு இருக்க வேண்டியது.

**வெயிட்டர் :** சார், அதில் ஒரு கனவான் உட்கார்ந்திருக்கிறார்.

**இரண்டாம் ஆள் :** அந்தக் கனவானிடம் சொல்லு.

**வெயிட்டர் :** சார், அவருக்குக் கேட்கிற சக்தி குறைவு..

**இரண்டாம் ஆள் :** நான் எழுதித் தருகிறேன்...

**வெயிட்டர் :** அவருக்குப் பார்க்கிற சக்தி மிகவும் குறைவு...

[முதல் ஆள் காபி சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான்.]

**முதல் ஆள் :** உண்மையில் உங்களுக்கு அந்தக் கனவானைத் தெரியாது, அதனால்தான் நீங்கள் இவ்வளவு ஆத்திரப்படுகிறீர்கள். சென்ற இருபத்தைந்து வருடங்களாய் எனக்கு அவரைத் தெரியும்...

**இரண்டாம் ஆள் :** அப்படியானால் நீங்கள் அவருக்குப் பக்கத்தில் ஏன் உட்காரக் கூடாது?

**முதல் ஆள் :** நான் உங்களிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புவது இதுதான். உங்களுக்கு அந்தக் கனவானைத் தெரியாது. இவன் நான் அந்த சுயராஜ்யக்குரு. இப்போது அவன் எந்நேரமும் காபி குடிக்கிறான்; அவனை எப்போதும் ஒரு கூட்டம் சூழ்ந்தபடி இருக்கிறது.

**இரண்டாம் ஆள் :** நான் அவனைப்பற்றி ஒன்றும் தெரிந்துகொள்ள விரும்பவில்லை.

**முதல் ஆள் :** இதையே அவனும் விரும்புகிறான்.

**இரண்டாம் ஆள் :** இது என் விருப்பம்.

முதல் ஆள் : இதுதான் அவனுடைய விருப்பம்.

இரண்டாம் ஆள் : எனக்கு யாரைப்பற்றியும் அக்கறை இல்லை.

முதல் ஆள் : அவனுக்கும் யாரைப்பற்றியும் அக்கறை இல்லை.

இரண்டாம் ஆள் : நான் பார்க்கிறேன்...

முதல் ஆள் : அவன் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்...

இரண்டாம் ஆள் : நான் அவனைப் பலவந்தமாய்த் தூக்கி நாற்காலியைக் கொண்டு வருகிறேன். அது இங்கே இருக்கவேண்டிய நாற்காலி. நான் அதன்மேல் சென்ற ஆறு நாளாய்த் தொடர்ச்சியாக உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்.

வெயிட்டர் : (தடுத்து) சார், அந்தக் கனவான் இங்கே சென்ற இருபது ஆண்டுகளாய்த் தொடர்ந்து உட்கார்ந்து இருக்கிறார்.

இரண்டாம் ஆள் : சென்ற ஆறு நாளாய் இங்கே நாங்கள் உட்கார்ந்து வருகிறோம். இங்கு நான் உட்கார்ந்தேன்... இங்கு நான் உட்கார்ந்தேன்.

வெயிட்டர் : மெய்தான். ஆறு நாள் அவர் ஊருக்கு வெளியில் இருந்தார்!

முதல் ஆள் : (இதற்குள் காப்பியை முடித்துவிட்டு) தம்பி, நான் மெடிகல் செக்கப்புக்காக ஆறு நாள் ஆஸ்பத்திரியில் இருந்தேன். எனக்கு பிளட் பிரஷ்ஷர் வியாதி. காலை முதல் மத்தியானம் வரை 'லோ', மத்தியானம் முதல் நள்ளிரவு வரை 'ஹை'. எனக்குத் தூக்கம் வருவதில்லை. எனவே யோக முறைகள்மூலம் என் பிளட் பிரஷ்ஷரை மாற்றிவிடுகிறேன். காலை முதல் மத்தியானம்வரை 'ஹை', மத்தியானத்துக்குப் பிறகு 'லோ', அப்புறம் நான் தூங்குகிறேன்.

இரண்டாம் ஆள் : உங்களுடைய இந்த உளறலை நிறுத்துங்கள்!... நான் இங்கு உட்கார்ந்து அவனோடு பேசவேண்டும்.

முதல் ஆள் : வெயிட்டர், ஐயா என்ன செய்துகொண்டிருக்கிறார்?

வெயிட்டர் : ஐயா தன் கே(ர்)ள் ஃபிரண்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். கே(ர்)ள் ஃபிரண்ட்!

இரண்டாம் ஆள் : (சினமாக) நான் இங்கே உட்கார வேண்டும். நகருங்கள்... விடுங்கள்...!

[இரண்டுபேருக்குமிடையே நாற்காலிக்காகப் போர். வெயிட்டர் ஓடிச் சென்று மேஜைமீதிருந்த கப், பிளேட், கிளாஸ்களை எடுத்துக்கொண்டு வேகமாய்ப் போய்விடுகிறான். மேஜை விழுந்துவிட்டது. நாற்காலி இன்னும் முதல் ஆளின் வசமே இருக்கிறது. இரண்டாவது ஆள் காயமுண்டு கீழே கிடக்கிறான். வெயிட்டர் கையில் இரண்டு கிளாஸ் தண்ணீரோடு வருகிறான்.]

**வெயிட்டர் :** கனவான் உங்கள் இருவருக்கும் குளிர்ந்த ஜலம் கொடுக்கச் சொன்னார். அதிகமாய்க் காயப்பட்டவன் சற்றுக் கழித்துப் பருகலாம், குறைவாய்ப் பட்டவன் உடனே சாப்பிடலாம்!

*[முதல் ஆள் தண்ணீர் பருகுகிறான்.]*

**முதல் ஆள் :** உங்களிடம் சிகரெட் இருக்கும்...

*[இரண்டாம் ஆள் சிகரெட் பாக்கெட்டை அவனுடைய முகத்தின் மேல் எறிகிறான். அவன் எடுத்து வாயில் சிகரெட் வைத்துக் கொள்கிறான்.]*

**முதல் ஆள் :** (எழுந்து நாற்காலிமீது இடது காலை வைத்து) நான் சுதந்திரப் போராட்டத்தில் போராடி இருக்கிறேன். நாடு விடுவிக்கப் பட்டதில் என் துணை, என் உழைப்பு, என் பார்ட் இருக்கிறது. இன்குலாப் ஜிந்தாபாத் கோஷத்துக்காக என் ரத்தம் கொட்டியிருக்கிறது. இந்தியாவை விட்டு வெளியேறு என்ற முழக்கத்துக்காக நாங்கள் தியாகம் செய்திருக்கிறோம்...

*[வெயிட்டர் மெதுவாய்க் கை தட்டுகிறான்.]*

**இரண்டாம் ஆள் :** நான் இங்கே உங்களுக்காக வரவில்லை. உங்களைப் போன்ற அநாகரிகமான ஆட்கள் இங்கே உட்காருகிறார்கள் என்று தெரிந்திருந்தால் நான் இங்கே ஒருகாலும் வந்திருக்க மாட்டேன். உங்களைப்போல் நான் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடவில்லை என்பது உண்மை; ஆனால், அதுவும் ஒரு போரா! நீங்கள் தியாகம் செய்தீர்கள் .. கலகமோ இல்லாதபோது தியாகம் ஏது. !

**முதல் ஆள் :** அடே.... சுதந்திரப் போர் வேறு எப்படி இருக்கும்? அடாடடா...டா, பேஷ் பேஷ்... என் மண் சிங்கமே...!

**இரண்டாம் ஆள் :** சுதந்திரப் போர் கீழே இருந்து போராடப் படுவது... கீழிருந்து மேல் நோக்கி. மேலிருந்து கீழ் நோக்கியல்ல. அதில் மூலாதாரத்திலேயே மாறுதல் உண்டாகிறது... சீர்திருத்தம் அல்ல— 'பவர் டிரான்ஸ்ஃபர்' அல்ல. சுதந்திர பூமியில் பிறக்கும் சக்தியின் புதிய தோற்றம்.

**முதல் ஆள் :** அடே... டே... டே... அடே... வெயிட்டர் இவருக்குக் காப்பி கொடு அப்பா...!

**இரண்டாம் ஆள் :** என்னைக் கேலி செய்தால் மண்டையைப் பிளந்து விடுவேன்...

**முதல் ஆள் :** உண்மையில் உங்களுக்கு இன்னும் அனுபவம் இல்லை. உங்களுக்கு இவ்வளவு ஆர்வம் இருக்கிறதே... இது போற்றத் தகுந்தது. நான் இதை மிகவும் மதிக்கிறேன்.

**இரண்டாம் ஆள் :** என்னைப் 'பேட்ரனேஸ்' செய்ய முயற்சி செய்ய வேண்டாம்... உங்களைப் போன்றவர்களே எங்கள் வாழ்க்கையை நாசம் செய்திருக்கிறார்கள்.

**முதல் ஆள் :** என்ன சொன்னீர்கள்! என்ன .. இருங்கள்... இருங்கள்... கொஞ்சம் நான் புரிந்துகொள்ள விடுங்கள்... உண்மையில் நான் ஹை ஸ்கூல்கூடப் பாஸ் செய்யவில்லை. **1942**-ல் ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன்... அப்போதுதான் சுதந்திரப் போரில் குதித்துவிட்டேன் ..

**இரண்டாம் ஆள் :** குதித்தீர்களா அல்லது யாராவது தள்ளி விட்டார்களா!

**முதல் ஆள் :** கொஞ்சம் புரிந்துகொள்ள விடுங்கள்... புரிந்து கொள்ளவிடுங்கள், இது மிகவும் நல்ல விஷயம். பாருங்கள், காபி ஹவுஸ் எவ்வளவு நேர்த்தியான இடம்... அப்படியானால், நாங்கள் உங்கள் வாழ்க்கையை நாசம் செய்ததாய்க் கூறினீர்கள். அதற்கு அர்த்தம், அந்தக் கனவான் என் வாழ்க்கையை நாசம் செய்தார் என்று நானும் சொல்லலாம். இது மிகவும் நல்ல தீர்ப்பு... இதை வைத்து ஒரு சக்திவாய்ந்த நூறு நூபாய்க் கதை எழுத முடியும்.

[காகிதத்தில் விரைவாக எழுத ஆரம்பிக்கிறான். இரண்டாம் ஆள் அக் காகிதத்தைப் பிடுங்கிக் கிழிந்தவாறு]

**இரண்டாம் ஆள் :** நேற்று உங்களுடைய திருப்தி தீர்ப்பைத் தேடுவதில் நான் இருந்தது. அதனுடைய எதிர்விளைவுதான் ஒரு பக்கம் சுபாஷ்போஸை நாட்டைவிட்டு வெளியே கிளப்பி, மறுபக்கம் அரவிந்தரை யோகி ஆக்கியது.

**முதல் ஆள் :** இதை எல்லாம் நான் எழுதிக்கொள்ள விடுங்கள், இல்லாவிட்டால் நான் மறந்துவிடுவேன்.

[இதற்கு இடையில் வெயிட்டர் ஒரு உள்ளே போகிறான். விரைவாக வெளியே வருகிறான்.]

**வெயிட்டர் :** உங்களுடைய 'ஸ்பீச்'சைக் கேட்பதற்குச் சௌகரிய மாகச் சற்று உரக்கப் பேசும்படி கனவான் உங்களை மிகவும் பணிவாய் இறைஞ்சிக் கேட்டுக்கொள்கிறார். அவர் உங்களுக்காக முந்திரிக் கொட்டையும் கிரீம் காபியும் ஆர்டர் கொடுத்திருக்கிறார்.

**இரண்டாம் ஆள் :** அவனுடைய ஆர்டரை அவனுடைய முகத்தில் தூக்கி அடி.

**வெயிட்டர் :** உண்மையாகவே அவர் மிகவும் நல்ல மனிதர், அவருக்குக் கொஞ்சமும் கோபம் வராது.

**இரண்டாம் ஆள் :** எனக்கு வரும்... போய் அவனிடம் சொல்!

**வெயிட்டர் :** அவருக்கு எல்லாம் தெரியும். அவர் எல்லோருடைய நன்மைக்காகவும் எந்நேரமும் சிந்தனை செய்துகொண்டிருக்கிறார்.

**இரண்டாம் ஆள் :** நீ பேசாமல் இருக்கிறாயா இல்லையா?

**வெயிட்டர் :** அவர் இங்கே உட்கார்ந்திருக்கும்வரை இங்கேயே நிற்க வேண்டியது என் ட்யூடி.

**இரண்டாம் ஆள் :** அப்படியானால் நின்றுகொண்டிரு!

**வெயிட்டர் :** சார், மன்னியுங்கள், பேசுவதும் என் ட்யூடியில் சேரும்.

[இதற்கு இடையில் முதல் ஆள் தன் 'பாக்'கிலிருந்து இன்னும் கொஞ்சம் 'லெட்டர் ஹெட்கள்', 'பாட் பேபர்', ரசீது புத்தகம், 'ரப்பர் ஸ்டாம்ப்' ஆகியவற்றை வெளியில் எடுக்கிறான். கூடவே சில பத்திரிகைகளையும் ஹாண்ட் பில்களையும்.]

**முதல் ஆள் :** (திடீரென்று ஒரு ஹாண்ட் பில்லைப் படிக்கிறான்.) திருவாட்டிகளே, கனவான்களே! நம் தேசிய உணர்வு நாளுக்கு நாள் நலிந்துகொண்டு வருவது ஆழ்ந்த கவலையும் துயரமும் தரும் விஷயம். தனி நபர் அளவிலும் சரி, சமூக அளவிலும் சரி, ஒழுங்கீனம் வளர்ந்து வருகிறது. குடும்பம், வீடு, அலுவலகம், கல்வி நிலையங்கள், பொது வாழ்க்கைக் களங்கள் எங்கும் ஓர் இண்டிஸிப்ளின் இண்டிஸிப்ளின்... ஆங்.. இண்டிஸிப்ளினை எப்படி மொழி பெயர்ப்பீர்கள்?

**இரண்டாம் ஆள் :** உங்கள் தலை!

**முதல் ஆள் :** உங்கள் தலை!... ஏ வெயிட்டர், கனவானிடம் கேள், இண்டிஸிப்ளினுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பு என்ன?

[அவன் விரைவாகப் போய் வருகிறான்.]

**வெயிட்டர் :** இந்த இண்டிஸிப்ளினையே உபயோகியுங்கள் என்று கனவான் சொன்னார். அவருக்கு இது மிகவும் பிடிக்கும். இதனால் அவருக்கு மன மகிழ்ச்சி உண்டாகிறது.

**முதல் ஆள் :** (படித்தபடி) சரி, ஆம்... எங்கும் ஓர் இண்டிஸிப்ளின் பரவியுள்ளது. இதற்காக நாம் மிகவும் அவசியமாகச் செய்ய வேண்டிய பணி, ஒவ்வோர் இடத்திலும், ஒவ்வொரு தலத்திலும் நாம்... (திடீரென்று இரண்டாம் ஆளின் பக்கம் பார்க்கிறான்.) ஏன், நீங்கள் ஏன் காதுகளை மூடிக்கொள்கிறீர்கள்? இந்த விளம்பரம் உங்களுக்குப் பிடித்திருந்ததா? இதை நானே தயாரித்தேன். பாருங்கள், இன்னும் எனக்கு நிறைய வேலை இருக்கிறது. அதனால்தான் காலையிலேயே வீட்டிலிருந்து கிளம்பி ஓடி ஓடி வருகிறேன்.

**இரண்டாம் ஆள் :** உங்களுக்கு முன்னால் நான் வந்துவிட்டேன்.

**முதல் ஆள் :** அன்பரே, கோபித்துக்கொள்ளாதீர்கள். நம் இருவருடைய வேதனையும் எவ்வளவோ ஒற்றுமையானது. நாம் இருவரும் ஓரே பிரயாணம் செய்பவர்கள், ஓரே வலி உடையவர்கள்.

**இரண்டாம் ஆள் :** நான் உங்களோடு பேச விரும்பவில்லை.

**முதல் ஆள் :** இப்படிச் சொல்லாதீர்கள். பேச்சுதானே நம் வாழ்க்கை. நாம் ஒன்று வேலையாக இருக்கிறோம், அல்லது வெறும் என இருக்கிறோம்; அந்த வெறுமையை நிரப்ப நாம் இங்கு வருகிறோம். இம் மாதிரி மௌனமாக இருக்காதீர்கள். இந்த மௌனம் என்னை உறுத்துகிறது... சொல்லுங்கள், சொல்லுங்கள்... ஏதாவது சொல்லுங்கள்... நீங்கள் மிகவும் நன்றாய்ப் பேசுகிறீர்கள்!

[இரண்டாம் ஆளை அன்போடு தொடுகிறான். அவன் இதைச் சட்டை செய்வதில்லை.]

**முதல் ஆள் :** தம்பி, எனக்கு நிறைய வேலை செய்யவேண்டியிருக்கிறது. எவ்வளவு வேலை என்று உங்களால் கற்பனைகூடச் செய்ய முடியாது. நான் இப் மாதிரி இன்னும் ஐந்து விளம்பரங்கள் எழுத வேண்டும், மூன்றுக்குப் புரூப் பார்க்கவேண்டும், இரண்டுக்குப் பிரிண்ட் ஆர்டர் தரவேண்டும். இங்கே வைக்கப்பட்டிருக்கின்றனவே இந்தப் 'பாட்கள்' எல்லாம் பல பெரும் நிறுவனங்கள்... ஒன்றுக்கு நான் ஆலோசனையாளன்; மற்றொன்றுக்குத் தலைவன்; இன்னொன்றுக்குப் பொருளாளன்; மற்றொன்றுக்கு நிர்வாகி; எத்தனை எத்தனை கடிதங்கள் நான் எழுத வேண்டுமோ, தெரியவில்லை. இதைப்பாருங்கள், என்னுடைய இன்றைய டயரி; இவ்வளவு பேர்களை நானே நேரில் சந்திக்க வேண்டும். இத்தனை இடங்களில் ஜனங்கள் என்னையே நேரில் சந்திக்க வருவார்கள். இவ்வளவு பேர்களை இவ்வளவு பேர்களுக்கு அறிமுகம் நான் செய்துவைக்க வேண்டும்... எனக்கு நான் எத்தனை வேலைகள், எத்தனை எத்தனை பொறுப்புகள். இந்த வெயிட்டரைக் கேளுங்கள்; நாள்தோறும் இங்கே வருகிறவர்களில் முதலாவது ஆள் நான்தான், இரவு பத்தேகால் மணிக்கு இங்கிருந்து போகிற கடைசி ஆளும் நான்தான்... முதலாவது, கடைசி!

[நாற்காலியில் அமர்ந்து 'பாடில்' ஏதோ எழுதுவதில் ஈடுபட்டு விடுகிறான்.]

**முதல் ஆள் :** (எழுதியபடி திடீரென்று) என்ன சொன்னீர்கள்... போர்... அடியிலிருந்து நடக்கிறது... அடியிலிருந்து என்றால்?

**இரண்டாம் ஆள் :** (சினத்தில் ஆழ்ந்திருக்கிறான்.) செருப்பின் அடியிலிருந்து!

**முதல் ஆள் :** (எழுதியபடி) செருப்பின் அடியிலிருந்து. (மறுபடியும் நிறுத்துகிறான்.) அடியிலிருந்து மேலே... மேலே இருந்து அடியில்... இந்த இரண்டுக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்ன?

**இரண்டாம் ஆள் :** இந்த வித்தியாசத்தைக் கண்டுகொள்ள நீங்கள் சிரசாஸனம் செய்யவேண்டியிருக்கும்!

**முதல் ஆள் :** உண்மையாகவா!... ஓ அதனால்தான் மகாபுருஷர்கள் எல்லாரும் ஒவ்வொரு நாள் காலையிலும் சிரசாஸனம் செய்து வந்தார்கள்... கட்டாயம் இதில் ஏதோ ரகசிய சக்தி இருக்கிறது. நான் இப்போதே செய்கிறேன்.

*[சிரசாஸனம் செய்ய முயன்று, அடிக்கடி விழுகிறான். வெயிட்டர் மேலே பாதங்களைப் பிடித்துக்கொள்கிறான்.]*

**முதல் ஆள் :** *(பயந்துவிடுகிறான்)* ஓ, உலகம் எல்லாம் தலை கீழாய்த் தெரிகிறது. மேலே இருந்தது, அடியில் போய்விட்டது, அடியில் இருந்தது மேலே போய்விட்டது.

**இரண்டாம் ஆள் :** நடுவில் என்ன இருக்கிறது?

**முதல் ஆள் :** *(கஷ்டத்தோடு)* வெறும் சூன்யம்!... வெறும் சூன்யம். விடு, விடு என்னை. விடு. *(பயந்து எழுந்து நிற்கிறான். மூச்சு இரைக்கிறது.)*

**முதல் ஆள் :** இவை எல்லாம் வீண் வேலைகள். இவற்றுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? எனக்கு எவ்வளவோ வேலை இருக்கிறது. உன்னைப்போல் நான் வேலையற்றவன் அல்ல. என் வாழ்க்கைக்கு இப்போதும் ஒரு லட்சியம் இருக்கிறது... இப்போதும் எனக்கு நிரம்ப நம்பிக்கை இருக்கிறது. ப்ளீஸ், ஒரு சிகரெட் கொடுங்கள்.

*[வாயில் பென்சிலை வைத்துக்கொள்கிறான். அதைச் சிகரெட் என்று எண்ணிப் பிடிக்கிறான். எழுந்து தொங்குகிறான்.]*

**இரண்டாம் ஆள் :** *(வெயிட்டரிடம்)* இன்று காபி ஹவுஸில் நாலு மடங்குக் கூட்டம் இருக்கிறதே, ஏன்?

**வெயிட்டர் :** சார், பாதிப்பேர் தினம் இங்கே உட்காருகிறவர்கள். மற்றவர்கள் புதியவர்கள். நாளையிலிருந்து இவர்களும் இங்கே உட்கார ஆரம்பிப்பார்கள். அதாவது சார்... இன்றைக்கு ஆபீஸ்கள், ஸ்கூல்கள், காலேஜ்களில் ஸ்டிரைக்.

**இரண்டாம் ஆள் :** இங்கேயே சேர்ந்து உட்காருவது என்று நாங்கள் நேற்று உறுதி செய்துகொண்டோம். அவள் வந்தால் எங்கே உட்காருவாள்? அவள் சாதாரணப் பெண் அல்ல என்பதை நீ அறிந்து கொள்ளவேண்டும்.

**வெயிட்டர் :** சார், அவர்கள் வெளியே வாசல் வரை வந்து அங்கேயே நின்றுவிட்டிருக்கலாம்.

**இரண்டாம் ஆள் :** அவள் யாரையும் லட்சியம் செய்பவளில்லை. அவளுக்கு யாரிடமும் அச்சம் இல்லை.

**வெயிட்டர் :** சார், அவர்கள் காபி ஹவுஸுக்கு உள்ளே வர முயற்சி செய்துகொண்டிருக்கலாம்.

**இரண்டாம் ஆள் :** யாரும் அவளைத் தடுக்க முடியாது!

**முதல் ஆள் :** *(கத்துகிறான்)* டோண்ட் டிஸ்டர்ப்! நான் எவ்வளவு வேலையாக இருக்கிறேன் என்று தெரியவில்லையா?

**வெயிட்டர் :** ஆனால் உள்ளே அந்தக் கனவான் சும்மா உட்கார்ந்திருக்கிறார்—நான் அவருக்காகப் பேசத்தான் வேண்டும். இந்த வேலை எனக்கு அவர் காரணமாகவே கிடைத்தது.

**இரண்டாம் ஆள் :** அவள் இவ்வழியாக வருவாள்.

**வெயிட்டர் :** இல்லை, இப்படி, ஹால் வழியாக.

**இரண்டாம் ஆள் :** ஏன்?

**வெயிட்டர் :** இங்கே அந்தக் கனவான் உட்கார்ந்திருக்கிறாரே!

**இரண்டாம் ஆள் :** எங்கே உட்கார்ந்திருக்கிறான்? யார் அவன்? என்ன அவன்? ஏன் இருக்கிறான்?

**வெயிட்டர் :** *(தடுக்கிறான்.)* சார், இல்லை, இல்லை, நீங்கள் அங்கே போக முடியாது!

**இரண்டாம் ஆள் :** *(ஆவேசமாய்)* அதிகமாய் என்ன வார்த்தை பேசினால் தூக்கி எறிந்துவிடுவேன்.

**வெயிட்டர் :** சார், அடி, குத்துக்காக அங்கே அவ்வளவு பெரிய ஹால் இருக்கிறது.

*[இரண்டாம் ஆள் இடது வாசலில் நின்று ஹால் பக்கம் பார்க்கிறான். ஹாலில் சண்டை நடக்கிறது. அடி குத்து. ஒரு பிளேட் பறந்து வந்து இரண்டாம் ஆளின் வயிற்றில் படுகிறது. அவன் அலறுகிறான்.]*

**இரண்டாம் ஆள் :** *(வலியால்)* ஐயோ, கொன்றுவிட்டான்! *(வெயிட்டரிடம்)* அதிகப் பிரசங்கி, நீ ஏன் இந்தக் கதவை அடைப்பதில்லை?

**வெயிட்டர் :** உங்களைப் போன்ற எல்லோருக்குந்தானே சார், இந்த காபி ஹவுஸ்!

**இரண்டாம் ஆள் :** அனாவசியமாய் எனக்கு இவ்வளவு காயம் பட்டிருக்கிறது!

*[அவன் கதவை மூட விரும்புகிறான். வெயிட்டர் அவனைத் தடுக்கிறான்.]*

**வெயிட்டர் :** நான் சொல்கிறேன், சார், இந்தக் கதவு இப்படியே திறந்துதான் இருக்கும்.

**இரண்டாம் ஆள் :** *(சினத்தோடு)* அதிகப் பிரசங்கி, உதவாக்கரை...

**முதல் ஆள் :** அஹஹ...! என்னுடைய அந்த மூன்றாவது விளம்பரம் பூர்த்தி ஆகிவிட்டது! *(படிக்கத் தொடங்குகிறான்)* வளர்ப்பு நாய்களின் படாடோபமான, அழகான கண்காட்சி. வாருங்கள்—வாருங்கள்—

பெரிதிலும் பெரிதான எண்ணிக்கையில் வாருங்கள். தங்கள் வளர்ப்பு நாய்களைக் கையில் பிடித்துக்கொண்டு வாருங்கள்...

**இரண்டாம் ஆள் :** இப்போது கருவு ஏற்படுமா, படாதா?

**முதல் ஆள் :** ராமலீலா மைதானத்தில் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு நாய்கள் வருமென்று நம்பப்படுகிறது.

**முதல் ஆள் :** (பெருமிதமாய்) மனிதனுக்கு அருகில் வந்த முதல் பிராணி, நாய். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் இந்த இரண்டு ஜீவன்களும் கூடி வாழ்ந்துவருகின்றன. இரு ஜீவன்களும் ஒன்றன்மீது ஒன்று செல்வாக்குப் பெற்றுள்ளன. நம்முடைய பண்பாட்டு வாழ்க்கையில் நாய்க்கு மிக அதிகமான பெருமை உண்டு. சந்திரலோகத்தில் இறங்கப்போவதும் முதல் ஜீவன் இந்த நாயாகவே இருக்கும். நாய் ஓர் அறமறிந்த பிராணி, இது குரைக்கவும் செய்கிறது, வாலாட்டவும் செய்கிறது.

**முதல் ஆள் :** (நாயைக் கூப்பிடுவது போல) போ, ஒரு கப் காபி கொண்டு வா!

**வெயிட்டர் :** மன்னியுங்கள், ஸார்; நான் நாயல்ல (போகிறான்.)

**இரண்டாம் ஆள் :** உங்களுக்கு இந்த விளம்பரத்துக்கு எவ்வளவு பணம் கிடைக்கிறது?

**முதல் ஆள் :** விளம்பரத்தின் பொருள் என்ன என்பதைப் பொறுத்தது இந்த விஷயம்

**இரண்டாம் ஆள் :** உதாரணமாக, இந்த நாய் விஷயத்தை...

**முதல் ஆள் :** இதற்கு எல்லாவற்றையும்விட அதிக பேமெண்ட். ஒரு வாரம் காபி ஹவுஸுக்கு வந்து போகிற செலவு முழுவதும் போல்...

[வெயிட்டர் வருகிறான்.]

[இரண்டாம் ஆள் வாயிலில் நின்று அந்தக் கனவானைப் பார்க்கிறான் ]

**வெயிட்டர் :** ஆம், ஸார், இங்கே நின்றுகொண்டு நீங்கள் அவரைச் சந்தேகமில்லாமல் உற்றுப் பாருங்கள்... பாருங்கள்... கூர்ந்து பாருங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்.

**இரண்டாம் ஆள் :** (வெறுப்போடு) சீ..... சீ... தொலைமையமென்று நின்றுகொண்டே நாலு பக்கமும் தன்னைச் சுற்றியுள்ளவர்களோடு அவன் பேசுவது 'லொக் லொக்' என்று ஒரு நாய் நின்றுகொண்டிருப்பது போல், 'விசுக் விசுக்' என்று தலைகால் இல்லாத பேச்சுப் பேசிக்கொண்டிருப்பது போல்!

**வெயிட்டர் :** ஸார், மெல்ல, மெல்ல. அந்தக் கனவான் இப்போது 'பிரஸ் கான்பரென்ஸில்' இருக்கிறார்.

**இரண்டாம் ஆள் :** இப்படி 'வசக் வசக்' என்று தின்றபடி 'பிரஸ் கான்ஃபரென்சா?'

**வெயிட்டர் :** ஆம், சார், 'பிரஸ் கான்ஃபரென்ஸ். ஃபுட் பிராப்ளம்' பற்றி.

**இரண்டாம் ஆள் :** அவன் இவ்வளவு ஆபாசமாய்த் தின்றுகொண்டே பேசுவதைப் பார்த்தபின், இனி இன்றுமுதல் எப்போதுமே தோசை சாப்பிட என்னால் முடியாது.

**வெயிட்டர் :** இன்க்லாப் ஜிந்தாபாத்!

**முதல் ஆள் :** (திடீரென்று எழுதுவதை நிறுத்தி) என்ன சொன்னாய், மறுபடியும் சொல்லு! என்ன சொன்னாய், மறுபடியும் சொல்லு!

**வெயிட்டர் :** ஆம், என்ன சொன்னேன்? என்ன சொன்னேனோ தெரியவில்லை... இப்போது நான் என்ன சொன்னேன்... ஆம், என்ன சொன்னேன்!

**இரண்டாம் ஆள் :** (வாயிலில்) இங்கிருந்து போய்விடு! ஓடிப்போ!

[பகைப்புலத்தில் ஜனங்களின் சிரிப்பு.]

**முதல் ஆள் :** (வெயிட்டரோடு யோசிப்பவன்போல்) நீ இப்போது தான் ஏதோ சொன்னாய். இரண்டு வார்த்தைகள். நல்ல வார்த்தைகள். நீ கையைத் தூக்கிச் சொன்னாய்... உன் உதடுகள் துடித்தன... உன் கண்கள் ஒளிர்ந்தன.

**வெயிட்டர் :** உண்மையில் நான் நேற்று ராத்திரி சினிமாவில் அதைப் பார்த்தேன் சார், அதே இரண்டு வார்த்தைகள் சொல்லி ஹீரோ ஹீரோயினோடு பாடத் தொடங்கினான்!

**முதல் ஆள் :** அது என்ன பாட்டு... சொல்லு? அப்புறம் அந்த வார்த்தைகள் எனக்கு ஞாபகம் வந்துவிடும்.

**வெயிட்டர் :** இப்படி எப்படியோ இருந்தது: டா லா... லா... மனமட லா...

**முதல் ஆள் :** (யோசனையில் ஆழ்ந்துவிட்டான்) பேலே... பேலே என்ன?

**வெயிட்டர் :** சார், எனக்கு வெட்கமாக இருக்கிறது.

**முதல் ஆள் :** (ஏதோ கனவு காண்கிறவன்போல்) ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்திரண்டின் அந்த நாட்கள்... நாங்கள் எங்கள் தலைவனோடு ஊர்வலமாய்ச் சென்றுகொண்டிருந்தோம்... அதே சொற்கள் முன்னால்... அதே சொற்கள் பின்னால்... அவையே முன்னும் பின்னும்.. வாயு மண்டலம் முழுவதும்... அதே சொற்கள். என்ன சொற்கள் அவை... உன் வாயிலிருந்து அதே சொற்கள் வெளிப்பட்டன, இப்போது... சொல்லு... ஞாபகப்படுத்திக்கொள். அந்தச் சொற்கள்

எனக்கு மிகவும் தேவை... நான் இப்போதே எழுதவேண்டும், அதில் அச் சொற்களை உபயோகிக்கவேண்டும்!

**இரண்டாம் ஆள் :** அவன் மேஜையின்மீது பல புத்தகங்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. அந்தப் புத்தகங்களில் ஒருகால் அச் சொற்கள் இருக்கலாம்!

**வெயிட்டர் :** இல்லை சார், அந்தப் புத்தகங்கள் சோதிடம், கைரேகை பற்றியவை.

**இரண்டாம் ஆள் :** (ஆவேசத்தில்) அவனுடைய மேஜையைத் தள்ளிவிடு தலைகீழாய்; ஒருவேளை அதற்கு அடியில் அந்தப் புத்தகம் கிடைக்கலாம்... அந்தச் சொற்கள் இருக்கிற புத்தகம்!

**முதல் ஆள் :** உங்களுக்குமா அச் சொல் மறந்துவிட்டது?

**இரண்டாம் ஆள் :** எனக்கு இதுவரை நினைவு இருந்தது... இங்கு வந்து நின்றேனே, அந்த சென்ற செகண்டு வரை : ஆனால் அவனைப் பார்த்ததும் நான் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன்... எல்லோருக்கும் நடுவில் தனியாக அப்படிச் சாப்பிடுவது — சாப்பிட்டுக்கொண்டே ஒவ்வொரு கணமும் அவன் பேசிக்கொண்டிருப்பது! (நிறுத்தி) ஒரு நிமிடம் என்னை அவனிடம் போகவிடு... நான் அவன் மேஜையைத் தலைகீழாய்ப் புரட்டிவிடுவேன்... அவனைத் தரையில் தள்ளி அவனுடைய நாற்காலியைப் பிடுங்கிக்கொள்வேன்.

**வெயிட்டர் :** சார், இது நடக்காது.

**முதல் ஆள் :** என்ன சொன்னாய்?... "இது நடக்காது?"

**வெயிட்டர் :** ஆம், சார், அந்தக் கனவானுக்கு அருகில் இந்தக் கனவான் போக முடியாது.

**இரண்டாம் ஆள் :** (கத்தல் போடுகிறான்) என்னுடைய பெயர் கனவான் அல்ல... நான் இந்தப் பெயர்ச் சொல்லை வெறுக்கிறேன்.

**வெயிட்டர் :** சரி, சரி, நான் இங்கு இருக்கும் வரை இந்த ஐயா அந்தக் கனவானுக்கு அருகில் போக முடியாது.

**இரண்டாம் ஆள் :** நான் உன் தலையைப் பிளந்துவிடுவேன்.

**வெயிட்டர் :** சார், வெரி சாரி!

**இரண்டாம் ஆள் :** நான் இங்கேயே சத்தம் இல்லாதபடி செய்து விடுவேன்.

**வெயிட்டர் :** சார், அந்தக் கனவான் இதைத்தான் விரும்புகிறார்.

**முதல் ஆள் :** அதனால்தான் அவன் நடுவில் உன்னை நிறுத்தியிருக் கிறான்... நடுவில் இதே துன்பம். ஜனங்கள் இங்கே கல் எறியலாம்... இதோ நாலு பக்கமும் சத்தம், ஜனங்கள் இதில் அடித்து உதைத்துக் கொண்டு தங்கள் கோபத்தைத் தீர்த்துக்கொள்ளலாம். ஜனங்கள்

தங்கள் சினத்தை எதிர் உணர்ச்சியில் 'ஆன்ட்டி'... 'ஆன்ட்டி'... 'ஆன்ட்டி'...

*[வெயிட்டர் திரும்பி இரண்டாம் ஆளின் இடத்தில் நிற்கிறான். இரண்டாம் ஆள், முதல் ஆளுக்குத் துணையாக நின்றுவிடுகிறான்.]*

**இரண்டாம் ஆள் :** இவன் அவனுடைய ஆள் தான் என்று படுகிறது.

**முதல் ஆள் :** அவன் காரணத்தால்தான் இவனுக்கு இங்கு வெயிட்டர் வேலை கிடைத்திருக்கிறது.

**இரண்டாம் ஆள் :** இவனை எப்படியாவது சரிக்கட்ட முடியாதா?

**முதல் ஆள் :** அப்போர்ப்பட்ட தேவை எனக்கு ஒருபோதும் ஏற்படவில்லை. ஆனால் அதைப்பற்றி நான் யோசித்ததே இல்லை.

**இரண்டாம் ஆள் :** இன்றோ நம் இருவருக்கும் தேவை இருக்கிறது. அந்தச் சொல்லை உங்கள் எழுத்தில் உபயோகிக்கவேண்டும், அந்தச் சொல்லைப்பற்றி நான் அவரோடு சில விஷயங்கள் பேச வேண்டும். அவன் இந்த இடத்தை அடையுமுன் எனக்கு அந்தச் சொல் ஞாபகம் இருக்கவேண்டும்

**முதல் ஆள் :** உங்களுடைய அந்த 'சேர்ன் கிராஸ்'-ன் பெயர் என்ன?

**இரண்டாம் ஆள் :** 'திஸ் ஈஸ் இர்ரிலவன்ட்'.

**முதல் ஆள் :** 'ரிலவன்ட்' என்ன?

**இரண்டாம் ஆள் :** அந்தச் சொல்! அவன் அந்தச் சொல்லின் எடுத்துக்காட்டு.

**முதல் ஆள் :** ஓ வொண்டர்ஃபுல்! அப்படியானால் அவர்கள் உட்காருவதற்குக் கட்டாயம் ஏற்பாடு ஆகவே வேண்டும்!

*[இதற்கு இடையில் வெயிட்டர் உள்ளே பிளேட்டில் மிஞ்சிய எச்சில் பொருள்களோடு வருகிறான்.]*

**முதல் ஆள் :** வெயிட்டர் எங்கிருந்தாவது ஒரு நாற்காலிக்கு ஏற்பாடு செய்துதான் ஆகவேண்டும்.

**வெயிட்டர் :** இம்பாசிபிள் சார், வெளியே கூட்டம் பெருகிக் கொண்டே போகிறது.

**முதல் ஆள் :** எங்கே போய்க்கொண்டிருக்கிறது?

**வெயிட்டர் :** கவர்னரின் கட்டளை; நாட்டில் தானியத் தட்டுப்பாடு, உணவுப் பொருள்களை எறியக்கூடாது என்று.

*[இடது பக்கமாய்ப் போய்விடுகிறான். அதே கணத்தில் இடது பக்கத்திலிருந்து சத்தம் எழுகிறது. வெயிட்டர் உடனே திரும்பி ஓடி வருகிறான்.]*

**வெயிட்டர் :** அப்பாடா, அப்பா! எவ்வளவு கூட்டம்!

**முதல் ஆள் :** இவ் வழியாக ஏன் போகக் கூடாது?

வெயிட்டர் : இப்போது இவ்வழியே போகத் தடை விதிக்கப் பட்டுள்ளதே?

இரண்டாம் ஆள் : ஏன்?

வெயிட்டர் : இப்போது இங்கிருந்துதான் இந்த எச்சிலைப் பிச்சைக் காரர்களிடம் எறிய வேண்டும். இந்த நாட்டில் பிச்சைக்காரர்களின் நிலைமையைப் பாருங்கள், சாப்பிடுவதானல் 'சாண்ட்விச்' எச்சிலைத் தான் சாப்பிடுவார்கள். (எறிகிருன்) எடுத்துக்கொள். அடே...டே ...டே! ஏன் சண்டை போடுகிருய்? அடே மச்சான்களே, உங்களுக்குள் சண்டை போடுவதால் என்ன ஆகும். இவற்றை எடுத்துக்கொள், 'ஹாட்டாக்'... எல்லாம் 'இம்போர்டெட்' மகனே!... அடே சண்டை வேண்டாம்... சச்சரவு வேண்டாம்... கனவான் இன்னும் உள்ளே உட்கார்ந்திருக்கிருர்... இன்று நிறைய சரக்குகள் வரும்... (எறிகிருன்) இவற்றை எடுத்துக்கொள், 'ஹாம்பர்கர்', இதுதான் இப்போது சுதேசி...!

முதல் ஆள் : (திடீரென்று) என்ன சொன்ஞய்! நீ இப்போது என்ன சொன்ஞய்?

வெயிட்டர் : பல்லால் பிடித்துக்கொண்டிருக்கிறேன்...... அந்த வார்த்தையைப்போல் இந்த வார்த்தையும் எங்காவது மறந்துவிடப் போகிறது... சுதேசி... சுதேசி... அதாவது இம்போர்டெட்...

முதல் ஆள் : அப்போது நாங்கள் விதேசிப் பொருள்களில் நெருப்பு வைத்தோம். (இரண்டாம் ஆளிடம்) நீங்கள் எழுதிக்கொண்டே செல்லுங்கள், நான் பேசிக்கொண்டு இருக்கிறேன்... நான் பேசிக் கொண்டே செல்வேன்... நிறுத்திஞல் எல்லாம் மறந்துவிடுவேன். சுதேசி... சுதேசி .. சுதேசம் மனம்... சுதேசம் உடல்... சுதேசம்... மேலே ஞாபகம் வரவில்லை... சுதேசம் என்ற பெயருள்ள ஒரு பெண்ணும் அப்போது இருந்தாள்.

வெயிட்டர் : சுதேச் பிரசாத் என்பது என் தகப்பஞர் பெயர்.

முதல் ஆள் : அப்போது பாரதவர்ஷமே சுதேசமாக இருந்தது.

[இரண்டாம் ஆள் எழுதிக்கொண்டே போகிருன். 'பாட்'டின் காகிதங்கள் நிரம்புகின்றன. அவன் அவற்றைக் கிழித்துக் கீழே எறிந்துகொண்டே போகிருன். முதல் ஆள் திரட்டிக்கொண்டு போகிருன், அடுக்குகிருன்.]

முதல் ஆள் : அந்த எங்கள் சுதேசத்தில் எப்பேர்ப்பட்ட தலைவர்கள் இருந்தார்கள்! சுதேசம் முழுவதும் ஒரு மாபெரும் விசைச்சக்தியில் கட்டுண்டிருந்தது... நாலு பக்கங்களிலும் ஓர் ஒளி சிதறிக்கொண் டிருந்தது... ஓ, நீங்கள் ஏன் எழுதவில்லை? எல்லாவற்றையும் கெடுத்து

விட்டீர்களே... இது ஒரு அயனை தலையங்கம்... இன்று மாலை இதை இருபது ரூபாய்க்கு விற்றுவிடுவேன்...

**இரண்டாம் ஆள் :** (எழுந்தபடி.) நீங்கள் இதைக் கேவலம் இருபது ரூபாய்க்கு விற்பீர்கள். இந்த நாடு?

**முதல் ஆள் :** ஜாக்கிரதை, நான் என் நாட்டுக் கௌரவத்திற்கு விரோதமாக எதையும் கேட்க விரும்பமாட்டேன்.

**இரண்டாம் ஆள் :** இந்த நாட்டின் விலை என்ன என்பதற்கு உண்மையான கணக்குப் போட்டாகிவிட்டது. பாதித் தொகையும் 'அட்வான்சாய்'க் கொடுத்தாகிவிட்டது.

**முதல் ஆள் :** உன் 'கேர்ள் ஃபிரண்டு' வரவில்லை இன்னும்; அதனால் உன் மூளை கலங்கிவிடவில்லையே!

**இரண்டாம் ஆள் :** அனைத்துலகச் சந்தையில் இதன் விலைபற்றி பேரம் ஆரம்பம் ஆகிவிட்டது. வாய்தா பேர ஷேர் மார்க்கெட்டில் கத்திச் சொல்கிறார்கள்.

[பகைப்புலத்தில் பல குரல்கள் : 'வந்த ராமன், போன ராமன்', 'வந்த ராமன், போன ராமன்']

**முதல் ஆள் :** (கூக்குரலிடுகிறான்) பேசாதீர்கள்... பேசாதீர்கள்.

[ஒரு குளுமையான மௌனம் நிலவுகிறது.]

**வெயிட்டர் :** சார், உள்ளே அவள் வந்துவிட்டாள்!

**இரண்டாம் ஆள் :** அவள் வந்துவிட்டாள்.

**வெயிட்டர் :** கேர்ள் ஃபிரண்ட்!

**இரண்டாம் ஆள் :** மினி...

[இரண்டாம் ஆள் ஓடுகிறான். வாசலில் நின்று பார்க்கிறான்.]

**இரண்டாம் ஆள் :** (கூப்பிடுகிறான்) மினி!

**வெயிட்டர் :** கொஞ்சம் மெதுவாய்க் கூப்பிடுங்கள். கனவான் அவளோடு ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்.

**இரண்டாம் ஆள் :** (கோபமாக) என்ன உளறுகிறாய்?... மினி, கேள் மினி, (நிறுத்தி) ஓ, அவளுக்காக ஒரு நாற்காலி ஏற்பாடு செய்தாக வேண்டும். (ஆவேசத்தோடு) நான் அவனை நாற்காலியிலிருந்து தள்ளி விட்டு என் சிநேகிதிக்காக நாற்காலி கொண்டுவரப் போகிறேன்.

[வெயிட்டர் ஓடி வந்து பிடித்துக்கொள்கிறான்.]

**வெயிட்டர் :** (காலைப் பிடித்துக்கொண்டு) இல்லை, இல்லை. சார், இப்படிச் செய்வது தப்பாகும். நாலாப் பக்கமும் உபத்திரவம் ஆகும்.

**இரண்டாம் ஆள் :** இனியும் என்னால் பொறுமையாக இருக்க முடியாது.

**முதல் ஆள் :** (ஓடி வழியை மறிக்கிறான்.) ஆம், இவன் நிசம்தான் சொல்கிறான். கனவானை விலக்காதீர். இல்லாவிட்டால் பெருங்குற்றம்

ஆகிவிடும். நாலாப் பக்கமும் 'கேயாஸ்' பரவிவிடும். இந்த ஒழுங்கு முழுவதும் குலைந்துவிடும். நாம் இங்கிருக்க முடியாமல் போகும்.

**இரண்டாம் ஆள் :** *யார் நீ?*

**முதல் ஆள் :** *நான்... நான்... நான்... நான்... ஓர் ஆள்.*

**இரண்டாம் ஆள் :** *நீ வேறேதோ!*

**முதல் ஆள் :** நான் உங்களைப் போலவே ஓர் ஆள், இந்த நாட்டுக் குடிமகன்...

**இரண்டாம் ஆள் :** இல்லை, நீ ஆங்கிலேயன். நீ சண்டை போட்டாயே, ஒரு வேளை, அதே ஆங்கிலேயன். நீ யாரோடு சண்டை போட்டாயோ, அவனாகவே நீ மாறுமாறு அந்த அற்புதச் சண்டை நிர்ப்பந்தப்படுத்தி விட்டது. அவன் மிகவும் வியப்பு உண்டாக்கும் பகைவன், ஆகையால் நீ அவனைப் பின்பற்றியே போராட வேண்டிய கட்டாயம் உண்டாயிற்று. உன்னுடைய போராட்ட நீதி முழுவதும் அதே பகைவனின் கையில் இருந்தது.

**முதல் ஆள் :** *நீ பார்த்தாயா?*

**இரண்டாம் ஆள் :** பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

**முதல் ஆள் :** *முடியாத காரியம்!*

**இரண்டாம் ஆள் :** நான் உன்னுடைய நிகழ்காலம்தான்... நீ என்னுடைய இறந்தகாலமாக இருப்பதுபோல். *(நிறுத்தி)* இங்குப் போராட்டம் எல்லாம் தனிமனிதனுடையது... முற்றிலும் தன்னுடைய தரத்துக்கு ஏற்ப. மிகவும் சிறிய விஷயத்துக்கு நாம் பெரிய வடிவம் தரப் பழக்கமானவர்கள். பெரிய விஷயத்தை நாம் பார்க்காமலிருக்கும்படி சபிக்கப்பட்டவர்கள்.

**வெயிட்டர் :** சார், அந்த நாற்காலிக்காகத்தானே நீங்கள் இவ்வளவு ஆத்திரப்படுகிறீர்கள். நாளையிலிருந்து நான் இங்கே இரண்டு நாற்காலி போட்டுவிடுகிறேன்.

**முதல் ஆள் :** இரு, இரு, நான் நினைவில் வைத்துக்கொள்ள விடு... எவ்வளவு முக்கியமான விஷயம் இது... *(ஓடி எழுதத் தொடங்குகிறான்.)* நாம் யாரோடு போராடுகிறோமோ, ஒருநாள் நாமே அவனாகி விடுகிறோம்... இன்னும் என்ன என்ன சொன்னாய்? *(திடீரென்று)* ஓ, எல்லாவற்றையும் நான் எவ்வளவு விரைவாக மறந்துவிடுகிறேன்... என் 'லிவர்' கெட்டிருப்பதாய்ப் படுகிறது.

**வெயிட்டர் :** இந்த வயதில் கோதுமை சாப்பிடக் கூடாது.

**முதல் ஆள் :** அந்த வார்த்தை என்ன? யோசித்துப்பார், நீ என்ன சொன்னாய்?

**வெயிட்டர் :** சார், அது ஃபிலிமில் இருக்கிறது... ஜெய் ஹிந்த் டாக்கீஸில் அந்த ஃபிலிம் ஓடுகிறது.

முதல் ஆள் : எனக்கு இப்போதே அது வேண்டும், இப்போதே என் கட்டுரையில் அதைப் போடவேண்டும், இவர் கேர்ள் ஃபிரண்டிடம் அதே விஷயம்பற்றி ஒரு வார்த்தை பேசவேண்டும்.

இரண்டாம் ஆள் : நீங்கள் போகவிடாமல் என்னை ஏன் தடுக்கிறீர்கள்? நான் அந்தக் கனவானை நாற்காலியிலிருந்து புரட்டிவிடுகிறேன், பிறகு அந்தச் சொல் தானாகவே வெடித்து வெளிவரும்!

முதல் ஆள் : (யோசிக்கிறான்.) நாற்காலியைப் புரட்டுவதால்தான் அந்த வார்த்தை வெடிக்கும்... ஆக, அடிப்படை அதே நாற்காலி. (எழுதத் தொடங்குகிறான்.) இந்தச் சுழல் முழுவதும் அதற்காகவே. (ஓடுகிறான்.) இல்லை, இல்லை, நீங்கள் அந்தக் கனவானுக்கு அருகில் போகமுடியாது. குறைந்தபட்சம், அந்த மனிதன் நேரானவன். எனக்குப் பல நாளாய் அவனைத் தெரியும். நீ அவனை நாற்காலியிலிருந்து கீழே தள்ளிவிட முயற்சி செய்தால், அதற்குப் பிறகு இங்கு ஏற்படும் அடிதடி, கொள்ளை, களவில் நீ நின்றபடி தப்பமுடியாது.

இரண்டாம் ஆள் : சுதந்திரப் போராட்டத்தின் அந்த நாட்களை நினைத்துப்பார்... இதே மாதிரித்தான் அவனும் சொன்னான், நாம் சூயஸ் கனலைக் கடப்பதற்குள்... (இருவரும் சிலைகளென மௌனமாகி விடுகிறார்கள், யாரோ அவர்களை ஊமைகள் ஆக்கிவிட்டாற்போல்)

வெயிட்டர் : (அச்சமுற்று) த ற் கு ள்... த ற் கு ள்... த ற் கு ள்... (திடீரென்று ஓடுகிறான்.) எஸ் சார். (வலது பக்கம் போகிறான். இருவரும் சினமாகச் சொல்லற்றுப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். முதல் ஆள் சத்யாக்ரகிச் சேஷ்டைகள் செய்கிறான். இரண்டாம் ஆள் சினம் நிறைந்த, வெறி உண்டாக்கும் முத்திரைகள் காட்டிக்கொண்டு இருக்கிறான். வெயிட்டர் சற்று நேரம்கழித்து வருகிறான்.)

வெயிட்டர் : சார்... ஓ... மிஸ்டர்! ஓ ஐயாமார்களே! .. கனவான் மிகவும் குழம்பி இருக்கிறார். நீங்கள் ஏன் இம்மாதிரி மௌனம் ஆகிவிட்டீர்கள்? உங்களுடைய பேச்சு, உங்களுடைய கோபம், உங்களுடைய நடவடிக்கை எல்லாம் அவருக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவருடைய பிரஸ் கான்ஃபரென்ஸ் முடிந்துவிட்டது. ஸ்டிரைக் செய்கிறவர்களின் ஒரு 'டெலிகேஷன்' அவரைக் காண வந்திருக்கிறது. அதுவும் கொஞ்ச நேரத்தில் போய்விடும். நீங்கள் பேசி உரையாடுங்கள். ஓ சார்... சார்... ஓ சார்!

[இருவரும் அதே மாதிரி சொல்லின்றி வெயிட்டரிடம் கேட்கிறார்கள், அவர்களுடைய வாயிலிருந்து சொற்கள் வெளிவரவில்லையா என்று.]

வெயிட்டர் : அடடே, உங்களுக்குப் பேசவரவில்லை. இல்லை ஐயா, எனக்கு ஒன்றும் கேட்கவில்லை. ஒன்றுமே கேட்கவில்லை.... ஒரு

சத்தமும் இல்லை... சரி, சரி,... கொஞ்சம் பலமாய்ச் சிரியுங்கள், ஒருகால் ஏதாவது கேட்கலாம்.

[இருவரும் சிரிக்கிறார்கள், ஆனால் அதே ஓசையின்மை.]

வெயிட்டர் : அட, கலகலவென்று சிரியுங்கள்... அட, கடகடவென்று சிரியுங்கள்.

[இருவரும் சிரிக்கிறார்கள்.]

வெயிட்டர் : (திகிலுற்று) இல்லை, ஒன்றுமில்லை, யாதொரு சத்தமும் இல்லை... என்ன சொன்னீர்கள்?... நான் செவிடு... இல்லை, ஐயா, நீங்கள் இருவரும் ஊமைகள் ஆகிவிட்டீர்கள். உங்கள் வாயிலிருந்து ஒரு சத்தமும் வெளிப்படாவிட்டால் நான் எதைக் கேட்பேன்?... பாருங்களேன், வலது பக்கத்திலிருந்து சத்தம் வருகிறது... நான் அதைக் கேட்க விரும்பாவிட்டாலும் அது எனக்குக் கேட்டுக்கொண்டு இருக்கிறது. (காதுகளைத் தீட்டிக்கொண்டு கேட்கிறான்.) கனவான் இப்போதுதான் உங்கள் ஃபிரண்டிடம் சொன்னார் : ஏதோ ஒரு பெரிய வேலைக்காக. (மறுபடியும் கேட்கிறான்.) அவள் தன் 'ஃப்யூசர் காரியரை'ப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறாள். (காதுகளைத் தீட்டி) அவனோடு 'இண்டர்பிரெடர்' ஆகி வெளிநாட்டுப் பிரயாணம் போவாளாம்.

[இரண்டாவது ஆள், தொடர்ந்து முயற்சி செய்து வந்தவன், இந்தக் கட்டம் வந்தவுடன் அலறிவிடுகிறான்.]

இரண்டாம் ஆள் : இல்லை, இல்லை, இல்லை!

[முதல் ஆள் சொல் இன்றிப் பேசிக்கொண்டு இருக்கிறான்.]

வெயிட்டர் : ஓ, நான் செவிடு இல்லை என்று இப்போது நம்பிக்கை வந்துவிட்டது. நீங்கள் ஊமைகள் ஆகியிருக்க முடியாது என்றும் எனக்கு நம்பிக்கை இருந்தது. (திடீரென்று காதுகளைத் தீட்டிக் கேட்கிறான்) ஓ, கனவான் சொல்கிறார், நாம் நாள்தோறும் நம் டயரியை எழுத வேண்டுமாம்... (மறுபடியும் கேட்கிறான்.) ஒவ்வொரு பக்கத்திலும் யாராவது ஒரு மகா புருஷனின் அறிவுரை அச்சிட்டதாய் அந்த டயரி இருக்கவேண்டுமாம்... (கேட்கிறான்.) தன் தனிப்பட்ட நம்பிக்கைக்காக லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்களின் உயிரைப்பற்றிச் சற்றும் சட்டை செய்யாதவனே மகா புருஷனும். (கேட்கிறான்.) பாவனையை முதலாய்க் கொண்டவனே மகான் ஆகிறானும்!

[முதல் ஆளும் இந்தக் கட்டம் வந்ததும் பேசத் தொடங்குகிறான்.]

முதல் ஆள் : இல்லை, இல்லை, இல்லை, அவனுக்கு ஒன்றும் தெரிய வில்லை. அவன் தன் உணர்வின்மையில் உறங்குகிறான். அநியாயத்தின், கொடுமையின் குடம் வாய் வரை நிரம்பிவிட்டது. மக்கள் இனிப்

பொறுக்கமாட்டார்கள். ஒவ்வொரு பொருளுக்கும் எல்லை உண்டு. இப்போது இரவு கழியப் போகிறது. புதிய சூரியன் முளைக்கப் போகிறது. நமக்கிடையிலிருந்து யாராவது ஒருவன் திடீரென்று எழுந்து நிற்பான்... மேலும்... மேலும்... மேலும்...

வெயிட்டர் : மேலும் .. மேலும்... மேலும்...!

[அதே ஓசையற்ற சிரிப்பு அவனும் சிரிக்கத் தொடங்குகிறான். அதே மாதிரி சொல்லின்றி அவனும் பேசுகிறான். பேச இயலாமை பற்றி அளவு கடந்த துயரம் அடைகிறான். ஜாடைகாட்டிக் கூறுகிறான், அவனுடைய வேலை போயே போய்விடும் என்று.]

முதல் ஆள் : அடே உனக்கு என்ன ஆகிவிட்டது?

இரண்டாம் ஆள் : சரி, இவன் இப்படியே ஊமையாக இருக்கட்டும்... இவனோடு பேசாதீர்கள்... உன் வேலை தொலைந்தால் நல்லது... நீ அவனுடைய ஆள் அல்லவா! இப்போது அவனிடமே போ... எங்களிடம் கை குவிக்காதே... எனக்கு உன்னிடம் பரிவு இல்லை!

[வெயிட்டர் முதல் ஆளின் காலில் விழுகிறான்.]

முதல் ஆள் : எனக்கும் உன்னிடம் யாதொரு பரிவும் இல்லை. (திடீரென்று நிறுத்தி) ஒருகால் எங்கள் இருவருக்கு இடையிலும்கூட யாதொரு பரிவும் இல்லை. அந்த இருவருக்கு இடையிலும் இல்லை... இவன் (வெயிட்டர்) மகா புருஷன்... இப்போதுதான் இவனுக்குள் ஏதோ ஒளி பிறந்திருக்கிறது. இவன் தன் ஊமை வாக்கில் ஏதோ சொல்லிக்கொண்டிருக்கிறான்... அவன் எங்களுக்குள் ஒருவருக்கு மற்றொருவர் மீதுள்ள பரிவைப் பிடுங்கி எங்களுக்குத் தனியாகப் பகிர்ந்து கொடுத்துவிட்டான்.

இரண்டாம் ஆள் : (வெறியோடு) இதெல்லாம் ஃப்ராட், நான் அவனைத் தீர்த்துக்கட்டிவிட்டுத்தான் ஓய்வேன்.

[இந்தக் கட்டத்தில் வெயிட்டர் கடகடவென்று சிரித்திடுகிறான்.]

வெயிட்டர் : (அதே சிரிப்பில்) நீங்கள் இருவரும்... (முதல் ஆளிடம்) உங்களுக்கு ஒரு மகா புருஷன் வேண்டும், (இரண்டாம் ஆளிடம்) உங்களுக்கு ஒரு கேர்ள் ஃபிரண்ட் வேண்டும்... எனக்கு அதே கனவான்... ஜிந்தாபாத்!

[உள்ளே ஓடுகிறான்.]

முதல் ஆள் : ஜிந்தாபாத்... இதற்கு முந்தின சொல் என்ன?

[விரைவாக ஓடுகிறான், யோசிக்கத் தொடங்குகிறான். இரண்டாம் ஆள் அவனை மிகவும் கவனமாய்ப் பார்க்கிறான். அப்போதே வெயிட்டர் வருகிறான். அவன் கையில் சில சாமான்கள் இருக்கின்றன.]

வெயிட்டர் : பாருங்கள்... கேளுங்கள்... கனவான் உங்கள் இருவருக்காகவும் இந்தப் பரிசை அனுப்பி இருக்கிறார். நீங்கள் பெரியவர், மகான்களை நம்புகிறவர். ஆகையால் உங்களுக்குப் பரிசு இது, ஒரு மகா புருஷனின் சுய சரித்திரம். (முதல் ஆளுக்குப் பரிசு தருகிறான்.) நீங்கள் மிகுந்த உற்சாகி. உங்களுடைய கலக குணம் கனவானைப் பெரிதும் கவர்ந்தது (டப்பாவைத் திறக்கிறான்) உங்களுக்கு அவர் இந்த 'மினி ரூட்' அனுப்பி இருக்கிறார்.

இரண்டாம் ஆள் : மினி ரூட்டா! இதென்ன அதிகப்பிரசங்கித்தனம்!

வெயிட்டர் : உங்களுடைய கேர்ள் ஃப்ரெண்டுக்குக் கனவான் ஒரு மினி சாரி பிரசன்ட் செய்திருக்கிறார்.

இரண்டாம் ஆள் : (எறிகிறான்) எடுத்துக்கொண்டு போய் அவன் தலையிலே எறி!

வெயிட்டர் : நீங்கள் ஒரு நிமிஷத்தில் இந்த ரூட்டை அணிந்து கொண்டு தயாராகிவிட்டால் நீங்கள் உள்ளே போகலாம் என்று கனவான் சொன்னார்.

[இரண்டாம் ஆள் வெறுப்போடு அந்த மினி ரூட்டை அணிய முயலுகிறான்.]

வெயிட்டர் : (முதல் ஆளிடம்) நீங்கள் இந்தப் புத்தகத்தில் அந்தச் சொல்லைத் தேடுங்கள். ஒரு நிமிஷத்தில் தேடிப் பிடித்துவிட்டால் உள்ளே போகலாம்.

[ஒருவன் அணிந்துகொண்டிருக்கிறான். மற்றவன் புத்தகத்தில் ஏதோ தேடிக்கொண்டிருக்கிறான்.]

வெயிட்டர் : விரைவில் முடியுங்கள், அந்த ஒரு நிமிஷம் முடிந்துவிடும்.

இரண்டாம் ஆள் : என்னால் இதை அணிய முடியவில்லை.

முதல் ஆள் : இந்தப் புத்தகத்தில் எனக்கு ஒன்றும் தென்படவில்லை.

வெயிட்டர் : விரைவில் முடியுங்கள்.

இரண்டாம் ஆள் : இதை அணிய முடியாது.

முதல் ஆள் : இதன் பக்கங்கள் வெறுமையானவை.

வெயிட்டர் : விரைவில் முடியுங்கள், அந்த ஒரு நிமிஷம் முடியப் போகிறது.

முதல் ஆள் : எனக்கு ஒன்றும் தென்படவில்லை... நான் என்ன தேடுவேன்?

வெயிட்டர் : தேடுங்கள்... தேடுங்கள்... நீங்கள் அணிவதற்கு முயற்சி செய்யுங்கள்.

முதல் ஆள் : இங்கு எல்லாம் தன் தரத்திலேயே இருக்கிறது... மேல்—அடி,... அடி, மேல்... யார் யாரை எதிர்க்கிருனே, அவன் அவனே ஆக விரும்புகிருன்.

வெயிட்டர் : சீக்கிரம்... சீக்கிரம்... நேரம் முடிந்துகொண்டு இருக்கிறது.

[வெயிட்டர் இதையே சொல்லிக்கொண்டு இருக்கிருன். முதல் ஆள் தான் சொன்னதையே சொல்லிக்கொண்டு இருக்கிருன். ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு மூவரும் சிலைகளென இருந்துவிடுகின்றனர்.]

[திரை விழுகிறது.]

# சிருஷ்டியின் இறுதி மனிதன்

—தர்மவீர் பாரதி

## பாத்திரங்கள்

அறிவிப்பாளர்

கூட்டத்தில் ஒருவன்

ஆட்சியாளர்

விஞ்ஞானி

கூட்டம்

படை

[நிகழ்ச்சிக் காலம் : நிச்சயிக்கப்படாத எதிர்காலம்]

[ஏதோ சிறப்பான அரச கட்டளையின்போது நிகழும் தாரை, சங்கம், நகரா ஆகியவற்றின் முழக்கம். பகைப்புலத்தில் ஒருவன் கனத்த குரலில், 'கேளுங்கள்ள்ள் ஓ... கேளுங்கள்ள்ள்' என்று மட்டும் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறான்.]

**அறிவிப்பாளர் :** ஓ மனிதர்களே!
ஓ மனுராஜாவின் மக்களே!
கேளுங்கள் ஓ கேளுங்கள்!
பேசிக்கொண்டிருக்கிறேன் நான்
எதிர்காலத்தின் ஒரு நகரத்தின் நாற்சந்தியில்
பேசிக்கொண்டிருக்கிறேன்!
இது எதிர்காலத்து இருளில் கரைந்துள்ள
நாகரிகத்தின் சிறு நகரம்,
இச்சிறுநகரின் வாயில்வரை அடிச்சுவடுகள் அடையுமுன்
வரலாறுகள் எத்தனையோ முடிவிடங்களைக் கடந்துவிட்டன,
பண்பாடு எத்தனையோ முறை புரண்டு படுத்துவிட்டது.
அதனுடைய வரைபடம் பாலைகளின் மணல்மேல்
வெங்குருதியால் எழுதப்பட்டிருந்தது;
அதனுடைய அடிக்கல் நாட்டு விழாவில் எத்தனையோ
நிர்வாணமான, பட்டினியான, செத்த குழந்தைகள்
[புதையுண்டன—
அப்போது இச்சிறுநகரம் நிறுவப்பட்டது.
நான் எதிர்காலத்தின் அதே நகரத்து நாற்சந்தியிலிருந்து
பேசிக்கொண்டிருக்கிறேன்!

[நாற்சந்தியில் ஏராளமான மக்களின் சத்தம். அச்சம் கொண்ட குரல்கள், அடங்கிய கிசுகிசுப்பு, அது சில சமயம் எரிச்சலுருக் கொள்கிறது. சில சமயம் ஒருவன் அலறுகிறான்; சிறு சிறு குழந்தைகளின் ஓலம்; பிச்சைக்காரர்களின் குரல்கள்; ஒருவரை ஒருவர் ஏசுகிறார்கள்; அது கடைசியில் கிசுகிசுப்பில் ஒடுங்கி விடுகிறது.]

ஏச்சும் பேச்சும், அடிபிடிச் சண்டையும், அலறிக்
[கதறுதலும்—
உங்களுக்குக் கேட்கும் இச்சத்தம் யாவும்—

உண்மை இதுதான், நகர வீதிகளில், சந்து பொந்துகளில்,
பெருங்கூட்டம் குமுறிக் குவிகிறது,
நகரத்தில் எள் விழுவதற்கும் இடமில்லை;
சத்தம் மிக வளர்ந்துகொண்டே போகிறது!
இம்மக்கள் யாவரும் கூடுகிறுர்கள் ஏனோ
நாற்சந்தியில்;
எல்லாப் பக்கங்களிலிருந்தும் குமுறிவரும் கூட்டம்
ஆயிரமாயிரம் கிழவர்களும் கிழவிகளும்
[ஆண்களும் பெண்களும்
வேகவேகமாக அடி வைத்து நடந்து வருகிறுர்கள்.
ஆனல் இவர்கள் சற்று விந்தையான மக்கள்,
இவர்களுடைய கைகால்கள் சிறியன,
நெற்றி இடுங்கியுள்ளது உள்ளே,
வயிறு வளர்ந்துள்ளது முன்னல் துருத்திக்கொண்டு,
மாமிசத் துணுக்குகள் போல இரு ஆபாசமான கண்
[இமைகள் ஊசலாடுகின்றன.
இவர்களுடைய நடையில் தளுக்கு இல்லை.
அழுக்குத் தவளைகளெனச் சேற்றில்
களக்-களக்கென நடக்கிறுர்கள் இவர்கள்!
கூட்டம் கூட்டமாய் இவர்கள் வருகிறுர்கள்
வெறுக்கத்தக்க பிளேக் எலிகள் போலே
நடந்துவருகிறுர்கள் சந்துகளில்.

[கண்ணுடி விரிப்பின்மீது நூற்றுக்கணக்கான எலிகளின் காலடிச் சத்தம்.]

இன்று கூட்டம் பெருகுவது ஏனே!
இவர்களின் பேச்சுகளிலிருந்து ஒன்றும் புரியவில்லை
இவர்களின் பேச்சே மாறியுள்ளது!
நூற்றுண்டுகளுக்கு முன் இம் மனிதர்கள்
கெட்டிக் கறுப்பு ரத்தம் குடித்தார்கள்
அழுகல் பிணங்களைத் தின்றுர்கள்
அப்போது முதல் இவர்களின் குரல்களே மாறிவிட்டன
என்கிறுர்கள்.

[சற்று மூச்சுத்திணறும் விசும்பல்களைப் போன்று ஒலிக்கும் கூட்டத்தின் சத்தம். தூங்கி வழியும் குரலில், மந்திர பரவசமான சிவஞர், 'ஏதோ ரகசியமயமான, ஆபாசமான அமங்கலம் நிகழப் போகிறது;' என்று உரைத்துக்கொண்டிருப்பது போல. இதே வாக்கியம் உதட்டிலிருந்து உதடு வரை ஒலியும் எதிரொலியும்

போல வட்ட வடிவ அலைகளாய்ப் பரவிக்கொண்டே போவதாய்த் தோன்றுகிறது.]

ஆயினும் கேட்பதிலிருந்து
தெரிய வருவது இது :
இன்று நகரத்தில் ஏதோ ரகசிய மயமான, ஆபாசமான
அமங்கலம் நிகழப் போகிறது
சென்ற இரவு விண்மீன்களிலிருந்து நடு நடுவில்
ஏதோ சில சத்தங்கள் வந்தன—
உயிரோடு யாரோ ஒருவன்
எரி ஜுவாலையில் வறுக்கப்படுவது போல !
இரவிலிருந்து காற்று வீச்சில்
ஏதோ வறுபட்ட மாமிசத்தின் நாற்றம் இருப்பது போலத்
[தோன்றுகிறது!
இரவு முழுவதையும் கழித்தார்கள் மக்கள்
துயரில் தோய்ந்து, துன்புற்ற மனத்தோடு!
விடிந்ததும் கண்டார்கள் மேற்கே மலைமேலே
ஒரு நெருப்பின் எரியும் முகில் மாட்டப்பட்டிருப்பதை !
பொசுங்கிவிட்டன காடும் கணவாயும்
பாறைகளும் வெடித்துச் சிதறின!
ஆங்காங்கு நாகரிகத்தில் பிளவுபட்டது!
கிலியுற்ற மக்கள் வீடுகளிலிருந்து ஓடுகிறார்கள்!
நாற்சந்தியில் கூட்டமாய்க் கூடுகிறார்கள்!
இது மகா சிருஷ்டியின் இறுதி நாள் என்கிறார்கள்.
நிலமெல்லாம் தற்கொலை செய்துகொள்ளும் என்கிறார்கள்!
மக்கள் பெரும் திகில் கொண்டுள்ளார்கள்,
ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.
கூட்டம் திரளுகிறது கட்டுப்பாடின்றி!

[திடீரென்று கூட்டத்தின் கூச்சலைக் கிழித்துக்கொண்டு ராணுவ பாண்டு ஒலிக்கிறது, கூச்சலை மிதித்துக்கொண்டு படைவீரர்கள் குதிரைகள்மீது வரும் சத்தம் வருகிறது.]

இதோ, வந்துவிட்டது ஆயத்த நிலையில் ராணுவம்.
ஆங்காங்குத் துப்பாக்கியைக் கையில் ஏந்திய படைவீரர்
நின்று கொண்டனர்!
மக்கள் அஞ்சி அமைதியுற்றனர்!
ஆனால் இதென்ன?

['பேசாதே', 'அவனைப் பேசவிடு?', 'என்ன செய்கிறாய்?', 'இறுதி மூச்சுவரை நான் சொல்வேன்'—முதலிய குரல்கள் வருகின்றன, தமக்குள் பின்னிக்கொள்கின்றன, சந்தடியில் மாறுபடுகின்றன.]

அதோ அங்குத் தொலைவில் பரவுகிறது ஏதோ கெடுபிடி.
பல படைவீரர்கள் ஒருவனைப் பிடித்துக்கொண்டிருக்
[கின்றனர்,
அவன் அவர்களுடைய பிடியில்
துடிதுடித்தவாறு ஏதோ சொல்கிறான்.
இரண்டு வீரர்கள் அவன் தோள்களைப் பிடித்திருக்கின்றனர்,
ஒருவன் கையால் மூடுகிறான் அவன் வாயை.
ஆனாலும் அவன் வாய் மௌனமுறவில்லை
பாருங்கள், இப்போது கேட்கிறது—

ஒரு மனிதனின் குரல் :

கேளுங்கள் சகோதரர்களே!
நாமும் எலிகள், நீங்களும் எலிகள்,
படைவீரர்களும் எலிகளே!
கையில் துப்பாக்கி இவர்களிடம் இருந்தாலும்
இந்தத் துப்பாக்கிக்கார எலிகளும் விளையாட்டுப்
[பொம்மைகள்—
வண்ணவண்ண உடை அணிந்தவை
முடியாது எரிமுகிலை வெல்ல இவர்களால்.

[படைவீரர்கள் பயிற்சி செய்யும் சத்தம், பிகில் ஒலி, மேக முழக்கம்.]

நன்றாய் அடித்துக் கொல்லட்டும் நம்மை இவர்கள், ஆனால்
இவர்களும் பழுப்பு இலைகளைப் போலவே உதிர்ந்துவிடுவர்
இன்று சிருஷ்டியின் இறுதி நாள்
இன்று ஒடுங்கி வானம் நம்மேல் இடிந்து வீழும்
இரவு முழுவதும் நட்சத்திரங்களில் மயானத் தீ
[மூண்டுள்ளது
உங்களுக்கு விடுக்கிறேன் எச்சரிக்கை
நான் இரவில் நிலவில் கண்டேன் செங்குருதிப் புள்ளிகள்!
இன்று நிலவுடன் ரத்தம் பொழியும்,
எமனின் மலைப்பாம்புகள் வாயைப் பிளக்கும், மூச்சுவிடும்;
எலிகள்! நாம் எலிகள்! செத்திடுவோம்!

[கூட்டம் துயரக்குரலில் திரும்பத் திரும்ப கூறுகிறது. 'நாம் எலிகள், செத்திடுவோம்!' முதலில் அவநம்பிக்கையும் துயரமும் துன்பமும் நிறைந்த குரலில் சிலர் பாடுகிறார்கள், பிறகு மற்றவர்களும் சேர்ந்து பாடுகிறார்கள். முதலில் அவநம்பிக்கை, துன்பம், சாவினால் வெல்லப்படும் துயரத்தின் குரல்; பிறகு துன்பம் உறுதியாக மாறுகிறது, எலியாக இருப்பதும் இறப்பதுமே அவர்களுடைய பாக்கியமும் வாழ்க்கைத் தத்துவமும் போல். ஆனாலும் குரலில் ஒரு திகில் தத்தளிக்கிறது. திடீரென்று கூட்டத்தின்

சந்தடியைப் பிளந்துகொண்டு அதே மனிதனின் குரல் வருகிறது. கையாலாகாத, பேடிச் சினத்தின் குரல்: 'நாம் எலிகள், செத்திடுவோம்!'

[குண்டுகள் வெடிக்கும் சத்தம், பிறகு அமைதி, மயான அமைதி.]

அறிவிப்பாளர் :

முடிந்துவிட்டது!
அவனைப் படைவீரரின் குண்டு பொசுக்கிவிட்டது!
கரிய கரிய வீதிகள் ரத்தத்தால் சிவந்து போயின
அவனுடைய பிணம் இன்னமும் அங்கே கிடக்கிறது!
கூட்டம் முழு மௌனமாய் நிற்கிறது.
பல பீதியுண்ட குழந்தைகள் மெல்லத் தேம்புகின்றன.
கூட்டம் முழு மௌனமாய் நிற்கிறது!
மேற்கு மலைமீது பரவியுள்ள
நெருப்பின் எரிமுகிலில்
சில கறுப்பு-கறுப்பு அலைகள் ஓடுகின்றன.
தூரக் கணவாய்களில்
கபோதியான நச்சு நிறைந்த காற்றுகள்
சொய்ங்ங்... சொய்ங்ங்ங்... என்று வீசுகின்றன
கூட்டம் முழு மௌனமாய் நிற்கிறது.

[படை வீரர்களின் மார்ச், பாண்டில் அரச கீதம் ஒலிக்கத் தொடங்குகிறது.]

[கூட்டம் மறுபடியும் பாடத் தொடங்குகிறது: 'அவன் எலி, செத்திட்டான்; நாம் எலிகள், செத்திடுவோம்!']

படைவீரர் பாதைகளை அடைக்கின்றனர்
கூட்டம் வழி விடுகிறது
இப்போது ஆட்சியாளனே வரப்போகிறான் என்கிறார்கள்!

[கூட்டத்தின் குரல் வலுத்துவிடுகிறது. 'நாம் எலிகள், செத்திடுவோம்; நாம் எலிகள், செத்திடுவோம்; ஏன் எலிகளாக இருக்கிறோம்? ஏன் எலிகளாக இருக்கிறோம்?']

[தாரையும், நகராவும் முழங்குகின்றன.]

இதோ நகரின் ஆட்சியாளனே ஓடிவந்திருக்கிறான்.
நாற்சந்தியின் நட்ட நடுவில் நின்று
ஏதோ சொல்லிக்கொண்டிருக்கிறான்!
படைவீரர் துப்பாக்கிச் சனியன்களால் வளைத்துக்
[கொள்கின்றனர்
கூட்டம் மேலும் கட்டுக்கு அடங்காததாகிறது
இது ஆட்சியாளனின் உரத்த குரல்—

**ஆட்சியாளன் :**

வெட்குங்கள்! வெட்குங்கள்!
என் நகரத்தில் வாழ்கிறவர்களே!
ஏனோ இத்தனை பீதி?
நட்சத்திரங்களில் மயானம் எரிந்தது இரவு பூராவும் [என்பதால்.
அல்லது மேற்கு மலைமீது
இந்த எரிமுகில் மாட்டப்பட்டுள்ளது என்பதால்!
ஏ அதிர்ஷ்டம் கெட்டவர்களே. நீங்கள் மறந்துவிட்டீர்கள்,
நான் என் ஆட்சிக்காலத்தில்
தங்கத்தால் பூசினேன் சுவர்களை
நிலத்தின்மேல் எஃகு விரிப்புப் போடப்பட்டுள்ளது
ஆறுகளின்மேல் மைல் கணக்கில் அணைகள் [கட்டப்பட்டுள்ளன
பின் ஏன் இந்த மக்களாட்சியில்
வோட் இல்லாமல் பூக்களும் பூக்காதபோது,
என்ன தீரம்,
வோட் இல்லாமல் இங்குப் பிரளயம் எட்டிப் பார்க்க [முடியுமானால்!
ஆனால் நான் இந்த மேகத்தை
இப்போதே குண்டு மாரியால் அணைத்திட ஆணை [இடுகிறேன்!
படைத்தலைவரே!...

[கூட்டத்தில் சந்தடி... பயரிங். ஒன்றுக்குப் பிறகு பல ரவுண்டுகள்.]

**அறிவிப்பாளர் :**

படைவீரர் வானத்தின் மேல் சுடுகிறார்கள்.
ஆனால் மகாகாலனின் விடாய் கொண்ட நாக்குப் போன்ற
மேகம் மெள்ள மெள்ள வளர்ந்து கொண்டே போகிறது.

[மேக முழக்கம்]

யாரோ தூர மலையிலிருந்து மெல்ல மெல்ல இறங்கி [வருகிறான்.
நீண்டதாடி, தளர்ந்த சட்டை, கூரிய கண்கள்.
அவன் விஞ்ஞானி, மந்திரவாதி, தீர்க்கதரிசி என்கிறார்கள்.
அவன் ஏழு தலைமுறைகளைக் கண்டவன், தன் கிழட்டு [விழிகளால்,
கூட்டம் வழிவிடுகிறது அவனுக்கு,

அரசன்கூட அவனிடமுள்ள மரியாதையால் எழுந்து
[நின்முன்.

[இரண்டு விநாடிகள் வரை நிசப்தம்]

மெள்ள மெள்ள முன்னேறி
அவன் அப்பிணத்தை நெருங்கிவிட்டான்—
நடுத்தெருவில் கிடந்த பிணத்தை.

[இரண்டு விநாடிகள் வரை நிசப்தம்]

குனிந்திருக்கிமுன் அவன் அப்பிணத்தின் மேல்!

[கொடிய அட்டகாசம்]

அதைப் பார்த்து நகைக்கிமுன் அவன்.
எப்படி இருக்கிறது ரத்தவெறி நிறைந்த இச் சிரிப்பு!
எப்படி இருக்கிறது ரத்த வெறி நிறைந்த இச் சிரிப்பு!
ஆட்சியாளன் முகத்தில் பரவிவிட்டது கருமை
அஞ்சி... இதோ என்ன சொன்ஞன் அவன்...

**ஆட்சியாளர் :**

நிறுத்திவிடு இச்சிரிப்பை
நிறுத்திவிடு இச்...
நிறுத்தி விடு...
நிறுத்தி...

**விஞ்ஞானி :** (சிரித்தவாறு)

கடைசியில் இன்று பிரளயத்தின் முதல் எழுத்தை
நீ எழுதியேவிட்டாய்!
நான் என் இக்கண்களால்
ஏழு தலைமுறைகள் ஆவதையும் அழிவதையும் பார்த்தேன்,
கேள்விப்பட்டேன்.
என்று மேற்கு மலையேலே எரிமுகில் பரவுகிறதோ,
தெருவில் ஒரு பிரேதம் புரளுகிறதோ
அன்றே இந்நகரத்தின் இறுதிக்கணம் வருமென்று.
ஏ இந்த இறுதிக்கணம் வரை உயிரோடு இருப்பவர்களே!
இன்று உங்களோடு முடிந்துவிடும் இது—
ஒரு சிருஷ்டியின், ஒரு நாகரிகத்தின் ஆபாச வெட்கம்
[கெட்ட கதை!

இந்தத் தங்கமாளிகைகளில் வசிக்கும்
எலிகளின் பண்பாடு
இன்று அழிபடப் போகிறது.

**ஆட்சியாளன் :** நிறுத்து இந்த ராஜத்துரோகத்தை!

**விஞ்ஞானி :** இது துரோகம் அல்ல!
நீயே உன்மேல் இச்சாவை வரவேற்றுக் கொண்டாய்
பார், இப்போதே புரண்டு விழும் நிர்வாணமான,
[வார்சில்லாத பிணம்,
மலைகளை முத்தமிடும்
இந்த மேகம், இந்த மலைகள், இந்தக் கொடிய பாறைகள்
இதனுடைய ஆட்சியை ஏற்கும்.
இந்தப் பிணம்,
மகா பிரளயத்தின் முதல் வெள்ளைச் சின்னம்!

**ஆட்சியாளன் :** படைத் தலைவரே...

**விஞ்ஞானி :** சொல்லவிடு என்னை

**ஆட்சியாளன் :** படைத் தலைவரே! துப்பாகிகள்...

**விஞ்ஞானி :** இத் துப்பாக்கிகளால் நீ எதுவரை
உன் விதியைத் தள்ளிவைப்பாய்?
இத் துப்பாக்கிகள் நான் கண்டவை, அவற்றால்
என் குரலையே இன்று ஒடுக்குகிறாய் நீ!

**ஆட்சியாளன் :** படைத் தலைவரே!
இந்தப் பைத்தியத்துக்கு ஏதாவது மருந்து வேண்டும்.

[ஃபயரிங்]

**விஞ்ஞானி :** ஆ அஅ!

[கூட்டத்தின் சத்தம். காயமுற்ற விஞ்ஞானியின் முனகல். கூட்டத்தின் கிசுகிசுப்புக் குரல்.]
நாம் எலிகள், செத்திடுவோம்.
இந்த மந்திரவாதி எலிகளைச் சேர்ந்தோன்,
இந்த அரசனும் எலிகளைச் சேர்ந்தோன்,
இந்தப் பிணமும் எலிகளைச் சேர்ந்ததே
நாம் எலிகள் செத்திடுவோம்.

**விஞ்ஞானி :**
வேண்டுமானால் என் கழுத்தை நெறித்துவிடு,
ஆனால் எப்படித் தடுக்க முடியும் உன்னால்
அந்த எதிர்காலத்தின் முன்னேறிய அடிச்சுவடுகளை?
இந்த மேகம் பொழியத்தான் செய்யும்
பிணங்கள் தங்கள் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும்.

[மீண்டும் ஃபயரிங்]

**பாதிக் கூட்டம் :** பிணங்கள் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும்.

**பாதிக் கூட்டம் :** நாம் எலிகள், செத்திடுவோம்!

[மெள்ள மெள்ள இரு குரல்களும் தமக்குள் கோத்துக்கொள்கின்றன. மேக முழக்கம்—இடிவிழுகின்ற அதிர்ச்சி.]

**அறிவிப்பாளர் :**

விஞ்ஞானியின் பிணத்தைத் தூக்கிக்கொண்டு
பித்துக்கொண்ட மக்கள் ஓடுகின்றனர்.
முழங்குகிறது அந்தத் தீ ஜ்வாலையின் ரத்த மேகம்
மெய்யாக, மெய்யாகப் புரளுகிறது பிணம்
இதென்ன, அது எழுந்து நின்றுவிட்டது
அதன் இமைகள் அசைகின்றன,
அதன் கறுத்த, உலர்ந்த உதடுகளும் மெல்ல அசைகின்றன—
இதென்ன, அது பேசுகிறதே!

**பிணம் :**

ஓடாதீர்கள்! ஓடாதீர்கள்!
நீங்கள் எந்நேரம் ஓடுவீர்கள்?
நீங்களே சாவை அழைத்தீர்கள், ஏற்றுக்கொள்ளுங்கள்
நீங்கள் அந் நகரத்தின் வாசிகள்
அஸ்திவாரங்களில் சின்னஞ்சிறு குழந்தைகளின்
[மண்டையோடுகளுள்ள நகரத்தின் வாசிகள்.
நீங்கள் அந் நகரத்தின் வாசிகள்
பசிகொண்ட நரிகள் நாரிகளின் பிணங்களோடு உறங்கும்
[நகரத்தின் வாசிகள்.
நீங்கள் அந் நகரத்தின் வாசிகள்
கனவுகள் கொலைகளாலும் கை விலங்குகளாலும் எடை
[போடப்படும் நகரத்தின் வாசிகள்.
நீங்கள் அந் நகரத்து வாசிகள்
நீங்கள் அந் நகரத்து
அந் நகரத்து
அந் நகரந்து
வாசிகள்
ஓடாதீர்கள், ஓடாதீர்கள்!
நீங்கள் எந்நேரம் ஓடுவீர்கள்?
இந்தச் சாவு உங்கள் கட்டடங்களைக்
கல்-கல்லாய் உடைத்துத் தள்ளும்
இந்தச் சாவு பூமியினின்று பொங்கிவரும்
இந்தச் சாவு விண்ணினின்று இடித்துவரும்.
இந்தச் சாவு நீங்கள் அழைக்க வந்தது
ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஓடாதீர்கள், ஓடாதீர்கள்!
நீங்கள் எத்தனைதான் ஓடுவீர்கள்?

**ஆட்சியாளன் :** (அச்சமுற்ற குரலில்) படைத் தலைவரே...

[படைகள் அலர்ட் ஆவதன் சத்தம்! ஃபயரிங்]

**பிணம் :**

இத் துப்பாக்கிகள், இப் படைகள்
ஏதும் செய்யா என்னை
நான் மரண லோகத்திலிருந்து திரும்பியவன்.
மரணத்தை வென்றவன் நான்.
என் வாயிலாக வேறு யாரோ பேசுகிறன்
நான் நிலத்தின், மக்களின்,
தலைவனின் வாக்கு.
என்னுடைய மார்பகத்தின்மேல் போர்கள் படைத்தீர்கள்
என்னுடைய எலும்புக் கூடுகள்மேல் இந்த மாளிகைகள்
[எழுப்பினீர்கள்!
இந்நேரம் நான் மௌனமாயிருந்தேன்,
பேசிக்கொண்டிருந்தீர்கள் நீங்கள்.
இப்போது நான் பேசுவேன், என் முறை.
இந்நேரம் நீங்கள் முன்னேறினீர்கள்
நான் விலங்குகளால் கட்டுண்டு இழுத்துச் செல்லப்பட்டேன்
[பின்னல்,
இப்போது என் காலடி உயர்ந்துள்ளது
நிலம் நடுங்கும்.
இப்போது என் வேளை வந்துள்ளது.
நான் பழிவாங்குவேன்.
நாசமாக்குவேன் இந்நகரை
இதன் தெருக்களில் உருகிய
நெருப்பாறுகள் பொங்கும்.

[மக்கள் ஓடுகிற சத்தம்.]

ஓடாதீர்கள்!
எத்தனைதான் ஓடுவீர்கள்?
நிலத்தின் ஒவ்வொரு துணுக்கின் கீழும்
ஒரு பிணம் இதே வேளையை எதிர்பார்த்துப் படுத்துள்ளது.
அது உங்கள் கால்களைச் சுற்றிக்கொண்டு
உங்களை உறிஞ்சிவிடும்.
யுகயுகங்களாக நீங்கள் யாரைக் காலடியில் மிதித்து
[நடந்தீர்களோ

அவர்கள் நிலத்தைப் பிளந்துகொண்டு மேலே வருவார்கள்
இந்த எரிவாய் மலை
யுகயுகங்களாய் நெஞ்சுள் வெறுப்பை அடக்கிக்கொண்டு
மௌனமாய் நிற்கிறது.
ஆனால் இப்போது இது தகதகவென்று எரியும்
ரத்தவெறி கொண்ட அரக்கர்களின் பேராசை கொண்ட [நாக்குகளென
எண்ணற்ற சுவாலைகள்
இந் நகரத்தைத் தின்னும்
பிணங்கள் தங்கள் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும்!

**பாதிக் கூட்டம் :** பிணங்கள் தங்கள் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும்!

**பாதிக் கூட்டம் :** நாம் எலிகள், செத்திடுவோம்!

[கூட்டம் ஓடுகின்ற சத்தத்தின்மேல் இவ்விரு குரல்களும் பசியுற்ற பருந்துகளைப் போன்று வட்டம் இடுகின்றன, ஒன்றோடொன்று இணைந்துகொள்கின்றன.]

**அறிவிப்பாளர் :** ஓடுகிறது கூட்டம்.
நகரத்தில் புலம்பல் பரவிக்கொண்டிருக்கிறது.
அந்தப் பிணம் தானே கையால் காயங்களை அழுத்திக் [கொண்டு
எஃகாலான நிழல் போன்று
தடுமாறி முன்னேறுகிறது மேற்கு நோக்கி.
அது போகும் இடமெல்லாம் ஓட்டம் பரவுகிறது,
தெருவில் நிசப்தம் நிறைகிறது,
முழங்குகிறது இருந்திருந்து எரிமுகில்.
அவன் மெதுவாக மேற்கு மலைமேல் ஏறிச் செல்கிறான்.
மக்கள் இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.
ஆனால் வழி ஒன்றும் இல்லை.
தெருக்களிலிருந்து தெருக்களில் ஓடுகிறார்கள்
சுற்று வழியில் வழிதவறித் தடுமாறும் வெறிநாய் போல.
அவன் அடைந்துவிட்டான் மலையின் உச்சியை
தீப்பார்வையால் ஒருமுறை
பார்த்து நகரத்தின் பக்கம், பார், சொல்கிறான் மலையிடம்

**பிணம் :** எத்தனை யுகங்களாய் நீ
நகரத்தின் தலைப்பக்கம் மௌனமாக நிற்கிறாய்!
சாகிறவர்களின் தலைப்பக்கம் எமனின் சாவுத்தூதர்கள்
தங்கள் வேளைக்காகக் காத்திருப்பார்களே மௌனமாய், [அதுபோல.

அந்தச் சாவுப் பருவம் இப்போது வந்திட்டது.
மனிதன் சந்து பொந்துகளில் வெறி நாய்கள் போல்
[அழுகிறான்.
நிலவு ரத்தத்துளிகளால் முகம் கழுவுகிறது.
நீயும் உன் வஞ்சம் தீர்த்துக் கொள்.
எண்ணற்ற நரக உலைகள் என்று முதல் கொதிக்கின்றன
[நெஞ்சில்
எவ்வளவு நச்சுப்புகை யுகங்களாய் மூச்சைத் திணற
[வைக்கின்றன!
ஒரே ஓர் அடுக்குக் கல் அதன்மீது முளைத்துள்ளது
அதனால் மகாநாசம் இதுவரை தப்பிவந்துள்ளது.
இன்று முத்தமிட்டு அக் கல்லைக் கரைத்துக்
[கொண்டிருக்கிறேன்.
தகத்தகாயமாய் எரியுங்கள், ஓ பசித்த எரிமலைகளே,
உங்கள் ஆழ்ந்த குகைகளில் கைதிகளான
நஞ்சுள்ள நெருப்பரக்கர்களை விடுதலை செய்யுங்கள்!
கொழுந்து விட்டெரியும் எரிநட்சத்திரங்கள்
நிலத்தின் ஒவ்வொரு துணுக்கையும் பொசுக்கிவிடட்டும்,
[உருக்கிவிடட்டும்!
முத்தமிடுகிறேன் என் செத்த உதடுகளால் கருங்கல்லை,
தகதகவென எரியுங்கள், ஓ பசித்த எரிமலைகளே!
ஓ பசித்த எரிமலைகளே!
எரியுங்கள்
தகதகவென, தகதகவென, தகதகவென, தகதகவென!

[ஆயிரக்கணக்கான குரல்கள் 'எரியுங்கள் தகதகவென' என்று சபர மந்திரம் போல் ஜபிக்கின்றன. இரண்டு கணங்கள் முற்றிலும் நிசப்தம்.

திடீரென்று கடகடவென்று பயங்கரமான வெடிப்புச் சத்தம். பூமி பிளவுபடுகிற, புயல்கள் பைத்தியம் பிடித்த குதிரைகள் போல் ஓடுகிற, கட்டடங்கள் இடிந்துபடுகிற பயங்கரமான சத்தம். அதிலேயே ஓட்டமான ஓட்டம், அலறிக் கதறுதல், நெஞ்சை யுருக்கும் பரிதாபமான அழுகை. நரகத்தின் அடித்தளத்திலுள்ள குண்டத்திலிருந்து இந்தச் சத்தம் பொருமி வருகிறதோ என்று படுகிறது. மெல்ல மெல்ல ஆயிரக்கணக்கான பூனைகளின் அழுகை ஒலி. பிறகு சத்தம் பின்னடைந்து விடுகிறது, கடைசியில் ஒரு தெளிவற்ற விசும்பல் மட்டும்.]

**அறிவிப்பாளர் :**

அழிந்துவிட்டது.
எல்லாமே இறுதியில் அழிந்துவிட்டது.
லட்சக்கணக்கான ஆண்டுகளாய்
அணு அணுவாய், துரும்பு துரும்பாய் நிறுவப்பட்டது
[யாவும் அழிந்துவிட்டது!
முழங்கி முழங்கிக் கொட்டிக்கொண்டிருக்கிறது.
மகா நாசத்தின் எரிமுகில்!
உருகிய நெருப்பின் நதிகள்
நகரப் பாதைகளை விழுங்கிக்கொண்டிருக்கின்றன.
சிறுசிறு குழந்தைகளும் கிழவர்களும்,
இளம் பெண்களும் பொசுங்கிக்கொண்டிருக்கின்றனர்.
வறுபட்ட மாமிசத்தின் கடுமையான—அருவருப்பான
[நாற்றத்தால் தலைசுற்றிக்கொண்டிருக்கிறது.
கன்னங் கரிய புகை
தீய்ந்துவரும் நகரின்
இறுதிக் கதறலின் மூச்சை நெரிக்கிறது.
பிணங்கள் அழுகல் சேற்றில் நீந்திக்கொண்டிருக்கின்றன.
உருகிய மார்புகளின் சேறு!
சிரிக்கின்றான் அவன்
மலைமுடிமீது நின்றவாறு சிரிக்கிறான்.
இரு கைகளாலும் நகரத்தின் மேலே
உருகிய நெருப்பை அள்ளி இறைக்கிறான்.
மகா நாசத்தின் இடிகளை அவன்
தூக்கித் தூக்கி எறிகிறான்.
தீயால் அவனை எரிக்க இயலவில்லை,
காற்றால் அவனை அசைக்க இயலவில்லை,
பாறைகள் அவன்மீது மோதிப் பொடிபடுகின்றன
அவன் உயிருள்ள புரட்சி
சஞ்சலமான வெறுப்புப் பித்தன்
மரணத்தை வென்றவன் அவன்
ஆத்ம திருப்தியோடு அவன் நகைக்கிறான்.
அவனுடைய இமைகள்மீது சாம்பல் கீற்றுகள்
[படிந்துள்ளன.
உருகியுள்ள தீச்சேற்றில் முழங்கால்கள் வரை
புதைந்துள்ளன.

ஆனல் அவனுடைய நெற்றிமீது உல்லாசம் பூப்போல்
[பூத்துள்ளது.
இந்தக் கணவாயிலிருந்து அந்தக் கணவாய்மீது
அரண்மனையிலிருந்து நாற்சந்தி வரை
சந்துகளிலிருந்து சந்துகளுக்குள்
தடுமாறிச் சுற்றிக்கொண்டிருக்கிறன்
அழுகி அருவருப்பான பிணங்கள்மீது
நடந்து திரிந்து அவன் சுற்றிக்கொண்டிருக்கிறன்.

[கொஞ்சம் கொஞ்சமாய்ச் சந்தடியும் புலம்பலும் முடிகின்றன. ஒரு கணம் நிசப்தம். அவனுடைய கனமான காலடிச் சத்தம் மட்டும்.]

இப்போது யாரும் உயிரோடு தப்பவில்லை
நகரம் பூராவும் அரக்கு மாளிகையென உருகிவிட்டது.
இப்போது பரந்து விரிந்து கிடக்கும் பூமியில்
உயிருள்ள சீவன் ஒன்றும் மூச்சுவிடவில்லை.
இந்தப் பிணம் முழு நாகரிகத்தையும் நொடியில் கசக்கி
[விட்டான்.
ஒரு காற்றின் பைத்தியக்கார வீச்சு மட்டும்
அலைந்துகொண்டிருக்கிறது தெருக்களில்—
பண்பாட்டின் பிடுங்கப்பட்ட மூச்சுகளென.
ஒரு நெருப்பின், குருதியின், மகாநதி
அரித்துத் துளைத்துக்கொண்டு பிணங்களைப் பொசுக்கிக்
[கொண்டு
முன்னேறிச் சென்றுகொண்டே இருக்கிறது.

[நதியின் பயங்கரமான கொற்ற் கொற்ற், அதனேடு சேர்ந்திணைந்து நரிகள் அழுகிற சத்தம்.]

இனி நிலத்தின்மீது மனிதன் பிறக்கமாட்டான்.
அந்த வெட்கக்கேடான வரலாற்றை இனித் திரும்பத்
[திரும்ப எழுதமாட்டான்.
இந்தப் பூமியின் மடி நிரந்தரமாகத்
தீயில் பொசுங்கியது.
இந்த மலட்டுப் பூமி
சில நாளில் இனி,
பிண வீடுபோல் முற்றிலும் குளிர்ந்துவிடும்.

[நரிகளின் ஊளை முற்றிலும் நின்றுவிடுகிறது.]

ஆனல் இதென்ன?
இங்கே வயலின் ஒற்றையடிப் பாதைக்கருகில் நின்று
[விட்டான் அவன்
சற்றே குனிந்து பார்க்கிறன்

நெருப்பாறு இன்னும் இங்கு எட்டமுடியவில்லை!
என்ன பார்க்கிறான் அவன்?
ஒரு நீண்ட, மெலிந்த, இளைத்த கோதுமைக் கதிர்
மென்மையான வெயிலைப் போர்வையாய்க் கொண்டு
[ஊசலாடிக்கொண்டிருக்கிறது.
பக்கத்தில் ஒரு காட்டு மலர் மலர்ந்துள்ளது.
பிணத்தின் அந்த
நீறுபூத்த பழுப்பு இமைகள் ஈரமாகிவிட்டன
அந்தக் கோதுமையின் இளம் கதிரை
வாழ்த்துக்களின் பார்வையால் பார்த்துக்
[கொண்டிருக்கிறான்.
ஆ, போக்கையே அவன் மாற்றிவிட்டான்
கையை உயர்த்தி
உருகிவிட்ட நெருப்பின் எரியும் மகாநதியிடம்
சொல்கிறான் ஏதோ.

**பிணம்** :

நில்லுங்கள்!
ஓ எரி-வாயே, மூடு உன் வாயை!
வெறுப்பு ஒளிந்திருந்த நிலத்தின் மார்பகத்திலேயே
ஒளிந்திருந்தது இந்தச் சிருஷ்டியின் விதை ஒன்றும்.
அது ஊழிப் புயல்களுக்கு அஞ்சவில்லை,
பாறைகளின் அடுக்குகளை உடைத்துக்கொண்டு எழுந்து
[வந்துள்ளது.
இது எதிர்காலத்தின் புதிய சிருஷ்டியின் முதல் சின்னம்,
இதை வணங்குங்கள், ஓ ரத்தம் உமிழும் சூரியனே!
ரத்த நீராடிய ஓ சந்திரனே!
நெருப்பின் மகாநதியே ஓ! இதை வணங்குங்கள்!
இந்தக் கோதுமையின் எளிய கதிரில்
ஒரு புதிய நாகரிகம் ஒளிந்துள்ளது நாணியது போல்!
இதில் நிறுவனமாகியுள்ளன புது கந்தருவ நகரங்கள்,
இதில் ஒரு புதிய தத்துவம் மூச்சுவிடுகிறது.
புதிய கற்பனை, புதிய பாட்டு, புதிய மனிதன்
இந்தக் கோதுமையின் பசுங்கதிரின்
தண்ணிழலில் முளைக்கும்.
ஒரு நாகரிகத்தை ஒழித்துவிட்டேன் நான்,
இந்தக் கோதுமையின் மலரின் மென்னிழலில்
ஒரு புதிய பண்பாடு இனி நிறுவனம் செய்வேன்.

[நதியின் கொற்ற் கொற்ற் இரட்டிக்கிறது. நரிகள் மீண்டும் அழத் தொடங்குகின்றன.]

அறிவிப்பாளர் :

ஆனால் இதென்ன?
உருகிய ஆறு முன்னேறிப் பெருகிக்கொண்டே போகிறது
பசித்த பாம்புகளென லட்சக்கணக்கான நாக்குகளை
[நீட்டியவாறு
உருகிய நெருப்பு முன்னேறிப் பெருகிக்கொண்டே
[போகிறது.

விறைத்து நின்றுவிட்டான் அவன்
அறைகூவி அழைக்கிறான்.

பிணம் : கேட்கமாட்டீர்களா?
நான் சொல்கிறேன், நில்லுங்கள் ஓ செவிட்டு எரிமலையே!
ஓ குருட்டு நெருப்புப் புயலே!
உங்கள் காலடிகளை முன்னால் வைக்காதீர்கள்!
முடிந்திட்டது இப்போது நாசம், புதுப்படைப்பு நடக்கிறது!
நிற்கமாட்டீர்களா?
நான் மரணத்தை வென்றவன்,
நீங்கள் என்னைத் தின்னமுடியாது
ஓ வெறுப்பின் கறுப்பு அரக்கர்களே!
உங்களோடும் பலப்பரீட்சை செய்வேன் சிரித்தவாறு.
நில்லுங்கள், நில்லுங்கள், ஓ வெறுப்பின் உருகிய
[வலிமையே!

ஓ தீ ஜ்வாலைகளின் வெறும் புயலே!
இந்தக் கோதுமைக் கதிர்
காட்டுமலர்
புத்துலகின் இணையற்ற சின்னங்கள்
இவற்றின்மேல் தீப்பொறி பட்டால்
சந்திரனையும் விண்மீன்களையும் நிலத்தின்மேல்
[பரப்பிடுவேன்.

[நதியின் கொற்ற் கொற்ற் இன்னும் நெருங்கி வருகிறது.]

அறிவிப்பாளர் : ஆனால் நெருப்பு நிற்கவில்லை
மகாநதி, பசித்த அரக்கி போன்று
தன் குழலை விரித்துப் போட்டுக்கொண்டு
நூறுநூறு புயல்களின் வலிமையோடு பெருகுகிறது
அடைந்துவிட்டது அதோ அதே இடம்வரை.
அவன் கோதுமைக் கதிரை

தோள்களைப் பரப்பி வளைத்துக்கொண்டிருக்கிறான்.
அவன் மார்பகத்தில் அந்த அலைகளை ஏற்றுக்
[கொண்டிருக்கிறான்
நெருப்பில் கழுத்துவரை புதைந்து நின்று, உருகிய
[நெருப்பில்
கால்கள் வழுக்குகின்றன ஆனால்
இரும்பொத்த உடலை அழுத்தி நின்று,
நெற்றியில் புதிய படைப்புக் கனவோடு,

[கொஞ்சம் கொஞ்சமாய் நதியின் சத்தம் குன்றுகிறது. மிக இனிய இசை ஒன்று ஒலிக்கிறது. தொலைவில் எங்கோ பூஜை வேளையின் மணிகள் ஒலிக்கத் தொடங்குகின்றன.]

உருகிய நெருப்பின் வெள்ளம்
வற்றிக்கொண்டிருக்கிறது இப்போது,
வானவில்கள் சில அவற்றின்மேல்
இறங்கிவந்துள்ளன, ஒளி வட்டத்திலிருந்து
உருகிய நெருப்பின் வெள்ளம் வற்றிக்கொண்டிருக்கிறது
[இப்போது—
இமையா விழிகளால்
எந்த எதிர்காலத்தின்
புதிய படைப்பைக் காண்கின்றானோ?
ஒரு புதிய மனிதனின் கனவு
இந்தக் கோதுமையின் தண்ணிழலில்
மலர்களைப் போல் துளிர்க்கும்.

[ஆற்றின் இரைச்சல் முற்றிலும் நின்றுவிடுகிறது. சலங்கை ஒலி, அப்பால் முற்றிலும் நிசப்தம்.]

வெள்ளம் முடிந்தது.
நிலம் மீண்டும் மேலே பொங்கிக்கொண்டிருக்கிறது
ஒரு விண்ணுலக இசை
கணவாய்களில் ஒலி சலங்கையென ஆடிக்கொண்டிருக்
[கிறது.
அதனுடைய லயத்தினின்று ஒரு புது மனிதன் இறங்குவான்.
அதனுடைய லயத்திலேயே
வாழ்க்கையின் எல்லா மதிப்புகளும் மாறும்
அதனுடைய லயத்தில்
உதடுகள்மீது முத்தங்கள் வரும்
இமைகளில் கண்ணீர் பரவும்

அதனுடைய லயத்தில் ஒரு புதிய நாகரிகம் அவதரிக்கும்
[மீண்டும்.

அதனுடைய லயத்தில்,
இப்போது அமைதியுற்ற எரிமலையின் பின்னிருந்து
எட்டிப் பார்க்கிறதே
புதிய படைப்பின் முதல் சூரியன்,
மலர்ந்த ரோஜாக்களைப் போன்ற அதன் செவ்வொளி
அழிந்திட்ட படைப்பை மீண்டும் ஒளிரச் செய்கிறது.
இடிந்து சிதைந்த துணுக்குகள் மலர்ந்த ரோஜாக்கள் போல
[அழகாய்த் தோன்றுகின்றன
சிருஷ்டியின் இந்த இறுதி மனிதன்
புதிய சிருஷ்டியின் மனுவாகி முன்னேறுகிறான்.
இது நிலத்தின் புதிய மடிப்பு
நான் எதிர்காலத்தின் அப்பால் வரப்போகிற
எதிர்கால க்ஷணங்களில்,
பேசிக்கொண்டிருக்கிறேன்.
ஓ மனுராஜாவின் மக்களே!
கேளுங்கள்! ஓ கேளுங்கள்!
பேசிக்கொண்டிருக்கிறேன்
புதிய சிருஷ்டியின்
அறிவிப்பாளன் நான்!

[தாரை முழக்கம், சங்கொலி, மங்கல இசை, புதிதாய்ப் பிறந்த ஒரு குழந்தையின் முதல் மூரலின் இயற்கையான, அழகான, இனிய சங்கீதம்!]

[திரை விழுகிறது.]

# ஹிந்துஸ்தானம் சென்று சொல்லுங்கள் !

—சந்திரகுப்த வித்யாலங்கார்

## பாத்திரங்கள்

கிழவன் : பாகிஸ்தான் ஏற்பட்ட காரணத்தால் மேற்குப் பஞ்சாபிலிருந்து பாரதம் வருவதற்காகப் புறப் பட்ட ஒரு மிக வயது முதிர்ந்த, கலக்கமுற்ற கனவான்.

நிர்மலா : கிழவரின் இளம் பெண்

முகந்தீ : கிழவரின் இளம் புதல்வன்

டிரைவர் : ஹவல்தார் முதலியவர்கள்.

[2]

சிகந்தர் : யவன வெற்றிவீரன்

ஆண்டிரியோகஸ் : சிகந்தரின் துணைவனான யவனப் படை வீரன்

[3]

ஸ்கந்தகுப்தன் : குப்த சாம்ராஜ்யத்தின் புகழ்பெற்ற வெற்றிவீரன், குப்த சாம்ராஜ்யக் குடிகள் முதலியவர்கள்.

[4]

ரணஜீத் சிங் : பஞ்சாப் கேசரி, வெற்றிவீரன்.

சர்தார் சிங் : ரணஜீத் சிங்கின் துணைவன்

ரொக் அலி : ஹபீபுல்லா முதலியோர்.

## [1]

*[மோட்டார் லாரிகளில் பிரயாணிகளின் பெருங்கூட்டம் ஒன்று வந்து கொண்டிருக்கிறது. புதிய, பழைய மோட்டார் இஞ்சின்களின் உயர்ந்து தாழ்கின்ற ஒலிகள் தொடர்ந்து கேட்கிறது. இடையிடையில் ஏதாவதொரு சிறு குழந்தையின் அழுகை ஒலி மெல்லிய பின்னணி போன்று கேட்கிறது.*

*சுமார் அரை நிமிடத்துக்குப் பிறகு ஒரு லாரி டிரைவர் உயர்ந்த குரலில் கூப்பிடுகிறான்: ''பியாரே சிங்கா! ஓ பியாரே சிங்கா!''*

*கண நேரம் பதில் வரவில்லை. இதனால் மறுபடியும் அழைப்பு ஒலி கேட்கிறது: ''பியாரே சிங்கா! ஓ பியாரே சிங்கா! தூக்கம் வந்து விடவில்லையே?''*

*''இல்லை நண்பா, இங்கே யாருக்காவது தூக்கம் வர முடியுமா?''*

*''இன்றைய இரவு எவ்வளவு உற்சாகமற்றதாய்த் தோன்றுகிறது. பியாரே சிங்கா!''*

*இதே நேரத்தில் ஓடுகிற லாரியிலிருந்து மூன்றாவது குரல் கேட்கிறது: ''ஹிந்துஸ்தான் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது. ஹவல்தார் ஐயா?'']*

**ஹவல்தார்** : ராவி ஆற்றின் அக்கரை ஹிந்துஸ்தானம்; ராவி வரை போக இன்னும் ஒரு மணி நேரம் பிரயாணம் பாக்கி இருக்கிறது.

**ஒரு கிழக்குரல்** : இன்னும் ஒரு மணி நேரம் பாக்கி இருக்கிறது ராவி வரை போக! ராவியின் அக்கரையில் நம் ஹிந்துஸ்தானம் இருக்கிறது! நம் அன்பான ஹிந்துஸ்தானம்!

**ஹவல்தார்** : ஆம், ஐயா, பரமாத்மா விரும்பினால், ஒரு மணி நேரத்திற்குப் பிறகு நாம் அங்கே போய்ச் சேர்ந்துவிடலாம்.

**கிழக்குரல்** : பரமாத்மா விரும்பினாலா? சரிதான் தம்பி. பரமாத்மா விரும்பினால், இன்று இரவின் இந்த நிசப்தத்தில், இன்னும் ஒரு மணி நேரத்துக்குப் பின், நாம் நம்முடைய களைத்து அலுத்த ஒலியில் வாயார, ''ஜெய் ஹிந்த்!'' என்று முழங்க முடியும்.

லாரியில் உட்கார்ந்திருக்கும் மாதர்கள், குழந்தைகள், ஆடவர்கள் மெதுவாய்க் குரல் எழுப்புகிறார்கள் : ''ஜெய் ஹிந்த்!''

**லாரி டிரைவர்** : பியாரே சிங்கா, அபாயமுள்ள இடம் இனி ஏதும் பாக்கி இல்லை அல்லவா?

பியாரே சிங் : நம் இடத்தை நாம் அடையும் வரை, எந்த இடத்தில் அபாயம் இல்லை? குறிப்பாக ராவிக்கு மூன்றே மைல் இப்பால் உள்ள அந்தக் கிராமம்!

ஒரு குரல் : நேரம் மிக மெதுவாக ஊர்ந்து செல்கிறது... அபாயத்தின் 55 நிமிடங்களும் 55 வருடங்களாய்த் தோன்றுகின்றன!

ஹவல்தார் : நேரம் கழியவில்லை என்றால் ஏதாவது பாட்டுப் பாடுங்கள்! நீங்கள் பாடுவதை யார் தடுக்கிறார்கள் என்று நான் பார்க்கிறேன்.

பியாரே சிங் : சாபாஷ் ஹவல்தார் ஐயா! அப்படியானால் நண்பர்களே, உங்களில் பாடுகிறவன் யாராவது இருக்கிறானா?

ஒரு குரல் : எல்லாரும் சேர்ந்து ஒரு பாட்டுப் பாடினால் என்ன? பசுமை நிறைந்த பஞ்சாபின் நினைவாக, மேற்குப் பஞ்சாபின் எல்லை முடிவில், ஒருகால் இது நம் இறுதிப்பாட்டாக இருக்கலாம்! சரிதான், சரிதான்.

[கோஷ்டி கானம். ஆண்களும் பெண்களும் ஒன்றாய்ப் பாடுகிறார்கள். பாட்டின் கருத்து: சந்திரனும் சூரியனும் எந்த நிலப் பகுதியின்மீது வந்ததும் தங்கள் நடையை மெதுவாக்குகின்றனவோ அந்த நிலப் பகுதி நம்முடைய அன்பார்ந்த பஞ்சாப்தான்; பொன்வண்ண வயல்கள், சம தளமான மைதானங்கள், பச்சையாகவும் நிறைவாகவும் நெடிதுயர்ந்தும் வளர்ந்த சீசம் மரங்கள், மாந்தோப்புகள்; ஐந்து பேராறுகள் இரவும் பகலும் நம்முடைய இந்தத் தாய் நாட்டின் திருவடிகளைக் கழுவிக்கொண்டு இருக்கின்றன.]

பாட்டு முடிந்ததும் முடியாததுமாக இருக்கையில் துப்பாக்கிகள் வெடிக்கும் பெரும் சத்தம் கேட்கத் தொடங்குகிறது; பாட்டின் லயம் திடீரென்று இவ்வாறு கலைகிறது—வாசிப்புக்கு இடையில் சிதாரின் தந்தி திடீரென அறுந்தாற்போல்.

''அல்லா ஹோ அக்பர்!'' ''யா அலி!'' என்னும் முழக்கங்களோடு மிக அருகிலிருந்து துப்பாக்கி சுடுகிற சத்தம் வந்துகொண்டிருக்கிறது. லாரிகள் போகும் சத்தம் நின்றுவிடுகிறது, எதிர்ப்பு முழக்கங்கள் கேட்கின்றன— ''ஹரஹர மகாதேவ்!'' ''சத்ஸ்ரீ அகால்!''

முழக்கங்களின் சத்தம், துப்பாக்கிகளின் கர்ச்சனை, மாதர்களும் குழந்தைகளும் உள்ளமுருக ஓலமிடும் கூக்குரல்—எல்லாம் ஒன்றாய்க் கேட்கின்றன.

[மாறுபடும், வேறுபடும் இசை.]

## [ 2 ]

ஒரு மிகவும் அச்சம் கொண்ட குரல் : *அப்பா! அப்பா!*

கண நேரத்துக்குப் பின் மீண்டும் : *அப்பா! அப்பா!*

ஒரு மிகவும் பலவீனமான கிழக்குரல் : *உம்!*

ஒரு பெண் : *அண்ணு, அப்பாவுக்கு உணர்வு வந்துவிட்டது! அப்பா! அப்பா!*

கிழவர் : *மகளே நிர்மல்! மகனே முகந்நீ!*

நிர்மலா : *ஆம், அப்பா, நாங்கள் உங்களுக்கு அருகிலேயே இருக்கிறோம்.*

கிழவர் : *நாம் எங்கிருக்கிறோம் மகனே?*

முகந்நீ : *நாம் தெருவிலிருந்து தூரத்தில், வயலில் ஒளிந்துகொண்டு இருக்கிறோம், அப்பா!*

கிழவர் : *உன் அண்ணன் தேச்ராஜ் எங்கே, மகனே?*

முகந்நீ : *உங்களைப் பாதுகாத்துக்கொண்டே அண்ணன் தன் உயிரைக் கொடுத்துவிட்டான் அப்பா!*

கிழவர் : *அப்படியா! ஓ கடவுளே, இந்த வயதான காலத்தில் என்னுடைய எந்தக் குற்றத்துக்காக இத்தகைய தண்டனை விதித்தாய்?*

முகந்நீ : *நீங்கள் தைரியமாக இருக்கவேண்டும் அப்பா!*

கிழவர் : *உங்கள் தாய் புண்ணியவதி, இந்த நாளைக் காண உயிரோடில்லாமல் போய்விட்டாள்!*

முகந்நீ : *உங்கள் உடல் நலம் இப்போது எப்படி இருக்கிறது, அப்பா?*

கிழவர் : *ஹிந்துஸ்தானம் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது, மகனே?*

முகந்நீ : *ஹிந்துஸ்தானத்தின் எல்லையிலிருந்து நாம் அதிக தூரத்தில் இல்லை அப்பா!*

கிழவர் : *(மயக்கமுறும் குரலில்) ஹிந்துஸ்தானம்! அன்பார்ந்த ஹிந்துஸ்தானம்! சுதந்திர ஹிந்துஸ்தானம்!*

நிர்மலா : *அப்பா! அப்பா!*

கிழவர் : *மகளே நிர்மல்! மகனே முகந்நீ!*

நிர்மலா : *என்ன அப்பா?*

கிழவர் : *மகனே, நீங்கள் இதே சமயம் இரவின் அமைதியில் ஹிந்துஸ்தானம் சென்றுவிடுங்கள்!*

**முகந்தீ :** இது நடக்காத காரியம் அப்பா! வணக்கத்துக்குரிய அண்ணாவின் எரிசடங்கு செய்யாமலும், உங்களை உடன் அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யாமலும் நாங்கள் இங்கிருந்து போவதைப் பற்றிக் கற்பனை செய்யவும் முடியாது, அப்பா!

**கிழவர் :** நான் இப்போது உணர்வோடு இருக்கிறேன் மகனே! என் மூத்த பிள்ளையின் எரிசடங்கை இங்கே நான் என் கையால் செய் கிறேன். நீ உன் தங்கையை அழைத்துக்கொண்டு உடனே ஹிந்து ஸ்தானத்துக்குப் புறப்பட்டுவிடு, மகனே முகந்தீ!

**முகந்தீ :** இது ஒருகாலும் நடக்காது. அப்பா! (உங்களுக்குப் பலத்த காயம்பட்டுள்ளது, எனக்குத் தெரியும். (கனத்த குரலில்) ஓ, என்னை அவ்வளவு கடைமனிதனாகவும் நன்றிகெட்டவனாகவும் நினைக்கிறீர்களா அப்பா?

**கிழவர் :** இப்போதுதான் நான் தைரியமாக இருக்கவேண்டும் என்று சொன்னாய், மகனே! தைரியமாய்ச் செயலாற்றுவதைத் தவிர நமக்கு வேறு வழியே இல்லை. (தன்னிடமே கூறிக்கொள்வது போல்) நம் வீடு வாசல் எல்லாம் கொள்ளை போய்விட்டது. எந்த அன்பார்ந்த தாய்நாட்டில் நாம் பிறந்தோமோ, குதித்து விளையாடினோமோ, எந்தப் பூமியின் ஒவ்வோர் அணுவோடும் நமக்கு நெருங்கிய உறவு இருந்ததோ, அந்தப் பூமியிலிருந்து நிரந்தரமாக விரட்டிவிடப் பட்டோம்; இன்று அன்பார்ந்த தாய்நாட்டின் வாயிலில் அடர்ந் திருண்ட இவ்விரவில் என் அருமை மகன் கொடியவர்களால் கொல்லப் பட்டான்; உன்னுடைய உயிர் அபாயத்தில் இருக்கிறது; என் ஒரே மகளின் மானம் அபாயத்தில் இருக்கிறது; 70 வயதில் நான் என் மார்பில் குறுவாளின் தாக்குதலை ஏற்றிருக்கிறேன். என் பிரபு!... ஓ, நாம் தைரியமாகச் செயல்படாவிட்டால் தைரியம் என்ற சொல்லின் கௌரவமே சேதமாகிவிடும்...

**முகந்தீ :** வாஸ்தவம் அப்பா, நாம் கட்டாயம் தைரியமாய்ச் செயல்படுவோம்.

**கிழவர் :** அதனால்தான் மகனே முகந்தீ, மகளே நிர்மல், நான் உங்களுக்கு ஆணையிடுகிறேன். நீங்கள் இப்போதே இரவின் நிசப்தத்தில் என்னையும் தேச்ராஜின் உயிரற்ற சடலத்தையும் இங்கேயே விட்டுவிட்டு, பேசாமல் ஹிந்துஸ்தானத்துக்குச் செல்லுங்கள்!

**நிர்மலா :** இது தைரியம் அல்ல, அப்பா! இது எங்கள் கோழைத் தனம் ஆகும்; ஒரு நன்றியற்ற கோழைத்தனம்!

**கிழவர் :** இல்லை மகளே! நீ இங்குதான் தவறு செய்கிறாய். வாழ்க்கையின் இத்தகைய கொடூரமான காயத்தை எவ்வளவு பேரால்

தான் பொறுக்கமுடியும்? தன் அண்ணனின் பிணத்தையும் தந்தையின் உயிருள்ள உடலையும் இம்மாதிரிக் காட்டில் விட்டுப் போகும் இம் மாதிரி நாளைப் பகைவனுக்கும் பரமாத்மா காட்டவேண்டாம் என்று நான் உண்மையான நெஞ்சுடன் பிரார்த்தனை செய்கிறேன். ஆனால், நமக்கு இத் துன்பம் வந்தேவிட்டதால் நாம் அதைத் தைரியமாக எதிர்க்கவேண்டும். இதை எல்லாம் கண்ட பிறகும் கேட்ட பிறகும் நீங்கள் உயிரோடு இருந்தால், உங்களுடைய வாழ்க்கையே தன்னளவில் தைரியத்தின் ஒரு பெரிய அளவுகோல் ஆகிவிடும்.

நிர்மலா : வாழ்க்கையில் இவ்வளவு பற்று எதற்கு அப்பா! நாங்களும் எங்கள் அண்ணாவோடு எங்கள் உயிரைக் கொடுக்க முடியும்.

கிழவர் : இது எனக்குத் தெரியும், மகளே! தேச்ராஜும் உங்களுடைய அமிசம்தானே.

நிர்மலா : அப்படியானால் உயிரிடம் இவ்வளவு பற்று எதற்கு?

கிழவர் : (சற்றுப் புன்னகைத்து) இந்த உயிர் உங்களுடையது அல்ல, நிர்மல்! இது உங்கள் நாட்டு உயிர். நீங்கள் உயிரோடு இருக்க வேண்டும்; ஏனெனில் உங்கள் நாட்டுக்கு நீங்கள் தேவை.

முகந்தீ : நம் நாடா? நம் நாட்டிலிருந்து நாம் சாசுவதமாக விரட்டப்பட்டுவிட்டோம். நம் தாய்நாட்டிலிருந்து நாம் நிரந்தர மாக விலக்கப்பட்டுவிட்டோம் என்று இப்போதுதானே நீங்கள் சொன்னீர்கள்!

கிழவர் : உன்னுடைய இந்தத் துன்பம் எனக்கு நன்றாகப் புரிகிறது. மகளே முகந்தீ, வாழ்க்கையின் 71 ஆண்டுகளைத் தாயின் மடியின் எந்தப் பாகத்தில் நான் கழித்தேனோ, அந்தப் பாகத்திலிருந்து வாழ்க்கையின் அந்தி வேளையில் பலவந்தமாகத் தள்ளப்பட்டுவிட்டேன். தொடர்ச்சியாக 71 ஆண்டுகள் வரை எந்தப் பூமியை நான் நிலவொளியிலும், பகலிலும், காலையிலும், மாலையிலும் பலப்பல வடிவங்களில் கண்டிருக்கிறேனோ, அதை எல்லாம் இனி நான் காணமுடியாது. (கிழவரின் தொண்டை அடைத்துக்கொள்கிறது; ஆனால் முயன்று தன் குரலைக் கட்டுப்படுத்திக்கொண்டு தொடர்ந்து சொல்கிறார்.) ஆனால் மகளே முகந்தீ, இந்த நம் தேசம் அந்தப் பூமியோடு வரையறுக்கப்பட்டு விடவில்லை—நாமும், நம் மூதாதையரும் பிறவியெடுத்த நிலப்பகுதி யோடு அது முடிந்துவிடவில்லை. நம் நாடு மிகவும் பரந்தது! நாட்டின் விசாலத்திற்கும் மேலாக மற்றொரு பொருள் இருக்கிறது, மகளே!

நிர்மலா : அது என்ன, அப்பா!

கிழவர் : நம்மிடம் ஒரு பெரும் சேமநிதி இருக்கிறது. அதை நம் சந்ததியாரிடம் கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டும்! இந்தச் சேம நிதிக்காகவே நீங்கள் உயிரோடு இருக்கவேண்டும், மகளே!

முகந்தீ : அந்தச் சேமநிதி என்ன, அப்பா!

கிழவர் : நம்முடைய அந்தச் சேமநிதி நம் வமிசத்தில் வழிவழியாக வரும் பொறுப்பு வடிவில் இருக்கிறது. நாம் ஹிந்துஸ்தானத்தின் எல்லைப்பிரதேசத்தின் காவற்காரர்கள்; நம் முன்னோர் ஹிந்துஸ்தானத்து எல்லைப் பிரதேசத்தைக் காத்துவந்திருக்கிறார்கள். இன்று நாம் எல்லைப் பிரதேசத்தில் ஹிந்துஸ்தானத்தைப் பாதுகாக்க வேண்டும்; நமக்குப் பிறகு நம் வமிசத்தவர்கள் ஹிந்துஸ்தானத்தைப் பாதுகாக்க வேண்டும்; அதற்குப் பிறகும் நம் வமிசத்தவர் இந்தப் புனிதமான பணியைச் செய்ய வேண்டும்; இந்தப் புனிதப் பணிக்காகவே உயிரோடு இருக்க வேண்டும்!

நிர்மலா : ஆனால் நாட்டின் எல்லைப் பிரதேசம் இன்று நம்மிடமிருந்து வலுக்கட்டாயமாய்ப் பறித்துக்கொள்ளப்பட்டுவிட்டதே, அப்பா! அதை நாம் எப்படிப் பாதுகாக்க முடியும்?

கிழவர் : (சிறிது ஆவேசத்தோடு) நீ என்னுடைய மனப்புண்ணைக் கிளறிவிட்டாய், மகளே! நம் நாட்டின் எல்லைப் பிரதேசத்தை நாம் இவ்வாறு அசட்டையாக விட்டுவிட்டோம், உண்மைதான். ஆனால், இந்தத் தியாகமும் நாட்டு நலனுக்காகவே செய்யப்பட்டுள்ளது. நாடு துண்டாடப்பட்ட பிறகு நம் வீடுவாசல்கள் போய்விட்டன என்பது சரிதான். ஆனால் நம் தேசமோ இன்றும் உயிரோடு இருக்கிறது; அதே தேசத்தின் அங்கம் ஒன்றைக் காணிக்கையாகத் தர நேர்ந்துள்ளது.

முகந்தீ : (தனக்குள்) நாடு, தாய்நாடு, ஹிந்துஸ்தானம்! எத்தனை காலமாக நாட்டுச் சுதந்திரம்பற்றிக் கனவு கண்டு வருகிறேன். இன்று அந்த நாடு சுதந்திரம் பெற்றுள்ளது. நம்முடையவை எல்லாம் பறி போய்விட்டன; வீடு, வாசல், சகோதரர்கள் உறவினர்கள் எல்லாமே.

கிழவர் : (இன்னும் உற்சாகமாய்) ஆம், மகனே, எப்போதும்போல் இன்றும் நாட்டின் பாதுகாப்புக்காக, தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக, நாம்தாம் எல்லாரையும்விடப் பெரிய தியாகம் செய்திருக்கிறோம். எப்போதும்போல் இன்றும் நாம்தாம் நம்முடையவை அனைத்தையும் நாட்டுக்காகக் காணிக்கை செலுத்தியிருக்கிறோம். எஞ்சியிருப்பவற்றையும் தருணம் நேரும்போது அர்ப்பணம் செய்ய வேண்டும்—எப்போதும்போல், வீரம் மிக்க நம் முன்னோரைப் போல்.

நிர்மலா : எப்போதும் போல் எப்படி, அப்பா? இம்மாதிரித் துன்பம் இன்றுவரை ஒருபோதும் வந்ததில்லை.

கிழவர் : அருவருப்பைப் பொறுத்தவரையில் இன்று நடப்பதைப் போல் முன்னொருபோதும் நடந்ததில்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், இந்த நாட்டின் எல்லைக் காவல் பணிபுரிந்த நம் முன்னோர்கள் நாட்டுப் பாதுகாப்புக்காக ஏற்ற துன்பங்கள்

குறைவானவை அல்ல. இன்று இந்த வரலாற்றின் இருண்ட இரவிலே, நம் மூதாதையரின் புகழ்க்கதையை உங்களுக்குச் சொல்லிவிட்டு நான் அமரன் ஆகிவிடுவேன், மகளே. (குரல் நடுங்கத் தொடங்குகிறது) இன்னும் இரவு நேரம் போதுமான அளவு பாக்கி இருக்கிறது. நீங்கள் என்னை இங்கேயேவிட்டுப் பாரதவர்ஷத்துக்குப் புறப்படவேண்டும் என்பது என் கட்டளை. ஆனால், போகு முன்பு கடைசி முறையாக என் வாயிலிருந்து உங்கள் மூதாதையரின் சிரஞ்சீவிப் புகழ்க் கதையைக் கேட்டுவிட்டுச் செல்லுங்கள். அதற்குப் பிறகு ஹிந்துஸ்தானம் செல்லுங்கள். நம்முடைய கிழத்தந்தை 71ஆம் வயதிலும் தம்முடைய பெரிய காணிக்கையைத் தம்முடைய அருமை ஹிந்துஸ்தானத்துக்கே செலுத்தினர் என்று ஹிந்துஸ்தானத்து மக்களிடம் சொல்லுங்கள்! சரி, கேளுங்கள்—

(வேறுபடும் இசை)

## [ 3 ]

**கிழவர் :** *(உற்சாகத்தோடு) பாரதப் பண்பாட்டின் உறைவிடமாக வடமேற்கில் இருந்த பெரும் கேந்திரங்கள் — மொகஞ்சோதரோவும் ஹரப்பாவும்; காந்தாரமும் கபிசாவும்; புருஷபுரமும் தக்ஷசீலமும்!*

*(உபநிஷத காலத்து முனிவர்களின் மந்திரகானம்)*

*அசதோ மா சத்கமய,*
*தமஸோர்மா ஜ்யோதிர்கமய,*
*ம்ருத்யோர்மா அம்ருதம் கமய!*

*அமைதியும் உயர்வுமான ஒரு நீண்ட யுகம் கழிந்துவிட்டது. தொடர்ந்து தக்ஷசீலத்தில் பௌத்த சமயமும் பண்பாடும் உருவாகத் தொடங்கின. தக்ஷசீலத்தின் சிறுசிறு குன்றங்கள் எதிரொலித்தன.*

*புத்தம் சரணம் கச்சாமி!*
*தர்மம் சரணம் கச்சாமி!*
*ஓம் மணிபத்மே ஹூம்ம்!*

**கிழவர் :** *2273 ஆண்டுகளுக்கு முன்பு, பாரதவர்ஷத்தின் இதே எல்லைப் பிரதேசத்தின்மீது சிகந்தர் படையெடுத்து வந்தான். தக்ஷசீலத்தையும் போரஸ் மன்னனையும் வென்று அவன் பிதஸ்தாவரை சென்றடைந்தான். ஆனால் அடைந்த பிறகு பாரத நாட்டின் எல்லைப் பகுதியில் பெற்ற இந்த வெற்றி அவனுக்கு ஒரு பெரும் தோல்வியைவிட விலைவுயர்ந்ததாக ஆகியிருப்பதை அறிந்தான்.*

*(சில கணங்கள் வரை வேறுபடும் இசை)*

## [ 4 ]

இன்றைக்கு 2272 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு காலை. நாலாப் பக்கங்களிலும் ஆரவாரம் பரவியுள்ளது. சிகந்தரின் ஆயிரக்கணக்கான கலகப் படைவீரர்கள் திரண்டு இருக்கிறார்கள். அவர்கள் கூச்சல் இடுகிறார்கள்: ''சிகந்தர் ஒழிக!'', ''நாங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போக வேண்டும். திரும்பிப் போ, திரும்பிப் போ!''

இதே நேரத்தில் ஒரு கலகத் தலைவன் உயர்ந்த குரலில் கூறத் தொடங்குகிறான்: ''வீரர்களே, அமைதியாக என் பேச்சைக் கேளுங்கள். நான், உங்களுடைய தலைவன் ஆண்டிரியோகஸ் பேசுகிறேன்.''

[அமைதி பரவிவிடுகிறது.]

**ஆண்டிரியோகஸ் :** வீரர்களே! தோழர்களே! என் பேச்சைக் கவனமாய்க் கேளுங்கள். (''ஆண்டிரியோகஸ் என்றும் வாழ்க!'', ''சிகந்தர் நாசமாய்ப் போக'' என்ற முழக்கங்கள்.)

**ஆண்டிரியோகஸ் :** சிகந்தர் நாசமாய்ப் போக என்ற கோஷம் செய்ய வேண்டாம் என்று நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன். என்ன தான் இருந்தாலும் அவன் நம் யவனர்களின் கௌரவம்.

**ஒரு வீரன் :** சிகந்தர் சுயநலமி!

**இரண்டாம் வீரன் :** சிகந்தர் ஒரு மிருகம்!

**மூன்றாம் வீரன் :** அவன் தன் பேராசைக்கு நம்மை எல்லாம் பலியிட விரும்புகிறான்.

**முதல் வீரன் :** கலகக்காரர்களை ஈட்டி முனையால் ஒழிப்பதாய் சிகந்தர் பயமுறுத்தியிருக்கிறான்.

**ஆண்டிரியோகஸ் :** சகோதரர்களே, என் பேச்சைக் கவனமாய்க் கேளுங்கள். உங்கள் ரோமத்தைக்கூடச் சிகந்தரால் அசைக்க முடியாது என்பதற்கு நான் பொறுப்பு. நீங்கள் சொல்வதைக் கவனமாய்க் கேட்டுக் கொள்வதோடு அல்லாமல் உங்களுடைய விருப்பத்தை முற்றிலும் நிறைவேற்றுவதாய் நான் சிகந்தரிடம் உறுதி வாங்கி இருக்கிறேன்.

சகோதரர்களே, உங்களிடமும் நான் ஓர் உறுதிமொழி வாங்க வேண்டும். நான் சொன்னதன்பேரில், என் அழைப்பின்பேரில், அவன் இதே நேரத்தில் நம்முடைய இந்த அளவுக்கு வந்துகொண்டு இருக்கிறான். அவன் இங்கே வரும்போது, நீங்கள் உங்கள் விருந்தாளியின்,

யவனப் படைத் தலைவனின், சிகந்தரின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில்தான் யவனரின் கௌரவம் அடங்கியிருக்கிறது. நாம் யவனரின் வீரப்படையைச் சேர்ந்தவர்கள். சிகந்தர் இதுவரையிலும் நம் வீரத்தலைவனாக இருந்திருக்கிறான். எதிர்காலத்தில் அவனை உங்கள் தலைவனாக வைத்துக் கொள்வதும் வைத்துக்கொள்ளாமல் இருப்பதும் உங்கள் கையில் இருக்கிறது; ஆனால், இப்போது ஒரு வீரன் மற்றொரு வீரனிடம் நடந்து கொள்வதைப் போலவே நாம் அவனிடம் நடந்துகொள்ள வேண்டும்.

ஒரு வீரன் : படைத்தலைவர் சிகந்தர் நாம் கூறுவதை ஒப்புக் கொண்டே ஆகவேண்டும்.

ஆண்டிரியோகஸ் : இந்தப் பொறுப்பு என்னைச் சார்ந்தது என்று இப்போதுதான் சொன்னேன். அதோ பாருங்கள், படைத்தலைவர் சிகந்தர் வருகிறார். நீங்கள் எல்லாரும் அமைதியாக எழுந்து நின்று அவருக்கு வரவேற்பு அளியுங்கள்! (ஒரு கணம் நிசப்தம் பரவுகிறது.)

சிகந்தர் : நம் படைவீரர்கள் நம்மிடம் மகிழ்ச்சியற்று இருப்பதை நாம் காண்கிறோம். இதன் காரணத்தை நாம் அறிய விரும்புகிறோம்.

[ஒரு கணம் மௌனம் நிலவுகிறது.]

சிகந்தர் : இப்போதுதான் நாம் ''சிகந்தர் நாசமாய்ப் போக'' என்ற கோஷத்தைக் கேட்டோம். ஆண்டிரியோகஸ், நீ ஏன் மௌனமாக இருக்கிறாய்? நீயே சொல்லு, இதற்குக் காரணம் என்ன?

ஆண்டிரியோகஸ் : பேரரசே, இதன் காரணத்தைக் கேட்டுத் தாங்கள் மகிழ்ச்சி அடைய மாட்டீர்கள், நான் இவர்களை மௌனமாக இருக்கும்படி சொல்லி இராவிட்டால்...

சிகந்தர் : (இடையிலேயே தடுத்து) நாம் உன்னிடம் மிக மகிழ்ச்சியாக இருக்கிறோம், ஆண்டிரியோகஸ்! நம் படையின் வீரர்கள் நம்மிடம் என்ன விரும்புகிறார்கள் என்று நம்மிடம் சொல்லு.

ஆண்டிரியோகஸ் : நாங்கள் இப்போது எங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போக விரும்புகிறோம்.

சிகந்தர் : என் படை வீரர்களே, இன்றைக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னால், நீங்கள் யவன மண்ணின்மீது தலைநிமிர்ந்து நின்று, சிகந்தரின் ஆட்சியில் உலகமெங்கும் யவனரின் கொடி பறக்கச் செய்வோம் என்று சபதம் செய்தீர்களே, அந்த நாள் நினைவிருக்கிறதா?

ஆண்டிரியோகஸ் : நன்கு நன்றாக நினைவிருக்கிறது, பேரரசே!

சிகந்தர் : இந்தப் பெருமை வாய்ந்த நாட்டைப் பார்க்கிறீர்கள், என் படையின் வீரர்களே! உலகத்தின் இந்த எல்லாவற்றையும்விட கௌரவம் வாய்ந்த நாடான பாரதவர்ஷத்தின்மீது யவன ஆட்சியை ஏற்படுத்த விரும்புகிறேன். இதனுடைய எல்லையற்றுப் பரந்துள்ள

செழுமையான வெளிகளின்மீதும், இந்த நாட்டின் ஒயில் நடை பயிலும் ஆறுகளின்மீதும், ஒளிரும் பனிப் போர்வையால் மூடுண்டிருக்கும் இதன் உயர்ந்த மலைகளின்மீதும் யவனரின் கொடியைப் பறக்கவிட விரும்புகிறேன். சொல்லுங்கள், இப் பணியில் நீங்கள் எனக்குத் துணை நிற்பீர்களா?

**ஆண்டிரியோகஸ் :** ஒருகாலும் இல்லை, பேரரசே!

**சிகந்தர் :** உன் வாய்க்கு இந்தக் கோழைவாக்கு அழகாக இல்லை, வீர ஆண்டிரியோகஸ்!

**ஆண்டிரியோகஸ் :** நீங்கள் வான மலரின் கனவு காண்கிறீர்கள், மகாராஜா!

**சிகந்தர் :** உன் கருத்து எனக்குப் புரியவில்லை.

**ஆண்டிரியோகஸ் :** என் கருத்து முற்றிலும் தெளிவாக இருக்கிறது. தாங்கள் இந்த நாட்டை ஒருகாலும் வெற்றிகொள்ள முடியாது, மகாராஜா! இந்த நாட்டின் எல்லையற்றுப் பரந்துள்ள செழுமையான வெளிகளையும், ஒயில்நடை பயிலும் ஆறுகளையும், வானத்தையும்விட உயர்ந்த மலைகளையும் தாங்கள் வருணனை செய்தீர்கள், மகாராஜா! ஆனால், இந்தப் பகட்டான நாட்டில் வாழும் ஆரிய ஜாதியினரை வருணிக்க மறந்துவிட்டீர்கள். சென்ற 18 மாதங்களில் நாங்கள் இந்த ஜாதியை நன்கு புரிந்துகொண்டிருக்கிறோம். தனியாக யவனர் மட்டும் அல்ல, உலகம் முழுவதும் சேர்ந்தாலும் பாரத நாட்டை வெற்றி கொள்ள முடியாது, படைத் தலைவரே!

**சிகந்தர் :** உலகத்தால் செய்ய முடியாததை யவனரால் செய்ய முடியும். சிகந்தர் செய்ய முடியும்! நாம் இதுவரை குறைந்தபட்சம் இரு பெரும் பாரத மன்னர்களை நேர்ப் போரில் முறியடித்துவிட்டோம்!

**ஆண்டிரியோகஸ் :** அரசர் புருவின் தோல்வியைத் தாங்கள் தங்கள் வெற்றியாகக் கருதுகிறீர்களா, மகாராஜா! அந்தச் சின்னஞ்சிறு அரசரும்கூட இவ்வளவு நாட்கள்வரை உள்ளே நுழையவிடாமல் யவனர் படை முழுவதையும் மிகவும் வெற்றிகரமாய்த் தடை செய்தாரே, மகாராஜா! நாங்கள் இந்த நாட்டு மக்களை, ஐந்தாற்றுப் பூமியின் வீரர்களை நன்கு புரிந்துகொண்டிருக்கிறோம். எந்த நாட்டு எல்லைப்புறத்தின் சிறு சிறு அரசர்களுக்கும் இவ்வளவு வலிமை இருக்கிறதோ ..

**சிகந்தர் :** (இடையிலேயே தடுத்து) நீ கோழை, ஆண்டிரியோகஸ்!

**ஆண்டிரியோகஸ் :** நாக்கை அடக்கிப்பேசு, சிகந்தர்!

[திடீரென்று பேரிரைச்சல் எழுகிறது.]

**கிழவர் :** அதற்குப் பிறகு உண்மையாகவே சிகந்தரின் படைகள் தலைமேல் கால்வைத்து ஓட்டம் பிடித்தன! தோல்வியின் இத் தாக்குதலை வீரன் சிகந்தரால் பொறுக்க முடியவில்லை. விரைவிலேயே அவ் வீரன் மாண்டுவிட்டான்.

[வேறுபடும் இசை]

## [ 5 ]

**கிழவர் :** விக்கிரம சகாப்தம் 507-ல் ஆசியா, ஐரோப்பா ஆகிய இரு பெருந்தீவுகளும் வெட்டுக்கிளிக் கூட்டம்போல வந்த லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ஹூணர்களின் தாக்குதலினுல் அஞ்சி நடுக்கமுற்றன. வோல்கா தொடங்கிக் காபுல் வரை இந்த ஹூணர்கள் எல்லா இடங்களிலும் பரவிவிட்டார்கள். காந்தாரத்தின் குஷான் மன்னரைக் கொன்றுவிட்டு, ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் ஹூணர்கள் ஆற்று வெள்ளமென பாரதவர்ஷத்தின்மீது தாக்குதல் செய்தார்கள். பால்ஹிக்கிலிருந்து சதத்ரு வரை இந்த ஹூணர்களின் ஆட்சியில் வந்துவிட்டது. அப்போது வி.ச. 512-ல் மத்ர தேசம், பஞ்சநத தேசத்துப் படை வீரர்களின் உதவியோடு சாம்ராட் ஸ்கந்த குப்தன், அவர்களை இந்த நாட்டிலிருந்து அடித்து விரட்டினுன்.

வி.ச. 512-ன் பொன்வண்ண அந்தி நேரம்... எல்லாருக்கும் இனியனுன மகத தேசத்து இளவரசன் ஸ்கந்தகுப்தன் எண்ணற்ற ஹூணப் படைகளை முறியடித்துவிட்டு இன்று பாடலிபுத்திரந்துக்கு வந்திருக்கிருன். நகரம் முழுவதும் புது மணப்பெண்போல் அலங்கரிக்கப்பட்டுள்ளது. தோரணங்கள், கொடிகள், வாயில்மாலைகள், மலர்மாலைகள்—எல்லாப் பக்கங்களிலும் நறுமணத்தின் ஜ்வாலை.

ஆங்காங்கு மங்கல வாத்தியங்கள் இசைக்கப்படுகின்றன. (சில கணங்களுக்கு மங்கள கானம்.) திடீரென்று 'வழிவிடுங்கள்', 'வழி விடுங்கள்' என்ற குரல்கள் கேட்கின்றன; அப்பால் விண்ணைப்பிளக்கும் கோஷம் கேட்கிறது.

மதிப்புக்குரிய திருவடிகளையுடைய இளவரசர் ஸ்கந்தகுப்தர் வாழ்க! ஹூண வெற்றியாளர், பெருவலிமையுள்ள ஆட்சியாளர் ஸ்கந்த குப்தர் வாழ்க!

அப்போது நகரக் கன்னிகள் ஒரு பாட்டுப் பாடத்தொடங்குகிருர்கள். பாட்டின் கருத்து—''பாடலிபுத்திர வாசிகளே! வந்துகொண்டிருக்கிறவர் யார் என்று புரிகிறதா? யாரை வரவேற்பதற்காக நீங்கள் பூரிப்பான அலங்காரங்களுடன் உட்கார்ந்திருக்கிறீர்கள்? யாருடைய தரிசனங்களுக்காக உங்களுடைய கண்கள் தவித்துக்கொண்டு இருக்கின்றன? ஆம், நாம் அறிவோம். இன்று நம்முடைய இதய சாம்ராட் ஸ்கந்தகுப்தர் பாரதவர்ஷத்தின் மகிமை வாய்ந்த வரலாற்றின்,

எல்லாவற்றிலும் பெரியதொரு வெற்றிக்குப் பிறகு நம்மிடையே திரும்பி வந்துகொண்டிருக்கிறார். கொடியவர்களும் கயவர்களுமான ஹூணர்களை அவர் முறியடித்தார்... யாருடைய வேகத்தை உலகத்தின் வேறு எந்த நாட்டினாலும் தடைசெய்ய முடியவில்லையோ, அந்த ஹூணர்களை முறியடித்திருக்கிறார். இன்று ஸ்கந்தகுப்தர் இல்லாதிருந்தால் நம் ஆரியாவர்த்தத்தின் பண்பாடும் பீடும் காட்டுமிராண்டி ஹூணர்களால் அழிந்துபட்டிருக்கும். வாருங்கள், பாடலிபுத்திர நகரவாசிகளே, நம்முடைய இந்த மாபெரும் வீரரின் வரவேற்பில் உங்கள் நெஞ்சத்தைப் பரப்புங்கள். இன்று பாடலிபுத்திரத்தின் பெருமைவாய்ந்த வரலாற்றில் மிக மிகப் பெருமைவாய்ந்த ஒரு நாள்!''

பாட்டு முடிவுற்றதும், 'இளவரசர், மதிப்புக்குரிய திருவடிகளை உடைய ஸ்கந்தகுப்தர் வாழ்க!' என்ற விண்ணதிரும் முழக்கம் எழுகிறது. அதற்குப்பின் திடீரென்று நிசப்தம் பரவுகிறது.

கணநேர நிசப்தத்துக்குப்பின் இளவரசர் ஸ்கந்தகுப்தர் பேசலுற்றார்: ''பாடலிபுத்திர நகரவாசிகளே, இந்த வரலாற்று பூர்வமான வரவேற்பிற்காக நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது உங்கள் சார்பில் பாடப்பெற்ற பாட்டைக் கேட்டு, வாழ்க்கையின் எல்லாவற்றிலும் உயர்ந்த இந்த நாளிலும் என் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. நீங்கள் சொன்னீர்கள்—இன்று ஸ்கந்தகுப்தன் இல்லாவிட்டால் நம் ஆரியாவர்த்தத்தின் பண்பாடும் பீடும் காட்டுமிராண்டி ஹூணர்களால் அழிந்துபட்டிருக்கும்—என்று! ஆனால் என் சகோதரர்களே, நிசமாக உண்மை அது அல்ல. பாரதவர்ஷத்தின் இந்த ஒளிமிக்க வெற்றியின் உண்மையான பெருமை எந்த வீரர்களுக்கு உரியதோ, அவர்கள் இன்று திரும்பிப் பாடலிபுத்திரத்துக்கு வரவில்லை. அவர்கள் கபிசாவில் பால்ஹிக் கரையில் நிரந்தரமாக உறங்குகிறார்கள். அவர்கள் பாடலிபுத்திரத்தின் குப்த சாம்ராஜ்யத்துப் படை வீரர்களே ஆயினும், அவர்களில் பலர் பாடலிபுத்திரத்தில் பிறந்தவர்கள் அல்லர். அவர்கள் நம் எல்லை முடிவின் காவலர்கள். அவர்கள் நம் சாம்ராஜ்யத்தின் கௌரவம் வாய்ந்த ரத்தினங்கள் போன்ற கபிசா, மத்ரம், பஞ்சநதப் பிரதேசங்களின் நகரவாசிகள். சகோதரர்களே, மகாபலாதிபதி வீரன் அக்கினிகுப்தனின் தலைமையில் அவர்களுள் 5,000 படை வீரர்களின் உயிரற்ற சடலங்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் இரண்டு லட்சம் ஹூணர்களைக் கபிசாவின் ஒரு பெருமை வாய்ந்த கணவாயில் ஐந்து முழு நாட்கள்வரை தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தார்கள்... அந்த 5,000 வீரர்களில் ஒரு வீரன்கூட உயிரோடு இருக்கும்வரை தடுத்து நிறுத்திக்கொண்டிருந்தார்கள்! என்

சகோதரர்களே, எல்லைப்புறத்து அந்த வீரர்களின் நினைவில், என்னோடு நீங்கள் உங்கள் சிரங்களைத் தாழ்த்துங்கள்.''

*[ஆயிரக்கணக்கான வாட்கள் தலையணிகளைத் தொடுகிற சத்தம் வருகிறது.]*

*[மாறுதல், வேறுபடும் மங்கல இசை.]*

**கிழவர் :** யுகத்துக்குப்பின் யுகங்கள் கழிந்துகொண்டே போயின. பாரதநாட்டு வானம் தொடர்ந்து அபாயக் கருமுகில்களால் நிரம்பி இருந்தது. அந்த முகில்கள் இதே வடமேற்கு எல்லையிலிருந்து இந்த நாட்டில் வந்தன. ஹூணர்களுக்குப் பிறகு குஷானர்கள்; அதற்குப் பிறகு படான்களும் முகலாயர்களும்! நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. அவற்றுக்குப் பிறகு 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பஞ்சாபின் சிங்கம் விழித்துக்கொண்டது—

*[வேறுபடும் இசை, இரண்டு நிமிடங்கள் மட்டும்.]*

மகாராஜா ரணஜீத் சிங்!

*[மாறுதல்]*

**கிழவர் :** ஓர் இருண்ட இரவு. அடக்கில் சிந்து நதியின் மேற்குக் கரையில் படான்களுடைய படையின் பாசறை. படான் படை வீரர்கள் 'புஷ்டு' மொழிப் பாட்டுப் பாடியவண்ணம், டப்ளி தாளத், தோடு களிக்கூத்து ஆடிக்கொண்டு இருக்கின்றனர். சில கணங்களுக்குப் பிறகு கவலையில் தோய்ந்த ஒரு குரல் வருகிறது—

சிராக் அலி!

ஓ, ஹுஜூர் ஹபீசுல்லா சாஹேப்!

இந்த மகிழ்ச்சிக் கொண்டாட்டம் எதற்காக, சிராக் அலி!

அப்படியானால் ஹுஜூர், தாங்கள் அந்த நற்செய்தியை இன்னும் கேட்கவில்லையா?

எந்த நற்செய்தி?

ஜனாப் ஷா சாஹப், நாம் ரணஜீத் சிங்கைத் தோற்கடித்துவிட்டோம்.

அது எப்படி? ரணஜீத் சிங் ஆற்றின் கிழக்குக்கரையில் தன் படைகளோடு கூடாரம் அடித்துக்கொண்டு இருக்கிறானே.

அதனால் என்ன, ஹுஜூர்? இன்றில்லாவிட்டால் நாளைக்கு அவன் வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடவேண்டி இருக்கும்.

இப்படி எண்ணுவதற்குக் காரணம்?

ஹுஜூர், ரணஜீத் சிங்கின் சிப்பாய்கள் படகுகளுக்காக அடக்கில் பாலம் கட்டினார்களே, அதை இன்று நம் படைகள் உடைத்தது மட்டும்

அல்லாமல், அவனுடைய எல்லாப் படகுகளையும் மூழ்கடித்து விட்டனர்.

இது சரி, சிராக் அலி! ரணஜீத் சிங் வேறு முறையில் ஆற்றைக் கடக்க முடியாதா என்ன?

முடியாது, ஹுஜூர்! மனிதர்கள் என்ன, தேவதைகள்கூட அடக்கின் இந்த இரண்டு மலைகளுக்கு இடையில் ஓடும் இந்த அபாயகர மான சிந்து நதியைக் கடக்கமுடியாது. இங்குத் தண்ணீர் வெகு ஆழம். ஒன்றன்மேல் ஒன்றாக ஏழு யானைகள் இங்கு மூழ்க முடியும். ஆற்றோட்டத்தின் வேகம் மிக அதிகம். அருகில் போனாலே போக்கிரி நம்மையும் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போய்விடுமோ என்று திகிலாக இருக்கும். இந்த உபயோகமற்ற ஆறு ஹிந்துஸ்தானத்தின் எல்லாவற்றிலும் பெரிய காவற்காரனாக இருந்துள்ளது, ஷா சாஹப்!

ஆனால், ரணஜீத் சிங்கை உனக்குத் தெரியாது, சிராக் அலி! அவன் மனித வடிவில் இருக்கும் பூதம். தேவதைகளால் முடியாத காரியத்தை அவன் செய்துவிடுகிறான்.

**சிராக் அலி :** (சற்று நகைத்து) ஆனால், அடக்கின் இந்த ஆற்றைக் கடப்பது முடியாத காரியம். அவன் உயிருடனோ, செத்தோ இந்த ஆற்றைத் தாண்டிவிட்டானானால், நான் என் தகப்பனோடு அவனுக்கு அடிமை ஆகிறேன். [சிரிப்பு.]

[வேறுபடும் இசை.]

**மகாராஜா ரணஜீத் சிங் :** அப்படியானால் சங்கத்தின் முடிவு என்ன, சர்தார் சிங்?

**சர்தார் சிங் :** அரசே, முடிவுசெய்ய வேண்டியது மகாராஜாதான். பதினைந்து இருபது நாட்களில் முடியுமானால் புதிய படகுகள் கட்டிக் கொள்ளலாம், அல்லது இது நடக்காது என்றால், இரண்டொரு நூறு மைல்கள் கீழே சென்று சிந்துவின் வெள்ளம் ஆழமாக இல்லாத இடத்தில் ஆற்றைக் கடக்கலாம் என்பதுதான் சங்கத்தின் பணிவான யோசனை.

**மகாராஜா ரணஜீத் சிங் :** சங்கத்தின் இரண்டு யோசனைகளும் தவறானவை, சர்தார் சிங்!

[சர்தார் சிங் மௌனமாக இருக்கிறான்.]

**மகாராஜா ரணஜீத் சிங் :** பார், விஷயம் இதுதான். சர்தார் சிங், இப்போது சிந்து நதிக்கரையில் பகைவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. பகைவன் கவலை இல்லாமல் இருக்கிறான். ஏனெனில், அடக்கில் விசையாகப் பெருகியோடும் இந்தப் பேராற்றை எந்த மனிதனாலும் கடக்க முடியாது என்று அவன் எண்ணுகிறான். இதே

சமயத்தில் நாம் ஆற்றைக் கடக்க முடியுமானால் நமக்கு வெற்றி உறுதி. புதிய படகுகளைக் கட்டுவதில் நாம் பதினைந்து இருபது நாட்களைப் போக்கினால், பகைவன் அக்கரையில் தன் வலிமையை மிக அதிகமாய்ப் பெருக்கிக் கொள்வான். வேறோர் இடத்தில் சிந்துநதியைக் கடக்கும் விஷயம் இருக்கிறதே, அது முற்றிலும் அர்த்தமற்றது. தரியா கானிலோ அல்லது அதற்கு அக்கம் பக்கத்திலோ சிந்துவைக் கடப்பதற்கு நூற்றுக்கணக்கான படகுகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கு, சிந்துவின் அகலம் ஏழு மைல் இருக்கும். தவிர, அங்கிருந்து பெஷாவருக்கு நம் படைகள் போய்ச் சேருவது முடியாத காரியமாகிவிடும்.

சர்தார் சிங்: அவ்வாறானால் அரசரின் ஆணை என்ன?

மகாராஜா ரணஜீத் சிங்: நாம் நம் குதிரைகள்மீதேறி சிந்து நதியைக் கடக்கவேண்டும் என்பது என் எண்ணம்.

சர்தார் சிங்: (வியப்போடு) குதிரைகள்மீதேறியா!

மகாராஜா ரணஜீத் சிங்: ஆம், குதிரைகளின் முதுகுமீதேறி, அதுவும் இப்போதே இரவின் இதே அமைதியான நேரத்தில்!

சர்தார் சிங்: (அச்சமுற்று) எங்கள் விஷயம் இருக்கட்டும், அரசே, நாங்கள் ஒரு பொருட்டு அல்ல; ஆனால் சங்கத்துக்கு இப்போது எல்லாவற்றையும்விடத் தாங்கள் மிகத் தேவை.

மகாராஜா ரணஜீத் சிங்: சங்கத்துக்கு வீரன் ரணஜீத் சிங் தேவை; கோழை ரணஜீத் சிங் அல்ல.

சர்தார் சிங்: தங்கள் கட்டளைப்படி.

மகாராஜா ரணஜீத் சிங்: துணிச்சலான இப் பணிக்குக் கட்டளை இடும் பிரச்னையே இல்லை, சர்தார் சிங்! இம்மாதிரி விந்தையான விஷயங்கள் ஆணையின் வலிமையால் அல்ல, நம் உள்ளூக்கத்தின் வலிமையாலேயே செய்யப்பட வேண்டும்.

சர்தார் சிங்: அரசே, தங்கள் வேர்வை விழுகிற இடத்தில் சங்கத்தின் ஒவ்வொரு வீரனும் தன் ரத்தத்தைப் பெருக்கிவிடுவான். ஆனால், நான் வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் இவ்வளவு அபாயகரமான பணியில் தங்களுடைய விலையுயர்ந்த உயிரை ஈடுபடுத்த வேண்டாம். முதலில் நாங்கள் சிந்துநதியின் விசையான நீரோட்டத்தைக் கடக்க முயலுவோம். நாங்கள் அக்கரை போய்ச் சேர்ந்தால், பிறகு தங்கள் மனம்போல் செய்யுங்கள்.

மகாராஜா ரணஜீத் சிங்: இது நடக்காது. நீ குழந்தைப் பிராயத்திலிருந்தே என் துணைவன், சர்தார் சிங்! ரணஜீத் சிங் தானே செய்யாத காரியத்தை இதுவரை உன்னிடம் சொன்னதுண்டா?

**சர்தார் சிங் :** அநாகரிகம் மன்னிக்கப்படவேண்டும் அரசே! இன்று வரை அடக்கில் சிந்துவின் வேகமான நீரோட்டத்தைக் கடப்பது முற்றிலும் முடியாத, அசாத்தியமான காரியம் என்று கருதப்பட்டு வந்துள்ளது. இது தங்களுக்கும் தெரிந்திருக்கலாம். இந்த இடத்திற்கு 'அடக்' (தடை) என்ற பெயர் ஏற்பட்டதன் காரணமே, சிந்துவின் நீரோட்டத்தை எந்த நிலையிலும் கடக்க முடியாத தடங்கல் இங்கு இருப்பதே காரணம்.

**மகாராஜா ரணஜீத் சிங் :** (புன்னகை புரிந்து) இதோ பார், சர்தார் சிங்! நானும் 'அடக்' என்ற இப் பெயரின் இக் கதையைக் கேட்டு வைத்திருக்கிறேன். ஆனால் உண்மை என்ன தெரியுமா? யாருடைய மனத்தில் தடங்கல் இருக்கிறதோ அவனே தடைபட்டு இருப்பான்.

**சர்தார் சிங் :** தங்கள் ஆணை எங்களுக்கு சத்குருவின் ஆணை.

**மகாராஜா ரணஜீத் சிங் :** இதோ பார் சகோதரா, இன்னும் ஒரே நாழிகைக்குப்பிறகு நாம் எல்லாரும் சிந்து நதியில் நம் குதிரைகளோடு குதித்துவிடுவோம். எல்லாருக்கும் முதலில் நான் சிந்து வெள்ளத்தில் என் குதிரையை இறக்குவேன். (மகாராஜா ரணஜீத் சிங் வெல்க! சத்ஸ்ரீ அகால் – என்ற கோஷங்கள்.)

[இரண்டு நிமிடங்களுக்கு மாறுபடும் இசை.]

**கிழவர் :** மறுநாள் விடியலுக்கு முன்பே நிகழமுடியாததை உண்மையாகவே நிகழ்ச்சி ஆக்கி மகாராஜா ரணஜீத் சிங் பொறுக்கியெடுத்த வீரர்களுடன் சிந்துநதியைக் கடந்துவிட்டார். உண்மையில் அவரே எல்லாருக்கும் முன்னால் ஆற்றில் இறங்கினார். எல்லாருக்கும் முன்னால் சிந்துவின் மேற்குக்கரையில் ஏறினார். வெற்றிவாகை சூடினார்.

[மாறுதல், வேறுபடும் இசை.]

# [ 6 ]

*[இசைமயமான சூழ்நிலையில் ஒரு மிகமிகக் கம்பீரமான அருவ ஓசை.]*

இருண்ட இரவு பாதிக்குமேல் கழிந்துவிட்டது. இரவின் இவ்விருளில் விண்மீன்களின் மினுமினுக்கும் ஒளியின் துணையோடு இருவர் மௌனமாக ராவி நதியை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒருவன் இளைஞன்; மற்றொருத்தி, யுவதி. மரணத்தறுவாயில் அவர்களுடைய தந்தையின் வேதவாக்குப் போன்ற புனிதச் சொற்கள் இவ்விருவருக்கும் வழிகாட்டுகின்றன. இதே புனித ஆணைக்குக் கட்டுப்பட்டு இருவரும் மரணவாயிலில் இருந்த, தேவருக்கு நிகரான தந்தையின் உயிருள்ள உடலையும் வீர சகோதரனின் உயிரற்ற உடலையும் ஒரு சலசலக்கும் வயலில் விட்டு வந்துள்ளனர். அந்த வயல் சில நாட்களுக்கு முன்பு பசுமை நிரம்பிய பஞ்சாபின் ஒரு பகுதியாக இருந்தது. ஆனால் இப்போது அது பாகிஸ்தான் ஆகிவிட்டது.

அவர்கள் எல்லாவற்றையுமே இழந்துவிட்டார்கள்—தந்தை, தமையன், உறவினர், நண்பர், வீடு, நிலம் எல்லாவற்றையுமே. ஆயினும், ஒரு விந்தையான நம்பிக்கை அவர்களை ஹிந்துஸ்தானத்தின் பக்கம் இழுத்துக்கொண்டு வருகிறது. தங்களுடைய முனிவரைப் போன்ற, பூசிப்பதற்கு ஏற்ற தந்தையின் குரல் அவர்களுடைய செவிகளில் ஒலித்தவண்ணம் இருக்கிறது.

கிழவரின் மிகுதியும் புனிதமான, மிகுதியும் கம்பீரமான குரல்: ஹிந்துஸ்தானம் சென்று சொல்லுங்கள். நம் கிழத்தந்தை 71ஆம் வயதில் நாட்டுக்காகச் சிரித்தவாறு தம் உயிரை ஈந்தார். ஹிந்துஸ்தானம் சென்று சொல்லுங்கள். ஹிந்துஸ்தானம் சென்று சொல்லுங்கள். நாங்கள் எல்லைப்புறக் காவலர்கள். ஹிந்துஸ்தானம் சென்று சொல்லுங்கள்!—

# ஆசிரியர்கள் அறிமுகம்

## உதயசங்கர் பட்

பட் புலந்த சஹரில் (உத்தரப் பிரதேசம்) பிறந்தாலும் இலக்கிய சாதனைகளைப் பெரும்பாலும் லாகூரில் (பஞ்சாப்) புரிந்தார். முதலில் இவருடைய ஈடுபாடு முழு நீள நாடகம் எழுதுவதிலேயே இருந்தது. பிற்பாடு ஓரங்கங்களையும் எழுதத் தொடங்கினார். விரைவிலேயே இவர் ஓரங்க எழுத்தாளர்களில் முன்னணியில் இருப்பவராய் மதிக்கப் படலானார். நாடகங்களைத் தவிர, கவிதைகளும் நாவல்களும் இவர் எழுதியுள்ளார். இவர் பாத்திரங்களின் மனோபாவங்களை மிகத் தெளிவுறச் சித்திரிக்கிறார். பாத்திரங்களுக்கு ஏற்ப பாஷையைக் கையாளுவதும் இவருடைய தனிச்சிறப்பு. பாவ நாட்டியம் இவருடைய சிறப்பான கொடையாகும். இவருடைய நாடகங்களும் ஓரங்கங்களும், வரலாறு, புராணக்கதைக் கருக்களைக் கொண்டவை எனினும் நவயுகத்துப் பிரச்னைகளை அவை சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கும்.

*1866*, பிப்ரவரியில் தில்லியில் அவர் காலமானார்.

இத் தொகுதியிலுள்ள 'பத்தாயிரம்' என்ற ஓரங்கத்தில், கருமி பனியா ஒருவனின் மனத்தில் புத்திர பாசத்துக்கும் பண ஆசைக்கும் இடையில் நடக்கும் போராட்டம் மிகவும் சுவையான உருவில் காட்டப் பட்டுள்ளது. இவருடைய நாட்டியப் படைப்புகள் : 'போர் வெற்றி', 'தாஹர்', 'அம்பா', 'கமலா', 'விசுவாமித்ரன்' இத்தியாதி, 'ஆதியுகம்', 'பிரச்னையின் முடிவு', திரைக்குப்பின்' முதலியன இவருடைய ஓரங்கத் தொகுதிகள்.

## புவனேச்வர்

புவனேசுவர் ஹிந்திக்கு உண்மையான கௌரவம் வழங்கியவர். ஹிந்தி ஓரங்கத்தில் நவயுகக் குரல் தருவதில் இவருக்குச் சிறப்பான பங்கு உண்டு. மேலை நாட்டு நாட்டியக் கலையில் நல்ல பிடிப்பு உண்டு

புவனேசுவருக்கு. அந்தக் கலையின் வலிமைத் தன்மையின் மிகுதியிலும் மிகுதியான செல்வாக்கை இவர் தம்முடைய ஓரங்கக்கலையில் ஏற்றுக் கொண்டுள்ளார்—சிறப்பாக, சமூக யதார்த்த தத்துவத்தை.

'காரவான்' (1935) இவருடைய ஆறு ஓரங்கங்களின் தொகுப்பு. பெர்னார்ட் ஷாவின் நாடகத்தத்துவங்கள் இவர்மீது ஆழ்ந்த செல்வாக்குப் பெற்றுள்ளன. 'ஸ்டிரைக்' இயற்கைவாதம் சார்ந்த (நாசுரலிஸ்டிக்) ஓரங்கம். இயற்கைவாத நாடகப் பாணியில் ஒரு சிறப்பான உருவம், பாணி. இதில் மேற்கத்தி நாகரிகத்தினால் கவர்ச்சியுண்ட ஆடம்பரம் நிறைந்த உயர் நடுத்தர வர்க்கத்தின் போலிவாழ்க்கையின் வண்ணச் சித்திரம் இருக்கிறது.

## டா. ராம்குமார் வர்மா

ஹிந்தி ஓரங்க வரலாற்றில் எல்லாருக்கும் முதன்மையான சக்தி வாய்ந்த ஓரங்க ஆசிரியர்; இந்தத் துறையின் வழிகாட்டி. முதல் ஓரங்கம், 'முகிலின் சாவு' (1930). இவர் சமூக, வரலாற்றுக் கதைகளையும், கதா சூத்திரங்களையும், அனுபவங்களையும் அடிப்படையாய்க் கொண்டு இதுவரை பல மகத்தான ஓரங்கங்களை இயற்றிய புகழ் பெற்ற ஆசிரியர். இவருடைய பிரதிநிதித்துவம் உள்ள ஓரங்கத் தொகுதிகள் : முறையே, 'பிருதிவிராஜின் கண்கள்', 'பட்டுடை', 'சாருமித்ரா', 'விபூதி', 'சப்தகிரண்', 'ரூபரங்க', 'வெண்ணிலாத் திருவிழா', 'ரிம்ஜிம்'; அண்மையில் வெளியான தொகுதி, 'மயில் சிறகு'.

சமூக ஓரங்கங்களில் 'பட்டுடை', 'ரிம்ஜிம்' தொகுதிகளில் உள்ள ஓரங்கங்களில் நம் சமூகத்தின் எல்லா வர்க்கத்தினர், மனிதர்கள், மனிதர்களின் மனோதர்ம வண்ணக் காட்சிகள் இருக்கின்றன. 'சாருமித்ரா', 'வெண்ணிலாத் திருவிழா' தொகுதிகளின் ஓரங்கங்களிலோ பாரதப் பண்பாட்டின் உயர்ந்த உதாரணங்களும், இறந்த கால தரிசனங்களும் தெளிவாக இருக்கின்றன. டா. வர்மாவின் ஓரங்கக் கலை ஹிந்தி ஓரங்கத்தின் கௌரவம் வாய்ந்த உதாரணமாகும். அதனுடைய பாவமும் சிற்பத்திறனும் முற்றிலும் சொந்தமானவை, அவருடையவை. இவருடைய ஓரங்கங்கள் நாடக மேடையின் வெற்றிகரமான உதாரணங்கள். அவற்றில் இக்கால நாடக மேடை தன்னுடைய எல்லா வடிவங்களோடும் பெருகிக் கண் முன்னால் உயிர் பெறுகிறது.

## சேட் கோவிந்ததாஸ்

முழு நாடகங்களோடு ஓரங்கங்களையும் வெற்றிகரமாய்ப் படைத்த ஹிந்தி நாடக ஆசிரியர்களில் சேட் கோவிந்ததாஸின் பெயர் சிறப்பு மிக்கது. 1936 முதல் இன்று வரை இவருடைய சுமார் ஒரு நூறு ஓரங்கங்கள் வெளியாகிவிட்டன. 'பஞ்சபூத்', 'அஷ்டதல்', 'ஏகாதசி', 'ஸ்பர்த்தா'— முதலியன இவருடைய முக்கியமான ஓரங்கத் தொகுதிகள். வரலாற்று விஷயங்களையும் சமூக விஷயங்களையும்பற்றி சேட் ஓரங்க நாடகங்கள் இயற்றியுள்ளார். இவரை காந்திஜீயின் கருத்துகள் மிக அதிகமாய் ஆட்கொண்டுள்ளன.

இவர் முழு நாடகங்களையும் போதுமான அளவு படைத்துள்ளார். இவருடைய வரலாறு சம்பந்தமான, புராண சம்பந்தமான நாடகங்களில் வரலாறு, புராண சந்தர்ப்பங்கள், பாத்திரங்களோடு தேசீயம், நீதி, மனிதத் தன்மையின் குரல் ஆகியவையும் ஒலிக்கின்றன. சமூக நாடகங்களில் 'பெண்ணுரிமை', 'தாம்பத்தியச் சிக்கல்கள்', 'காதலும் திருமணமும்' ஆகிய பிரச்னைகளை இவர் கையாண்டுள்ளார்.

மேன்மைத்தியில் ஒற்றைப் பாத்திர நாடகங்களை இவர் துவக்கிவைத்தார். முன்னால் நிச்சிரேஷ்டி', 'சாபமும் வரமும்', 'ஸச்சா ஜீவன்' முதலிய இல்லாதிருக்கலாம். ஆ நாடகங்கள் இவருடைய குறிப்பிடத்தக்க முழுமையான நோக்கும் கற்ப...

ந்துள்ளன. ஒருபுறம் இன்றைய சமூ...

## உபேந்திரநாத் 'அஷ்க்'

இவர் ஜலந்தரில் (பஞ்சாப்) பிறந்தவர். பி.ஏ.,எல்.எல்.பி. வரை கல்வி பயின்றார். முதலில் இவர் உருதுவில் எழுதிக்கொண்டிருந்தார். அப்பால் ஹிந்தியில் எழுதத் தொடங்கினார். விரைவிலேயே ஹிந்தி ஆசிரியர்களுக்கு இடையில் தமக்கெனச் சிறப்பான இடம் ஏற்படுத்திக் கொண்டார். இவர் பலவகை ஆற்றல் வாய்ந்த கலைஞர். இவர் நாவல், சிறுகதை, நாடகம், ஓரங்கம், கவிதை எல்லாமே எழுதியுள்ளார்; வெற்றிகரமாகவும் எழுதியுள்ளார்.

இத் தொகுதியிலுள்ள 'துவாலைகள்' என்ற ஓரங்கத்தில் இக்கால ஒழுக்க முறையிலுள்ள போலித் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார். அந்த ஒழுக்கமுறை காரணமாக மது வெளிப்படையாகச் சிரிக்க முடியவில்லை, பேசமுடியவில்லை என்பதுடன் தன் கணவன் வசந்தனின்

வாழ்க்கையிலும் தன்னுடைய இந்த நடத்தையால் அலுப்பு உண்டாக்கிவிடுகிருள். மேற்கத்தி நாகரிகத்தைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவது நமக்குப் பொருத்தம் இல்லை என்பது இந்த ஓரங்கத்தால் தெளிவாகிவிடுகிறது. இது (மேலை நாகரிகம்) நம் இயற்கையான ஈடுபாடுகளைத் தாக்கி வாழ்க்கையைத் துன்பகரமாக்கி வருகிறது. இவருடைய நாடகப் படைப்புகள் 'புயலுக்குமுன்', 'பண்டை வழி', 'சிறையும் விடுதலையும்', 'ஆருவது பிள்ளை', 'மேய்ப்பவர்கள்', 'தேவதைகளின் நிழலில்', 'சொர்க்கத்தின் பொறி', 'வெற்றியும் தோல்வியும்'— முதலியன.

## விஷ்ணு பிரபாகர்

விஷ்ணு பிரபாகர் ஹிந்தி ஓரங்க உலகில் மனோதத்துவப் பாணியில் படைப்புகள் தந்துள்ள புகழ்பெற்ற நாடக ஆசிரியர். மனித... முக கதை உள்நுட்பங்களைப் புரிந்துகொள்வதிலும் அவற்றை ...ப்படையாய்க் வதிலும் இவருடைய ஓரங்கங்கள் ஹிந்தியில் ...க்கு இயற்றிய புகழ் பெற்றவை. இவருடை ஓரங்கத் தொ...ந்தி...த்துவம் உள்ள ஓரங்கத் 'மனிதன்' மற்றும் வேறு ஓரங்...வ்விராஜின் கண்கள்', 'பட்டுடை' 'இடியும் கோட்டைச் சுவர்'—ஒரு ம...ததவாத ஓரங்க... அதில் ஓரங்க ஆசிரியர் நம் நிகழ்கால சமூகச் சூழ்நிலையை, வாழ்க்கையிலிருந்தே நேராக எடுத்துக்கொண்ட பாத்திரங்களின் வாயிலாக, மிகவும் திறமையுடன் வெளிப்படுத்தியுள்ளார். பாத்திரங்களின் சொந்த உருவமும் ஓரங்கத்தின் வண்ண இயற்கையும் எல்லா வகையிலும் யதார்த்தத் தன்மை வாய்ந்தவை.

## ஜகதீஷ்சந்திர மாதுர்

ஜகதீஷ்சந்திர மாதுர் ஹிந்தி ஓரங்கத்திற்கு இக்காலத்தில் உயர்வு அளித்தவர்களில் ஒருவர். இவர் வரலாறு, சமூகம் இரு துறைகளின் கருத்துக் களங்களிலும் சமமான புகழை ஈட்டியுள்ளார். ஓரங்கங்களின் அமைப்பு முறையைப்பற்றிய தெளிவும், சிறந்த முறையில் தம்

கருத்துகளுக்கு நாடக வடிவம் அளிப்பதும், இவருடைய ஓரங்கக் கலையின் எல்லாவற்றிலும் பெரிய சாதனையாகும்.

இவருடைய ஓரங்கத் தொகுதிகள் : 'விடிவெள்ளி', 'ஓ என் கனவுகளே'.

இத் தொகுதியிலுள்ள ஓரங்கம் 'கைதி', பாவனை, ஆதரிசத்தின் மண்ணகத்துமீது அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஓரங்க ஆசிரியர் மனிதனின் உயர்ந்த தேட்டங்களை மிக இயற்கையான முறையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

## டா. லட்சுமிநாராயண் லால்

இவர் தொடக்கத்திலிருந்தே நாடகத்தைக் காட்டிலும் நாடக மேடையின் முழுக்கற்பனையாலும் ஊக்கப்பட்டு வந்துள்ளார். அவருக்கு முன்னால் நிச்சயமானதும் பரம்பரையாக இருப்பதுமான நாடக மேடை இல்லாதிருக்கலாம். ஆனால், நாடகத்தின் மேடை தொடர்பான இந்த முழுமையான நோக்கும் கற்பனையும் அவ்வரை எப்போதும் வசீகரித்து வந்துள்ளன. ஒருபுறம் இன்றைய சமூக வாழ்க்கையின் உண்மையான பிரச்னைகளை விரிவான, நுட்பமான அளவில் ஏற்றுக்கொண்டுள்ள இவர், மறுபுறம் தம்முடைய ஒவ்வொரு ஓரங்கத்திலும் நாடக மேடையைப் பிரத்யட்சமானதாகவும் அடையக்கூடியதாகவும் ஆக்க வெற்றிகர மாய் முயற்சி செய்துள்ளார்.

இக்கால நாடகமேடை ஆராய்ச்சி, அதனுடைய விதவிதமான உருவங்களின் பின்னணியில், இவருடைய பெயர் ஹிந்தி ஓரங்கத்தில் பெரிதும் சிறப்புடையதாகும்.

இவருடைய ஓரங்கத் தொகுதிகள் : 'தாஜ்மகலின் கண்ணீர்', 'மலைக்குப் பின்னால்', 'பல வண்ண நாடகங்கள்', 'பல வடிவ நாடகங்கள்' ஆகியவை. 'காபி ஹவுஸில் எதிர்பார்த்தல்' புதிய நாடகம். நாடக மேடை நோக்கில் ஒரு சக்திவாய்ந்த படைப்பு. இத் தொகுதியிலுள்ள எல்லா ஓரங்கங்களிலும் தனியானது, சிறப்பானது.

'கண்ணாடி', 'மாசுடையாள்', 'சூரிய முகம்', 'மிஸ்டர் அபிமன்யூ', 'கர்ஃப்யூ' ஆகியவை இவருடைய பிரபலமான ஹிந்தி நாடகங்கள்.

## தர்மவீர் பாரதி

புதிய தலைமுறையின் படைப்பாளர்களில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு பெயர் தர்மவீர் பாரதியினுடையதாகும். இதுவரை மொத்தம் எட்டு, பத்து ஓரங்கங்களே எழுதியிருப்பார். ஆனால், ஒவ்வொரு ஓரங்கத்தில் அவருடைய தனித்தன்மையையும், நாடக ஆட்சியையும் காணலாம். 'ஆறு தாகமாயிருந்தது'—பாரதியின் முதல் ஓரங்கத் தொகுதி.

'சிருஷ்டியின் இறுதி மனிதன்'—சந்த நாடகம். நாடக மரபும் கலையும் முழுமையாக இதில் வெளியாகியுள்ளன. தொனி, குரல், ஒலி—இவற்றின் வாயிலாக மனிதனின் ஒரு நியதிக் கதை இங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

பாரதியின் 'குருட்டு யுகம்' என்னும் பிரபல நாடகம் ஹிந்தி நாடக மேடைக்கு ஒரு நன்கொடை.

## சந்திரகுப்த வித்தியாலங்கார்

இவர் 1906, டிசம்பர் 4ஆம் நாள் பிறந்தார். இவருடைய படிப்பு குருகுல விசுவ வித்தியாலயத்தில் நடந்தது. தொடக்கத்திலிருந்தே இவருக்குக் கல்விப் பயிற்சியிலும் சுதந்திர எழுத்திலும் ஈடுபாடு இருந்தது. அப்பால் ஆசிரியப் பணியில் இவருடைய ஆர்வம் சென்றது. 1931 முதல் 1947 வரை லாகூர் விசுவ சாஹித்ய கிரந்த மாலாவில் ஆசிரியராகவும் நிர்வாகியாகவும் இருந்தார்; இந்த வெளியீட்டகத்திலிருந்து உலக, இந்திய இலக்கியத்தின் சுமார் நூறு புத்தகங்கள் வெளியாயின. ஆசிரியர் என்னும் முறையில் இவருடைய புகழ் மேலும் வளர்ந்தது. லாகூரின் 'தைனிக் ஜன்மபூமி', தில்லியின் 'ஆஜ்கல்', 'விசுவ தர்சன்', பம்பாயின் பிரபலக் கதைப் பத்திரிகை 'ஸாரிகா' ஆகியவற்றில் ஆசிரியப் பணியாற்றினார்.

இவர் கதாசிரியர், நாடகாசிரியர் என்ற முறையிலும் புகழ் பெற்றவரே. சிறுகதைத் தொகுதிகளில் 'மூன்று நாட்கள்', 'வாபஸீ', 'முதல் ஆஸ்திகன்', 'ஆழ்ந்த இருளில்' ஆகியவை குறிப்பிடத் தகுந்தவை. நாடகங்களில் 'அசோகன்', 'ரேவா', 'தேவனும் மானிடனும்', 'நியாயத்தின் இரவு' ஆகியவைபற்றி விவாதம் நடந்துள்ளது. 'ஹிந்துஸ்தானம் சென்று சொல்லுங்கள்'—இவருடைய குறிப்பிடத்தக்க ஓரங்கத் தொகுதி.